pleasant, melodious, refined qualityetc. But scholars came to the conclusion that attempting to find out meanings for Tamil is not necessary and essential at this point of time. But in the author's opinion the word Tamil could be split up into two words Tam+imil (தம்+இமிழ்) and they united naturally (இயல்புபுணர்ச்சி) and that two individual separate words have their own meaning. While the initial wordmeans 'ones own','oneself', the next word means to sound, to buzz, to roar, to sprout, and to bind (Tamil lexicon vol I). All these meanings in one way or other connected and point to the sound. Language in any society/group basically / initially start from sound. The accurence of this word in Sangam literature is 62 (சங்கம்பீடியா). The people who identify among them their habitual / meaningful sounds as their exclusives with the particular meaning and designated collectively as their language and this word 'Tamil' conserves that in its name.

'தமிழ்' இடம்பெறும் சங்க இலக்கியப் பாடல்கள்

தமிழ்கெழு மூவர்காக்கும் மொழிபெயர்தே எத்த	அகம் – 31
பனிபடு சோலை வேங்கடத்தும்பர்	
மொழி பெயர்தே எத்தர்	அகம் – 211
தமிழ் தலை மயங்கிய தலையாலங்கானம்	புறம் – 19 people
தண்தமிழ்க்கிழவர்	
முரசு முழங்கு தானைமூவர்	புறம் – 35- people
நற்றமிழ் முழுதும் அறிதல்	புறம் – 50 - language
தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்	புறம் – 51 - language
இமிழ் குரல் முரச மூன்றுடனாளும்	
தமிழ்கெழு கூடல்றன் கோல் வேந்து	புறம் – 58 - people & language
வையகவரைப் பிற்றமிழகால்கேட்பப் பொய்யாசெந்நா	புறம் – 168 - Land
தண்தமிழ் வரைப்பகம்	புறம் – 198 - Land
தமிழ் வையைத் தண்ணம்புனல்	பரி – 6/60 - adject
தண்தமிழ்	பரி – 9/25 - adject
தெரிமாண் தமிழ் மும்மைத்தென்னம் பொருப்பன்	பரி- 26 - language
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்	பரி – 30/5 - People
தண்தமிழ் வேலித் தமிழ்நாட்டு அகம் செழியன்	பரி – 31/1 - Land
தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்	

மகிழ்நனை மறுகின் மதுரை சிறுபாண் – 66- People and language

கொண்டி மிகைபடத் தண்தமிழ் செறித்து பதி – 63.9 -Land

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது ருகெழுகுமரியின் தெற்கும்

குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்

குடாஅது தொன்று முதின் பௌவத்தின் குடக்கும்

பற்றலி லியரோ நிற்றிறஞ் சிறக்க புறம் - 6

தென்குமரி வட பெருங்கல்

குண குடகடலா யெல்லை புறம் –17

Above references,denote Tamil land, people, language and act as adjective. Sangam references confirm a distinct linguistic and territorial consciousness exited among the ancient Tamils, they saw themselves as citizens of Tamilagam, having common language living under the three great kingdoms and felt different from outsiders such as Vadugar and Aryar of North. All other meanings could invite fiercely and emotional reactions and will not be a convincing answer. Any definition given by anybody cannot be given authoritatively acceptable by all because there are many definitions based on one's own opinion/conclusion/and assumption. It is very difficult since of its very long usage.

In this context onecan not skip without examining the other nomenclature 'Dravida' which as an exonym for Tamil. Some of the occurrences, in both Tamil and other language litratures and inscriptions as follows:.

1. In Pali

   Mahavamsa 4.5 c. - 'Damilas'

   Dipavamsa 4 c. C E - 'Damilajata' (Tamil kings)

   Mahavamsa- 2 centuries later – 'Damila' (a ruler Elara from Chorarattha)

   Buddhagosha's Commentary - Damil

2. In Pakrit

   Sri Lanka Brahmi inscriptions - Damela, Dameda

   Hathigumbha inscription of Kharavela – 'Damirasangatta' – 2nd c. BCE

(Tamil kings alliance)

Samavayanga Sutta - 3rd BCE –' Damili' as script

Pannavana Sutta - 1st c. BCE – 'Damila' as mlechchai.e non-aryan and also script

Mahayana Lalitavistara – 3rd-4th c CE – 'Dravidi' – as script

Amaravathy Inscription – 3rd c. CE 'Damila' vaniya

Nagarjunakonda Inscription – 'Damila' – a person

Akitha Jataka – Dwelling place at Kavirapattana in the Kingdom of 'Damila'

The early Pali and Prakrit reference name this languages as Damila(தமிள), Damil (தமிள்), Damela (தமேள), Dameda (தமேட), & Damira (தமிர), and Damil (தாமிளி) as a script. Only halita Vistara mentions Dravidi (த்ராவிடி) as a script. All these shows the natural convertion of the unaspirated 'ta' into aspirated 'da' and the retroflex phoneme 'la' (ழ) into medium'la' (ள) ra (ர). It is to be noted that all Pali and Prakrit references are of chronologically earlier. Hathigumbha inscription is earliest and direct reference to the Tamil kings.

In Sanskrit

Mahabharata-Anusasana Parva

Dramidah – (as clan kshatriya but degraded because of absence of Brahmanas.

Bhishmaparva

a. As land of 'Dravida' located in the south where Dravidas, Keralas, Mushikas, Karnatakas, cholas inhabited.
b. In the context of Yudhishthira's pilgrimage 'Dravida' land, and Pothigai hillsar mentioned.
c. Mentioning 'Dravida' along with Andhras, Singalas, Keralas, Mushikas and Cholas.

If Pandyas mentioned by name, the reference 'Dravida' absent.

[this indicates that the Pandyas were labelled as 'Dravida']Manava Dharma Sastra : 2nd – 3rd

Chodas and Dravidas – degraded Kshatriyas because of non observance of Brahmanical rites.

Natya Sastra : 500 BCE – 500 CE-Southern Country named as Dramidas along with Andras

Vajanandhi constitute ‘Dramila sangha’

Badami Chaluka Kirtivarma’s Mahakuta inscription– 595 CE.-conquered 14 areas include Kerala, Mushika, Pandya, Choliya and ‘ Dramila’ -here it denotes Pallava country

Brihat Samhita of Varahamihira – 6th CE both Dravida and Dramida inter changed in manuscripts

a. Here also Chodas Keralas are mentioned, but Pandya absent, instead Dravida mentioned
b. In another occurrence, while listing Lanka, Konkan. Kerala, Karnatic and Cholas, both Dravida , Pandya are absent. It indicates as of Cholas repesent the whole of Tamils

Bhagavata Purana – 500-1000 CE – Several references to the Dravida country (Dravida Sattama and Dravidesu).

Tantravartka – 7th CE-Lists some words (cor, pamp,vair = Coru, pambuvayivu), as Dravida language. (here Andra country, language and people are mentioned separately, but both included as in southern country)

Xuanzang – 7th CE -Visited both Pallava and Pandya country, commonly named as Dravida country

Dandin – 7th CE- Dasakumara Charita -Kanchi in Dravidadesa.

Skanda Purana - 7th c. CE (Uncertain date) Mentions Brahmin sects from south of Vindhyas as ‘Pancha Dravida’ (Karnataka, Tailanga, Gurjjara, Andra and Dravida)

Adishankara – 8th c. CE refers to Tamil saint Sambandar as ‘Dravidasisu’ (some differs- he called himself with term)

Raja Tarangini – 12th c. CE - lists Gurjjaras, Maharashriyas, Karnatakas, Tailingas, and Dravidas

Nathamuni– 10th CE – Tamil Hymn of Vaishnava saints ‘Tiruvoymoli’ as ‘Dravida Veda Sagara’

Some Kannada prose works of 6th – 10th CE (veddaradhane, chhondompudhi) while listing Dravida, Andra, Karnatika along with other names, refers South Madura ruled by Sundara Pandya as Dravida

Western Chalukya Jayasimha-10th – 12th CE – subdued the Cholas, the lord of ‘Dravida Country’

Leelatilakam – 14th – 16th describes the people of Kerala as Dravidians.

In Sanskrit sources, the word Dravida mentioned in different forms such as Dramila (த்ரமிள), Dravila (த்ரவிள), Dramida (த்ரமிட), Dravida (த்ரவிட). Basic change is inserted hypercorrection which is a common theory while adopting / developing/assimilating any word into Sanskrit from other languages (Pali,Prakrit and Tamil). Here also ‘ta’ (unaspirated) changed into ‘Da’ (aspirated) and ‘la’ into ‘da’ or ‘ra’; ‘mi’ into ‘vi’ because of the Sanskrit derivations mainly from Pali and Prakrit. These changes were chronogically later[2]. The connotation apart from language, in itsadjectival forms refer to the people and country sometimes ambiguously to South Indian people, country and their language. In some instances, it exclusively refer one particular region or Dynasty (e.g Pallavas of Tondaimandalam, Pandyas of Pothihai hills). The word‘Pancha Dravida’ in Rajatarangini refers to of Gujarathi and Marathi along with Kannada, Telugu and Tamil[3].

Evolution of Tamil as classical According to linguists, Tamil belongs to the Dravidian language family, though direct evidence is lacking. It is considered to be a descendant of the Hypothetical proto-Dravidian language mostly have spoken from around 3rd millienium BCE, possibly in the region around lower Godavari river basin. They associate the material evidences from the neolithic complexes of Andra, Karnataka region and suggest people of that land were the early speakers of this Proto-Dravidian language (Southworth, 2005). Names of pulses, millets and related grasses, cereals, other food crop plants and some basic vocabulary were listed with counterpart of South Proto Dravidian. In 1816, Englishman Francis whyte Ellis, an ICS officer, introduced the notion of Drvidian family. He provided lexical and grammatical evidences to support his hypothesis that Tulu, Kodagu and Malto were the members of that family of languages and opined that may be appropriately called the dialects of South India. Based on the generic research it has been suggested that these languages spoken in alarger geographical area than today. Computational linguistic studies date this family to be 4500 years old (Vishnupriya Kolippakamet al.2018). Evolution of language is influenced by migratory patterns and gender dynamics according to Peggy Mohan (2021) and agglutination of a language may be far older.

2 The traditional age given to some referred literature in BCE could be reconsidered. At least the portion which anecdote could be considered as interpolations of later period.

3 3. It could be remembered that linguists’ analyzation revels shared linguistic elements of Proto Dravidian among Gujarathi and Marathi.

The suggested area comprises the modern Andra, Karnataka and some north western border land of Tamilnadu. In the absence of any production site of neolithic (some neo-lithic implements were obtained, but they were from iron age/megalithic context and used by them for the ritualistic purpose as cult-objects (Marxia Gandhi, 2022), the extension of neolithic culture into Tamil Nadu is sceptical. Instead, through the breadth and wealth of Tamil Nadu the available material suggest that the earlier microlithic culture followed by iron age here. Iron age started from 2nd millennium BCE in Tamil Nadu, Sivakalai in deep South Tamil Nadu yielded iron objects dating back to 3345 BCE. While the people of neolithic culture, who were inhabited in Andra–Karnataka, probable speakers of so called proto-Dravidian language could not develop theirlanguage into an advanced stage, Tamil was exemplarily flourished in the following period. How? According to linguists, the vocabulary of alanguage could be bloomed under some special circumstance by the influence of social, political,religious and cultural factors. Rapid growth of a language is possible only when that locality grow with surplus yield of agriculture, emerge with various industrial activities, formation of ruling lineages, internal and external trade etc. Sangam literature and archaeological materials give abundance of evidence to reveal the progress of Tamil speaking community. It is estimated that about 35,000 basic verbs (Pulavar Manian, 2007) and countless nouns in the Sangam literature. Tolkappiyam clearly classifies morphemes, syntax and their semantic organisation. Verbs and nouns are classified according to socio –geographical categories and detailed separately, indicates its attainment of classical status by vast elaborate and countless vocabulary.

Script Any language in its phonetic stage is a tool for communication, but when it develops into its written form either by creation or by adoption, it preserves its history, life, culture, civilization, as a whole its multi-various dimensions of that particular language people and it transcends all these to its future generation coming up. In the Indian context, after Indus script, the first known script is Brahmi, named after the god of creation or one who first learnt from her father. The nomencluture ‘Brahmi’ was given by any single author. It seems emerged as a modern academic term was established in 1837 by James Princep from historical and scholarly traditions. Although the name found in Jaina, Buddhist text, it had been formalised and popularized by modern European scholars. The modern understanding and formalization of that name come through the works of early epigraphists and scholars. Then became a standardised designation for that script in the scholarly literatures. It was used to describe the scriptused in ancient inscriptions and manuscripts and became a key term in the study of ancient Indian

Epigraphy. When the inscriptions of Asoka Maurya were decoded, that name 'Brahmi' was given to that script. All his edicts were written in Prakrit language.

Variants in inscriptional study Inscribed Caskets were unearthed by Alexander Rea in 1892 at Bhattiprolu in modern Andra Pradesh. These inscriptions were written with unique orthography and named as 'Bhattiprolu script', a distinct variant of Brahmi of Asokan inscriptions .It has some special letters like gh, j, l and m (with different orthography) are not found in the inscriptions of Asoka and often discards the inherent vowel. It had been commented by scholars that this script was a variant form Brahmi, an adaption according to Dravidian phonology.

Number of inscriptions in the caves, rocks and slabs were discovered in Sri lanka were written in Prakrit and Tamil language in 19th century were dated to around 300 BCE by that time. It had been widely believed that Brahmi script from North India spread into Sri Lanka, not earlier that the middle of 3rd BCE under the influence of Buddhist Maurya. Later some pieces of potteries were unearthed form Anuradhapura exacavation by Dr. Siran Deraniyagala in 1988. Further excavations and explorations (Matale, Akurugoda, Kandaragoda and others) revealed its wide spread usage. Most of the pottery inscriptions are in Prakrit. Local coins with Tamil legends from the northern, eastern parts of Srilanka also discovered (Bopearchchi, Osmund, 2008, Pushparatnam, 2001). Through scientic methods the dates have been revised to 500 BCE.

Inscriptions found in the caves of Tamil Nadu, initially thought to have been written in Prakrit. Due to the efforts of K.V. Subramaniya Aiyar and H.Krishna Sastri it came to be known that these were written in Tamil with unique orthography and special letters. Further excavations and explorations brought to light many more inscriptions on hero-stones, potsherds, coins, signet rings etc. with this script. After a prolonged attempts and efforts, that scripts' orthography was understood with clue obtained from Bhattiprolu orthography. It shows its antiquarian formation various parallel attempts had been made before finalising to standard form. Such attempts were also recorded in one way or other in these inscrptions. These were considered by scholars as steps of adoption from Brahmi. Instead of taking them as of adoption to be treated as the steps of evolution in the way of formation. After deciphering about 100 cave inscriptions, potsherds from Kodumanal, Poruntal, Keeladi, Korkai and many more, now it is confirmed that they were representing the earliest script for Tamil, not adopted from Brahmi. From samples collected from Kodumanal, Keeladi, Korkai, Alagankulam, Poruntal and Sivakalai, 73 AMS dates were obtained from Beta Analtical labs proves its antiquity more than Brahmi of Asoka atleast by 3rd-4th centuries earlier. The earliest date arrived at 685 BCE is from Sivakalai. Iravatham Mahadevan

in his magnum opus 'Early Tamil epigraphy' classified all the above mentioned inscriptional scripts as Brahmi and its variants. He uses various connotations as Asokan, Southern Brahmi, Northern Brahmi, Bhattiprolu script, Singala Brahmi and Tamil Brahmi. They are not classified based on either by language or by land. Though in his foot note he commits 'some have criticised who objects to the prefix Tamil as it offends against the imperial unity of Brahmi and by others who object the suffix Brahmi as they deny that the Tamil script is derived from Brahmi' not convinced with their comments it shows. When he details about under the caption Tamil Brahmi, he points that 'it is uniquely adapted for non Indo Aryan, Dravidian language; Palaeographical, orthographical modifications effected in the script entitle it to the status of separate script; also states a separate script not necessarily imply an independent origin'.

The inscriptions of Asoka, Bhattiprolu and some Srilankan are written in Prakrit, an Indo European language group. But Tamil is altogether belongs to another group classified under Proto Dravidian. Every language have specific phonetic needs. A huge difference is here between Prakrit and Tamil. The differences are well known, particularly absence of varga and conjunct. It is also not followed Brahmi's notations system. Though in Tamil phonetical system, the difference is prevails, by its conventional pronunciation, it has been encountered. Most importantly there is no need for separate scripts for aspirate and unaspirate, because they won't represent the difference or change in meaning like Indo European.

Even though the proponents of adaption theory including Mahadevan accepts Tamil Brahmi's uniqueness. Earliest attestation of this system for Tamil provides direct evidence for the scripts formation well before 3rd c. BCE. Over the period of time to denote this script two words used (Tamili and Dravidi). Tamili is an ancient nomenclature on par with Brahmi. Damili (தாமிளி) is a direct rendering from (தமிழி). That is the original name uttered by the people of Tamilnadu for their language. This nomenclature not based on any mythology. But a natural creation of the people of their own. Dr. Nagasmay was the scholar who proposed Tamil Brahmi script to be synonymous with Damili in his publications (1972) and Now this is getting more momentum among many scholars. It is the high time to standardise this word as nomenclature for Tamil script of earlier origin. The elegance and standardised form of Asokan Brahmi must have been perfected only in the following centuries after Tamili's basic model.

Bibliography

Bopearachchi,Osmund. 2008. From Bacteria to Taprobane,Tamil traders in Srilanka and Singalese traders in Tamil studies. International centre for Ethnic studies, Colombo.

Marxia Gandhi. 2022. Sembian Kandiyur celt-a relook.

Nagaswamy et.al.1972. Kalvettiyal. State Department of Archaeology, Chennai.

Pavanar, Devaneyan. 2017. The primary classical language of the world, create space Independent Publishers

Peggy Mohan. 2021. Wanderes, Kings, Merchants: The story of India through its languages. Penguin Random House India Pv't Ltd

Peggy Mohan. 2011 Rice and Language Across Asia: Crop, Movement, and Social change, Penguin Random House India Pvt Ltd

Pushparatnam P. 2001. Ilangait Tamilarin pandaiyakaala nanayangal (Tamil). Bhavani pathipagam, Yaazhpanam.

Reich, David. 2018. Who We are and How We Got Here. Oxford University Press.

Southworth, Franklin. C. 1998. On The origin of the word Tamiz. International Journal of Dravian linguistics.

Southworth, Franklin. C. 2005. Linguistic Archaeology of South Asia, London: autledge Curzon Tamil lexicon, 1924-36. Madras: University of Madras, Retrieved in 2022, online edition at the University of Chicago

Zvelebil, Kamil.1992. Companion studies to the history of Tamil literature, Leiden: Brill

Vishnupriya Kolipakam et al. 2018. Bayesian phylogenetic study of the Dravidian language family, The Royal Soceity Publishing. org. vol. 5, Issue 3.



பாண்டியன் சடையன்மாறன் கல்லுமடைக் கல்வெட்டுகள்

வெ.வேதாசலம்
தொல்லியல், கலை, வரலாற்றாய்வாளர்
மதுரை

சுருக்கம்

விருதுநகர் மாவட்டம் நரிக்குடியிலிருந்து திருப்புவனம் செல்லும் வழியில் உள்ள கல்லுமடை என்ற ஊரில் சிவன்கோயில் ஒன்று உள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த இக்கோயிலில் உள்ள ஒரு கற்பலகையில் இரண்டு முற்காலப் பாண்டியர் காலத்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த சடையன்மாறன் என்ற பாண்டிய மன்னன் கல்வெட்டுகளாகும். முதல் கல்வெட்டு திருப்பாலையூர் சிவன்கோயில் இறைவனுக்கு நந்தாவிளக்கு எரிப்பதற்காகப் பருத்திக்குடி நாட்டு மேன்முக்குளத்தைச் சார்ந்த கேரளசிங்க முத்தரையன் இருபத்தைந்து பசுக்களைக் கொடையாகக் கொடுத்ததைக் கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு பல வரிகளில் எழுதப்பட்ட நீண்ட கல்வெட்டாகும். இக்கல்வெட்டு கேரளசிங்க முத்தரையனே பருத்திக்குடிநாட்டு மேன்முக்குளத்தில் புலக்குளத்துச் சேர்கல்நிலத்தைத் திருப்பாலையூர் சிவன்கோயிலுக்கு அளித்த முக்கிய செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு கோனோர்மைகொண்டான் என்று தொடங்கும் சடையன்மாறனின் அரச ஆணை கல்வெட்டாகும். பாண்டிய அரசரின் பல அதிகாரிகள் இவ்வரச ஆணையை நிறைவேற்றி வைத்தவர்களாக இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். இவ்வரச ஆணையை அரசன் இராசசிங்ககுளக் கீழ் நாட்டில் இருந்த மங்கலபுரம் என்ற அரண்மனையில் இருந்து வழங்கியுள்ளான். மங்கலபுரம் பாண்டியன் நெடுமாறனால் ஏழாம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட நகரமாகும்.

இக்கல்லுமடைக் கல்வெட்டு சோழன்தலைகொண்ட வீரபாண்டியன் (பொ.ஆ.946-966) காலத்திற்குப்பின்னர் ஆட்சிபுரிந்த சடையன்மாறனின் கல்வெட்டாகும். பொ.ஆ.966க்குப் பின்னர் பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டிய மன்னர்கள் பற்றி அதிகம் தெரியாத நிலையில் இக்கல்வெட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பாண்டியரின் அரசியல் வரலாற்றையும் அக்கால சமூக, சமயநிலையைப் புரிந்து கொள்வதற்கும் அக்கால அரசியல் அதிகாரிகள் பற்றி அறிந்து கொள்வதற்கும் இக்கல்வெட்டு மிகுந்த துணைபுரிகிறது. மேற்கண்ட செய்திகளை ஆய்வு செய்வதோடு இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னன் யார் என்பதையும் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியல் வட்டத்தின் வடதிசை எல்லையில் உள்ளது கல்லுமடைக் கிராமம். இவ்வூரை மதுரையிலிருந்து திருப்புவனம் வந்து அங்கிருந்து நரிக்குடி செல்லும் சாலையில் சிறிதுதூரம் சென்றால் அடையலாம். இவ்வூரைச் சார்ந்தது பூலங்குளம் பகுதி. இப்பூலங்குளத்தில் வயல்காட்டுப் பகுதியில் இடிந்துபோன பழைமையான சிவன்கோயில் ஒன்று உள்ளது. இதன் பெரும்பகுதி அழிந்து போன நிலையில் அதிட்டானப்பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. பொ.ஆ.10ஆம் நூற்றாண்டைச்சார்ந்த சிற்பங்களும் இக்கோயில் வளாகத்தில் உள்ளன. இவ்வளாகத்தில் நடப்பெற்றுள்ள பட்டையான கல்லில் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தூண் ஒன்றில் சடையவர்மன் சோழபாண்டியன் கல்வெட்டும் கோயில் அதிட்டானப்பகுதியில் சடையவர்மன் விக்கிரமபாண்டியன், எம்மண்டலமுங் கொண்டருளிய சடையவர்மன் சுந்தரபாண்டியன், எம்மண்டலமுங் கொண்டருளிய மாறவர்மன் குலசேகரபாண்டியன் ஆகியோரது கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.[1] அண்மையில் இக்கோயிலில் இரண்டாம் வரகுணபாண்டியன் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது.

சாழநாட்டுத் திருப்பாலையூர்

இக்கல்வெட்டுக்கள் மூலம் கல்லுமடை மற்றும் அதனைச் சார்ந்த பூலங்குளம் ஆகிய பகுதிகளில் மறைந்துபோன வரலாற்றுண்மைகளை அறிந்து கொள்ள முடிகிறது. இங்குள்ள சிவன்கோயில் பகுதியும் அதனைச் சூழ்ந்த ஊர்பகுதியும் திருப்பாலையூர் என்ற பெயர் பெற்று விளங்கியிருக்கின்றது. இவ்வூர்ப் பகுதி சாழநாடு என்ற பாண்டிய நாட்டின் உட்பிரிவு நாட்டில் இருந்துள்ளது. இது தேவதான ஊராகவும் விளங்கியுள்ளது. இவ்வூரில் தற்போது அழிந்த நிலையில் எஞ்சி நிற்கும் சிவன் கோயிலே திருப்பாலையூர் ஈஸ்வரர் கோயில் என்ற பெயரில் ஒரு காலத்தில் சிறந்து விளங்கியிருக்கின்றது. கள ஆய்வில் படித்தறியப்பெற்ற இங்குள்ள கல்வெட்டுக்கள் திருப்பாலையூர் பகுதியும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் பாண்டியநாட்டு வரலாற்றில் சமயச்சிறப்பும் அரசியல் சிறப்பும் வாய்ந்த மையமாக விளங்கியதை உணர்த்துகின்றன.

சடையன்மாறன் கல்வெட்டுக்கள்

திருப்பாலையூர் ஈஸ்வரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் தற்போது இங்கு நடப்பெற்றுள்ள கல்லில் பொறிக்கப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றில் சடையன்மாறன் பெயரில் விளங்கும் பாண்டிய மன்னனின் கல்வெட்டு மட்டும் 1977-78ஆம் ஆண்டு இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் வெளியிடப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு பொறித்த கல்லின் பின்புறம் பொறிக்கப்பட்டிருக்கும் மற்றொரு கல்வெட்டு முக்கியமானதாகும். இக்கல்வெட்டே முந்தைய கல்வெட்டினைக் காட்டிலும் அரிய செய்திகளைத் தரும் புதிய கல்வெட்டு ஆகும்.

இவ்விரு கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டு இவற்றின் காலத்தினை பொ.ஆ.10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக்கூறலாம். முதல் கல்வெட்டு சடையன்மாறனின் மூன்றாவது ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வெட்டில் அரசனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. கோனோர்மை கொண்டான் என்ற பெயரில் அரசனின் மூன்றாவது ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற, அவனது ஆணையைத் தெரிவிக்கும் முப்பத்து மூன்று வரிகள் கொண்ட நீண்ட கல்வெட்டு இதுவாகும். இக்கல்வெட்டின் எழுத்தமைதியும் முந்தைய கல்வெட்டின் எழுத்தமைதியும் ஒன்றாக விளங்குவதால் இவை இரண்டும் ஒரே காலத்தினைச் சார்ந்த கல்வெட்டுக்கள் எனக் கூறலாம். இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சடையன்மாறன் என்ற பெயரில் பொறிக்கப்பட்டிருக்கும் முதல் கல்வெட்டில் திருப்பாலையூர் ஈஸ்வரர் கோயிலுக்குத் தானம் வழங்கியதாகக் குறிப்பிடப்பெறும் அரசியல் அதிகாரியின் பெயர் இரண்டாவது கல்வெட்டிலும் காணப்படுகிறது. அவன் அளித்த தானத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே இக்கல்வெட்டு அரசாணை வெளியிடப்பெற்றிருப்பதால் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுக்களும் பொ.ஆ.10ஆம் நூற்றாண்டில் சடையன்மாறன் என்ற பெயரில் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த மன்னனுக்குரிய கல்வெட்டுக்கள் என்று கூறலாம்.

சடையன்மாறன் யார்?

இக்கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் சடையன்மாறன் பொ.ஆ. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாண்டிய நாட்டில் சடையன்மாறனாக ஆட்சிபுரிந்த சின்னமனூர் பெரிய செப்பேட்டை வெளியிட்ட இராசசிம்மனாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் (பொ.ஆ.946-966) அதிகாரியாக அவனது அம்பாசமுத்திரம் கல்வெட்டிலும்[2] அவனது நக்கனேரிக் கல்வெட்டிலும்[3] குறிப்பிடப்பெறும் அண்டநாட்டு சூளாமணிக்கிழவன் இக்கல்வெட்டிலும் குறிப்பிடப் பெறுகின்றான். ஆனால் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டாகவும் இதனைக் கொள்ள முடியாது. இதற்குக் காரணம் அவன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் என்ற பெயரினைத் தனது ஆறாவது ஆட்சியாண்டிலிருந்து வெளியிடுவதற்கு முன்னர் மாறஞ்சடையன் என்ற பெயரிலேயே ஆட்சிபுரிந்திருக்கின்றான்.[4] எனவே மாறஞ்சடையனாக விளங்கிய சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டுக்களாகவும் இவற்றைக் கொள்ள முடியாது.

சோழன் தலைகொண்ட வீரபாண்டியனுக்குப் பிறகு சடையன்மாறன் என்ற பெயரில் பாண்டிய மன்னன் ஒருவன் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்திருக்கின்றான். அவனது கல்வெட்டுக்கள் பள்ளிமடம்

திருப்புடைமருதூர் போன்ற இடங்களில் காணப்படுகின்றன என்ற செய்தியை கும்பகோணம் என்.சேதுராமன் தமது கல்வெட்டாய்வில் கண்டறிந்து வெளியிட்டுள்ளார்.[5] சோழன் தலைகொண்ட வீரபாண்டியனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த இச்சடையன்மாறனின் கல்வெட்டாக இவ்விரு கல்லுமடை வட்டெழுத்துக் கல்வெட்டுக்களையும் கொள்ள இடமிருக்கின்றது. சோழன் தலைகொண்ட வீரபாண்டியனிடத்துப் பணிபுரிந்த சூளாமணிக்கிழவன் என்ற அதிகாரி தொடர்ந்து அவனது மகனாக (?) விளங்கிய சடையன்மாறன். காலத்திலும் அவனிடத்து அதிகாரியாகப் பணிபுரிந்தமையே கல்லுமடை வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இதனால் மேற்கண்ட பாண்டியநாட்டு வரலாற்றில் புதியதாக கண்டறிந்த பொ.ஆ.10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த சடையன்மாறனின் கல்வெட்டுக்களே இவ்விரு கல்வெட்டுக்களும் என்பது உறுதிப்படுகின்றது. இராமநாதபுரம் மாவட்டத்துச் சாளகிராமத்தில் உள்ள கல்லுமடைச் சிவன்கோயில் எழுத்தமைதியுடன் ஒத்துப்போகும் கல்வெட்டில்[7] குறிப்பிடப்படும் சிவல்லபன் (பெருமானடிகள் சிவன் வல்லுவதேவர்)

பாண்டிமார்த்தாண்டன் என்ற பெயரினைப் பெற்று விளங்கியவன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்[6] ஆவான். இப்பெயரினைக் கொண்டு அவனிடத்துப் பணிபுரிந்துள்ள பாண்டி மார்த்தாண்ட மூவேந்த வேளானாயின பட்டன் வேங்கடவன் என்பவன் கல்லுமடை இரண்டாவது வட்டெழுத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றான். வீரபாண்டியனிடத்துப் பணிபுரிந்த அவன் சூளாமணிக்கிழவனைப் போன்று தொடர்ந்து அவனுக்குப் பிறகு ஆண்ட சடையன்மாறனிடத்தும் பணிபுரிந்திருக்கின்றான் எனக் கருதலாம். இச்சடையன்மாறன் வீரபாண்டியனுக்குப் பிறகு கி.பி. 967ல் பாண்டிய நாட்டு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டவன் என்று கொண்டால் அவனது மூன்றாவது ஆட்சியாண்டைக் குறிக்கும் இவ்விரு கல்வெட்டுக்களும் கி.பி. 970ல் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இவனுக்குக் ‘கேரளசிங்கன்’ என்ற பட்டப்பெயர் இருந்திருக்கின்றது. இதனை இக்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பெறும் அவனது அதிகாரியின் பெயர் மூலம் அறிய முடிகின்றது.

கல்வெட்டுச் செய்திகள்

கல்லுமடைக் கோயிலில் சடையன்மாறன் என்று பெயர் பொறித்து எழுதப்பெற்ற அவனது மூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு பருத்திக்குடிநாட்டு மேன்முக்குளத்தினைச் சார்ந்த கேரளசிங்க முத்தரையன் என்பவன் திருப்பாலையூர் ஈஸ்வரபடாரர்க்குத் திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காக இருபத்தைந்து பசுக்கள் கொடையாக அளித்திருப்பதைத் தெரிவிக்கின்றன. இப்பசுக்களை நான்கு இடையர்கள் பெற்றுக்கொண்டு நாள்தோறும் உழக்குநெய் திருவிளக்கு எரிப்பதற்காக அளித்திருக்கின்றனர். இதன்படி

இருபத்தைந்து பசுக்களில் அம்மானப்பி என்பவன் ஐந்து பசுக்களையும், சொற்றனட்டி என்பவன் பத்துப் பசுக்களையும் சங்கரங்குடியன் என்பவன் ஐந்து பசுக்களையும் சங்கரன் பெற்றான் என்பவன் ஐந்து பசுக்களையும் பெற்றுக்கொண்டு திருவிளக்குக்கு உழக்குநெய் கோயிலில் வந்து அளித்திருக்கின்றனர். இத்திருவிளக்கு குறித்த கேரளசிங்க முத்திரையனின் கொடை பற்றிய செய்தி வட்டெழுத்துக் கல்வெட்டில் முற்பகுதியில் கிரந்த எழுத்துக்களில் வடமொழியிலும் சுருக்கமாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

கோனோர்மை கொண்டான்

கோனோர்மை கொண்டான் என்று தொடங்கும் இரண்டாவது கல்வெட்டும் கேரளசிங்க முத்தரையன் சாழநாட்டு திருப்பாலையூர் தேவர்க்குப் பருத்திக்குடி நாட்டு மேன்முக்குளத்தில் தனது காணிப்பற்றிலுள்ள புலக்குளத்துச் சேல்கல்நிலத்தை காராண்மை மீயாட்சி உள்ளடங்க தேவதானமாகத் தந்தமைக்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கின்றது. கோனோர்மைகொண்டான் (கோனேரின்மை கொண்டான்) என்ற பெயரில் அரசரது திருமுக ஆணையை வெளியிடும் வழக்கம் பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் இருந்திருக்கின்றது. இதனைப் பின்பற்றி இச்சடையன்மாறனின் கல்வெட்டும் அவனது அரச ஆணையாக எழுதப் பெற்றிருக்கின்றது. இக்கல்வெட்டு ஒரு செப்பேட்டு ஆணை போன்று உள்ளது.

அரச ஆணையும் நிறைவேற்றிய அலுவலர்களும்

பாண்டிய நாட்டில் அரச ஆணை ஒன்று பொ.ஆ.10ஆம் நூற்றாண்டில் எவ்வாறு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை இக்கல்வெட்டு தெளிவாகத் தெரிவிக்கின்றது. சிவகாசி செப்பேட்டிலும் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் அம்பாசமுத்திரம் கல்வெட்டுக்களிலும்[8] குறிப்பிடப்படுவது போன்று இவ்வாணையை நிறைவேற்றிய அரசியல் அதிகாரிகளின் பதவியும் பெயர்களும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. முற்காலப் பாண்டியரது அரசியல் நிர்வாகம் இக்காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுற்ற நிலையை எட்டியிருந்தது என்பதை இக்கல்வெட்டு அரச ஆணை வெளிப்படுத்துகின்றது. இதில்

விண்ணப்பம் (சொன்னவன்)

மேலெழுத்து செய்கின்றவன்,

கருமமாராய்கின்றவன்,

உத்திரமந்திரி,

ஓலைஎழுத்து,

வாய்க்கேள்வி,

சீகரணப்பொத்தகம்

கண்காணி

முதலிய அரசனது அதிகாரிகளின் பதவிப்பெயர்கள் அவர்களது நாடு, ஊர், இயற்பெயர், பட்டப்பெயர் ஆகியவற்றுடன் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன.

	பதவி		நாடும் ஊரும் பெயரும்
1.	சொன்னவன் (விண்ணப்பம்)	-	மேலெழுத்து செய்கின்றதிருவழுதி வளநாட்டு பெருங்குளத்துப் பாண்டித்தமிழ் வேளாளாயின வேளான்பட்டார்கன்
2.	ஆணத்தி	-	கருமமாராய்கின்ற முத்தூற்றுக் கூற்றத்துக் கப்பலூர் உதாரவிடங்க பிரம்மாதிராயன் உத்தமபாண்டியன். முத்தூற்றுக்கூற்றத்துக் கட்டிவயல் பாண்டி மார்த்தாண்ட மூவேந்த வேளாளனாயின பட்டன் வேங்கடவன்
3.	காவல்	-	இடையாற்றுநாட்டு வீரகேரளநல்லூர் தென்னன் உத்திரமந்திரியாயின நக்கன் கணவதி
4.	ஓலைஎழுத்து	-	அண்டநாட்டுக் குவலைய(கற்பக) நல்லூர் தென்னவன்உத்திரமந்திரி சூளாமணிக்கிழவன்
5.	வாய்கேள்வி	-	மாடக்குளக்கீழ் காலரமானரி மூவேந்த பல்லவரையனாயின படாரஞ்சோலை
6.	சீகரணப்பண்டாரப்பொத்தகம்	-	தென்பறப்புநாட்டு அயல்வான்குடி விசைய பாண்டிய மூவேந்தவேளான்
7.	கண்காணி	-	பூங்கானாட்டு இளமதுரைதீரன்

சிந்தாமணிப் பல்லவரையனாயின
புல்லன்நக்கன்

8. பாற்படுத்துக்குடுத்தவன் (அதிகாரம்) - புறப்பறளைநாட்டு நிரம்பூர் அரங்கன் வேளான்

இவ்வரச ஆணையை வெளியிட்ட மன்னன் (சடையன்மாறன்) இராசசிங்கக் குளக்கீழ் நாட்டில் இருந்த மங்கலபுரத்து அரண்மனையின் கீடைவடக்குறையில் அமர்ந்திருந்தபோது வழங்கியிருக்கின்றான். கேரளசிங்க முத்தரையன் திருப்பாலையூர் தேவர்க்குச் சாழநாட்டு மேன்முக்குளத்தினைச் சார்ந்த புலக்குளத்துச் சேல்கல்நிலத்தைக் காராண்மை மீயாட்சி உள்ளடங்க தேவதானமாகத் தந்தான். இதனைப் பருத்திக்குடிநாட்டுப் பாப்பாரசான்றார்க்கும் பாற்குடிகளுக்கும் பிரமதேயக் கிழவர்க்கும் தெரிவித்து ஆணை வழங்க வேண்டும் என்று அரசனுக்குத் தெரிவித்தவன் (இவன் நமக்குச் சொன்னமையில்) அவனுக்கு மேலெழுத்துச் செய்கின்ற பாண்டித் தமிழ் வேளாளாயின வேளான் பட்டாரகன் ஆவான். இவ்வாணையை முன்னின்று நிறைவேற்றிய ஆணத்தியாக அரசனின் கருமம் ஆராய்கின்ற பிரமாதிராயனான உத்தம பாண்டியன் மற்றும் பாண்டிமார்த்தாண்ட மூவேந்தவேளானாயின பட்டன் வேங்கடவன் ஆகிய இருவரும் ஆவர். இதற்கு அரசன் இட்ட காவலாக (எம்மிடுகாவலாக) விளங்கியவன் தென்னன் உத்திரமந்திரி நக்கன் கணபதி ஆவான். ஓலையெழுத்தாக தென்னவன் உத்திரமந்திரி சூளாமணிக்கிழவன் விளங்கியுள்ளான். வாய்கேள்வியாக மூவேந்திரப் பல்லவரையனாயின படாரஞ்சோலை விளங்கியுள்ளான். சீகரணப்பண்டாரப் பொத்தகமாக விசையபாண்டிய மூவேந்தவேளான் இருந்திருக்கின்றான். கண்காணியாக தீரன் சிந்தாமணிப் பல்லவராயனாயின புல்லன்நக்கன் பணிபுரிந்துள்ளான். இவ்வாணையைச் சரிபார்த்து அனுப்பி வைப்பவனாக நிரம்பூர் அரங்கன் வேளாண் விளங்கியுள்ளான்.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் பார்ப்பாரசான்றார் அந்தணர்கள் (சத்திரிய பிராமணர்) ஆவார்கள். இவர்கள் தானமாக அளிக்கப்பட்ட நிலத்தையும், ஊரினையும் அளந்து காணும் பணியினைச் செய்தவர்கள் ஆவார்கள்.[9] பிரமதேய கிழவர் என்போர் இப்பகுதிகளில் இருந்த பிரமதேயத்திற்கு உரிமையுடைய அவை தொடர்பான பணிகளில் ஈடுபட்டுவந்த சுபையார் ஆவார்கள். இப்பகுதியில் வாழ்ந்து வந்த பிற குடிகள் பாற்குடிகள் என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். இம்மூவர்க்கும் தெரியும் வகையில் இவ்வாணை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. கோயிலில் கல்வெட்டாகவும் பொறிக்கப்பட்டது.

அதிகாரிகளின் பணிகள்

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் அரசியல் அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் முற்காலப்பாண்டியர் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும்

காணப்படுகின்றன. சிவகாசிச் செப்பேட்டில் வடமொழியில் விக்ஞப்தி என்றும் தமிழில் விண்ணப்பம் என்றும் குறிக்கப்படும் சொல்லே 'நமக்குச் சொன்னமை' என்று இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. ஆணையை நிறைவேற்றும் ஆக்ஞப்தி என்ற சொல் ஆணத்தி என்று இக்கல்வெட்டில் வருகின்றது. 'மேலெழுத்து' என்பது அரசனின் உடனிருந்து அரசன் சொல்வதை ஓலையில் எழுதச் செய்யும் அதிகாரியாக இருக்க வேண்டும். இவ்வதிகார மேலெழுத்து செய்த அதிகாரி ஒருவன் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் சுசீந்திரம் கல்வெட்டில் வருகின்றான்.[10] அரசனின் உடனிருந்தும் அவன் அனுப்பும் இடங்களுக்குச் சென்றும் அரசனது சார்பாக அவன் பணிகளைச் செய்யும் அதிகாரி 'கருமம் ஆராய்கின்றவன்' என்ற அழைக்கப்பட்டுள்ளான் இவன் 'கருமம் ஆராய்ச்சி' என்றும் கூறப்பட்டான்.[11]

'ஓலைஎழுத்து' என்பவன் அரசன் வழங்கிய இவ்வாணையை ஓலையில் எழுதும் அதிகாரியாவான். இவனே கீழ் எழுத்தாக விளங்கியிருக்க வேண்டும். 'வாய்கேள்வி' என்பவன் அரசனது ஆணையை மேல்லெழுத்து மூலம் கேட்டு ஓலை எழுகின்றவனிடம் கூறுகின்றவன் ஆவான். நிலவரி நீக்கம் தொடர்பான செய்திகளை புரவுவரிப் பொத்தகத்தில் குறித்துக் கொள்ளும் கணக்கன் 'சீகரணப்பண்டாரப்பொத்தகம்' ஆவான். இப்பண்டாரப்பொத்தகமே 'புரவுவரி' என்றும் சிவகாசிச் செப்பேட்டில் அழைக்கப்பட்டுள்ளான். ஓலையில் எழுதப்பட்ட ஆணையை மேற்பார்வையிட்டு கண்காணிக்கும் அதிகாரி 'கண்காணி' ஆவான். இவ்வாணைக்குத் தீங்கு நேராத வண்ணம் காவல்பணி செய்தவன் 'காவல்' (எம்மிடுகாவல்) என்று அழைக்கப்பட்டான். அரசன் வழங்கிய ஆணையை நிறைவேற்றும் வகையில் தொடர்புடைய இடத்திற்கு இதனை அனுப்பி வைக்கின்றவன் 'அதிகாரம் செய்கின்றவன்' என்றும்[12] 'அதிகாரம்' என்றும்[13] கூறப்பட்டான். இவனைப் பாற்படுத்துக் குடுக்கச் செய்தவன் என்று கல்லுமடை கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

வேளான்

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் அதிகாரிகள் வேளான், மூவேந்த வேளான் பிரமாதிராயன் என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்று விளங்கியிருக்கின்றனர். ஆணத்தியாகப் பாண்டிமார்த்தாண்ட மூவேந்த வேளான் இருந்திருக்கின்றான். மேலெழுத்தாகப் பாண்டித் தமிழ்வேளான் விளங்கியுள்ளான். கருமமாராய்கின்றவனாகப் பாண்டிமார்த்தாண்டன் மூவேந்த வேளான் விளங்கியுள்ளான். பண்டாரப் பொத்தகமாக விசைய பாண்டிய மூவேந்தவேளான் இருந்திருக்கின்றான். இவர்கள் தங்களது பெயர்களோடு அரசனின் பட்டப்பெயர்களான பாண்டிமார்த்தாண்டன், விசையபாண்டியன் என்ற பெயர்களையும் சேர்த்து அழைக்கப்பட்டுள்ளனர்.

பிரமாதிராயன்

பிராமணர் குலத்தினைச் சார்ந்த ஒருவன் அரசனது கருமம் ஆராய்கின்றவனாக பிரமாதிராயன் என்ற பட்டத்தினைப் பெற்று

விளங்கியுள்ளான். இவனே இவ்வாணையை நேரில் சென்று நிறைவேற்றும் ஆணத்தியரில் ஒருவனாக இருந்திருக்கின்றான்.

பல்லவரையர்கள்

தொண்டைநாட்டில் பல்லவர் ஆட்சி வீழ்ச்சியடையத் தொடங்கிய பொ.ஆ.9-ஆம் நூற்றாண்டிலிருந்து அவர்களது மரபைச் சார்ந்த பலர் பாண்டிய நாட்டிற்கு வந்து பாண்டியரோடு உறவுபூண்டு அவர்களது அதிகாரிகளாகப் பணிபுரிந்துள்ளனர். இவர்கள் பல்லவரையர் என்று முற்காலப்பாண்டியர் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர். கல்லுமடைக் கல்வெட்டிலும் மூவேந்தப் பல்லவரையர், சிந்தாமணிப்பல்லவரையர் என்று இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களில் ஒருவர் இவ்வாணையின் வாய்கேள்வியாகவும் மற்றொருவர் கண்காணியாகவும் விளங்கியிருக்கின்றனர்.

முத்தரையர்

பொ.ஆ. ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து சோழரிடம் தஞ்சையை இழந்த முத்தரையர் குலத்தினைச் சார்ந்த பலர் பல்லவர் குலத்தினைப் போன்று பாண்டிய நாட்டிற்கு வந்து பாண்டிய மன்னரது அதிகாரிகளாகப் பணிபுரிந்துள்ளனர். ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்திலேயே சோழநாட்டு ஆலங்குடியைச் சார்ந்த சத்துருபயங்கர முத்தரையன் என்பவன் பாண்டிய நாட்டில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றான்.[14] பாண்டிய நாட்டுப் பகுதியைச் சார்ந்த திருமயம் கல்வெட்டில் அக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய விடேல்விடுகு விழுப்பேரதியரையன் பெயர் குறிப்பிடப்படுகின்றது.[15] இதனைத் தொடர்ந்து பொ.ஆ.10ஆம் நூற்றாண்டிலும் பாண்டியர் அரசியலில் முத்தரையர்கள் பங்குபெற்று விளங்கியுள்ளனர். கல்லுமடையில் பாலையூர் ஈஸ்வரர் கோயிலுக்குத் தானம் தந்த முத்தரையனின் வரலாறு இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

கேரளசிங்கமுத்தரையன்

இம்முத்தரையனின் இயற்பெயர் மாதேவன்மருதன் என்பதாகும். இவன் கேரளசிங்கன் என்ற தனது அரசனது (சடையன்மாறன்) பட்ட பெயரினைப் புனைந்து கொண்டு விளங்கியுள்ளான். பருத்திக்குடிநாட்டு மேன்முக்குளம் இவனது ஊராகும். இம்மேன்முக்குளம் இன்று கல்லுமடைக்கு அருகில் அதற்கு வடமேல்திசையில் முக்குளம் என்ற பெயரில் உள்ளது. திருப்புவனத்திலிருந்து கல்லுமடை வழியாக நரிக்குடிக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் புல்வாய்க்கரை என்ற ஊரையடுத்து இவ்வூர் உள்ளது.

பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கல்லுமடையைச் சுற்றிய பகுதி பாண்டிய மன்னனது நிலைப்படை தங்கிய படைத்தளமாக விளங்கியுள்ளது.

இப்பகுதியில் இருந்த பல கோட்டைகளில் பாண்டிய மன்னனது வீரர்கள் தங்கியிருந்தனர். இப்பகுதியில் கன்மியார்கோட்டை, சிவப்புலிநாடாழ்வான் கோட்டை என்ற கோட்டைகளோடு முத்தரையன்கோட்டை என்ற பெயரில் கோட்டை ஒன்று இருந்திருக்கின்றது.[16] இக்கோட்டையில் முத்தரையர் குலத்துதித்த வீரர்கள் பலர் இருந்திருக்கின்றனர். பிற்காலப் பாண்டியர் காலத்திலும் முத்தரையர் செல்வாக்கு இப்பகுதியில் இருந்திருப்பதைக் கல்லுமடையிலுள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. சாயாபடை முத்தரையன், நாற்படை முத்தரையன் போன்ற முத்தரையர்களின் பெயர்கள் இங்குள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன. இன்றும் இவ்வட்டத்தில் முத்தரையர் குலத்துதித்தவர்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மங்கலபுரம்

பாண்டியனின் நிலைப்படை தங்கியிருந்த இப்பகுதியிலேயே பொ.ஆ.7ஆம் நூற்றாண்டில் பாண்டியன் நெடுமாறன் தோற்றுவித்த மங்கலபுரம் என்ற நகரம் இருந்திருக்கின்றது. அந்நகரிலிருந்த அரண்மனையிலிருந்தே கல்லுமடை சிவன்கோயில் அரச ஆணையைச் சடையன்மாறன் வழங்கியிருக்கின்றான் என்பது குறிப்பிடத்தக்கது. பொ.ஆ.7ஆம் நூற்றாண்டில் பாண்டியன் நெடுமாறன் தோற்றுவித்த இம்மங்கலபுரம் என்ற நகரம் எப்பகுதியில் இருந்தது என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. நிர்வாகத்தின் பொருட்டு பாண்டிய மன்னர்கள் பாண்டிய நாட்டில் பல இடங்களில் கோட்டை சூழ்ந்த அரண்மனைகளைத் தோற்றுவித்திருக்கின்றனர். அவர்கள் அப்பகுதிக்குச் சென்றபோது அவ்வரண்மனைகளில் தங்கி அரசாணைகள் வழங்கியிருப்பதைப் பாண்டியர் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இதுபோன்று தோற்றுவிக்கப்பட்ட கோட்டையும் அரண்மனையும் கொண்ட நகரமாக மங்கலபுரம் இருக்கவேண்டும். இம்மங்கலபுரம் பொ.ஆ.10ஆம் நூற்றாண்டிலும் சிறப்புடன் விளங்கியிருக்கின்றது என்பதையும் அது கல்லுமடைக்கு வடக்கேயுள்ள பகுதியில் இருந்திருக்கின்றது என்பதை உணர்த்தும் கல்வெட்டுக்கள் அண்மையில் கிடைத்துள்ளன.

உசிலம்பட்டி வட்டத்து ஆனையூரிலுள்ள சோழன்தலை கொண்ட வீரபாண்டியன் கல்வெட்டிலும்[17] விருதுநகருக்கு அருகிலுள்ள செங்குன்றாபுரத்தில் கண்டறியப்பெற்ற பிற்காலப் பாண்டியர் கல்வெட்டிலும் மங்கலபுரம் ‘இராசசிங்கக்குளக்கீழ்’ என்ற நாட்டுப் பிரிவில் இருந்திருப்பதை அறியமுடிகின்றது. இராசசிங்கக்குளக்கீழ் என்ற பாண்டியநாட்டின் உள்நாட்டுப்பிரிவு கல்லுமடைக்கு வடக்கேயுள்ள பகுதியே ஆகும். திருப்புவனம்

கண்மாயே இராசசிங்கக்குளம் என்ற பெயரில் விளங்கியிருக்கின்றது. இக்குளத்தினைச் சார்ந்த திருப்புவனமும் அதனைச் சார்ந்த ஊர்ப்பகுதிகளுமே இராசசிங்கக்குளக்கீழ் என்ற நாட்டுப்பகுதியாகக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றது. எனவே திருப்புவனம் பகுதிகளில் அமைந்த இராசசிங்கக்குளக்கீழ் நாட்டுப் பகுதியிலேயே மங்கலபுரம் இருந்திருக்கின்றது என்பதை உறுதியாகக் கூறலாம். ஆனால் தற்போது இப்பகுதிகளில் இருக்கும் எந்த ஊருக்கு மங்கலபுரம் என்ற பெயர் இருந்திருக்கின்றது என்பதை அறியமுடியவில்லை. இவ்வூர் பிற்காலத்தில் பெருமையிழந்து முற்றிலுமாக அழிந்துபோயிருக்கலாம். திருப்புவனத்திலிருந்து பிரமனூர் செல்லும் வழியில் அமைந்த வாவியனேந்தல் என்ற கிராமத்தின் தென்பகுதியில் மங்கலபுரம் என்ற பெயரில் ஊர் ஒன்று இருந்து அழிந்ததாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். எதிர்கால ஆய்வுகளே இது தொடர்பான உண்மையை உணர்த்த வேண்டும்.

சாழநாடு

கல்லுமடை பூலாங்குளத்தினைச் சார்ந்த பகுதிகளும் அதனைச் சூழ்ந்த பகுதிகளுமே சாழநாடு என்ற பெயரில் அமைந்த பாண்டிய நாட்டு உள்பிரிவாகும். இது இதுவரை கண்டறியப்பெறாத புதிய நாட்டுப்பிரிவாகும். கல்லுமடை சிவன்கோயிலில் காணப்படும் சடையன்மாறன் கல்வெட்டுகள் இப்பகுதியைச் சாழநாட்டுத் திருப்பாலையூர் என்றே குறிப்பிடப்படுகின்றன. பிற்காலத்தில் இச்சாழநாடு சாணாடு என்ற பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது. வீரபாண்டியன் சிவகாசிச் செப்பேட்டிலும் சாழநாடு குறிப்பிடப்படுகின்றது. இச்சாழநாட்டு மாங்குடி என்ற ஊரைச் சார்ந்த புரவுவரிக்கணக்கன் சோலைகிழவன் என்பவன் வீரபாண்டியனின் ஆணையை நிறைவேற்றிய அதிகாரிகளுள் ஒருவனாக வருகின்றான். இச்செப்பேட்டில் வரும் 'சாழநாடு' என்ற சொல்லை 'சோழநாடு' என்று தவறாக முடிவுசெய்து படித்துப் பதிப்பித்துள்ளனர். ஆனால் செப்பேட்டில் 'சாழநாடு' என்றே எழுதப்பட்டுள்ளது இதனை உறுதிப்படுத்துகின்றது.

முதல் குலோத்துங்க சோழனின் கோவிலாங்குளம் கல்வெட்டில் சாணாட்டைச் சார்ந்த வேளான் தமிழ்ப்பெற்றான் என்ற அதிகாரி ஒருவன் குறிப்பிடப்படுகின்றான்.[18] திருச்சுழியில் வட்டத்தில் இருந்த இச்சாணட்டின் வடபுறம் இராசசிங்கக்குளக்கீழ்நாடும் தெற்கேயும் தென்கிழக்கேயும் பருத்திக்குடிநாடும் அதன் எல்லைகளாக விளங்கியுள்ளன. பருத்திக்குடிநாட்டின் வடஎல்லையில் சாழநாட்டில் அமைந்த திருப்பாலையூர் சிவன்கோயிலேயே ஆய்விற்கு எடுத்துக்கொண்ட சடையன்மாறனின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

முடிவுக்குறிப்புகள்

1. ARE.Nos.283-291/197-78
2. SII. Vol. XIV.No.96.
3. இவ்வூர் இராசபாளையத்திற்கு அருகிலுள்ள கொல்லங்கொண்டான் பகுதியைச் சார்ந்த நக்கனேரிப் பாறையிலுள்ளது. டாக்டர் கோ.விசயவேணுகோபால் அவர்களால் கண்டறியப்பெற்றது.
4. N.Sethuraman, ‘Dates of the Early Pandyas’, Fourteenth Annual Congress of the Epigraphical Society of India, Guwahari, 1987.
5. மேலது
6. மேலது
7. Ep.Indica, Vol.xxviii. pp.85-86.
8. SII. Vol.XIV.No.95.
9. வெளியிடப்பெறாத எட்டாம் நூற்றாண்டு குலசேகரபுரம் கல்வெட்டு. மாறன் சடையனின் தளபதி சமுத்திரம் கல்வெட்டு.
10. கன்னியாகுமரிக் கல்வெட்டுத் தொகுதி இரண்டு, எண்.1968/173.
11. SII. Vol XIV. 95, சோழன்தலைகொண்ட வீரபாண்டியனது அம்பாசமுத்திரம் கல்வெட்டு
12. மேலது
13. சிவகாசிச் செப்பேடு, எண்.78.
14. SLL.Vol.XIV.71.
15. PSI. Vol.No.13.
16. கல்வெட்டு வாசகம் நேரில் படிக்கப்பெற்றது.
17. ARE.1961-62, p.16-17.
18. ARE.397 of 1914-15.

பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் - ஆய்வு

கு. பால்துரை
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
விருதுநகர்
மின்னஞ்சல்: savaripaul@gmail.com

சுருக்கம்

தமிழ் நிலப்பரப்பின் தென்பகுதியினை, சங்க காலத்திலிருந்து பொது ஆண்டு பதினைந்தாம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தவர்கள் பாண்டிய அரச மரபினர். பாண்டிய அரசர்களை முற்காலப் பாண்டியர்கள் மற்றும் பிற்காலப் பாண்டியர்கள் என இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். பிற்காலப் பாண்டியர்களில் சோழர்களின் மேலாதிக்கத்திலிருந்த பாண்டியர்கள் மற்றும் தன்னாட்சி செய்த பாண்டியர்கள் எனவும் பிரிக்கலாம். பாண்டிய மன்னர்கள் தங்கள் கல்வெட்டுகள் மற்றும் செப்பு பட்டயங்களில் தன் புகழ்பாடும் மெய்க்கீர்த்திகளை குறிப்பிட்டு வெளியிட்டுள்ளனர். இக்கட்டுரை, முற்காலப் பாண்டியர், சோழர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிய அரசர்கள் மற்றும் தன்னாட்சிப் புரிந்த பிற்காலப் பாண்டிய அரசர்களின் மெய்க்கீர்த்திகளுடன் வெளியிடப்பட்டுள்ள 7 செப்பேடுகள் மற்றும் 391 கல்வெட்டுகளை மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. மூன்று காலக் கட்ட பாண்டிய அரசர்களின் மெய்க்கீர்த்திகளையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள புராணக்கதை, வரலாற்றுச் செய்தி மற்றும் தன் புகழ்ச்சியுரைகளை தனித்தனியாக ஆராயாமல், மெய்க்கீர்த்திகளிலுள்ள பொதுவான செய்திகள், அவைகள் கிடைக்கும் இடங்கள் மற்றும் இடப்பரவல்களின் தன்மை மற்றும் சிறப்பு செய்திகள் போன்றவைகளை ஆராய்கிறது.

இந்திய துணைக்கண்டத்தில் நீண்ட காலம் தொடர்ச்சியாக ஆட்சியிலிருந்த அல்லது நிலைத்திருந்த அரச மரபாக பாண்டிய அரச மரபினைக் குறிப்பிடலாம். ஈராயிரமாண்டு முந்தைய சங்க கால இலக்கியங்களிலுள்ள குறிப்புகள், தமிழ்நாட்டிலுள்ள தமிழி (தமிழ்-பிராமி) கல்வெட்டு , பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டைச் சார்ந்த மௌரிய அரசன் அசோகனுடைய பெரிய பாறைக் கல்வெட்டு, பொ.ஆ.மு 1ம் நூற்றாண்டைச் சார்ந்த கலிங்கத்து காரவேலரின் ஹதிகும்பா கல்வெட்டு, முற்கால பாண்டியர், சோழர் மற்றும் பிற்கால பாண்டியர்களுடைய கல்வெட்டுச் சான்றாதாரங்கள் மூலம் பாண்டிய அரசமரபு பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. 14ம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்து தமிழ் நிலப்பரப்பில் நிலைத்திருந்துள்ளனர் என அறியமுடிகிறது.

பொ. ஆ. 7ம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலப் பாண்டிய மன்னனான சேந்தன்மாறன், மாறவர்மன் அரிகேசரி, பராங்குசன் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்ட நெடுமாறன் காலத்திலிருந்து பாண்டிய மன்னர்களைப் பற்றி அறிவதற்கு வரலாற்றுச் சான்றுகள் தெளிவாகக் கிடைக்கின்றன. இவரிலிருந்து சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் வரையிலானப் பாண்டிய மன்னர்களை முற்காலப் பாண்டியர்கள் எனச் சுட்டுவர். பொ.ஆ. 10ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டினை, முதலாம் இராஜராஜ சோழன் முழுமையாக் கைப்பற்றினார். அதன் பின்னர், முதலாம் இராஜேந்திர சோழன் முதல் வீரராஜேந்திர சோழன் வரையில் சோழ-பாண்டியர்கள் என்ற பட்டங்கொண்ட சோழ இளவரசர்கள் பாண்டிய நாட்டினை ஆட்சி செய்தனர். முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் வரையில், பாண்டியர்கள் சோழர்களின் மேலாதிக்கத்தினை ஏற்று ஆட்சி செய்தனர், இதன் காரணமாக, சோழர்களின் ஆட்சிமுறை, நிர்வாகம் அமைப்பு போன்ற பல விடயங்களை பாண்டிய அரசர்கள் பின்பற்றியுள்ளனர். அவ்வகையில், கல்வெட்டுகளின் தொடக்கத்தில் வரும் மெய்க்கீர்த்திப் பகுதியும் சோழ அரசர்களைப் பின்பற்றி, பிற்காலப் பாண்டிய அரசர்கள் தங்கள் கல்வெட்டுகளில் வெட்டுவித்துள்ளனர். சில நேரங்களில், இக்காலக் கட்டத்தைச் சார்ந்த பாண்டிய மன்னர்கள் வாரிசுரிமை, தன்னிச்சையாகச் செயல்பட துணிதல் போன்ற காரணங்களுக்காக சோழர்களை எதிர்த்துள்ளனர். இவர்களை சோழர்களின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு ஆட்சியிலிருந்த பிற்காலப் பாண்டிய மன்னர்கள் என அழைக்கலாம்.

இந்நிலை, மூன்றாம் குலோத்துங்க சோழன் மறைவிற்கு பின்னர் மாறுகிறது. சோழர்களைப் போரில் வென்று, பாண்டிய அரச மரபினை சுதந்திர அரசாக மீண்டும் ஆட்சி புரிய அடிகோலியவர் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன். அவரின் ஆட்சி தொடங்கிய 13ம் நூற்றாண்டு தொடக்கம் முதல் 14ம் நூற்றாண்டு வரையில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னர்கள் தன்னாட்சி புரிந்த பிற்காலப் பாண்டியர்கள் என வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்படுகிறார்கள்.

இப்பிற்காலப் பாண்டிய மன்னர்களின் நேரடி ஆணைக் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகள் காணப்படுகிறது. இருப்பினும் இவர்களின் பெரும்பாண்மையானக் கல்வெட்டுகளில் ஆண்டு (ERA) குறிப்பிடாததால், யாருக்குப் பின் யார் ஆட்சி செய்தார்கள் என மன்னர்களின் கால வரிசையை தொகுக்க இயலாத நிலை உள்ளது. பல மன்னர்கள் ஒரே காலத்தில் பகர ஆட்சியாளராக ஆட்சி செய்தனர் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. எவ்வாறு இருப்பினும், இம்மன்னர்களின் கல்வெட்டுகள் அக்கால அரசியல், சமூக, பொருளாதாரம் மற்றும் மக்களின் நிலையை அறிய ஆதரங்களாக விளங்குகின்றன.

இக்கட்டுரை முற்காலப் பாண்டிய மன்னர்கள், சோழர்களின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டியர்கள் மற்றும் தனியரசு செலுத்திய பிற்காலப் பாண்டிய மன்னர்கள், மெய்க்கீர்த்திகளுடன் உள்ள 7 செப்பேடுகள் மற்றும் 391 கல்வெட்டுகள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மெய்க்கீர்த்திகள் என்ற புத்தகம் பூ. சுப்ரமண்யம் அவர்களால் 1984ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர்கள் என தமிழ்நாட்டினை ஆட்சி செய்த அரசர்களின் மெய்க்கீர்த்திகள் பதிப்பிக்கப்பட்டு. அதன் வரிக்கு வரியான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் கிடைக்கும் இடங்கள் அதிகளவில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், பாண்டிய மன்னர்களின் மெய்கீர்த்திகள் கிடைக்கும் இடங்கள் 1984ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட கல்வெட்டுகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இக்கட்டுரை தற்காலம் (2025) வரையில் கண்டெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள பாண்டியர்களின் கல்வெட்டுகளையும் ஆதாரமாக கொண்டு எழுதப்பட்டுள்ளது.

மேலும், இக்கட்டுரையானது, மூன்று காலக் கட்ட பாண்டிய அரசர்களின் மெய்க்கீர்த்திகளையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள புராணக்கதை, வரலாற்றுச் செய்தி மற்றும் தன் புகழ்ச்சியுரைகளை தனித்தனியாக ஆராயாமல், மெய்க்கீர்த்திகளிலுள்ள பொதுவான செய்திகள், அவைகள் கிடைக்கும் இடங்கள் மற்றும் இடப்பரவல்களின் தன்மை மற்றும் சிறப்பு செய்திகள் பொன்றவைகளை மட்டுமே ஆராய்கிறது.

இக்கட்டுரைக்கு சான்றுகளாக, இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கைகள், தென்னிந்திய கல்வெட்டுச் சாசனம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் வெளியிடப்பட்டுள்ள மாவட்டக் கல்வெட்டு தொகுதிகள், புதுக்கோட்டை சமஸ்தான கல்வெட்டுகள், திருவிதாங்கூர் தொல்லியல் வரிசை, தனியர்களால் கண்டெடுக்கப்பட்டு ஆவணம் போன்ற இதழ்களிலும், புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுகள், இக்கட்டுரை ஆசிரியரால் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் போன்றவைகள் ஆதாரங்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

மெய்க்கீர்த்தி என்ற சொல் விளக்கம்

மெய்க்கீர்த்தி என்ற சொல் தமிழ் சொல்லான ”மெய்” (உண்மை) மற்றும் சமஸ்கிருத சொல்லான கீர்த்தி (புகழ்) என்ற இரண்டு சொற்கள் கலந்து பெயர்ப்பெற்றுள்ளது. ஒருவனின் (மன்னனின்) உண்மையான புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி என பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது உண்மையான புகழுக்கு காரணமாகிய குணங்களையும், செயல்களையும் எடுத்துக் கூறும் இலக்கியம் எனக் கொள்ளலாம் .

இதனை,

"சீர்நான் காதி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அத்தத்து அவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட உரைப்பது சீர்மெய் கீர்த்தி"

என பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல் குறிப்பிடுகிறது. எனினும், இது முற்காலப் பாண்டியர் மெய்க்கீர்த்தீக்கு பொருந்தவில்லை. முதலாம் இராஜராஜனுக்குப் பிறகு கிடைக்கும் மெய்க்கீர்த்திகளுக்கு பொருந்துவதாக உள்ளது. எனவே, முற்காலப் பாண்டியர் மெய்க்கீர்த்திக்கும் ஓர் இலக்கணம் இருந்திருக்க வேண்டும் .

தமிழ்நாட்டில், பல்லவர்கால கல்வெட்டில் மெய்க்கீர்த்திப் போன்ற சிறப்புப் பகுதி சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ளன. முற்காலப் பாண்டியர் செப்பேடுகளில் மெய்க்கீர்த்திப் பகுதிகள் சமஸ்கிருத மொழியில் கிரந்த வரிவடிவத்திலும், அதனைத் தொடர்ந்து தமிழ் மொழிப் பகுதி வட்டெழுத்து வரிவடிவில் காணப்படுகிறது.

தொடக்க கால சோழ மன்னர்கள் விஜயால சோழன் முதல் உத்தம சோழன் வரையில் பெரிதளவில் மெய்க்கீர்த்திப் பகுதிகள் கல்வெட்டில் இல்லை. ஆனால், முதலாம் இராஜராஜன் காலத்தில் (பொ. ஆ. 10ஆம் நூற்றாண்டு) தான் மெய்க்கீர்த்திப் பகுதிகள் தன் பெயருக்கு ஏற்ப உண்மையான வடிவம் பெற்றுள்ளன. முற்காலப் பாண்டியர் மெய்க்கீர்த்திகளிலுள்ள புராணச் செய்திகள் இடம்பெறாமல், முதலாம் இராஜராஜன் போர்வெற்றிகள், ஆட்சிச் சிறப்பு, கொடை முதலியவற்றை கூறும் மெய்க்கீர்த்தி வரிகளை விரிவாகக் கூறும் மரபினை தொடங்கி வத்துள்ளார் எனலாம். அதன் பின்னர் வந்த மன்னர்கள் அதனைப் பின்பற்றி மேலும் விரிவடையச் செய்துள்ளனர் . சில மன்னர்களுக்கு ஒன்றிற்கும் மேற்பட்ட மெய்க்கீர்த்திகள் உள்ளது.

பிற்காலச் சோழர்களுக்கு அடுத்து வந்த பிற்காலப் பாண்டிய மன்னர்களும் சோழர்களைப் பின்பற்றி மெய்க்கீர்த்திப் பகுதிகளை தங்கள் கல்வெட்டில் பொறித்துள்ளனர்.

முற்காலப் பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் (பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டு – முதல் பொ.ஆ. 10ஆம் நூற்றாண்டு வரை)

கல்வெட்டு, செப்புப் பட்டயங்கள் போன்ற எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றாதாரங்களின் அடிப்படையில் முற்கால பாண்டிய அரச மரபின்

வரலாற்றை நெடுமாறன் மற்றும் பராந்த நெடுஞ்சடையன் காலம் முதல் தெளிவாக அறியலாம். நெடுமாறனின் வைகைக்கரை கல்வெட்டு , ஏனாதி கல்வெட்டு மற்றும் பராந்தக நெடுஞ்சடையனின் ஆனைமலை மற்றும் திருப்பரங்குன்றம் கல்வெட்டுகள் முற்காலப் பாண்டியர்களின் தொடக்க கால ஆவணங்களாகும்.

14.	வெங்குன்றம்	1. பெரு நகர் 2. அரசூர் 3. மருத நாடு 4. நெல்லூர் 5. தெள்ளாறு	1.பெருதகரனாடு 2. அரசூர்னாடு 3. மருதாடுனாடு 4. நல்லூர்னாடு 5. தெள்ளாறுனாடு	1. பெரு நகர் நாடு 2. அரசூர் நாடு 3. மருதாடு நாடு 4. நல்லூர் நாடு 5. தெள்ளாறு நாடு 6. பொன்னூர் நாடு	1. பென்னகர் நாடு 2. அறசூர் நாடு 3. மருதாடு நாடு 4. நல்லூர் நாடு 5. தெள்ளாறு நாடு 6. பொன்னூர் நாடு
15.	பல்குன்றம்	1. பாசூர் 2. தாச்சூர் 3. மேயூர் 4. சிங்கம் பொருத வள நாடு	1. பாராஞ் சிரனாடு 2. தச்சூர்னாடு 3. மெய்யூர்னாடு 4. சிங்கம்பொருத வளனாடு 5. பெருந்திமிரி னாடு	1. பாராசூர் நாடு 2. தச்சூர் நாடு 3. மெய்யூர் நாடு 4. சிங்கம் பொருத வள நாடு 5. பெருந்திமிரி நாடு	1. பாராசூர் நாடு 2. தச்சூர் நாடு 3. மெய்யூர் நாடு 4. சிங்கம் பொருந்தி வள நாட்டுக்கு சிங்கபுரம்
16.	இளங்காடு	1. பொன்னூர் 2. தென்னத்தூர் 3. மாகுணம்	1.பொன்னூர் னாடு 2. தென்னாதூர் னாடு 3. மாகுண்ண னாடு	1. தென்னாத்தூர் நாடு 2. பொன்னூர் நாடு 3. மறக்குண நாடு	1. தென்னாத்தூர் நாடு 2. மறக்குணம் நாடு
17.	கலியூர்	1. கலியூர் 2. திருப்புலிவனம் 3. விற்பேடு 4. எரிகீழ் நடு 5. பாவூர்	1.காழியூர்னாடு 2. திருப்புவை னாடு 3. விற்ப்பெடு னாடு 4. எரிகிழ்னாடு 5. பாவூர்னாடு	1. திருப்புலிவன நாடு 2. காழியூர் நாடு 3. யெரிகீழ நாடு 4. பரங்கூர் நாடு 5. விறப்பெடு நாடு	1. காழியூர் நாடு 2. திருப்புலிவனம் நாடு 3. யெ றி கீழ நாட்டூக்கு மாவண்டூர் 4. விற்பெடு நாடு 5. பாகூர் நாடு
18.	சிறுகரை	1. அயிந்த நாடு	1. ஆய்ந்தனாடு	1. ஆய்ந்த நாடு	1. ஆயந்த நாட்டுக்கு பொய்கை நாடு

19.	படுவூர்	1. பெருந் திமிரி 2. ஆர்க்காடு 3. செங்குன்றம்	1.பெருமருத னாடு 2. ஆர்க்காடு னாடு 3. செங்குண் ணனாடு	1. பெருந்திமிரி நாடு 2. ஆற்காடு நாடு 3. செங்குன்றம் நாடு	1. பெருந்திமிலிக்கு திமிலி நாடு 2. கசுப்பா ஆர்க்காடு 3. செங்குன்றம் நாடு
20.	கடிகை	1. பெருங்கஞ்சி 2. பரஞ்சி 3. மேல் களத்தூர்	1.பெருங்கா ஞ்சினாடு 2. மெர்களத் தூர்னாடு 3. பாராஞ்சினாடு	1. பெருங்காஞ்சி நாடு 2. மேலக் கழத்தூர் நாடு 3. பாராஞ்சி நாடு	1. பெருங்காஞ்சி நாடு 2. மேற்களத்தூர் நாடு 3. பாராஞ்சி நாடு
21.	செந்திருகை	1. போலியூர் 2. வலக்குளம் 3. ஆலத்தூர் 4. அருங்குளம்	1.பெரயூர்னாடு 2. வளவுகுனாடு 3. ஆலத்தூர்னாடு 4. அருங்குனனாடு	1. பொளிச் -சலூர் நாடு 2. ஆலத்தூர் நாடு 3. அருங்குளம் நாடு	1. பொளூர் நாடு 2. வளகுளம் நாடு 3. ஆலத்தூர் நாடு 4. அருங்கொளம் நாடு
22.	குன்றபட்டிரம்	1. மங்கலம் 2. வெங்களூர் 3. நின்னயம்	1.மாங்களனாடு 2. நிண்ணைனாடு 3. வெங்களூர்னாடு	1. மாங்கா -ழம் நாடு 2. நிண்ண நாடு	1. மாங்கால நாடென்பதற்கு மாகல நாடு 2. நின்றை நாடு 3. வெங்களத்தூர் நாடு

23.	வேங்கடம்	1. குடகரை 2. பொத்தப்பி 3. தொண்டை -மான்	1.குடகரைனாடு 2. தொண்ட -மானாடு 3. பொ(த்)தப் -பினாடு	1.குடகரை நாடு 2. தொண்ட -மானாடு 3. பொதப்பி நாடு	1. குடகரை நாடென்பதற்கு கொடுகுல நாடு 2. தொண் -டைமான் நாடு 3. போதாயி நாடு
24.	வேலூர்	1. ஒழுகரை 2. நென்மிழி 3. மாத்தூர்	1.ஒழுகரைனாடு 2. வானூர்னாடு 3. சொழவில் -லினாடு 4. விலாடபுரம்னாடு 5. செம்புரினாடு 6. நென்மேலினாடு 7. மாத்தூர்னாடு	1. ஒழுகரை நாடு 2. நென்மெனி நாடு 3. மாத்தூர் நாடு	1. ஒழுகரை நாடு 2. நென்மலி நாடு 3. மாத்தூர் நாடு

4.தொண்டை மண்டலத்தின் 24கோட்டங்களில் காணப்பட்ட நத்தங்களின் பெயர்கள் (சுவடியில் உள்ள பட்டியல்)

1.புழல்கோட்டம்		2.புலியூர்கோட்டம்	
1.	வல்லூர்	1.	நேமம்
2.	அத்திப்பட்டு	2.	செம்பறம்பாக்கம்
3.	அயனம்பாக்கம்	3.	பூந்தமல்லி
4.	யெண்ணூர்	4.	நுகும்பல்
5.	விளாங்காடுபாக்கம்	5.	வாயிலாநல்லூர்
6.	மீஞ்சூர்	6.	கண்ணப்பாளையம்
7.	பிதவாயில்	7.	திருமேழிசை
8.	நந்தியம்பாக்கம்	8.	பிள்ளைப்பாக்கம்
9.	விச்சூர்	9.	பண்னாச்சேரி
10.	கொண்னத்தூர்	10.	கோவூர்
11.	நொளம்பூர்	11.	வம்மல்
12.	மொகப்பேரு	12.	றெண்டாம்கட்டளை
13.	சேத்துப்பேடு	13.	மதுரைவயல்
14.	அமிஞ்சிக்கறை	14.	கோயம்பேடு
15.	அயனபுறம்	15.	அழிம்பாக்கம்
16.	திருமங்கலம்	16.	தண்டலம்
17.	கீழ்ப்பாக்கம்	17.	தரப்பாக்கம்
18.	புறசைபாக்கம்	18.	கொளப்பாக்கம்
19.	பெறம்பூர்	19.	கருகம்பாக்கம்
20.	யாசர்பாடி	20.	வெள்ளறம்பாக்கம்
21.	கொத்தம்பாக்கம்	21.	மணப்பாக்கம்
22.	வெருகம்பாக்கம்	22.	வள்ளிசேர்பாக்கம்

23.	சோழபுறம்	23.	நந்தம்பாக்கம்
24.	வெள்ளச்சேத்தி	24.	பொழிச்சலூர்
25.	மேலபாக்கம்	25.	நேர்க்குணம்
26.	திருவேர்க்காடு	26.	புதுப்பாக்கம்
27.	கடப்பாக்கம்	27.	மயிலாப்பூர்
28.	வெள்ளிவாயல்	28.	சாலிகிராமம்
29.	பஞ்சட்டி	29.	கோட்டம்பாக்கம்
30.	வெண்ணைப்புத்தூர்	30.	நெடும்குன்றம்
31.	கோடுவெளி	31.	பொன்மாரு
32.	திருக்கடைலம்	32.	னடிவிற்பேடு
33.	மஞ்சங்காறனை	33.	புதுச்சேரி
34.	நந்தம்	34.	துறுப்படியாக்கம்
35.	பூரிப்பாக்கம்	35.	படம்தண்டலம்
ஆகநந்தம் 35		36.	கொல்லைச்சேரி
		37.	மலையம்பாக்கம்
		38.	திறுநீர்மலை
		39.	புதுப்பேடு
		40.	முடிச்சூர்
		41.	பெருங்களத்தூர்
		42.	ஊனை
		43.	சோமங்கலம்
		44.	சிறுகளத்தூர்
		45.	காவனூர்
		46.	மணஞ்சேரி
ஆகநத்தம்46			

3. ஈக்காடுகோட்டம்	4. மணவூர்கோட்டம்
1. ஆயலூர்	1. கூவம்
2. பேறத்தூர்	2. இருளஞ்சேரி
3. புல்லறம்பாக்கம்	3. குமாறஞ்சேரி
4. கிழக்குண்டியாறு	4. விடையூர்
5. கதஊறு	5. பழயனூர்
6. ஓதிக்காடு	6. செஞ்சி
7. கிடய்யூர்	7. பளுவூர்
8. கிளாம்பாக்கம்	8. புதுமாலை
9. பாக்கம்	9. கிளாம்பாக்கம்
10. புலியூர்	10. குனதுக்கறம்பாக்கம்
11. வெள்ளப்பாக்கம்	11. கோட்டூர்
12. பாண்டூர்	12. சிவபுரம்
13. புங்கத்தூர்	13. பிச்சிபாக்கம்
14. யேக்காட்டூர்	14. தெத்துகை
15. சேலை	15. பெரம்பாக்கம்
16. மேல்லக்குண்டியாறு	16. கிளாக்காட்டூர்
17. மோறை	17. சிறியமணவூர்
18. பாண்டீசுறம்	
ஆகநத்தம்18	**ஆகநத்தம்** 17

5. செங்காட்டுக்கோட்டம்		6. பையூர்கோட்டம்	
1.	மப்பெடு	1.	சிறுவாம்பெடு
2.	விஞ்சிபாக்கம்	2.	அரகூர்
3.	வடமங்கலம்	3.	வாயலூர்
4.	உண்ணியூர்	4.	காட்டாவூர்
5.	திருமங்கலம்	5.	பெருவாயில்
6.	சந்தவேலூர்	6.	புதுவாயில்
7.	புள்ளபாக்கம்	7.	யேலினபெடு
8.	செரமங்கலம்	8.	தச்சூர்
9.	மண்ணூர்	9.	பெரும்பெடு
10.	சாலைமங்கலம்	10.	மொதலமமெடு

11.	ஸ்ரீபெரும்பூதூர்	11.	வெளூர்
12.	பாலநல்லூர்	12.	காட்டூர்
13.	உளுந்தை	13.	ஆசான்பூதூர்
14.	தொடுக்காடு	14.	ஆமூர்
15.	ஆயிகொளத்தூர்	15.	கிளிக்கொடி
16.	வயலூர்	16.	பனபாக்கம்
17.	திருமணிகுப்பம்	17.	கணக்கம்பாக்கம்
18.	வாசநாமபெடு	18.	திருக்கண்டலம்
19.	முளச்சூர்	19.	அடைப்பாக்கம்
20.	எரையாமங்கலம்	20.	மேதுவூர்
21.	அழிஞ்சிபாக்கம்	21.	கொறஞ்சூர்
22.	குண்ணத்தூர்	22.	தத்தமஞ்சி
23.	மேலை நல்லாத்தூர்	23.	கடப்பாக்கம்
24.	இறுப்பூர்	24.	வஞ்சிபாக்கம்
25.	வெள்ளெதித்தாங்கள்	25.	அத்தமான்சேரி
26.	கொப்பூர்	26.	பஞ்சட்டி
27.	பாப்பறம்பாக்கல்	27.	அண்ணப்ப நாயக்கன் குப்பம்
28.	வெங்கத்தூர்	28.	பாலவாக்கம்
29.	கீழ்நல்லாத்தூர்	29.	இறுக்கம்
30.	இருங்காட்டுக்கோட்டை	30.	கலப்பாக்கம்
31.	வளர்புறம்	31.	நல்லூர்
32.	சிருமாங்காடு	32.	தோகையூர்
ஆகநத்தம் 32		33.	இலிப்பாக்கம்
		ஆகநத்தம் 33	

7.எய்யலக்கோட்டம்	8.தாமலக்கோட்டம்
1. அம்மி	1. நறப்பாக்கம்
2. ஆறப்பாக்கம்	2. களத்தூர்
3. வையாவூர்	3. மாமபூதூர்
4. நென்மெலி	4. சக்கறநல்லூர்
5. எனாதூர்	5. எச்செதி
6. கதிரப்பூர்	6. பொய்கைநல்லூர்
7. கடம்பனூர்	7. நங்கமங்கலம்
8. நத்தம்பேட்டை	8. தண்டலம்
	9. ஒழுக்கம்பாக்கம்
ஆகநத்தம் 8	10. அரசங்குப்பம்
	11. அவுறூர்
	12. பெரும்புலியாக்கம்
	13. விஷார்
	14. வெங்களத்தூர்
	15. செய்யனூர்
	16. பெருங்கால்மொடு
	17. இலுப்பை
	18. கொதுவைநத்தம்பாழ்
	ஆகநத்தம்18

9. ஊத்துக்காட்டுகோட்டம்	10.களத்தூர்க்கோட்டம்	புதுநத்தங்கள் -22
1. தினையனெரி	1. மாவண்டூர்	1. மேல்பாக்கம்
2. வயலக்காவூர்	2. வடக்குப்பட்டு	2. பெரியபுத்தெரி
3. இளையனாவேலூர்	3. மதுராந்தகம்	3. வெள்ளப்பந்தல்
4. நெய்யாடுபாக்கம்	4. உழலூர்	4. வழுவதூர்
5. ஆதியூர்	5. வல்லிபுறம்	5. கிளாப்பாக்கம்
6. ஆற்றூர்	6. இருளப்புள்ளி	6. திருவாலக்கோவில்
7. பிணவூர்	7. ஆனியூர்	7. ஒறுபாக்கம்
8. காலைந்தண்டலம்	8. பூதூர்	8. முள்ளி
9. பளுவூர்	9. செங்குன்றம்	9. தெவாதூர்
10. வல்லப்பாக்கம்	10. தண்டறை	10. தண்டரை
11. சீட்டுனஞ்சேரி	11. தாழம்பெடு	11. தென்னம்பட்டு

9. ஊத்துக்காட்டுகோட்டம்	10.களத்தூர்க்கோட்டம்	புதுநத்தங்கள் -22
12. வில்வலம்	12. முள்ளிபாக்கம்	12. குண்ணத்தூர்
13. பூசிபாக்கம்	13. சித்தினக்காவூர்	13. நெத்தப்பாக்கம்
14. காவாம்பயிர்	14. மையூர்	14. வளாபிறை
15. ஆசூர்	15. பிரைப்பூர்	15. கத்திரிச்சேரி
16. சிங்காடுபாக்கம்	16. பொறப்பருதை	16. புளிஅருணங்கோட்டை
17. வில்லியம்பாக்கம்	17. சிகண்டி	17. மேல்க்காண்டை
18. வல்லம்	18. விச்சூ..	18. கீழ்க்காண்டை
19. வல்லக்கோட்டை	19. முளகுநீர்மெனி	19. கண்டறச்சேரி
20. எறையூர்	20. அத்தியூர்	20. சித்தாமூர்
21. எழிச்சியூர்	21. காவித்தண்டலம்	21. கன்னிமங்கலம்
22. அங்கம்பாக்கம்		22. கூழமங்கலம்
23. வான்பாக்கம்	ஆகநத்தம்21	
24. புல்லம்பாக்கம்		ஆகபுதுநத்தம்22
25. வெங்குடி		
26. ஒட்டிபாக்கம்		
27. தாங்கி		
28. சிவன்கூடல்		
29. நெல்வாய்		
30. தண்டலம்		
31. புரிசை		
32. எச்சூர்		
ஆகநத்தம் 32		

11.செம்பூர்க்கோட்டம்	12. ஆமூர்க்கோட்டம்
1. கடலூர் 2. செய்யூர் 3. பேரம்பாக்கம் 4. வாயலூர் 5. கல்குளம் 6. நெரும்பூர் 7. பெரும்பெடு 8. நெடுமறம் ஆகநத்தம் 8	1. தையூர் 2. மேலூர் 3. வெண்மேடு 4. செம்பாக்கம் 5. கடும்படி 6. பையனூர் 7. மணமை 8. சந்தனாம்பட்டுக்குமானாம்பதி 9. ஆலத்தூர் 10. பெருந்தண்டலம் 11. சிறுகுணம் 12. நந்திவனம் 13. சொனலூர் 14. கொண்டங்கி 15. இரும்பூர் 16. காயறம்பெடு 17. காயாறு 18. கடம்பூர் ஆகநத்தம்18

13.ஈநூற்க்கோட்டம்	14.வெண்குன்றக்கோட்டம்	
1. வில்லிவாக்கம் 2. மறக்காணம் 3. ஆவணிப்பேறு 4. வங்காறம் 5. கந்தாடு 6. நகற் 7. அச்சிறுபாக்கம் 8. கடவம்பாக்கம் 9. பசையாறு 10. ஆட்சிபாக்கம்	18. செய்யாமூர் 19. அனுப்பத்தூர் 20. எளமங்கலம் 21. விழுக்கம் 22. முதலூர் 23. கூனம்பாடி 24. மேல்மா 25. தாழம்பள்ளம் 26. தேத்துரை 27. சவுந்திரபுரம்	28. நெற்குன்றம் 29. விசுவூர் 30. விருதூர் 31. நெல்லியாங்குளம் 32. நறுமா 33. எளநீர்க்குன்றம் 34. மேல்நறுமா 35. வில்வலம் 36. வாச்சநல்லூர் 37. வீறம்பாக்கம்

13.ஈநூற்க்கோட்டம்	14.வெண்குன்றக்கோட்டம்	
11. முன்னுறு 12. நெய்குன்றம் 13. செவூர் 14. பாக்களத்தூர் 15. பறங்களத்தூர் 16. ஓங்கூர் ஆகநத்தம்16	38. தென்னங்கூர் 39. வடனாங்கூர் 40. தெய்யாறு 41. புன்கதை 42. காறம் 43. ஆலத்தூர் 44. செறம்பாக்கம் 45. அளத்துறை 46. துண்டுறை 47. சாலவேடு 48. நெடுங்கல்லு 49. கொட்டை 50. குவளை 51. திருவள்ளூர் 52. வயிரபுரம் ஆகநத்தம்52	

15. பலகுன்றக்கோட்டம்	16. இளங்காட்டுக்கோட்டம்
1. பெருமருதம்	1. தாயனூர்
2. கொழப்பனூர்	2. மலையனூர்
3. பெருங்களம்பூதூர்	3. கீழக்கிளையூர்
4. இஞ்சிமேடு	4. வளத்தி
5. ஓதலபாடி	5. கள்ளப்புலியூர்
6. தச்சுவாம்பாடி	6. மஞ்சிப்பட்டு
7. தெள்ளையூர்	7. வேலிபளூவூர்
8. திருமலை	8. எய்யில்
9. மண்டகொளத்தூர்	9. தேசூர்
10. வெண்மணி	10. துறக்கல்லு

15. பலகுன்றக்கோட்டம்	16. இளங்காட்டுக்கோட்டம்
11. குன்றத்தூர்	11. அருகன்பூண்டி
12. போறூர்	ஆகநத்தம்11
13. தொழுப்பேடு	
14. கீழப்பந்தல்	
15. வாழப்பந்தல்	
16. மேலப்பந்தல்	
17. சொரையூர்	
18. ஆத்தூர்	
19. சேதிராம்பட்டு	
20. கோயிலாபூண்டி	
21. மாவண்டூர்	
22. பூண்டி	
23. சேவூர்	
24. ராட்டமங்கலம்	
25. விஷம்மச்சேரி	
26. ஆரணி	
27. நெத்தப்பாக்கம்	
28. அடையபுலம்	
29. கடுவநல்லூர்	
30. இரையூர்	
31. கீழாத்தூர்	
32. பானைப்பாக்கம்	
33. நெல்லி	
34. வள்ளை	
35. அருகாவூர்	
36. செய்யாத்தைவெண்ணான்	
37. தவசி	
38. இருங்கலை	
39. சேங்காடு	
40. நாவல்	
41. கொளத்தூர்	
ஆகநத்தம் 41	

17.காலியூர்கோட்டம்	18.சிறுகாரைக்கோட்டம்
1. வெளியநல்லூர்	1. காவனூர்
2. திருப்புறம்பூர்	2. கீழ்மின்னல்
3. கரந்தை	3. குகநல்லூர்
4. ஆக்கூர்	4. சேண்பாக்கம்
5. பிறங்கைபாக்கம்	5. வேலம்பம்
6. நெத்தப்பாக்கம்	6. பசுமாத்தூர்
7. குன்றப்பாக்கம்	7. கீழ்விச்சூர்
8. மாசினம்பாக்கம்	8. மேல்யெப்பூர்
9. பெருங்கோட்டூர்	9. சோழமூர்
10. முறலாடம்	10. திருமணி
11. சுமங்கரி	11. அருகந்தம்பூண்டி
12. குண்ணத்தூர்	12. சத்துவாச்சேரி
13. காகனம்	13. பிரம்புரம்
14. நேல்லி	14. சம்பங்கிநல்லூர்
15. சித்தாத்தூர்	15. காங்கேயநல்லூர்
16. பல்லி	16. அறப்பாக்கம்
17. மாங்கால்	17. வடகால்
18. மாத்தூர்	18. தென்கால்
19. சோதியம்பாக்கம்	19. சிக்கிராபுறம்
20. பெரும்பாக்கம்	20. வேப்பூர்
21. கூலையமந்தல்	
22. உக்கல்	ஆகநத்தம்20
23. சிறுநல்லூர்	
24. இரட்டையம்பட்டு	
25. எழாச்சேரி	
26. புன்னை	
27. புதுப்பாளையம்	
28. வெங்கச்சேரி	
29. ஆதப்பாக்கம்	

17.காலியூர்கோட்டம்	18.சிறுகாரைக்கோட்டம்
30. கன்னிகுளம் 31. புத்தளி 32. புலிவாய் 33. இளம்பாகை 34. வாடாவூர் 35. ஆலஞ்சேரி 36. மறுதம் 37. மேலபாக்கம் 38. நெல்வாய் 39. இருமாறம் 40. மதகம்மேடு 41. ஒழுகரை 42. வலையாத்தூர் 43. உத்திறநல்லூர் 44. மேலநல்லூர் 45. சோளியநல்லூர் 46. குண்டியாந்தண்டலம் 47. பூனைத்தாங்கல் 48. கிளாங்காட்டூர் 49. கனிகிலுப்பை 50. பல்லாபுரம் 51. நாயக்கம்பாளையம் 52. மண்ணூர் 53. விளத்தொடு 54. தாளிகால் 55. அழிசூர் 56. மெறபாக்கம் 57. தாழிகால் ஆகநத்தம்57	

பாலநத்ததுக்குவடகரை	பாலநத்ததுக்குதென்கறையில்
1. யேகாம்பரநல்லூர்	1. விலாறு
2. மேல்ப்பாடி	2. மந்தியாலம்
3. யெட்டையகுப்பம்	3. பூட்டுதாக்கு
4. செக்காடு	4. வசூரை
5. விண்ணம்பள்ளி	5. கோணவட்டம்
6. சேவூர்	6. கசுப்பா
7. வஞ்சூர்	7. சங்காம்பாளையம்
8. சேணூர்	8. சதுப்பேரி
9. சாவராப்பேட்டை	9. கறுகம்புத்தூர்
10. தலையாரம்பட்டு	10. கீழ்முணவூர்
11. தண்டலகிஷ்ணபுறம்	11. சேதுவயல்
12. கொத்தமங்கலம்	ஆக 11
13. வாழ்வாங்குண்டலம்	
14. கவசம்பட்டு	
15. பலவநத்தம்	
16. சென்னங்குப்பம்	
17. கெம்மங்குப்பம்	
18. முட்டுகூர்	
19. செஞ்சி	
20. நெட்டேரி	
ஆக 20	

19. படுவூர் கோட்டம்	20. கடிகைக் கோட்டம்	21. சேந்திரிகைக் கோட்டம்	22. குன்றவர்ததினக் கோட்டம்
1. வளனுர்	1. குண்ணத்தூர்	1. நத்தங்கள்	1. ஆலப்பாக்கம்
2. மாங்காடு	2. மாகாளிப்பட்டு	பூச்சியம்	2. நாகலாபுறம்
3. அரியூர்			3. தும்பூர்
4. முப்பதுவெட்டி	ஆகநத்தம்2		4. களத்தூர்
5. பூங்கோடு			5. சேவறாம்பாக்கம்
6. திருமச்சேர்			6. முடியூர்
7. வன்னிமோடு			7. கேப்பேடு
8. குடிமல்லூர்			8. யிலமங்கலம்
9. புதுப்பாடி			9. நகறி
10. பூண்டி			10. நேடியம்
11. திருப்பார்க்கடல்			11. புண்ணியம்
12. சிறுகரும்பூர்			12. கொளத்தூர்
13. அத்திப்பட்டு			
14. நெத்தப்பாக்கம்			ஆகநத்தம்12
15. வேளூர்			
16. கலவை			
17. பன்னகர்			
18. ராந்தம்			
19. சங்கணபுரம்			
20. பழையூர்			
21. மேற்பலம்			
22. விளாப்பாக்கம்			
23. வளையாத்தூர்			
ஆகநத்தம்23			

23. வேங்கிடக்கோட்டம்	24.வேலூர்க் கோட்டம்	பட்டயத்தில் அகப்படாத நத்தங்கள்
1. மண்டியம்யென்பதர்க் குகாசுலமண்டியம் ஆகநத்தம் 1	1. உழந்தை 2. கோறுக்கை 3. கோடுவூர் 4. ஆனபாக்கம் 5. முருங்கைபாக்கம் 6. வில்லியநல்லூர் 7. புதுச்சேரி 8. கூனிமோடு 9. கிடங்கில் 10. புதுப்பேடு 11. பேராவூர் 12. நல்லாவூர் 13. பெருமண்டை 14. வானூர் 15. புளிச்சப்பள்ளம் 16. வீடூர் ஆகநத்தம்16	1. கன்னகொளத்தூர் 2. இடையாலம் 3. வேமண்டி 4. ஆலக்கிராமம் 5. ரெட்டணை 6. கோலியனூர் 7. வளவனூர் 8. சித்தாதி 9. போணி 10. சிந்தாமணி 11. முண்டியம்பாக்கம் 12. மோழியனூர் 13. வாயிலாமூர் 14. வட்தாம் 15. விழுப்புரம் 16. வம்புபட்டு 17. நெற்குணம் 18. செம்பிப்பாளையம் 19. கம்பிளிகாறன்குப்பம் 20. புதுகுப்பம் 21. பாங்குப்பம் 22. கூடலூர் ஆகநத்தம் 22

நூற்பட்டியல்

கனகசபை, வி. 1956.ஆயிரத்தெண்ணூறுஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். திருநெல்வேலி:திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிமிடெட், பக்-53-54.

இராச மாணிக்கணார், மா. 1948:தமிழ்நாட்டு வட எல்லை. சென்னை:எடுகேஷனல்பப்ளிஷிங் கம்பெனி.

இராச மாணிக்கணார், மா. 1995: சேக்கிழார். சென்னை: பூரம் பப்ளிகேசனஸ்.

சௌந்தரபாண்டியன், சு.1997: தொண்டை மண்டல வரலாறுகள். சென்னை: அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

Subramaniyan, T. N. 1955.South Indian Temple Inscription. Madras: Government

சுவடிகள்

1. RE-25349- பிரெஞ்சு ஆய்வு நிறுவன ஓலைச்சுவடி 2. RE-25392- பிரெஞ்சு ஆய்வு நிறுவன ஓலைச்சுவடி

சண்டேசுவரப் பெருவிலை ஆவணம்: தமிழக நிலவுடைமைச் சமூகத்தின் தொல்மரபு நீட்சி

கோ.சசிகலா
மாநில ஒருங்கிணைப்பாளர்,
மாநில சுவடிக்குழுமம், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தமிழ கவரலாற்றில் நிலவுடைமை மற்றும் நிலப்பரிவர்த்தனை முறைகள் கல்வெட்டுகள் வாயிலாகப் பல்வேறு பரிமாணங்களில் அறியப்படுகின்றன. இவற்றுள் சைவத் திருக்கோயில்களின் நிலவிற்பனை ஆவணங்களில் கையாளப்பட்டுள்ள 'சண்டேசுவரப் பெருவிலை' அல்லது 'ஆதிசண்டேசுவரப் பெருவிலை' என்னும் சொல்லாடல் மிகமுக்கியமான ஆய்வுப் பொருண்மையாகும். இக்கட்டுரை, சிவன் கோயில்களின்நிலங்கள் ஏன் சண்டேசுவரரின் பெயரால் விற்கப்பட்டன என்பதையும், இதன் பின்னணியில் உள்ள சமூக, கலாச்சார மற்றும் நிலவுடைமைத் தொல்மரபு நீட்சியையும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்கிறது.

பக்தி இயக்ககாலத்திற்குப் பிந்தைய பேரரசுகளின் காலத்தில் நிலவிற்பனை என்பது திடீரெனத் தோன்றிய ஒன்றன்று; அது சங்ககாலத்திலிருந்தே ஊராரும், சபையாரும் பின்பற்றி வந்த நிலநிர்வாக மரபின் தொடர்ச்சியாகும். சிவன் கோயிலின் நிலங்களை விற்கும் அதிகாரம் பெற்ற ஆதிதாசராகச் சண்டேசுவரர் கருதப்பட்டார். சோழர், பாண்டியர் மற்றும் விஜயநகர காலக்கல்வெட்டுகளில் 'சண்டேசுவர தேவகன்மிகள் 'நிலவிற்பனை ஆவணங்களில் கையொப்பமிடுவதைக் காணமுடிகிறது. குறிப்பாக, மருதநிலப் பரப்பான காவிரி சமவெளியில் முதலாம் இராஜராஜசோழன் காலத்திலிருந்தே சண்டேசர் வழிபாடும், நிர்வாக அதிகாரமும் எழுச்சி பெற்றிருப்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

மேலும், நன்னிலம், நாமக்கல், தஞ்சை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டக்கல்வெட்டுகளைச் சான்றாகக் கொண்டு, இப்பெருவிலை ஆவணங்களின் பயன்பாடு மற்றும் பரவல் குறித்த ஒப்பீட்டு ஆய்வையும் இக்கட்டுரை முன்வைக்கிறது. நிலவுடைமைச் சமூகமாகமாறிய காலக்கட்டத்தில் தனியுடைமையைப் பாதுகாப்பதற்கான ஒரு குறியீட்டு அதிகாரமாகச் சமய நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதைப் பண்பாட்டு மானிடவியல் நோக்கில் இவ்ஆய்வு விளக்குகிறது.

இந்தக் கட்டுரையில், சண்டேசுவரப்பெருவிலை மற்றும் தமிழக நிலவுடைமை முறைகள் குறித்துப் பின்வரும் அறிஞர்களின் முன்னாய்வுகளும் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தி. நா. சுப்பிரமணியன்: கல்வெட்டுச் சொல்லகராதி (Epigraphical Glossary) வழியாக 'பெருவிலை' மற்றும் கல்வெட்டுச் சொற்களுக்கான விளக்கங்கள் கையாளப்பட்டுள்ளன. அ. கிருட்டினன்: 'சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள்' என்னும் அவரது ஆய்வுநூல், வடகொங்குப் பகுதியின் நிலப்பரிவர்த்தனை முறைகளை அறியப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரா. நாகசாமி: தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டுகள் குறித்த இவரது ஆய்வுகள், சோழர்கால நிர்வாக முறைகளைப் புரிந்துகொள்ள உதவியுள்ளன. கோ. சசிகலா: 'புள்ளமங்கை' குறித்த இவரது ஆய்வு, கோயில் நிலங்கள் மற்றும் அதன் மேலாண்மை குறித்த சான்றுகளையும், பிரம்மதேயங்கள் வழக்கொழிந்த நிலை பற்றிய தரவுகளையும் வழங்குகிறது. செ. இராசு: 'செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்' வழியாக நிலவுடைமைச் சமூகத்தின் வரலாற்றுப் பின்னணிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டுகள் (SII - Volume 7): குறிப்பாகத் திருப்பாதிரிப் புலியூர் கல்வெட்டுச் சான்றுகள் முன்னாய்வுத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழக அரசு தொல்லியல்துறை வெளியீடுகள்: தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள் மற்றும் இதர அரசு ஆவணங்கள் கட்டுரையின் தரவுத்தளத்திற்கு வலுசேர்த்துள்ளன.

இந்த ஆய்வுகள் அனைத்தும், சண்டேசுவரர் என்பவர் வெறும் சமயக்குறியீடு மட்டுமல்லாமல், அவர் ஒரு 'நிர்வாக அதிகாரம்' கொண்ட ஆதிதாசராகச் செயல்பட்டதை நிறுவுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன

கோவிலுக்குக் கொடையாக நிலம், பொன் முதலியவற்றை அறவோர் பலர் அளித்தனர். அவற்றின் வருவாய் கோவிலைப், பாதுகாக்கவும், பூசை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறவும் பயன்படுத்தப்பெற்றன. கோவிலுக்கு நிலத்தை உரிமையாக்கும்போது பல்வேறு பெயர்களில் உரிமையாக்கியுள்ளனர். தனிப்பட்டவர்களுக்கு நிலத்தை உரிமை செய்தபோதும் இவ்வழக்கம் இருந்துள்ளது. நிலஉரிமை முறைகளில் குறிப்பிடத்தக்கதாக தமிழகக் கோவில்களில் புனிதர்களின் பெயராலோ, அவர்களின் பதவியின் பெயராலோ, அன்றியும் புராணங்களும், சமயஞ்சார்ந்த தமிழிலக்கியங்களும் எடுத்துரைக்கும் வழிபாட்டு மரபின் தவிர்க்கவியலாத குறியீட்டுப் பொருண்மையாக அமைந்த திருவுருவங்களையோ கொண்டதாக அமைந்த நெறிகளுள் மிகப்பெரும்பான்மையாகக் வழக்குப் பெற்றிருந்த பெருவிலை என்ற கோயிலின் நில உரிமை முறையாகும். நிலம் சார்ந்த குடிகளின், குடிகள் சார்ந்த கோவில்களின் நிலவுடைமைப் பரிவர்த்தனைகள் பெரும்பாலும் சமயஞ்சார்ந்தே நிகழ்ந்துள்ளன என்பதை பேரரசுகள் காலக் கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன. குறிப்பாக சைவ சமயத்தின் முதன்மைத் தெய்வமான சிவன் கோயில்களின் நிலவிலையாவணங்களைப் பற்றியக் கல்வெட்டுகளில் சண்டேசுவரப் பெருவிலை என்ற சொல்லும், ஆதிசண்டேசுவரப் பெருவிலை என்ற சொல்லும் இடம் பெற்றுள்ளன. சண்டேசுரப் பெருவிலை என்றால் சிவன் கோயில் நிலங்களை விற்கும்போது கொடுக்கப்படும் நிலவிலை; சிவனுடைய ஆதிதாசர் ஆன சண்டே சுரப்பெருமான் பெயரால் விற்கப்படுவது; என்று கல்வெட்டுச் சொல்லகராதிக் குறிப்பிடுகிறது. எனவே சிவன் கோயில்களில்

நிலங்களின் விற்பனை, உரிமை சண்டேசுவரரின் பெயராலும், அதே போன்று விஷ்ணு கோயில்களில் சேனாபதியாழ்வார், சேனை முதலியார், விஷ்வக்சேனர் என்று அறியப்படுகின்ற முறையால் சேனாபதிப் பெருவிலை என்பதாக நிலவிலையாவணங்கள் சோழர்கள் காலத்திலிருந்து கையாளப்பட்டிருந்தன என்பதாக கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது.

தமிழகத்தின் நிலவியல் அடிப்படையில் அமைந்த திணைக் கோட்பாடு சார்ந்த வாழ்வியல் நெறிகளில் நிலம் பற்றிய கொடையும், நுகர்வும், விலையும், விதிகளும் சில தனித்துவங்களையும் கொண்டுள்ளது. நிலங்கள் சார்ந்த உரிமை முறையின், விற்பனை முறையின் அடிப்படையானது பக்தி இயக்க காலத்திலோ, அல்லது அதன் சம காலக்கட்டத்திலோ அதற்குப் பின்போ தோன்றிய பேரரசுகளின் காலத்திலோ திடீரென தோன்றிய ஒரு நிகழ்வன்று. ஊரார், சபையோர் காலங்காலமாக செய்து வந்த செயல்பாட்டின் ஒரு தொடர்ச்சி என்பதை அறிய விழைதலும், அதற்கான முதன்மைத் தரவுகளில் எவ்வாறு பண்பாட்டு மானிடவியல், சமூகவியல் மற்றும் கலைவடிவங்களின் வரலாற்றுக் கண்ணோட்டங்கள் பின்புலங்களாக அமைந்துள்ளன என்பதையும் ஆய்வு நெறிமுறையாகக் கொண்டும் இக்கட்டுரை வடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் சிவன் கோவில்களின் நிலங்கள் சார்ந்த நிர்வாகத்தின் குழூஉக்குறியாக சண்டேசுவரப் பெருவிலை என்ற சொல்லாடலின் முக்கியத்துவத்தையும், சண்டேசுவரரைப் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டத்தையும் முதன்மைப் பொருண்மையாகவும், மைய ஆய்வாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

சங்ககாலம் நிலவுடைமையாக மாறிய காலகட்டம் என்பது அறிஞர் முடிபு. இந்தச் சூழலில் தனியுடைமையும் உடைமைப் பாதுகாப்பும் தேவைப்பட்டன. இவற்றைப் பாதுகாப்பதற்கான சமுதாய அமைப்புகளான குடும்பமும் அரசும் வலுவாய் இறுக்கமாய் அமைவுறுகின்றன. குடும்பத்தில் ஆண்தலைமை நிலைநிறுத்தப்படுகின்றது. பொருளீட்டலும் அதைப் பாதுகாப்பதும் ஆணின் கடமைகளாகின்றன. பகைவரும் விரும்பத்தக்க வீரம் மிக்க ஆண்மகனைப் பெறுவது துறக்கப்பேற்றைத் தரும் (அக.66:1-4) என ஆண்மக்கட்பேறு முன்னிறுத்தப்பட்டுள்ளன. உயர்ந்தோர் உலகம் என மேனிலைப்படுத்தப்பட்ட துறக்கப்பேற்றையும் ஆண்களின் மூலமே பெறவியலும் என்ற நிலையில் மேலாண்மை நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

சேலம், நாமக்கல் மாவட்டங்களைச் சார்ந்த சைவ, வைணவத் திருக்கோயில்களில் இறைவனுக்குச் செய்யப்படும் பூசை, வழிபாடு, விழா முதலியன பற்றியும், கோயிலுக்கு அளிக்கப்படும் அணிகலன்கள், நிலங்கள், பொற்காசுகள், ஊதுசங்கு, பேரிகை போன்றவற்றைப் பற்றியும் கல்லில் வெட்டப்பட்டிருப்பதை அறிய முடிகின்றன. கோயிலுக்கு நிலங்கள் இறையிலியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அரசனால் கோயிலுக்கு விடப்பட்ட நிலத்தின் மேலுள்ள அனைத்து வரிகளும் நீக்கப்பட்டதை “வரி தீங்கெ இரு

நாமத்துக்காணி' என்ற தொடரால் கல்வெட்டில் பொறித்துள்ளனர். ஆயினும் சண்டேசுவரப் பெருவிலை என்ற பெயரால் இங்கு நிலங்கள் வாங்கப்படவோ, விற்கப்படவோ இல்லை என்பதை இம்மாவட்ட பெரும்பாலான கல்வெட்டுகளில் இச்சொல் இடம் பெறாததிலிருந்து அறிய முடிகிறது. வடகொங்கு நாட்டுப் பிரிவுகளில் இடம் இவ்விரு மாவட்டங்களில் உள்ள சிவாலயக் கல்வெட்டுகளில் சண்டேசுவரப் பெருவிலை இடம் பெறாமை இங்கு நோக்கத்தக்கது. ஏனெனில் மருதத்திணையின் பெருநிலப்பரப்பான காவிரியாற்றின் மருங்கில் அமைந்துள்ள சோழப் பேரரசர்களே குறிப்பாக முதலாம் இராஜராஜ சோழன் காலத்திலிருந்தே சண்டேசர் பெரும்பான்மையாக எழுச்சி பெற்று கோவில் நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ளார் என்பதை நாம் கீழ்க்கண்டவாறு நிறுவ முயல்வோம்.

“சண்டேசுவரர், தேவகன்மி கோயிற்கணக்கரோம்“, ,“இப்படி நாங்கள் ஆதிசண்டேசுரதேவர் அருளால் விற்றுக்குடுத்த பெருநான்கெல்லைக்குள்பட்ட“, “கோயில் ஆதிசண்டேசுவர தேவகன்மி கோயில் கணக்கு ஸ்ரீ காரியம் செய்வார்களோமும்“, இதுபோன்ற சொற்கள் சோழர், பாண்டியர், விசயநகரர் ஆட்சியாண்டுக் நிலம் தொடர்பானக் கல்வெட்டுகளில் நீங்காது இடம் பெற்றுள்ளன.

பேரரசுகளில் பல்லவர் காலத்தில் பிரம்மதேயங்களும், சதுர்வேதி மங்கலங்களும், தேவதானங்களும் நிலக்கொடைகளாக அறியப்பட்டுள்ள நிலையில் இவ்வகை நிலங்களின் பரிவர்த்தனைகள் யாவும் மகாசபைகளின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்று வந்துள்ளன. மகாசபைகளின் நிர்வாக உறுப்பினர்கள் வேதங்களை அறிந்திருக்க வேண்டும் என்பதை முதலாம் பராந்தகச் சோழனின் உத்தரமேரூர் குடவோலை முறைக் கல்வெட்டு கட்டாயத் தகுதியாக வைத்துள்ளது என்பதைத் தெரிவிக்கிறது. எனவே மகா சபைகளில் இடம் பெற்றிருந்த நிர்வாகத்தினர் யாவர் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. பல்லவர் காலத்தில் தொடங்கிய பிரம்மதேய பெருவழக்கானது பெருவேந்தர் இராஜராஜர் காலத்தில் முற்றிலும் வழக்கொழிந்து விட்டது எனலாம். இதற்குச் சான்றாக நாம் பல முற்காலச் சோழர்காலக் கற்றளிகள் முதலில் பிரம்மதேயங்களாகவும், மகாசபைகளாகவும் விளங்கியதையும், இராஜராஜன் காலத்தில் பிரம்மதேயங்கள் அவ்வூர்களில் வழக்கொழிந்ததையும், அதனால் மகாசபைகளின் நிர்வாகப் பொறுப்புகள் மாற்றம் பெற்றதையும் அறிய முடிகிறது. குறிப்பாக ஆலந்துறை மகாதேவர் கோயில் என்று கல்வெட்டுகளாலும், புள்ளமங்கை என்று சம்பந்தரின் தேவாரப்பதிகத்தாலும் அறியப்படும் புள்ளமங்கை கோயில் முதலாம் ஆதித்தச் சோழரின் கைவண்ணம் பெற்று, முதலாம் பராந்தகச் சோழனால் முழுமை பெற்று, காலத்தால் முந்தையதாக அவர்தம் ஆட்சியாண்டுக் கல்வெட்டைப் பெற்று விளங்குகிறது. கலைப்படிம வடிவங்களினாலும், கட்டுமானங்களின் கவினுறு அமைப்பினாலும் முக்கியத்துவம் பெற்றிருந்த போதிலும் இக்கோயில், தொடர்ச்சியாக அடுத்த நிலைப் பேரரசர்களின் கொடைகளைப் பெறவில்லை என்பதை அங்கு முதலாம் இராசராச சோழன் காலத்திலிருந்து

சோழமன்னர்களின் கல்வெட்டுகள் ஏதும் இல்லையென்பதைக் கொண்டு உணரமுடிகிறது. பிரம்மதேயங்கள் முதலாம் இராசராசன் காலத்திலிருந்து வழக்கொழிந்துள்ளது அல்லது அந்த செயல்பாட்டில் ஓர் ஆழ்ந்த நோக்கம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது. (புள்ளமங்கை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, 2010)

இவ்வாறு பிரம்மதேயங்கள் வழக்கொழிந்த நிலையில் அதாவது மகாசபைகளின் நடவடிக்கைகள் செயலலிழந்த பின்னர் ஊர்களின் நிர்வாகப் பொறுப்புகளின் நடத்துவதும், மகாசபைகள் இருந்த கோயில்களின் நிர்வாகங்களைக் கவனித்ததும் எந்தவொரு புதிய அறிமுகம் என்றவொரு வினாவிற்கு விடை பகர்வதாய் நாம் சண்டேசுவரர் முன்னிறுத்தலை அறிய முடிகிறது. முதலாம் இராஜராஜனின் தஞ்சைப் பெரியக் கோயிலில் சோழர் வரலாற்றில் முதன்மையாக எடுப்பிக்கப்பட்ட மிகவும் அருமையான கட்டுமானத்தையும், படிமக்கலையும் கொண்டு விளங்கும் சண்டேசுவரர் தனிச் சிற்றாலயமும், அதற்கென பேரரசர் சிறப்பாக முயன்றிருக்கிறார் என்பதையும் காணும் பொழுது சண்டேசுவரரின் அறிமுகம் தொடங்கப்பட்டுவிட்டது என்பதை அறியலாம். தொடர்ந்து கங்கை கொண்ட சோழனின் கற்றளியில் சிறப்பானதொரு கலைவடிவத்தைப் பெற்றுவிளங்கும் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தியின் சிற்பமும், அடுத்தடுத்த சோழ அரசர்களின் சண்டேசுவரரின் சிற்றாலயம் மற்றும் அவரின் திருவுருவ சிற்பக் கலையழகிற்கு கொடுத்த முக்கியத்துவம் இவற்றையெல்லாம் காணும் பொழுது, சண்டேசுவரர் என்ற கருத்தாடல்களின் மூலமாக மற்றுமொரு நிர்வாக அமைப்பு சோழர்கள் காலத்தில் குறிப்பாக இராஜராஜன் காலத்திலிருந்து பழைய மகாசபைகளின் பதிலீடுகளாக பரிணமித்துள்ளதை ஆய்ந்துணரலாம். ஏனெனில் இராஜராஜன் காலத்திற்கு முந்தைய சோழ அரசர் காலத்திய கல்வெட்டுகளில் சண்டேசுவரர் விலை குறிப்பிடப்படாமைக்கு கீழ்க்கண்ட கல்வெட்டும் ஒரு சான்றாகும்.

ஆதி சண்டேசுவரர் பெயர் குறிப்பிடப்படாத முற்காலச் சோழர் கல்வெட்டு

நாகபட்டினம் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவாவடுதுறை கோமுக்தேசுவரர் கோயில் கருவறை தெற்குச்சுவரில் அமைந்துள்ள கோப்பரகேசரியின் இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில், (கி. பி. 909) ஆதித்தபன்மத் தெரிந்த கைக்கோளரில் சங்கயன் ஒற்றிக்கு தெங்கு நந்தவனம் செய்ய மிற்றலங்குடிப் பொது நிலத்தில் சாத்தனூர் சபையார் நான்குமாச்செய் நிலம் விற்றுக் கொடுத்துள்ளனர்.

3. நிலத்துக்குத் தெற்கும் இவ்விசைந்த பெரு

நான்கெல்லையிலுமகப்பட்ட நிலம் நந்தவனப்புறமாக விற்றுக்

குடுத்தோம் சபையோம் தெங்காயிரமும் காச்சன் நூறு தெங்கின்

போகங்கொண்டு ஓ..... ப

4. பின்பிச்செய் உண்டு பூ நந்தவானம் செய்யவும் வைச்சது பன்மாகேசுவரர் ரட்சை.

ஆனால் இக்கல்வெட்டில் சண்டேசுவரர் பெருவிலையாகவோ, ஆதிசண்டேசுவரர் அருளால் என்றோ குறிப்பிடப்படவில்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. விற்றுக்குடுத்தோம்சபையோம்என்றவரிகளிலிருந்துசாத்தனூர் மகாசபையின் நிர்வாக செயல்பாட்டை மட்டுமே இங்கு காணமுடிகிறது. ஆக, மிகவும் தெளிவாகவும், உன்னதமாகவும் நிலவிலையாவணங்கள் தொடர்பான செயல்பாடுகளுக்கும், கோயில் நிலம் சார்ந்த பரிவர்த்தனைகளுக்கும் சண்டேசுவரர் இராஜராஜன் காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறார் எனலாம்.

திருவெண்காடு, சுவேதாரண்யேசுரர் கோயில் கிழக்கு உள்கோபுரம் இடதுபுறம்சோழன்இராசகேசரிஇரண்டாம்ஆட்சியாண்டுக்கல்வெட்டொன்று, (கி.பி. 952) பார்த்திபசேகரத் தெரிஞ்ச கைக்கோளரில் அய்யன் வேம்படிகள் சிறந்த முறையில் இறைவனுக்கு ஒரு கலம் அமுது படைக்க அறுபது கழஞ்சு பொன் வைத்தார். நாங்கூர் சபையார் அப்பொன்னைக் கொண்டு நிலம் வாங்கி அமுதுபடைக்க ஒப்புக் கொண்டனர் என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் இறுதி வரிகளில் விற்றுக்குடுத்தோம் நாங்கூர் சபையோம் என்று தான் குறிப்பிடப்படுகிறது. இக்கல்வெட்டிலும் சண்டேசுவரப் பெருவிலை என்றோ, ஆதி சண்டேசுவரர் என்றோ குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் அவ்வழக்கம் அப்பொழுது இல்லை என கணிக்க முடிகிறது.

மேலும், சேலம் மாவட்டம், கருப்பூர், கைலாசநாதர் கோயில் கருவறை தெற்குக் குமுதப்படையில் அமைந்துள்ள மூன்றாம் ராசராசனின் 26-ஆம் ஆட்சியாண்டு (கி.பி.1244) கல்வெட்டொன்று, சேலம் சுற்றிய சேலநாட்டுப் பொன்பரப்பியில் பொன்பரப்பீசுவரமுடையார் கோயிலில் சேரமான் பெருமாள் திருக்காவணத்தில் இறைவனுக்கு அறம் கொடுக்கக் கூடிய கூட்டத்தில் சிரீருத்திரர், சிரீமகேசுவரர், பலமண்டலத்து தேசாந்திரிகள், வீரபத்திரர், மத்தகம் வெட்டிகள், கூடல் பிறிகள், மூல சேதிகள், நம்பிள்ளைகள், தொண்டும் பிசகுப் பெற்றார், கவரிப்பிணாப் பிள்ளைகள், கைக்கோளர் ஆகியோர் குறைவறக் கூடியிருந்த இந்த நாட்டுக் கருப்பூரில் உடையார் உய்யக் கொண்ட நாயனார்க்கு அறங்குடுத்த பரிசாவது பற்றி குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் காட்டப்பெறும் நிர்வாகத்தினர் உத்தரமேரூர் மகாசபை காட்டக்கூடிய வேதம் படித்த பிராமணர்களை மட்டும் அல்ல என்பது இங்கு நோக்கத்தக்கது. மேலும் இக்கல்வெட்டின் தொடக்கம் கீழ்க்கண்டவாறு சண்டேசுவரரின் போற்றியோடு அமைகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ சண்டேசுரன் ஓலை சாகரஞ்சூழ் வையகத்து கண்டீசன் கருமம்

2. ஆராய்க பண்டேய் அறம் செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
3. திறம்பாமல் சென்னிமேல் வைத்து ஆதித்தனடித் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இராசராச தேவர்க்கு யாண்டு 26வது ……….

இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ள பண்டேய் அறம் செய்தான் அறங்காத்தான் என்ற சொற்கள் மிகவும் ஆராயத்தக்கவை. நாம் மருதத்திணையின் மற்றொரு நிலப்பரப்பான வளமையான பொருநையாற்றின் கரையில் அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள நெல்லையப்பர் கோவில் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ள சண்டேசுவரப் பெருவிலையைக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டையும் நம்முடைய இந்த ஆய்விற்கு வலுசேர்க்கும் ஆவணமாக எடுத்துக் கொள்ளலாம். நெல்லையப்பர் கோயில் இரண்டாம் பிரகாரம் தென்சுவர் (வெளியே) சடையவாமன் வீரபாண்டியனின் நான்காம் ஆட்சியாண்டு, கி.பி.1301 கீழ்வேம்ப நாட்டுத் திருநெல்வேலிக் கைக்கோளச் சேனாபதி திருநெல்வேலியுடையாருக்கு அறுகும், சிறுதாளிப்பூவும் சாத்தி வழிபட விரும்பி அப்பணிக்காக திருவிடைக்கட்டு மடத்தில் இருக்கும் நம்பியாரூரரான ராக்கதப் பெருமாளையும், நம்பி ஆரூரையும் நியமித்தார். அப்பணி செய்யும் அவ்விருவர் வாழ்வதற்காக பதியிலாரிடமிருந்து நிலம் விலைக்குப் பெற்று இப்படி சம்மதித்து விலைப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம் ஆதிசண்டேசுவர தேவற்கு அவர்கட்குச் சீவிதமாக அளித்தார்.

திருப்பாதிரி புலியூர் இறைவன் கோவியில் பணியாளர்களுக்கும் கோவில் கணக்கருக்கும் சிறு முறி (முறுகல்) ஏற்பட்டது. திருப்பாதிரி புலியூர் புறம் போக்கு நிலமும், விளைநிலமும், புஞ்சைநிலமும் அதே போல் உட்கிடை ஊர்களில் (பிடாகை) புறம் போக்கு நிலமும், விளைநிலமும், புஞ்சைநிலமும் இறைவன் பெயரில் உரிமையாக (திருநாமத்து காணி) அனுபவித்து கொண்டிருக்கும் வேளையில் அரசர் பெருமாள் விக்கிரமபாண்டிய தேவர்கு பட்டம் ஏற்ற மூன்றாவது நாளில் விக்கிரமபாண்டிய காளிங்கராயர் இக்கோவிலில் சுப்பிரமணிய பிள்ளையாரை எழுந்தருளச் செய்து பிள்ளையாருக்கு இரண்டு மா அளவு நிலத்தை சண்டேசுவர பெரும் விலையாக வாங்கி கல்வெட்டு பொறித்த போது இவ்வூரில் வாழும் பிராமணர் இவ்வூர் எமது பிரம்ம சேத்திரம் (பிராமணர் வயல்) எனவே சண்டேசுவர பெருவிலை வாங்கக்க கூடாது இது எமக்கான உரிமை நிலம் என்று பிராமணர்கள் உரிமை கோரியதை ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டிலிருந்து பிரம்மதேய ஊர்களின் நிலங்கள் அவர்களின் அதாவது பிராமணர்கள் உறுப்பினர்களாக இருந்த மகாசபை மூலமே விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தது என்பதை அறிய முடிகிறது. ஆனால் இடைக்காலச் சோழர்காலத்தில் இந்நிலை மாறி சண்டேசுவரப் பெருவிலை என்ற நிலை ஏற்பட்ட பொழுது அதனை முன்னதாக பிரம்மதேய ஊர்களை தானமாகப் பெற்று அனுபவித்து ஏகபோக உரிமை கொண்ட பிராமணர்கள் ஏற்றுக்கொள்ளாமல் வாதிட்டதை இக்கல்வெட்டு பதிவு செய்கிறது.

சண்டேசுவரர் நிலவுடைமைச்சமூகத்தின் பிரதிநிதியாக உருவெடுத்தது எவ்வாறு? ஏன்?

முதலாம் இராஜராஜன் தம் எடுப்பிச்ச திருக்கற்றளியில் சோழர்களின் ஆட்சிக்காலத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் வாழ்ந்த தேவார மூவருள் ஒருவரான சுந்தரர் வரலாற்றை ஓவியமாகத் தீட்டியுள்ளார். மேலும் தேவாரத் தொகுப்பும், ஓதுவார் முறையும், பதிகங்களுக்கான தளிச்சேரி ஆடற்பெண்டிரும், தமிழிசைவாணர்களின் இசையருவியும் இவர்தம் கற்றளியில் மிளிரச்செய்தார் என்பதை நாம் அறிவோம். சுந்தரரின் திருத்தொண்டத் தொகையில்,

"மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்"

என்று சண்டேசுவரரை அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்து பாடுகிறார் சுந்தரரர். ஆனால் சுந்தரர்க்கு முன்பே, "மாணி பால்கறந்து ஆட்டி வழிபட நீணு லகெலாம் ஆளக் கொடுத்த என் ஆணியைச் செம்பொன் அம்பலத்துள் நின்ற தாணுவைத் தமியேன் மறந்து உய்வனோ" - (திருமுறை: 5:2:4) என்று திருநாவுக்கரசு நாயனார் சண்டேசுவரரை தமது தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திருஞானசம்பந்தரும் தனது தேவாரப் பதிகங்களில் சண்டேசுவர நாயனாரின் சிவபக்தியையும், அவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட விதத்தையும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். சண்டேசுவரர் பசுக்களின் பாலைக் கொண்டு சிவபெருமானுக்கு நன்னீராட்டு செய்தபோது, அதற்கு இடையூறு செய்த தனது தந்தையின் கால்களை மழுவினால் துண்டித்த வரலாற்றைச் சம்பந்தர் பாடுகிறார்.

"பீரடைந்த பாலதாட்டப் பேணா தவன்தாதை"
"வேரடைந்து பாய்ந்ததாளை வேர்த்தடிந் தான்றனக்குத்"

"தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே"- திருப்பாதிரிப்புலியூர் பதிகம் (1.48.7) மேலும் திருக்கோளிலிப் பதிகத்தில் மணலால் இலிங்கம் செய்து ஆற்றில் பால் அபிஷேகம் செய்த விசாரசருமாவுக்கு (சண்டேசுவரர்), அவர் தந்தை செய்த இடையூறால் நிகழ்ந்த செயலையும், அதற்குப் பரிசாக இறைவன் "சண்டீசன்" எனும் பதவியளித்ததையும் குறிப்பிடுகிறார்.

"வந்தமண லாலிலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டுஞ்"
"தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்"

"கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே" திருக்கோளிலி பதிகம் (1.62.4) மேலும், சிவபெருமானுக்குப் படைக்கப்பட்ட

நிர்மாலியப் பொருட்களுக்கு (உணவு, உடை, மாலை) சண்டேசுவரரை அதிகாரியாக்கிய பெருமையைச் சம்பந்தர் திருப்பிரமபுரம் பதிகத்தில் போற்றுகிறார். சண்டேசுவரரின் பக்தியை சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் என அவர் பிறந்த ஊரோடு இணைத்துப் பல பாடல்களில் சிறப்பித்துள்ளார்

பெரியபுராணம் காட்டும் சண்டேசுவரர் வரலாறு விரிவாகவும் விளக்கமாகவும் அமைகிறது. சோழநாட்டின் மண்ணியாற்றங் கரையிலுள்ள சேய்ஞலூரில் எச்சதத்தன்- பவித்திரை என்போருக்கு மகனான விசாரசருமர் தன் சிவபூசைக்கு இடையூறு விளைவித்த தந்தையின் காலை மழுவால் வெட்டினார். அப்போது சிவலிங்கத்தில் இருந்து சிவன் வெளிப்பட்டு "தொடுத்த இதழி சூழ்சடையார் துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தரை எடுத்து நோக்கி 'நம் பொருட் டால் ஈன்ற தாதை வீழ எறிந்தாய் அடுத்த தாதை இனி உனக்கு நான்' என்று அருள் செய்தனைத் தருளி மடுத்த கருணையாற் றடவி உச்சி மோந்து மகிழ்ந்தருள" என விசாரசருமரை தன் மகனாக ஏற்று, அவருக்கு சண்டிகேசுவர பதவி அளித்ததையும், 'நாம் உண்டகலமும் உடுப்ப னஞ் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம்' என்று சிவன் தன் சொத்துக்கள் யாவற்றையும் விசாரசருமருக்குக் கொடுத்தார் என்கின்றது பெரிய புராணம்.

தேவாரமூவரின் பாடல்களில் காட்டப்படும் சண்டேசர், இராஜராஜன் பெரிய திருக்கற்றளியில் தனிச் சிற்றாலயமாக இடம் பெற்றுவிட்டார். உண்மையில் சண்டேசரின் தனித்துவமென்ன? சோழப்பேரரசர்கள் தொடங்கி அவர்தம் மெய்யியல் என்னவென்று நோக்கினால், சண்டேசுவரர் என்ற தேவாரம் காட்டும் நாயன்மார் ஒரு சிவத்தொண்டன் மட்டுமல்ல. அது ஒரு குறியீடு. பண்டைத்தமிழ்ச்சமூகத்தின் தொல்மரபு நீட்சியான அறச்சீற்றத்தின் வெளிப்பாட்டைக் காட்டிய ஒன்று. அறம் ஒன்றே அரசர்க்கு அணி. அதனைக் குலைப்போர் இரத்த உறவேயாயினும் அறுபட்டு நிற்றல் வேண்டும் என்ற பண்டைத்தமிழரின் வாழ்வியல் அறத்தை கோப்பெருஞ்சோழனும், கண்ணகி நீதி கேட்ட பாண்டியனும் சான்றுரைத்ததை நாம் அறிவோம். அந்த மரபை பேரரசர் நிலைநிறுத்தவும், யாவர்க்குமார் அறமென்ற நிலையை நாட்டவும் புதியதொரு பரிணாமத்தை ஊர்ச்சபைகளிலும், கோயில் நிர்வாகத்திலும் கொணர்கிறார் எனத் தெளியலாம். ஏனெனில் இராஜராஜனின் காலத்தில் தான் அவர்தம் சோழப்பேரரசுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நிலங்கள் அளக்கப்பட்டன. நிலவுடைமைச் சமூகத்தின் முழுமையான இலக்கணக் கூறுகளை சோழப்பேரரசு தமிழகத்தில் நிலை நிறுத்தியது என்பதை பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் தமது ஆய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார். சோழர்களுக்கு முன்பாக பல்லவர்களின் கற்றளிகளில் குறிப்பாக காஞ்சி கைலாசநாதர் கோயிலில் சண்டேசர் சிற்பம் உள்ளது. இதுவே காலத்தால் முந்தியதாகும். அச்சிற்பத்தில் அவர் இறைவனுக்கு அருகில் கைகளைக் கட்டியபடி பணிவாக நின்று கொண்டிருக்கிறார். ஆனால் சோழர்களின் கற்றளிகளில் அவர் அமர்ந்த நிலையில், கையில் மழுவேந்தியவாறு காட்டப்படுகிறார். சிற்சில கற்றளிகளில் மழு ஆயுதமானது தண்டு போன்று உருளையாகவும் வடிக்கப்பட்டுள்ளது.

முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் உள்ளாட்சி நிர்வாகம் மிகவும் வலுவாகவும், தன்னாட்சி அதிகாரம் கொண்டதாகவும் இருந்தது. ஊரவை அல்லது உள்ளாட்சி நிர்வாகம் இராஜராஜன் காலத்தில் செம்மைப்படுத்தப்பட்டன. ஊரவை என்பது ஊர்களில் இருந்த பொதுச்சபை ஆகும். நிலம் வைத்திருக்கும் வரி செலுத்தும் ஆண்கள் அனைவரும் இதன் உறுப்பினர்களாக இருக்கலாம். இது உத்தரமேரூர் காட்டும் சபை உறுப்பினர்களின் தேர்விலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதைக் காண்கிறோம். ஊர் நிலங்களை நிர்வகித்தல், நீர்ப்பாசனக் குளங்களைப் பராமரித்தல் மற்றும் வரி வசூலில் ஈடுபடுதல், ஊர்ச்சபையும், கோயில் நிர்வாகமும் இணைந்து செயல்படுவதற்கான அமைப்பை ஏற்படுத்துதல் ஆகியனவும், உள்ளாட்சி அமைப்புகளில் பேரரசின் நேரடித் தலையீட்டைக் குறைத்து, அவை தன்னாட்சியுடன் செயல்படுவதும் உறுதி செய்யப்பட்டது. தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகள், ஊர் சபைகள் கோயிலுக்கு வழங்க வேண்டிய நெல் மற்றும் சேவைகளை எவ்வாறு முறையாகச் செய்தன என்பதைக் காட்டுகின்றன.

சோழர் காலத்திய இந்த ஊரவை அமைப்பானது பண்டைத்தமிழர்களின் சங்க காலத்திய ஊரவை மற்றும் மன்று ஆகியவற்றின் செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதாக கட்டமைக்கப்பட்டது. ஊர் நிலங்களின், நிலத்தின் கண் அமையும் நீர்நிலைகளின் தலைவன் கிழான் என்ற நிலையில் அந்நிலங்களின் பயன்பாடுகள் யாவும் கிழானின் அதிகாரத்திற்குட்பட்டதாகவும், உரிமையுடையதாகவும், முழுமையான தன்னிச்சையான செயல்பாடுகளை உடையதாகவும் திகழ்ந்த நிலையை நாம் முதலில் கீழ்க்கண்டவாறு பார்க்கலாம்.

சங்க இலக்கியங்கள் காட்டும் கிழார் மரபு

கிழார் என்ற சொல் உரிமைப் பொருள் கொண்ட நிலையில் இவை குழு என்ற வேர் நிலையிலிருந்து தொடங்கிக் குடி நிலைக்கு மாறிய மூத்தோர் (அ) தலைவன் என்ற நிலைக்கு மாறிய அரசியல் செல்வாக்கு பெற்ற குறிப்பிட்ட ஊர்களுக்குத் தலைவன் அந்த ஊருக்கு எல்லா வகையிலும் உரிமையுடையவன். இந்த ஊர் பழைய ஊர்களாகவும், இருக்கலாம் அல்லது தண்ணடை பெற்ற ஊராகவும் இருக்கலாம். வேந்து சமூகத்தில் எவையேனும் ஒரு வேந்துக் குடிக்குக் கீழ் தானைத் தலைவனாக வேந்துவிடு தொழிலில் ஈடுபட்டு, வேந்தனைக் காக்கும் கடமையும், உரிமையும் உடையவனாகவும், அறம்கூறும் உரிமை கொண்டவனாகவும் உள்ளான்.

இந்நிலையானது பழந்தமிழ்ச்சமூகத்தில் நடைபெற்ற அரசுநிலை செயல்பாடுகளாகும். இதில் வேந்தன் என்பவன் நாற்திணைக்கும் தலைவனாக உயர்ந்தவன். முல்லைத்திணையிலிருந்தே தமிழகத்தில் அரசுருவாக்கம் தோன்றியுள்ளது என்பதை தமிழக அகழாய்வுகள் மெய்ப்பித்த போதிலும், மருததத்திணையில் தான் அது வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்தது என்பதை ஆற்றங்கரையோர நகரங்களின் அகழாய்வுகள் துல்லியமாகக் காட்டி நிற்கின்றன. ஏனெனில் அவை வணிகத்தினாலும், எழுத்தின் வளர்ச்சியாலும்

முக்கியத்துவம் வாய்க்கப் பெற்றன. இத்தகு மருதத்திணை ஊர்களின் குறிப்பாக காவிரியாற்றின் வடகரை மற்றும் தென்கரைத் தலங்களில் அமையப் பெற்றுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகளில் சிவபெருமான், “இவ்வூருடைய நாயனார்“ என்று பொறிக்கப்பட்டுள்ளார். ஆக, சிவபெருமான் பக்தி இயக்க காலத்தில் மருதத் திணையின் தலைவனாக உயர்ந்து நிற்பதாக தேவாரப் பதிகங்களும் இதனை எடுத்தியம்புகின்றன. மருதத்திணையின் நிலம் “ஊர்“. ஊரின் தலைவன் கிழார் என்று சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. கிழார்களின் கூட்டமைப்பு வேத்தவை என்பதாக இராகவையங்கார் கூறுகிறார். இந்த கிழார் மரபு மிகச் சிறந்த பங்களிப்பை சமயத்திலும் அளித்து, தன்னுடைய பண்டைய தொல்மரபை தக்க வைத்துக் கொண்டதன் செயல்பாடுகளில் ஒன்றாக நாம் சண்டேசுவரர் வரலாற்றை அணுகவியலும்.

கிழார்கள் யார்?

தமிழ் பிராமிக் கல்வெட்டில் (ETE No.84) பரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன் கோபன் கணதேவன் என்றும், பெருந்திணை நல்லங்கிழான் (AVNM.1, p.67-69) என்ற இரண்டு கல்வெட்டுகளிலும் ஊர்த் தலைவர் என்றே வழங்கப்படுகிறது. இக்கல்வெட்டு சான்று கிழார் ஒரு குறிப்பிட்ட பிரதேசத் தலைவர் (அ) ஊர்க்குத் தலைவர் என்பதும் தெளிவாகிறது. உரிமையானது அந்த ஊரின் பால் உருவாகிறது. நீடூர் கிழவோன், சிறுகுடிப் பண்ணன் போன்றோர் வேளிர் குடிக்கு உரியவர்களாவர். எனவே கிழார்களில் சிலர் வேளிர்களாகவும் உள்ளனர்.

கிழார் பற்றிய கல்வெட்டுகள்

'தேப்பாலி' எனப்படும் சுனையின் அருகில் பிற்காலத் தமிழ் - பிராமி கல்வெட்டுள்ளது. இக்கல்வெட்டு தென்பிராமி எழுத்துச் சாயல் உடையதாக ஐ. மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். அக்கல்வெட்டில், “பரம்பன் கோவூர் கிழார் மகன் வியக்கன் கோபன் கணதேவன் தொட சுனை“ (ETE, No.84) என்பது இக்கல்வெட்டு வாசகம். இக்கல்வெட்டு சுமார் கி.பி. நான்காம் நூற்றாண்டு எனலாம். இக்கல்வெட்டில் கணதேவன் என்பதில் 'ண்' மெய் சேர்த்து கண்ணதேவன் என்றும் ‘தொட' என்பதில் 'ட்” மெய் சேர்த்து 'தொட்ட' என்றும் கொள்ள வேண்டும். பரம்பன் கோவூர் என்ற ஊரின் கிழாரின் மகன் வியக்கன் கோபன் கண்ணதேவன் இந்த சுனையைத் தோண்டுவித்தான் என்பது இதன் பொருள். இதில் இக்கிழார் ஊர்த் தலைவர் நிலையில் உள்ளார் என்பது நோக்கத்தக்கது.

இரண்டாம் கல்வெட்டாக கிழான் என்ற சொல் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டில், “கேட்டாருலவியப் பெருந்திணை நல்லங்கிழான் எஇனங் குமானும்“

(AVNM, 1, P.67-69) இக்கல்வெட்டில் ‘நல்லங்கிழான்' என்ற சொல்

குறிப்பிடப்படுகிறது. இதனை பேராசிரியர் ஒய். சுப்பராயலு அவர்கள் ஊர் நிலத்துக்கு உரிமையுடையவர்களில் ஒருவன் எனக் குறிப்பிடுகிறார். இக்கல்வெட்டின் காலமாக கி.பி. ஐந்தாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்கிறார்.

பாண்டியர்கள் வேளாளர்களுக்கும், அமைச்சர்களுக்கும் காவிதிப்பட்டம் வழங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது. இரண்டு பிராமிக் கல்வெட்டுகள் காவிதி பற்றிக் குறிப்பிடுகின்றன. முதலிரண்டு கல்வெட்டுக்களும் மதுரைக்கு வடக்கே மேலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கத்தப்பட்டி என்ற கிராமத்தில் பிரிந்து வடமேற்கு நோக்கிச் சென்றால் மாங்குளம் என்ற ஊரினை அடையலாம். இதற்கு அருகில் மீனாட்சிபுரம் என்ற ஊர் உள்ளது. இவ்வூரை அடுத்து தெற்கு வடக்காக அமைந்துள்ள குன்று 'ஓவா மலை' என்று மக்களால் அழைக்கப்படுகிறது. இதில் அமைந்துள்ள இயற்கையான ஐந்து குகைகளில் சமணர்களுக்குக் கற்படுக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் ஆறு தமிழ். பிராமி கல்வெட்டுகள் உள்ளன. இதில் இரண்டு காவிதிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகளில் நான்காவதாக அமைந்த இக்கல்வெட்டு. இதன் காலம் இரண்டாம் நூற்றாண்டு ஆகும்.

1. கணிஇ நதஸிரிய் குவ(ன்)....... வெள் அறைய் நிகமது காவிதி இய் காழிதிக அந்தை அஸுதன் பிணஉ கொபிதோன்

2. எருகாடு (ஊ)ரு காவிதி கோன் கொறிய பளிய்

கொறிய என்ற சொல்லிற் 'ற்' மெய் சேர்த்து 'பளிய்' என்பதில் சேர்த்து பள்ளிய் என்றும் கொற்றிய என்றும் கொள்ளலாம். இதன் பொருள் எருகாடு ஊரைச் சேர்ந்த காவிதி கோன் என்பவரால் இக்குகைத்தளம் அமைக்கப்பட்டது என்பதாகும்.

காவிதி என்ற சொல்லை போலவே குடும்பிகன் என்ற சொல்லும் கிழார் என்ற சொல்லின் மாறுபட்ட வடிவம் என்ற வகையில், குடும்பிகன் என்பது குடும்பின் தலைவன் என்று பொருள் கொள்ளப்படும். பிராமி கல்வெட்டுகளில் ஒரு கல்வெட்டு குடும்பிகன் பற்றிக் குறிப்பிடுகிறது. கல்வெட்டு மதுரை நகருக்குத் தெற்கே 5 கி.மீ. தொலைவில் திருப்பரங்குன்றின் மேற்குப்பகுதியில் உயரமான இடத்தில் இயற்கையாக அமைந்த குகையில் உள்ள கற்படுக்கையின் பக்கவாட்டில் மூன்று கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. இதில் மூன்றாவது கல்வெட்டில் குடும்பிகன் என்ற சொல் வெட்டப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு எனக் கணிக்கலாம்.

“எரு காடுர் இழ குடும்பிகன் போலாயன் செய்தா ஆய்சயன் நெடுசாதன்“

எருகாடூர் இழ குடும்பிகன் போலாயன் சார்பாக ஆய்சயன் நெடுசாத்தன் இந்தக் கற்படுக்கையைச் செய்தான் என்று கொள்ளலாம், 'எருகாடுர்' என்ற சொல்லில் 'க்' மெய்யும், 'ஆய்சயன்' என்பதில் 'ர்' ஒற்றும், 'நெடுஞ்சாதன்'

என்பதில் 'த்' மெய்யும் சேர்த்து முறையே எருக்காடூர், ஆய்ச்சயன், நெடுசாத்தன் என்று கொள்ள வேண்டும்.

இவ்வகையில் காவிதி என்ற அடைக் கொண்டவர்களும் கிழார்களின் நிலையிருப்பதை கொண்டு கிழார், காவிதி, குடும்பிகன் என்பது கிழார்களின் வேறுபட்ட நிலை என்பதும் தெளிவாகின்றது. கிழார் என்ற சொல் நகருக்கு வெளியிலும், காவிதி நகரத்திற்குள்ளும், வழங்கப்பட்டமையும், இவர்கள் நிகமம் என்ற வணிகக்குழுவுடனும் தொடர்புடையவர்களாகவும், வணிகர்களாகவும் இருந்துள்ளனர். எனவே கிழார் என்பதன் உரிமை பொருள் விரிவடைகின்றன. கிழார் என்ற சொல் காவிதி, குடும்பிகன் என்ற மாறுபட்ட வடிவங்களில் வேளாண்மை, குடித்தலைவன், புலவர், நிகமம் வணிகக்குழு இவற்றோடு தொடர்புடையதாகவும் உள்ளன. கிழார் என்ற பெயர் பல வகையிலும் உரிமைப் பொருளுடன் பயின்று வருகின்றது.

வடநாட்டின் கஹபதி குடும்ப ஆட்சியின் தமிழில் வடிவமாகக் காவிதி என்பது விளங்கியதுயென ர. பூங்குன்றன், கோ. நாயகம் கூறியதை ஒட்டி அக்கூற்று உறுதிப்படுகிறது. காவிதிப்பட்டம், பாண்டியர்கள் வேளாளர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வழங்கியுள்ளனர். கிழார்களும் படை வேண்டுவழி வாளுதவியும், வினை வேண்டுவழி யறவுதவியும் (புறம்.179) செய்துள்ளனர். காவிதியும் அவ்வாறேயாக அறிய முடிகின்றது. காவிதி என்ற பட்டம் வெளியிலிருந்து வந்தபடியால் அவை நகரத்திலும், வணிகர் மத்தியிலுமே செல்வாக்குப் பெற்றன. ஆனால் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கிழார் என்ற பெயரே செல்வாக்குச் செலுத்தியது.

சங்க காலத்திய கிழார்களே அய்யனார்/சாத்தன்

கிழார்கள் ஊரின் தலைவர்களாக நிலத்திற்கும் நீர்நிலைகளுக்கும் அதிகாரம் மிக்கவர்களாகவும், அதனை பாதுகாக்கும் வலிமை படைத்தவர்களாகவும் விளங்கினர். சோழர்கால அய்யனார்களின் சில சிற்பங்களை நோக்கினால் நமக்கு இது தெற்றென விளங்கும். அய்யனார் ஊர்த்தலைவனே என்பதற்கு மற்றுமொரு சான்றாக அமைவது எசாலம் அய்யனார் சிற்பம். பிற்கால பல்லவர் காலத்திய இச்சிற்பத்தின் அமர்வு நிலை மகாராஜலீலாசனம் ஆகும். ஒரு தலைவன் மிடுக்குடன் சபையில் அமர்ந்திருக்கும் எழில் வடிவத்தை இச்சிற்பம் காட்டுகின்றது. நடுநாட்டு சிற்பங்களில் சோழர்காலத்திய பேரங்கியூர் அய்யனார் சிற்பம் குறிப்பிடத்தக்கது. சோழர்கள் காலத்தில் அய்யனார் பரிவார தேவதையாய் ஆகிவிட்ட நிலையில் கோயில் சுற்றுச்சுவர்களின் ஓரம் சோழர்கால அய்யனார் சிற்பங்கள் காணப்படுவது கண்கூடு. பராந்தக சோழனின் புள்ளமங்கையில் அன்னையர் எழுவருடன் அய்யனார் அமர்ந்துள்ளார். விழுப்புரம் ஐயூர் அகரத்தில் உள்ள அய்யனார் கையில் செண்டு வைத்துள்ளார். செண்டு என்பது அதிகாரத்தின் அடையாளமாகும். சங்கப்பாடல்கள் பலவற்றை இயற்றிய புலவர்கள் சாத்தன் என்னும் பின்னொட்டுப் பெயரைக் கொண்டுள்ளனர். பாண்டியன் கீரன்

சாத்தன், கருவூர் சேரமான் சாத்தனார் என்ற அரசர்களும் சாத்தன் பெயரைச் சூடியிருந்தனர். தெய்வத்தாற்பெயர் பெற்ற புலவர்களில் சாத்தன் என்று தெய்வத்தாற் பெயர் பெற்றவர்களேகூடுதலாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இராஜராஜனின் திருப்பட்டூர் கற்றளி

உறையூருக்குக் கிழக்கேயிருந்த பிடவூரில் 'அறப்பெயர் சாத்தான்' என்ற தெய்வம் இருந்ததாகப் புறநானூற்றிலிருந்து தெரிகின்றது. இப்பிடவூர் தற்போது திருப்பட்டூர் என்றழைக்கப்படுகிறது. திருப்பட்டூர் மாசாத்தனே சேரமான் பெருமாள் நாயனாரின் திருக்கயிலாய ஞான உலாவினை எழுத்தாக்கம் செய்தவர். சங்க காலத்திற்கு முன்பிருந்தே அய்யனார் வழிபாடு நடைபெற்று வந்த பிடவூரில் பக்தி காலத்தில் அய்யன் வைதீக மரபோடு இணைக்கப்பட்ட காலத்தில் இது நடந்தது. இதனை சேக்கிழார் பெரிய புராணத்தில் பதிவு செய்கிறார். முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்ட திருப்பிடவூர் அய்யனார் தனிக்கோயிலில் உள்ள அய்யனார் சிற்பம் கையில் ஓலைச்சுவடிகளை வைத்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

"கீர் சான்ற விழுச்சிறப்பிற்
சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை யுறந்தைக் குணாஅது
நெடுங்கை வேண்மா னருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம் பெரும"- புறம், 395.

சோழநாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தனை மதுரை நக்கீரர் பாடியுள்ள இப்பாடலில் வேண்மானுக்குச் சொந்தமான பிடவூரில் சாத்தன் என்ற தெய்வம் இருந்ததாகவும், அந்தக் கடவுளின் கிளை நாங்கள் என்று நக்கீரர் கூறுவதைக் காண்கிறோம். அறத்தால் புகழ் பெற்ற சாத்தன் என்று அடிக்குறிப்புரையில் கூறப்பட்டுள்ளது. அறத்தால் பெயரைப் பெற்ற சாத்தன் என்றும் கொள்ளலாம். நக்கீரர் பாடிய பிடவூர் கிழார் மகனும் பெருஞ்சாத்தன் என்று அழைக்கப்பட்டதால் இந்த அறப்பெயர்சாத்தனாகிய கிழான் தர்மசாஸ்தா அதாவது ஊர்களின் கிழார்கள் அறத்தைக் காப்பவர்கள் என்பது தெளிவாகின்றது.

அய்யனாரும் சண்டேசுவரரும்

“ஐ“ என்றால் தலைவன் என்பது அறிந்ததே. “சண்டம், ஈசுவரர்“ என்ற இரு சொற்களின் கூட்டமைப்பே சண்டேசுவரர். “சண்டம்“ என்றால் மிகக் கடுமையான, வலிமையான, பெருமை உடைய என்று பொருள். “ஈசுவரர்“ என்றால் அனைவர்க்கும் சமமாக அறத்தின் வாயிலாக பகிர்ந்து அளிப்பவர் என்று பொருள். அறத்தைக் காப்பவராகவும், தொடர்ச்சியாக அறச் செயல்கள் நடைபெறுவதற்கான தலைமையைக் கொண்டவராகவும் அதற்கான வலிமையும், கடுமையும் கொண்டவராக, அதனால் பெருமை

உடையவராக சண்டேசர் கருத்துரு தமிழ்ச்சமூகத்தில் உருவாக்கப்பட்டது. சிற்பங்களில் அய்யனாரின் அமர்வு போன்றதாகவே சண்டேசுவரர் சிற்பமும் கையில் தண்டு அல்லது மழு ஏந்திய நிலையில் பீடத்தின் மீது அதிகாரத்தின் அறவடிவாகக் காட்டப்படுகிறார். மேலும் தலைவன் என்பது எப்படியொரு பதவியோ அது போலவே சண்டேச்சுரம் என்பதுவும் ஒரு பதவி. நமக்குக் காட்டப்பட்ட தேவார இலக்கியங்களும், பெரியபுராணமும், சண்டேசர் புராணமும், விசாரசருமர் என்ற தாதை தாள் அறிந்த அறச்சீற்றங் கொண்டவர் சண்டேசுவரராய் திருக்கோவில்களில் அமர்ந்த, சண்டேசுவரர் என்ற பதவியை இறைவனிடம் பெற்ற ஒருவரைத் தான். ஆனால் தமிழ்ச்சமூகத்தில் கிழார்களின், அய்யனார்களின் ஒரு மாற்று வடிவமாகவே சண்டேசுவரர் படிமக்கலையை சோழர்கள் வளர்த்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

விரிந்த நிலப்பரப்பின் அறத்திற்கு அதிகாரம் பெற்றவர்களாய் விளங்கிய இராஜராஜனும், இராஜேந்திரனும் தங்களை சிவபெருமானின் ஆசி பெற்று கொன்றை மாலை சூட்டப்பெற்ற சண்டீகேசுவரர்களாய் நினைத்துக் கொண்ட நிலையை, பெரிய கோயிலின் சண்டேசர் சிற்றாலயத்தின் சண்டேசரும், கங்கை கொண்ட சோழபுரத்தின் சண்டேச அனுக்கிரக மூர்த்தி சிற்பம் நமக்கு உணர்த்தி நிற்கிறது. ஏனெனில் அறம் என்பதை கைக்கொண்ட அய்யன்கள் கையில் செண்டு ஏந்தினாலும், தண்டு ஏந்தினாலும், சாட்டை ஏந்தினாலும், மழு ஏந்தினாலும், செங்கோல் பிடித்தாலும், வாளோடு நின்றாலும் அத்தலைவர்கள் அந்த நிலத்திற்கும் நீருக்கும் உரிமை கொண்ட மக்களின் அறநெறியைக் காப்பவர்களே.

ஆதலால் சண்டேசுவரர் என்ற தமிழ்நாட்டுக் கோயில்களின் சிற்பங்கள் வாயிலாக கையாளப்பட்ட கருத்துரு, கோயில் நிர்வாகத்தில் நிலங்களைப் பற்றிய பரிவர்த்தனைகள் யாவற்றிற்கும் அதிகாரம் மிக்க வழிபாட்டு மரபாகக் காட்டப்பட்ட சங்க கால கிழார்களின், நாட்டார் வழக்காற்றின் அய்யனார்களின், வணிகர்களின் சாத்தன்களின் நிலைப்பாடே ஆகும். தமிழ்ச்சமூகத்தின் ஆணிவேரை நன்குணர்ந்த சோழப்பேரரசு பிரம்மதேயங்களை வழக்கொழித்து அனைவருக்குமான ஊர்ச்சபைகளை உருவாக்குவதற்கு இம்மரபை கையிலெடுத்து வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது என்பதை கல்வெட்டுகள், சிற்பக்கலை, சங்க கால கிழார் மரபு இவற்றிலிருந்து நாம் அறிய முயலாம்.

நூற்பட்டியல்

சுப்பிரமணியன், தி. நா. 2011. கல்வெட்டுச் சொல்லகராதி (EPIGRAPHICAL GLOSSARY) தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 7, பக். 384 & 385 (திருப்பாதிரிப்புலியூர் கல்வெட்டு)

கிருட்டினன் அ., 2001. சேலம் - நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள் , தமிழ்ப் பல்கலைக்கழகம் ,தஞ்சாவூர் - 5

நாகசாமி, இரா. 1969. தஞ்சைப் பெருவுடையார் கல்வெட்டுகள் தொகுதி 1, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

சசிகலா, கோ. 2010. புள்ளமங்கை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

ஶ்ரீதர், தி.ஶ்ரீ. பொ.ப.ஆ. (இ.ஆ.ப.) 2006. தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

புலவர் இராசு, செ. "செங்குந்தர் வரலாற்று ஆவணங்கள்", தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கம், சென்னை - 600 001.

பொ.பதி.ஆ. சீதாராம்குருமூர்த்தி. 2007. நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை.

டாக்டர் நாகசாமி, இரா. 1979. நன்னிலம் வட்டக் கல்வெட்டுகள் தொகுதி 1, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை.

தேவாரம், 1949. திருப்பனந்தாள் ஶ்ரீகாசிமடத்து வெளியீடு.

சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும், கோவிலூர் மடம் வெளியீடு.

சண்டேச அனுக்கிரகமூர்த்தி பல்லவர் கலை, கைலாசநாதர் கோவில், காஞ்சிபுரம்



சண்டேச அனுக்கிரகர், கங்கை கொண்ட சோழபுரம்

சண்டேசுவரர், திருக்கச்சி

மன்றில் அமர்ந்துள்ள ஐயன், எசாலம், காஞ்சிபுரம் மாவட்டம், பொ.ஆ.11

சண்டேசுவரர் தனிக்கோவில், தஞ்சை பெரிய கோவில்

Earliest Inscription from Gaṅgaikoṇḍachōl̲apuram Temple: A Historical Analysis

K. Bakialakshmi
Assistant Director
Tamil Nadu State Department of Archaeology
Chennai

Abstract

The inscriptions located at the Gaṅgaikoṇḍachōl̲apuram temple serve as crucial sources for understanding the historical and administrative developments of the Chōl̲a dynasty. A thorough analysis of these inscriptions reveals significant insights into various aspects, including political authority, local governance, land grants, temple administration, and socio-economic conditions of the time. These inscriptions reflect a highly organised state structure and emphasise the pivotal role of temples within medieval South Indian society. They delineate the various divisions and subdivisions of the Chōl̲a Empire.

Many inscriptions have been identified at Gangaikondacholeeswaram, with the inscription of Vīrarajēndra Chōl̲a, the third son of Rājēndra Chōl̲a I, the earliest and most extensive. This particular inscription comprises approximately 216 lines and meticulously details the endowment of lands across various villages within the Chōl̲a Empire, including precise boundary delineations, land measurements and the names of the officials responsible for drafting and recording the endowment in official registers. This paper aims to underscore the importance of the Gaṅgaikoṇḍachōl̲apuram temple inscriptions, with a particular focus on the inscription of Vīrarajēndra Chōl̲a.

Introduction

The history of archaeological research in Kolar district may be broadly divided into three phases: (1) Early notices and discoveries (1800–1900 CE); (2) contributions of the Mysore Archaeology Department and Robert Bruce Foote (1885–1956 CE); and (3) investigations by the Archaeological Survey of India and other institutions (1957 CE to the present) (Veeraraghavan 2023:60).

Present Explorations

The present explorations carried out in and around the districts of Chikkaballapur and Kolar (Table 1) have brought to light archaeological vestiges in the form of Neolithic habitation mounds; inscribed (Tamil and Kannada) and uninscribed hero stones; memorial stones; sluice gates; measuring scales; and associated material culture.

Table – 1: List of recently explored archaeological sites

S.No	Village / Geo co-ordinates	Material culture
01	Hanumanahalli	A 14th century CE Tamil inscription
02	Avani (13°06'28"N; 78°19'46"E)	A 11th century CE Tamil inscription
03	Hunaguṇḍa (13°02'45"N; 78°14'48"E)	Two Tamil inscriptions dated to the 11th–13th century CE and one Kannada inscription assignable to the 17th century CE are engraved on the bedrock of the Sōmēsvara Temple, which is situated on a small hillock. An unfinished Saptamātrika panel is also noticed on the bedrock behind the temple. In addition, eleven Kannada inscriptions were documented in the Heritage Park.

S.No	Village / Geo co-ordinates	Material culture
04	Patna (13°03'19"N; 78°15'03"E)	The site is locally known as Sitabeta or Sitakunda. On the slope of the hillock and at the foothills, cultural deposits measuring approximately 1–2 m in thickness were noticed on the terraced fields. These deposits yielded fine black-and-red ware, red slipped ware, grey ware, red ware, coarse red ware, black ware, black slipped ware, and terracotta hopscotch, indicating occupation from the Neolithic to the historical period. However, the site has been recently disturbed due to agricultural practices and quarrying activities.
05	Dhanmatnahalli (13°10'08"N; 78°03'39"E)	A Tamil inscription engraved on a boulder, accompanied by a decorated elephant motif, was documented at the site. The mound, locally known as Budhi Nettu, is situated in the foothills and has yielded ceramic assemblages comparable to those from the Patna site. In addition, a shell bangle fragment datable to the Neolithic–Early Historic period was recovered. The cultural deposit on the slope attains a maximum thickness of about 2 m. Polished stone tools and stone pounders, presently under worship, were observed in the Saplamma temple. A sluice gate with a graduated measuring scale, attributable to the Medieval period, was also recorded.
06	Guttahalli (13°05'32"N; 78°27'60"E)	The site is locally known as Pandavara Dinne or Pandavara Gutta. Ceramics such as fine Black-and-Red Ware, Red Slipped Ware, Red Ware, and Coarse Red Ware were noticed at this burial-cum-habitation site. Most of the burials have been disturbed by treasure hunters.

S.No	Village / Geo co-ordinates	Material culture
07	Arabikothanur (13°07'17"N; 78°02'31"E)	A habitation deposit was noticed both on the terrace and at the foothill on the eastern and western sides of the hill, with a deposit thickness ranging from 1 to 1.5 m. The deposit yielded dull red ware, black-and-red ware, red ware, and red slipped ware. A huge dolmen was noticed near the Arabikothanur Heritage Park. The park also contains loose sculptures, hero stones, and Sanyasi kallu belonging to the Medieval and Late Medieval periods. Tamil inscriptions were found on the walls of the Sōṁēśvara Temple. On the top of the hill, a natural cavern converted into a temporary settlement was noticed, with evidence of rough stone masonry.
08	Challahalli (13°09'19"N; 78°03'50"E)	A memorial stone bearing a late Kannada inscription, along with another Nandiya Mudre Kallu (boundary stone depicting a seated Nandi), datable to the Late Medieval period.
09	Reddygollavarahalli (13°31'42"N; 77°45'30"E)	A memorial stone bearing Kannada inscriptions of the Late Medieval period.
10	Beeraganahalli (13°31'44"N; 77°45'05"E)	Two memorial stones belonging to the Late Medieval period.
11	Kariganapalaya (13°31'54"N; 77°44'36"E)	The Neolithic habitation mound, measuring about 1 to 1.5 m in height, is situated on a terrace and has yielded ceramics such as grey ware, burnished grey ware, red ware, and coarse red ware. In addition, memorial stones were noticed within the Anand Reddy Estate.
12	Beeraganahalli (13°15'01"N; 78°15'40"E)	Hero stones with Tamil and Kannada inscriptions, memorial stones, a sluice scale, a damaged stone Nandi, and ceramics comprising red ware, coarse red ware, black ware, and coarse black ware, datable to the medieval period, were documented at the site.

Inscriptions

A total of 26 inscriptions were documented during the survey, comprising 18 in Kannada and eight in Tamil. A Tamil inscription of the Vijayanagara king Kumāra Kampaṇṇa, datable to the fourteenth century CE, was discovered at Haṇumaṉahaḷḷi (Pl. 1). The inscription, though partly illegible, records a land donation. Another Tamil inscription , datable to the eleventh century CE, was found on a slab near a dilapidated temple in the Antaragaṅga area (Pl.2). It records the donation of 27 cows (cāvāmūvāpērāḍu) for the maintenance of a perpetual lamp and three sandhi lamps to the deity Mahādēvar of the Vigrapāṉīśvaramuḍaiyār temple at Avaṉi, situated in Avaṉiya-nāḍu of Nigarili Chōḻamaṇḍalam. The donor is named as Cembiyaṉ Tamiḻataraiyaṉ of Paḻḻikoṇḍāṉkuḍi in Nariyanūr, located in Nariyanūr-nāḍu of Kiḻāṟkūṟṟam, a subdivision of Nittaviṉōta-vaḷanāḍu in Chōḻamaṇḍalam. The record highlights the close administrative and cultural interaction between Nigarili Chōḻamaṇḍalam, the north-western frontier, and the core Chōḻa territory.

An inscription engraved on a rock near the Sōmēśvara temple at Hunakuṇḍa , datable to the thirteenth century CE, belongs to the local chief Veṭṭum-Mābaraṉaṉ, son of Vīragaṅgaṉ of the Chōḻa-Gaṅga lineage. It registers a land donation to the Tōṉṟīśvaramuḍaiyār temple at Poṟkuṉṟam in Kuvalāla-nāḍu, a subdivision of Nigarili Chōḻamaṇḍalam, and specifies the boundaries of the donated land.

A cluster of eleven hero stones preserved in the heritage park at Hunakuṇḍa bears Kannada inscriptions datable to the ninth–tenth centuries CE and attributable to Noḷamba and Bāṇarasa chiefs . One inscription of the Noḷamba king Ayyappa-dēva refers to a conflict between Ponkunda and Kāñcisāyi-Narasiṅgamaṅgala, possibly named after the Pallava ruler Narasiṃhavarman of Kāñci. Another inscription of Dilippayya records a conflict between Tagadūr and Pokkunda (Ponkunda) and mentions the grant of land (koḍaṅgai) to a hero who died in battle. An inscription of Mahāvali Bāṇarasarefers to Poṅkuṇḍa-12 as a subdivision of Gaṅga-6000 (Gaṅgāśraya), illustrating the prevalent use of numerical suffixes in territorial nomenclature.

The Sōmēśvara temple at Arābikottaṉūr contains two Tamil inscriptions and one Kannada inscription. A record of Vīraballāla, dated to Kali 4431 (1330 CE), states that one Bemmi Ceṭṭi constructed the Irugīśvara-muḍaiyār temple and excavated a tank named Iruga-samudra in memory of his brother Irugi Ceṭṭi, a chief attendant of Siṅgēyadeṇṇāyaka, a subordinate of the king. The inscription mentions the village as Kottaṉūr and lists tolls levied on various commodities (Table 2).

Table. 2 List of tolls mentioned in the inscription

S.No	Commodity	Quantity	Toll in Quantity
01	Elephant	1	10 *paṇam*
02	Horse	1	1 *paṇam*
03	Saree	1	2 *kācu*
04	*Pākku* (Arecanut)	1 *poti*	40 *pākku*
05	*Miḷāku* (Pepper)	1 *poti*	1 *Aḻākku*
06	*Ve<u>rr</u>ilai* (Betel)	1 *poti*	1 *kavaḷikai*
07	*Uppu* (Salt)	1 *poti*	1 *Aḻākku*
08	*Tavaca*	1 *poti*	1 *uri*
09	*Aḍimai* (payless servant)	1	2 *kācu*
10	*Paccavaḍam*	1	2 *kācu*

Summary

The present survey highlights the archaeological and epigraphical significance of the Nigarili Chōḻamaṇḍalam region and throws light on the distribution of Tamil inscriptions within present-day Karnataka. The evidence demonstrates sustained cultural and administrative interaction between Tamil- and Kannada-speaking regions. A notable feature is the transformation of place names and territorial designations following Chōḻa conquest. For instance, a ninth-century Kannada inscription refers to Hunaguṇḍa as Poṅkuṇḍa-12 in Gaṅgāśraya, while an eleventh-century Tamil inscription renders the same place as Poṟkuṉṟam. Linguistically, Poṉ/Hon denotes 'gold', while Guṇḍa/Kuṉṟam signifies a hillock, reflecting semantic equivalence across languages. Such variations also illustrate phonetic correspondences, such as Tamil 'pa' appearing as 'ha' in Kannada (e.g., pāl/hālu). Further detailed study of these inscriptions and associated material culture is likely to yield deeper insights into the linguistic, cultural, and political transformations of this frontier region.

தென்னிந்திய நடுகற்கள் - ஓர் ஒப்பாய்வு

ச. கிருஷ்ணமூர்த்தி
தொல்லியல் அலுவலர்(ப.நி)
சென்னை.

சுருக்கம்

நடுகல் கல்வெட்டுகள், தமிழ்மொழியில் மட்டுமின்றித் தென்னிந்திய மொழிகளிலும் மிகுதியாக உள்ளன. தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில்மேற்படி கல்வெட்டுகள் அமைந்துள்ளன.

நடுகல், வீரக்கல், வீரசிலாலு, உரஸ்கல், கீர்த்திஸ்தம்பம் எனப்பலவாறு Hero Stone இந்திய மொழிகளில் காண்கின்றோம்.

நடுகற்கள் கல்லில் மட்டும் இன்றி மர கட்டைகளிலும் உள்ளன. கற்களின் அமைப்பிலும் சிற்பங்களின் அமைப்பிலும் ஒற்றுமையும் வேற்றுமையும் காண்கிறோம்.

நடுகல் குறித்துக் குறிப்பிடும் இலக்கண, இலக்கியங்கள் தமிழில் மிகுதியாகும். காலவரிசையில் தொன்மையான நடுகற்கள் தமிழி எழுத்துக்களில் உள்ளன. மொழிகளின் அடிப்படையில் - எண்ணிக்கையில் மிகுதியாக முறையே கன்னடம், தெலுங்கு, தமிழ் என நடுகற்கள் உள்ளன.

மாநில அடிப்படையில் வீரக்கல் மற்றும் நீத்தார் நினைவுகல் கர்நாடகம், ஒன்றுபட்ட ஆந்திரா, தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கோவா, கேரளாவிலும் உள்ளன.

நடுகற்களின் வகைகள் பலவாகும். சேவகர், பாலாசிரியர், தொறு, ஆன்நிறை, மங்கலம், பொன், பாரமதாயர், பூசல், நிசிதிகை, சமாதிகல், தலைப்பலி, நவகண்டம், அரிகண்டம், அடியான், ஏனாதி, காவிதி, இளவரையர், அதியரையர், மக்கள், மருமக்கள், மகன், சான்றான், காமிண்டன், பட்டி, ஆள், பட்டர் மற்றும் பலசொற்கள் மாறுபட்ட பொருட்களில் நடுகல் கல்வெட்டுகளில் உள்ளன.

கப்பலில் போரிட்டு மாண்ட வீரர்களுக்குக் கோவா, மகாராஷ்டிரா மாநிலங்களில் நடுகற்களில் காண்கிறோம்.

விலங்குகளுக்கும் நடுகற்கள் தென்னிந்தியாவில் எடுக்கப்பட்டுள்ளன. காலம்தோறும் நடுகற்களில் மொழி, சிற்பங்கள் மற்றும் எழுத்துக்களில் மாற்றங்களை அறியலாம்.

ஒரே ஊரில் அறுபதுக்கும் மேற்பட்ட நடுகற்கள் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ளன. தொடக்கத்தில் தெய்வமாக இருந்த

நடுகல் வீரன் பிற்காலத்தில் சிவன், விஷ்ணு அருகதேவனை வழிபட செல்பவனகக் காண்கிறோம். நடுகர்களின் வளர்ச்சியே பள்ளிப்படைக் கோயிலாகும். இவ்வாறு ஒற்றுமையான கூறுகளும் மாறுபட்ட கூறுகளும் காண்கிறோம்.

நடுகல் என்ற தமிழ்ச்சொல் பொருள் பொதிந்த சொல்லாகும். இதற்கு இணையாக வீரக்கல் உள்ளது.வீரகலு,வீரசிலாலு ,வீர்கா எனக் கருநாடகா, பிரிக்கப்படாத ஆந்திர மாநிலங்களில் வழங்கப்படுகின்றன. மத்திய இந்தியாவில் 'உரஸ்கல்' என்பர். கத்ரி,பாலியா,கீர்த்திஸ்தம்பம் என்றெல்லாம் இதுவழங்கப்படுகிறது.(நடுகற்கள், ச.கிருஷ்ணமுர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை).

வீரமரணம் அடைந்தவர்க்கே தொடக்கத்தில் வீரக்கல் ஏற்படுத்தப்பட்டது. பிற்காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக இறந்துபட்டவர்களுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டன. இத்தகுநினைவுக் கற்களைப் பல்வேறு பெயர்களில் அழைத்தனர். உலகமெங்கும் நீத்தார் நினைவுக் கற்களைப் பலவாறு அழைக்கின்றனர். (தென்னிந்திய வீரக் கற்கள்.வெ.கேசவராஜ்)

தமிழகத்தில் இயற்கை வழிபாட்டிற்குப் பின் நீத்தார் வழிபாடு அல்லது நடுகல் வழிபாடே தொன்மையானதாகும். பெரும்பாலான சங்க இலக்கியங்கள் நடுகற்களைக் குறிப்பிடுவதுடன் நடுகல் வழிபாட்டு முறைகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. நீதி நூலாகிய திருக்குறளும் நடுகல்லைக் குறிப்பிடுகிறது.

எழுத்தில்லாத ஓவிய நடுகற்களே தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்டன. பிறகு ஒழுங்கற்ற கருங்கற்களைப் பயன்படுத்தித் தமிழி எழுத்துக்களில் தமிழ் மொழி நடுகற்கள் தோன்றின. சங்க காலத்தையடுத்துச் செவ்வக வடிவக் கல்லிலும் கல்திட்டையிலும் நடுகற்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழி எழுத்திற்குப் பதில் வட்டெழுத்தில் கூடிய நடுகற்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளைக் கடவுள் எழுதிய கற்கள் என்பர்.

தமிழகத்தில் மட்டுமின்றி ஆந்திரம், கருநாடகம் மற்றும் கேரள மாநிலத்திலும் தமிழில் கூடிய நடுகற்கள் வெட்டப்பட்டுள்ளன. கன்னட, தெலுங்கு, நடுகற்களுடன் சமஸ்கிருத மொழி நடுகற்களும் ஆந்திர, கருநாடக மாநிலங்களில் வெட்டப்பட்டுள்ளன.

பெரும்பாலும் தூண் வடிவில் கூடிய நடுகற்களைப் பிறமாநிலங்களில் காண்கிறோம். இமாச்சலப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் கருங்கற்களுக்குப் பதில் மரக்கட்டைகளைக் கொண்டு நடுகற்களை உருவாக்கியுள்ளனர். சஜா அல்லது சர்யா என்ற மரங்கள் இவற்றிற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன. நினைவுக் கற்கள் மார்யா,போயா,கம்பியா என மக்களால் அழைக்கப்படுகின்றன. பிறமாநிலங்களிலும் தூண்வடிவ

நடுகற்களில் ஒருவர் நினைவாக அல்லது பலர் நினைவாகப் போர் வீரர்களுக்கு நடுகற்கள் உருவாக்கினர்.

சங்ககாலம் தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை நடுகற்கள் ஏற்படுத்தப்பட்டு மக்களால் வழிபடப்பட்டு வந்தாலும் காலத்திற்கேற்பவே, கல்வெட்டுகளும், சிற்பங்களும் மாறிமாறி வந்துள்ளன. வில், அம்பு, கேடயம், கத்தி, வாள், துப்பாக்கி போன்றவற்றை நடுகற்களில் காண்கிறோம். எழுத்து பொறிப்பு இல்லாமல் சிற்பங்களால் ஆன நடுகற்களே எண்ணிக்கையில் மிகுதி எனலாம். வீரர் போரிடுவது போன்றோ தெய்வ நிலையை அடைந்தது போன்றோ சிற்பம் காணப்படும். பெரும்பாலும் சுடுகாட்டையொட்டியே நடுகற்கள் காணப்படுகின்றன. நீர்நிலைகளுக்கு அருகிலும் பெருவழிகளிலும் சில வீரக்கற்கள் உள்ளன.

தொல்காப்பியம் குறிப்பிடுவதற்கேற்பக் கண்ணகிக்குக் கல்படிமம் அமைத்ததைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம் .

''காட்சிகால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று வகையிற் கல்லொடுபுணரச்
சொல்லப்பட்டஇருமூன்றுதுறைத்தே''(தொல்.60)

போர் செய்ய தொடங்குதற்குரிய பொதுநிலைமைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது. மேலும் 'வெறியறி சிறப்பின்' என்று தொடங்கும் பெரிய நூற்பா விரிவாக'நடுகல் 'எடுப்பது குறித்துக் கூறுகிறது. எழுத்து பொறிப்பு குறித்து யாதொரு குறிப்பும் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை.ஆயின் சங்க இலக்கியங்களில் எழுத்துகள் கூர்மையான ஆயுதங்களில் வெட்டப்பட்ட விவரங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்படாத கல்பதுக்கை,நெடுங்கல்,குத்துக்கல் போன்றவைகளும் கூறப்பட்டுள்ளன.

பெருங்கற்காலப் பண்பாடு நிலவியபோது குகைகளிலும் கல்திட்டைகளிலும், பகைவருடன் போரிட்டு இறந்த வீரர்களுக்கு நினைவுக்கற்கள் எடுத்துள்ளார்கள். இவைகள் ஓவியங்கள் ஆகும்.தமிழகத்தில் கிருஷ்ணகிரி சையத் பாட்சா மலை, மகாராஜாக்கடை, மல்லசமுத்திரம் போன்ற ஊர்களிலும் ஆந்திராவில் பிக்கிலிகல் என்ற ஊரிலும் கேரளத்தில் புலப்பள்ளி, எடக்கல் போன்ற இடங்களிலும் தென் குஜராத்தில் சோத்திரியிலும் ஓவிய நடுகற்களைக் காணலாம். ஓவிய நடுகற்களையடுத்து தமிழகத்தில் தமிழி எழுத்துகளில் நடுகற்களை உருவாக்கினர்.

சங்ககால நடுகற்கள்

சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட 'நடுகல்' கல்வெட்டுகளுக்கு உதாரணமாகத் தேனி மாவட்டம்,ஆண்டிப்பட்டி வட்டம் 'புலிமான்கோம்பை'

என்ற ஊரில் நடுகற்கள் உள்ளன. தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்படி நடுகற்களைக் கண்டறிந்தது.தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளிலும் காலத்தால் முந்தியவை இத்தமிழி எழுத்தில் கூடிய தமிழ்மொழி நடுகற்களே என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.

'ஆகோள்' எனப்படும் மாடு பிடிச்சண்டையில் இறந்த போர்வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் இவற்றுள் ஒன்றாகும்.இந்தியா முழுவதும் மாடுபிடி சண்டைக்காக நடப்பட்ட நடுகற்களே தொன்மையானவை என்பதுடன் மிகுந்த அளவில் உள்ளன என அறிஞர்கள் கருதுகின்றார்கள். ஆந்திரப் பிரதேசம், கடப்பா மாவட்டம் கங்கம்பேரூரு என்ற ஊரில் கோகிரஹனப் போரில் இறந்த கோனா என்ற போர்வீரனுக்கான தொன்மையான வீரக்கல் உள்ளது. காலம் பொ.ஆ.மூன்றாம்நூற்றாண்டாகும். மொழி பிராகிருதம். எழுத்து பிராமி ஆகும்.

'வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்'

என்ற தொல்காப்பியர் கருத்தின்படி போருக்கு முன்னர் பகைவர் நாட்டில் இரவில் பசுக்களைக் கவர்ந்து வரநிகழும் வெட்சிப் போரிலும் அப்பசுக்களை மீட்டலின்போது நிகழும் கரந்தைப் போரிலும் அதாவது இருவகைப் பூசல்களிலும் சாகும் வீரர்களுக்கு நடுகற்கள் ஏற்படுத்தப்படும். ஆநிரைப் போர் ஏன் இரவில் நடத்த வேண்டும் என்பதற்கு நச்சினார்க்கினியர் பொருத்தமான விளக்கம் தருகிறார். (நடுகற்கள் - ச.கிருஷ்ணமூர்த்தி)

மகாபாரதத்திலும் பசுக்களைக் கவர்ந்து வருதல் இடம் பெறுகிறது. துரியோதனன் கூட்டத்தார் பசுக்களைக் கவர்ந்து செல்ல அர்ச்சுனன் மீட்டு வந்ததாகக் காண்கிறோம். (நடுகல்கல்வெட்டுகளும் சிற்பங்களும் - ச.கிருஷ்ணமூர்த்தி)

மனிதருக்கு மட்டுமின்றி மாட்டுக்கு நடுகல், குதிரைக்கு நடுகல்,நாய்க்கு நடுகல், யானைக்கு நடுகல்,கோழிக்கு நடுகல் என விலங்குகளுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களும் உள்ளன. கிளிக்குக் கூட நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. நிசிதிகை, நவகண்டம், சதிக்கல் போன்றவைகளும் உள்ளன.(நடுகற்கள் - ச.கிருஷ்ணமூர்த்தி)

சாதாரண வீரனுக்கு எடுக்கப்படுவது நடுகல் என்றும் அரசன் மற்றும் படைத்தலைவர் போன்றோர்க்கு எடுக்கப்படுவது பள்ளிப்படைக் கோயில் என்றும் நா.வானமாமலைகூறுவர். எனினும் சங்ககாலத்தில் அதியமான்,காரியாதி போன்ற மன்னர்களுக்கு நடுகற்களே எடுக்கப்பட்டதாகப் புறநானூற்றின் மூலம் அறிகிறோம். (நடுகற்கள் - ச.கிருஷ்ணமூர்த்தி)

நினைவுக் கற்கள்

ஆந்திர மாநிலத்தில் நாகார்ஜுன கொண்டா என்ற ஊரில் கண்டறியப்பட்ட சாயாஸ்தம்பா (chhayastambhas)எனப்படும் நினைவுச் சின்னங்கள் தூண்களில் உள்ளன. இக்ஷவாகு மன்னர்,அரசியர்,சேனாதிபதியர், வீரர்கள் மற்றும் துறவியர்களின் நினைவுக் கற்கள் இவைகள் எனலாம்.56 தூண்கள் இங்கே உள்ளன. பட்டோரின் பீடும் பெயரும் எழுதிய நடுகற்கள் போல இவைகளையும் கருதலாம். ஆர்யபட்டராக, யதீஸ்ரமன், ஸ்கந்திகரிடா, ஆவேஸனிகா ஆகியோர்க்கும் இங்கே நினைவுக்கற்கள் உள்ளன.உருவங்களுடன் கல்வெட்டுகளும் இங்குள்ளன. சொர்க்கக் காட்சியும் காட்டப்பட்டுள்ளது. இவைகள்ருத்திரபுருஷதத்தா என்பவரின் 11ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். (நடுகற்கள் கருத்தரங்கம் - இரா. நாகசாமி)

இதுவரை தமிழகத்தில் சங்ககாலத்தைச் ரேந்த ஐந்து நடுகல் கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. எதிலும் உருவங்கள் இல்லை.கல்வெட்டுகள் தமிழி எழுத்துகளில் கூடியவை ஆகும்.முதல் கல்வெட்டு வாசகம் வருமாறு.

‘கல்பேடு தீயன் அந்தவன் கூடல்
ஊர் ஆகோள்'

கூடலூரில் நடைபெற்ற பசு கவர்தல் பூசலின்போது பேடுதீயன் அந்தவன் இறந்ததால் இந்நடுகல் எடுப்பிக்கப்பட்டது. கல் என்பது நடுகல் என்றபொருள். பேடு என்பது பெடுஎன மலையாளத்தில் வழங்கப்படும் 'படு'என்ற தமிழ்ச்சொல் 'மூலம்'என்பார்ஐ.மகாதேவன். 'பட்ட' அல்லது ‘இறந்த’ என்ற பொருள் ஆகும்.பேடு என்பது உறையூர் அகழாய்வில் கிடைத்த பானை ஓட்டிலும் உள்ளது.மூலன்பேடு என்றுள்ளது.கச்சிப்பேடு என்ற நகரம் காஞ்சிபுரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.தீயன்அந்தவன் இறந்த வீரனின் பெயர்.இலங்கையில் கிடைத்த தமிழ் பிராமிகாசில் தீயன் என்ற பெயருள்ளது.சிங்கத்துடன் போரிடும் தீயன் பெயருள்ள மோதிரமும் கிடைத்துள்ளது. இரண்டையும் தினமலர் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தியும் அறிஞர் ஐ.மகாதேவனும் ஆய்வு செய்துள்ளனர். (Early Tamil Epigraphy - I.Mahadevan. P.68.70.277) தீயன் ஓதலன் போல் அழகர்மலைக் கல்வெட்டில் தீயன் சாத்தன் வருகிறது என்பதை அறிஞர்ஐ.மகாதேவன்குறிப்பிடுகிறார்.(P.448,449,593)திருப்பரங்குன்றம் குகைக்கல்வெட்டில் அந்துவன் என்ற பெயர் உள்ளது.கூடல்+ஊர் =கூடலூர் என வந்திருக்க வேண்டும். 'உயிர்மேல் உடல் வந்து ஒன்றுவது இயல்பே'என்று தொல்காப்பியம் கூறினும் இங்கே ஒன்றவில்லை.இப்போக்கு கல்வெட்டின் காலத்தை முன்நோக்கி அழைத்துச் செல்கிறது. பேடு என்பதைப் பேறு என்று கல்வெட்டறிஞர் ர.பூங்குன்றன் வாசித்துள்ளார். பேற என்ற சொல்லுடன் அவர் பொருத்துகிறார்.ஆகோள் என்பது பசுக்களைக் கவரும் போர் என்க.ஆநிரை என்றும் கூறலாம்.

இரண்டாவது கல்வெட்டில் சில எழுத்துக்கள் சிதைந்து விட்டதால் அன்னூர் ஆதன் கல் என்று படித்துள்ளனர்.'....அன் ஊர் ஆதன்'என முதல் வரியும். '...ன அன்கல்'என இரண்டாவது வரியும் உள்ளது. ஆதனின் நடுகல் என்று பொருள். ஆதன் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் மட்டுமின்றி அகழாய்வுகளில் கிடைத்த பானை ஓடுகளிலும் எழுதப்பட்டுள்ளன.

மூன்றாவது கல்வெட்டினை 'வேள் ஊர்பதவன் அவ்வன்' என்று வாசித்துள்ளனர். வேளூரைச் சேர்ந்த பதவன் அவ்வன் என்பவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் இதுவெனலாம். மேற்படி மூன்று கல்வெட்டுகளிலும் உயிர் மெய் சேராமல் உள்ளன. அன்+ஊர் = அன்னூர் என வரவேண்டும். வேள்+ஊர்=வேளூர் என வரவேண்டும். இரண்டிலும் உயிர் மெய்'னூ', 'ளூ' வரவில்லை.பதவன் பெயரைத் தந்தையின் பெயராகக் கொண்டு வீரன் பெயர் அவ்வன் என்று கொள்ளலாம்.அவ்வையார் என்ற பெண்பாற் புலவரை நாமறிவோம்.அவ்வை என்ற பெண்பால் பெயர் அவ்வன் என ஆண்பாலாக வந்துள்ளது. தொல்காப்பியர் 'ஔ'என்ற எழுத்தை குறிப்பிடினும் இங்கே 'அவ்'என்றே வந்துள்ளது.தமிழிக்கல்வெட்டுகளில் 'ஔ'இதுவரைக் கிடைக்கவில்லை.

நான்காவதாக நிலக்கோட்டை வட்டம் தாதகாபட்டி என்ற ஊரில் உள்ள நடுகல்லில் சில எழுத்துகள் சிதைந்திருந்தாலும் வீரன் ஒருவன் இறந்த விவரம் தெரிகிறது. தலைவன் அல்லது அரசனின் அடியோன் நடுகல் இது வெனலாம்.'....ன் அடி ஓன் பாகல் பாளிய்கல்' இதில் 'அடியோன்' என்பது 'அடிஓன்' என்றுள்ளது. அடியோன் என்பதை அடியான் என்ற சொல்லின் வேறு வடிவம் எனலாம். அடியான் என்பது சேவகன் என்பது போல் மெய்க்காப்பாளன் எனலாம். சான்றான், சான்றோன் போல என்க.பாகல் என்பது வீரன் பெயராகும். பலா மரமாகவும் அல்லது ஊராகவும் கொள்ளலாம்என்பர்ர. பூங்குன்றன். 'பாளிய்' என்பது நினைவிடம் (இறந்தவிடம்) எனலாம். பள்ளி என்ற சொல்லின் மாற்றுவடிவம்,தமிழ்க் கல்வெட்டுகள் பலவற்றில் இச்சொல் வந்துள்ளது.இலக்கியங்களில் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய, குராப்பள்ளித் துஞ்சிய ஆகிய வாசகங்களும்உள்ளன. மரத்தடியில் புதைக்கும் வழக்கமிருந்தைக் காட்டி,பூங்குன்றன பாகல் என்பதைப் பலா மரம் என்கிறார். (நடுகல் கல்வெட்டுகள் ர.பூங்குன்றன்) கல் என்ற ஈற்றுச்சொல் நடுகல் என்ற பொருளைத் தரும்.

தமிழி எழுத்து வட்டெழுத்தாகப்பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டளவில் மாறியதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக் கோட்டையில் உள்ள நடுகல் கல்வெட்டு,வட்டெழுத்தில் அமைந்துள்ளது. இந்நடுகல்லும் ஒழுங்கற்ற கற்பலகையில் எவ்வித உருவமுமின்றி வெட்டப்பட்டுள்ளது.

ஐந்தாவது நடுகல்,‘ஏகன் ஆதன் கோட்டம்’ என மூன்று சொற்களில் கிண்ணி மங்கலத்தில் உள்ளது.காலம் பொ.ஆ. முதல் நூற்றாண்டு என்பர்.

ஈரோடு மாவட்டம் ஈரட்டிமலையிலிருந்து கொண்டு வந்து தற்போது தமிழகத் தொல்லியல் துறையில் வைத்துள்ள உருண்டை வடிவகல்லில், ‘துறகய் யுள்ளாரு கல்'என்ற கல்வெட்டு வாசகம் உள்ளது.இது பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு எனலாம். வட்டெழுத்தில் இக்கல்வெட்டு உள்ளது. கல்-நினைவுக்கல் என்க.

விழுப்புரம் நகரில் ஏரியருகே ஒரு நடுகல் உள்ளது. பட்டான் என்றுள்ள நடுகல் பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டாகும். கல்வெட்டின் வாசகம் வருமாறு.

பிரையகம் யெறிந்த
க்கால்லம் போருட்ப்ப
ட்டான் தெருக்காலா
ருநீலகண்ட
ன் கல்

இக் கல்வெட்டில் வரும் 'பிரையகம்' என்பதுஊர்பெயர் எனலாம். தெருக்கால்லாரு மகன் நீலகண்டன் போரில் இறந்துள்ளான். செந்தாரைப்பட்டி நடுகற்கள் ஆறிலும் நீலகண்டன் என்ற பெயருள்ளது. காலம் பொ.ஆ.ஆறாம் நூற்றாண்டாகும். (ஆவணம்இதழ்)

சங்ககாலத்திற்குப் பிறகு பல்லவர்,பாண்டியர் ஆட்சியின்போது வெட்டப்பட்டநடுகற்கள்யாவும்வட்டெழுத்தில்கூடியதமிழ்நடுகற்களோயாகும். பாண்டியரைக் காட்டிலும் பல்லவர்களின் நடுகற்கள் எண்ணிக்கையில் மிகுதியாகும். பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி நூற்றுக்கு மேல் பல்லவர் நடுகற்கள் உள்ளன. தமிழகத்தின் வடபகுதி மட்டுமின்றி ஆந்திரா, கருநாடகாவிலும் பல்லவர் நடுகற்கள் உள்ளன. பல்லவர் மட்டுமின்றிப் பாணர், கங்கர், நொளம்பர், இராஷ்டிரகூடர் சோழர் எனப்பல அரசமரபினர் நடுகற்களும் காண்கிறோம்.

பல்லவரின் பிற்கால நடுகல் கல்வெட்டுகளில் வட்டெழுத்து மட்டுமின்றித் தமிழிலும் காண்கிறோம்.பல்லவர் மற்றும் பல்லவர் காலச் சிற்றரசர் நடுகற்களின் மூலம் தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் தமிழ்மொழி வழக்காற்றினையும் அறிந்து கொள்கிறோம். மேலும், வட்டெழுத்துகளின் பரிணாமவளர்ச்சி அறிதல், தொல்காப்பிய எழுத்திலக்கண கோட்பாடுகளை அறிதல், நாட்டிலிருந்த சிற்றரசர்கள் விவரம் அறிதல், போரில் மாண்ட தொல்குடி மரபினரை அறிதல், வட்டார வழக்குச் சொற்களை அறிதல், உறவு முறைகளை அறிதல், ஓயாத பூசல்களின் விளைவுகளை அறிதல், இனக்குழு வாழ்க்கை முறைகளை அறிதல், கால்நடைச் செல்வத்தை மதித்திருந்ததை அறிதல், விலங்குகளைக் கொன்று

நாட்டை காத்தச் செயல்களை அறிதல் எனப் பல விவரங்களை அறிகிறோம். (நடுகற்கள் - ச.கிருஷ்ணமூர்த்தி)

வட தமிழ் நாட்டில் நடுகற்கள் மிகுதி எனினும் பிரிக்கப்படாத தருமபுரி மற்றும் பிரிக்கப்படாத வட ஆர்க்காடு மாவட்டத்தில் 70 விழுக்காடு நடுகற்கள் உள்ளன.வானம் பார்த்த பூமி,கால் நடைச் செல்வம் மிகுந்த பகுதி. எனவே சிற்றரசுகள் தங்களுக்கிடையே போரிட்டுள்ளன. ஆந்திரா,கருநாடக மாநிலங்களிலும் நீர் வளம்குறைந்த, கால்நடைகள் வளர்த்தலுக்கேற்ற பகுதிகளில் வீரக்கற்கள் உள்ளன. மாநிலங்களின்எல்லை ஒரப்பகுதிகளில் வீரக்கற்கள் பல உள்ளன.

'வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ' என்பதற்கேற்ப வட எழுத்துக்களான வர்க்க எழுத்துகள் ஜ,ஸ,ஷ,க்ஷ,ஹ போன்றவை இடம்பெறாமல் விசைய (விஜைய) மசீந்தர அல்லது மயீந்திர (மஹேந்திர)சிங்கவிண்ணபருமற்கு (ஸிம்மவிஷ்ணுபர்மர்) என்பன போல எழுதப்பட்டுள்ளன. இரண்டாம் நந்திவர்மன் காலத்திற்கு முன்பு வரை இப்போக்கினைக் காண்கிறோம். பின்னர் வட்டெழுத்திற்குப்பதில் தமிழும் தமிழ் எண்களும் கிரந்தஎழுத்துகளும் இடம்பெற்றுள்ளன.கங்கர்,பாணர் போன்றோர் நடுகற்களும் வட்டெழுத்திலேயே உள்ளன.பாணர்,கட்டி,கங்கர்,கொங்கணி,மழவர்,அதியர், போசளர், இரட்டர், மாவலி, வாணாதிராயர், முத்தரையர், பங்களர், அருவாளர் போன்ற அரசமரபினர் நடுகற்களில் உள்ளனர். சமஸ்கிருத மொழியில் ஒரு நடுகல்லும் தமிழகத்தில் இல்லை.பிராமணர் என்ற இனத்தார் தமிழக நடுகற்களில் இடம் பெறாவிடினும் கருநாடக நடுகற்களில் இடம்பெற்றுள்ளனர். தமிழ் எண்கள் இடம்பெறாமல்,எழுத்துகளாகவே எண்கள் கூறப்பட்டுள்ளன. வேலுர் அகரஞ்சேரி நடுகல் தவிர வேறு எந்த நடுகல் கல்வெட்டிலும் நாள், நட்சத்திரம்,திதி போன்ற பஞ்சாங்க குறிப்புகள் காணப்படவில்லை.

பெண்கள் போரில் பங்கு கொண்டு இறந்து நடுகல்லாக மாறியது தமிழகத்தில் பொதுவாக இல்லை.மாறாகக் கருநாடகாவில் சில பெண் வீர நடுகற்கள் உள்ளன. எனினும் சதிக்கற்கள் இந்தியாவெங்கும் உள்ளன.

நடுகற்களில் இடம்பெறும் பல சொற்கள் அகராதிகளில் இல்லாத பொருட்களைச் சுட்டுகின்றன. சான்றாகச் சேவகர் என்பது பணியாள் என்ற பொருளைத் தராமல் வீரன் என்ற பொருளைப் பயக்கும். அடியோன் என்பதும் போர் வீரனையே சுட்டும். அதியரைசர், மூத்தரையர், இளவரையர் என்பன அரசன் என்ற பொருளைப் பயக்காது. ஆள், மக்கள், மகன், மருமக்கள், இளமக்கள், சான்றான், காமிண்டன், பட்டி, பொன் போன்ற சொற்களுக்குக் கல்வெட்டின் தன்மைக்கேற்ப பொருள் காண வேண்டியுள்ளது. சான்றாகப் பொன்மாந்தர், பொன்னந்தியார், பொன்னம்பரனார், பொன்மேந்தனார் எனப்பல சொற்களில் பொன் வருகிறது. இங்கே பொன் மாட்டுச் செல்வமாகும். மாடு என்ற சொல்லில் இருந்தே மாடை என்ற நாணயப் பெயர் ஏற்பட்டது எனலாம்.

விஷ்ணுவர்மன், சிம்மவர்மன், சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், இரண்டாம் பரமேஸ்வரன், இரண்டாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நந்திவர்மன், மூன்றாம்நந்திவர்மன், தந்திவர்மன், கம்பவர்மன், ஈச்சுரவர்மன், நிருபதுங்கன் எனப்பலருடைய நடுகல் கல்வெட்டுகள் கண்டறியபட்டுள்ளன. பல்லவமன்னர்கள் நேரிடையாகப் போரிட்டதாக எந்த நடுகல் கல்வெட்டிலும் குறிப்பிடப்படவில்லை. மன்னர்களின் பெயர்களும் ஆட்சியாண்டுகளும் வெறும் சம்பிரதாயத்துக்காகவே எழுதப்பட்டுள்ளன எனலாம். பல்லவருடைய சிற்றரசர் தங்களுக்குள் பூசலிட்டனர். ஆந்திர கருநாடக மாநிலங்களில் போசலர், பாணர், கங்கர் எனப் பல அரசமரபினர் நேரிடையாகப் போர்களில் பங்கு கொண்டுள்ளனர்.

பல்லவர் காலம் தொடங்கியே (பொ.ஆ. முதல் ஐந்தாம் நூற்றாண்டு) சிற்பங்களும் எழுத்துகளும் நடுகற்களில் காண்கிறோம். ஆயின் ஆந்திரப் பிரதேசத்தில் பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் சிற்பங்களும் எழுத்துகளும் வீரக் கற்களில் காண்கிறோம். பல்லவர் நடுகற்களில் இருளப்பட்டி என்ற பாப்பம்பாடி நடுகல்லே தொன்மை வாய்ந்ததாக அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். இந்த நடுகல்லில் விஷ்ணுவர்மன், விண்ணபருமர் என்றுள்ளது. இவனுடைய நாலாவது ஆட்சியாண்டின் போது தகடூர் நாடாளும் அரசராகக் கங்கரைசர் இருந்துள்ளார். அப்போது மற்றோர் அரசர் தண்டத்தோடு (படையோடு) வந்து போரிட்டுள்ளார். அப்போரில் வாணபெருமரைசரு சேவகர் (பெயர் சிதைந்து விட்டது) ஒருவர் இறந்து பட அவருக்கு நடுகல் எடுக்கப்பட்டது. இதே ஊரில் உள்ள மற்றோர் நடுகல் கல்வெட்டு 'வாணபரும அரைசரு' என்று தொடங்குகிறது. இதில் விண்ணப்பேர் ஏனாதி என்ற படைத்தலைவனும் கொற்றந்தைகோடன் என்ற வீரனும் இறந்துள்ளனர். இரண்டு கல்வெட்டுகளும் சமகாலம் எனலாம். கங்கருடன் பாணர் போரிட்டனர் எனலாம்.

பாலாசிரியர்

சிம்வர்மன், சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன் என்ற மூவருடைய மூன்று நடுகல் கல்வெட்டுகளில் பாலாசிரியர் என்பவர் இடம் பெறுகிறார். ஆசிரியர் என்ற பொருளில் பயன்படுத்தப் படாமல் கொள்ளையடித்த பொருட்களைப் பகுத்துக் கொடுப்பவர் என்ற பொருளில் ஆளப்பட்டது.மேலும் ஆளும் என்பது ஊர்த்தலைவன் எனலாம். மூவர் காலங்களிலும் இடம்பெறும் பாலாசிரியர் ஒருவரே என்ற கருதவேண்டியதில்லை. சேவகர்,அடியார் போன்று ஒரு பொதுச் சொல்லாகவே கருதலாம். சிறுபாழ் ஆளும் பாலாசிரியரு மகன் வீரவர் பெயர் ஒரு நடுகல்லில் வருகிறது. சிறுபாழ் ஆளும் பாலாசிரியரு மக்கள் சிறுப்படுவானார் என்ற இரண்டாவது கல்வெட்டிலும் சிறுபாழ் ஆள்வார் பாலாசிரியரு மக்கள் மாறன் என்ற மூன்றாவது கல்வெட்டிலும் வரும் தொடர்களை நோக்க ஊரின்

தலைவனாகவே கொள்ளவேண்டும்.ஏனெனில் மூன்றிலும் ஆளும் என்ற சொல் உள்ளது. தொல்காப்பியத்தில் இடம்பெறும் பாதீடு என்ற சொல்லுடன் நடுகல்லைத் தொடர்புபடுத்தலாம்.இவ்வாறே கோயில் பட்டர் என்பதைக் கோயிலில் பூசை புரியும் குருமார் என்று பொருள் கூறாமல்,பசுமந்தையின் உரிமையாளர் அல்லது கால்நடைப் பட்டியின் தலைவர் என்று பொருள் காணவேண்டும்.

அகரஞ்சேரி நடுகல்

வேலூர் மாவட்டம், அகரஞ்சேரி நடுகல் கல்வெட்டு, பெரும்போர் ஒன்றைக் குறிப்பிடும் சாசனம் எனலாம். யானை மீது அமர்ந்த தலைவனும் அவனுக்குக் குடைபிடிக்கும் போர்வீரனும் உள்ளனர். கல்வெட்டு வாசகம் வருமாறு .

''கோவியை சீ(ய)பரும்மற்கிருப
த்தொன்பதாவது ஆ(ட்)டிதி
ங்கள் புணருபூசத்து ஞான்று தகடூ
ருப் பிடிமண் ணேரிக்கீழ் உடை
யாரு தண்டத்தொடு இலாடவ
ரைசரோடு(ம்) மழவரைசரோடும்
எறிந்து பட்டாரு கங்கதிரை
சரு சேவகர் மாதப்பேருதிரை
சரு கன்னாடு ''

சிம்மவர்மனுடைய 19ஆம் ஆட்சியாண்டின்போது (பொ.ஆ.554) ஆடித்திங்கள் புணர்பூச நாளன்று தகடூர் பிடிமண்ணேரிக்கீழ் உடையார் தண்டத்தோடு(படையோடு)சென்று இலாடத்தரையர் மற்றும் மழவரைசரோடு போரிட்டபோது கங்கதி அரைசரின் சேவகர் மாதப்பெருதிரைசர் இறந்து பட அவருக்கு நடுகல் எடுத்துள்ளனர். கல் என்பதை நடுகல் என்றும் நாடு என்பதை வேளாண்நிலம் என்றும் கொண்டு நடுகல் வழிபாட்டுக்குத் தந்த நிலமாகக் கருதலாம். தகடூர் என்பது இன்றுள்ள தருமபுரி நகராகும். இந்நகரின் ஒரு பகுதியாகப் பிடமனேரி என்ற பகுதி தற்போதும் இருப்பது வியப்பாகும். அரசர்கள் யானைமீது அமர்ந்தபடி போரிடுவதைச் சோழர் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. இராஜாதித்தன் ஆனை மேல் துஞ்சிய தேவர் என்றே வழங்கப்பட்டுள்ளார். வேலூர் ஒட்டிய பகுதியில் இலாடத்தரையரும், திருவண்ணாமலையொட்டிய பகுதியில் மழவர்களும் செல்வாக்குடன் இருந்தனர். 'பட்டி'(1200குழிநிலம்) என்ற அளவில் நிலம் தரப்பட்டது. நன்செய் 1மடங்கு புன்செய் 2மடங்கு.

மங்கலம்

தமிழகச் சாசனங்களில் மங்கலம் என்று முடியும் ஊர்ப் பெயர்கள், பிராமணர் குடியிருப்புகள் என்பர். அவர்களுக்கென சபை (ஊராட்சி

போன்றது) இருக்கும். நடுகற்களில் வரும் மங்கலம் பிராமணர் குடியிருப்பு என்று கருத வழியில்லை. புறமலை நாட்டில் கொற்றமங்கலமும் வேளாள நாட்டில் குமாரமங்கலமும் எயில்நாட்டில் வேண்மங்கலமும் கோவூர் நாட்டில் காரிமங்கலமும் இருந்துள்ளன. அரசர் அல்லது குறுநிலத்தலைவன் தலைமை ஊராக இருந்துள்ளது. மேற்படி மங்கலத்தில் இருந்து அரசன் ஆண்டிருக்க வேண்டும். சான்றாக விசைய மங்கலமாண்ட விண்ணப்பேரோன் ஒருவன் நடுகல்லில் வருகிறான்.

சங்கரக்குட்டி

அரிமிறை பருமன் என்ற பாணமன்னன் தகடூரில் இருந்து,கங்கநாடு,புறமலைநாடு,கோவூர் நாடு,கோயிலூர் நாடு, வேள்கலி நாடு ஆகிய நாடுகளை ஆண்டு வந்தபோது நுளம்பன் வஞ்சகமாக உறவாடி மன்னனைக் கொன்றுவிடுகிறான். அப்போது பாண அரசி கருவுற்றிருந்ததால். அவளைப் பாதுகாப்பாக வைத்திருந்து அவருக்கு மகன்பிறந்த பின்னர் படைதிரட்டி நுளம்பனுடன் போரிட்டு நாட்டைச் சங்கரகுட்டி மீட்டுள்ளார். இப்போரில் சங்கரக்குட்டியின் சேவகன் நாகந்தை இறந்து பட அந்த வீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்டது. அந்த நடுகல்லைத் தருமபுரி அகழ்வைப்பகத்தில் தற்போதும் காணலாம்.

நடுகற்களில் குறிப்பிட்ட இனத்தார் என்றில்லாமல் பல சாதியினரையும் காண்கிறோம். பல பிரிவினரையும் காண்கிறோம். வடுகர், பறையர், கோவலர், மறவர், மழவர், பள்ளி காட்டிறையர், வாணிகர், அருவாளர், வண்ணக்கன் போன்றோரைக் காண்கிறோம்.செங்கம் வட்டம் பெரிய கோளாப்பாடியில் உள்ள முதலாம் மகேந்திரவர்மனுடைய 11ஆவது ஆட்சியாண்டில் (பொ.ஆ.601) நடந்தபோரில்,பெரும்பாண்ணரையர் மருமக்கள் அம்கோட்டையார் சேவகன் சாக்கை பறையனார் இளமகன் ஏறன்பங்குகொண்டு இறந்துள்ளான்.தருமபுரி அகழ்வைப்பகத்தில் உள்ள நடுகல் கல்வெட்டு ஒன்று மகேந்திரவர்மனுடைய 15ஆவது ஆட்சியாண்டின் போது காடந்தைகள் சேவகன் புதுப்பள்ளிகளோடு பொருத ஞான்று எருமெதிகாரி இறந்துள்ளான் என்று உள்ளது . இங்கே புதுப்பள்ளிகள் இடம் பெறுகின்றனர்.

நடுகல் கோவில்

விஷ்ணுவர்தனன் என்ற போசள மன்னன் ஆட்சியின்போது மைடாஹெகசடே இறந்து படபப்பேயா என்பவர் நரசிபுரா என்ற ஊரில் நடுகல் வீரனுக்கு கோயில் கட்டி உள்ளார். தருமபுரி மாவட்டம் கல்லாவியில்நடுகல் கோவில் உள்ளது. ஆந்திர, கருநாடக மாநிலங்களில் நிறைய நடுகல் கோயில்கள் உள்ளன. பிரிக்கப்படாத ஆந்திர மாநிலத்தில் 476 நடுகற்கள் கண்டறியப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன.

சமாதிக் கோயில்

திரிபுராந்தகத்தில் உள்ள திரிபுரசுந்தரி கோயிலின் முன்பாக சோமய குருதேவா என்ற சிவாச்சாரியரின் உயிர்ப்பலி கல்வெட்டு (நவகண்டம்) உள்ளது.

கணவனுக்கு மனைவி நடுகல்

ராமடி என்ற ஊரில் வெம்மாடி நீதிமார்க்காவுக்கும் பீரநொளம்பனுக்கும் இடையே நிகழ்ந்த போரில் பலகே நாயகன் இறந்துவிட இவனுடைய மனைவி பாஸ்கா வீரக்கல் எடுத்துள்ளாள். தமிழ் மொழியில் மனைவியே கணவனுக்கு நடுகல் எடுப்பித்ததாகத் தெரியவில்லை.

நடுகல் கொத்தியவன் கொங்கு நாட்டுச் சிற்பி. பொ.ஆ.1056-இல் வீரக்கல்லை மாமனுக்குமைத்துனன் எடுத்துள்ளான். சிற்பி பெயர் மல்லையாகாமண்று. தாய் ஒருத்தி மகனுக்கு நடுகல் எடுத்துள்ளாள்என்றும்ஒருகல்வெட்டுஉள்ளது.

மன்னனே வீரனுக்கு நடுகல் எடுத்தது

புங்கனூர் வட்டம் கரசனப்பள்ளியில் உள்ள வீரக்கல் சிறப்புடையது ஆகும். பாணதத்தர் என்ற வீரன் இறந்து பட பாண அரசன் மாவலியே வீரனுக்கு நடுகல் எடுக்கிறான்.

அனந்தபூர் மாவட்டம் மடகாசிராவட்டம் பெத்தரசிரி நடுகல் கன்னடமொழியில் உள்ளது. காலம் பொ.ஆ.953.நொளம்பர்படைவீரன் எடேயம்மா சேவுனப்படையுடன் போரிட்டு இறந்துவிட அரசனுடைய மகன் அனுக இளவரசனே நடுகல் எடுத்துள்ளான்.

சிங்கதாரா என்ற ஊரில் வீரனுக்கும் யானைக்கும் நடுகல் உள்ளது. ரேநாடு ஆண்ட போதனூரு மகாராஜா கலியதிரிநேத்ர வீர மகாராஜாவின் சேனாதிபதி சிங்தொராவில் போரிட்ட போது வீரனும் யானையும் இறந்துபட இருவருக்கும் நடுகல் எடுக்கப்பட்டது. (AAR131,151/1965)

நல்லநாள்

ஆந்திராவில் நாள் நட்சத்திரம் பார்த்து நடுகற்கள் எழுப்பியுள்ளனர். நெல்லூர் மாவட்டம் கோல் கொண்டா வீரக்கல் வியைய வருடம் கார்த்திகை மாதம் ஐந்தாம் நாள் சகம்1328இல் எடுக்கப்பட்டது . அனந்தபூர் மாவட்டம் சிரவரம் வீரக்கல் ருத்ரோத்காரி வருடம் சித்திரை மாதம் தசமி திங்கட்கிழமையன்று எடுக்கப்பட்டது.ஆந்திராவில் வீரக்கல்லின் முன்பாக விளக்கு வைக்கவும் விழா பூசைக்கும் நிலங்கள் வழங்கப்பட்டன. ஆந்திராவில் உள்ள பல வீரக் கற்கள் வீரஸ்வர்க்கம்போயோ மற்றும் பீர்லோக பேகா (Birloka Bega) என வீர சுவர்க்கம் செல்லும் வீரனைக் குறிப்பிடுகின்றன.

நடுகல்லில் பிராமணர்

ஆந்திராவில் பிராமணர்களும் நடுகற்களில் இடம் பெறுகின்றனர். நாட்டையும் ஆண்டுள்ளனர். சகம் 981நடுகல்,கண்டகுண்டே பகுதியைச் சித்தைய்யா,தக்கய்யா என்ற இரு பிராமணர் போரில் நாட்டை கைப்பற்றி ஆண்டமை காண்கிறோம். மல்லன்கவிதன்னுடையருக்மாங்கத சரித்திரத்தில் சதி மேற்கொள்ளும் பெண்டிற்குச் சமுதாய மேம்பாடும் விதவையாக வாழ்பவருக்குச் சமுதாயத்தில் அடிமை நிலையும் அமையும் என்கின்றார்.

தொறுப்போர்

தலைவனுக்காக உயிர்விட்ட போர்வீரர் வீரக்கற்களும் குழுச்சண்டையில் இறந்த வீரர்கற்களும் தொறுக்கவரும் போரில் இறந்த வீரர்கற்களும் ஆந்திராவில் மிகுதியாகும். எல்லைப் பிரச்சனை ,பெண்கற்பு, வேட்டை போன்றவற்றில் மாண்ட வீரர்களுக்கு நடுகற்கள் உள்ளன. கோல்கொண்டா என்ற ஊரில் பொல்லாவு என்ற பசுவிற்காக ஒரு நடுகல் எடுத்ததாகப் புறக்கதைப்பாடல் குறிப்பிடுகிறது. நவகண்டம் மற்றும் பசுகவர்தல் கற்களும் ஆந்திராவில் மிகுதியாகும்.

பன்மொழி நடுகற்கள்

ஆந்திராவில் தெலுங்கு, கன்னடம், தமிழ், சமஸ்கிருதம் எனப் பல மொழி நடுநற்கள் உள்ளன. வைதும்பர், பாணர், நொளம்பர், நடுகற்கள் மிகுதியாகும். இந்தியாவிலேயே மிகுதியான நடுகற்கள் (2650க்கு மேல் உள்ளன) கர்நாடகாவில் உள்ளன. பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டு முதல் வீரக்கற்கள் உள்ளன. சிமோகாவில் உள்ள தமட்டுக்கல்லு என்ற ஊரில் கன்னடம், சமஸ்கிருத நடுகற்களுடன் சிற்பியின் பெயர் தமிழில் உள்ளது. ஏழூர் மோநலந் சாத்தன் என்ற வாசகம் அதில் உள்ளது. இதுவே தொன்மையான தாகும். தமிழ கத்தில்சுமார்360எழுத்துடைநடுகற்கள்இருக்கலாம்.

வாசகம் எழுதியவர்

வீரமிக்க பெண்ணுக்கும் அரசிக்கும் வீரக்கற்கள் கருநாடகாவில் உள்ளன.சித்தேனஹள்ளி,கேப்பாலு ஆகிய ஊர்களில் காணலாம். போசளர் கல்வெட்டுகள் மட்டும் 1100 என்பர்.நடுகல் வாசகம் எழுதியவர் பெயர், கொடை ,வெட்டிய சிற்பி இங்கே காணலாம். தலைவன் கட்டளைக்காக வீரன் போரிட்டு மாள்வது எரிவேசா எனப்படும். உண்மையான சேவகனுக்கு வேல வலி,ஜோலவலி எடுப்பிக்கப்படும். தொறு கன்னடத்தில் துறு எனப்படும். பிராமணர் கால்நடைகளைக் காப்பாற்ற கவுண்டர் தொறுப்பூசல் மேற்கொண்டுள்ளனர். கொள்ளையை தடுக்க, பெண்ணைக் காக்க, எல்லையை மீட்க,தண்ணீர் பிரச்சனைக்காக எனப் பலவற்றிற்காகப் போரிட்டு வீரர்கள் வீரக் கற்களாகியுள்ளனர்.

காளி என்ற நாய்

கங்க மன்னன் இரண்டாம் பூதுகனின் சேவகன் மணலரதா என்பவன் தக்கோலம் போரில் துணிச்சலுடன் ஈடுபட்டபோது காளி என்ற பெயருடைய நாயும் போரில் இறந்துபட அதற்கு நடுகல் எடுக்கப்பட்டது. காலம் பொ.ஆ.949 ஆகும். குதிரைகள் இறந்ததற்காகவும் காளைகள் இறந்ததற்காகவும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஜெயகேசி என்ற மன்னன் கிளிக்கு நடுகல் எடுத்துள்ளான். இவன் கதம்ப அரசன் ஆவான்.கிளி இறந்துபட இவனும் இறக்க நடுகல் எடுக்கப்பட்டது.

உறவுகள்

தமிழகம் போன்றே பிற மாநிலங்களில் நடுகற்களை எழுப்பியவர்கள் இரத்த சம்பந்த முடைய வீரர்களின் உறவினர்களே ஆகும். தந்தைக்கு மகனும்,மகனுக்குத் தந்தையும், சகோதரனுக்குச் சகோதரனும், மனைவியும், மகளும், மருமகனும், மாமனாரும், மைத்துனரும் வீரக் கற்களை எடுத்துள்ளனர். மைசூர் மாவட்டம் நஞ்சங்கூடு வட்டம் காரப்பாயல் என்ற ஊரில் நடப்பட்ட வீரக்கல் மன்னன் நீதிமார்கா முன்னிலையில் நடந்துள்ளது.(E.C.XIVNg.137) ஹளேகன்னடம், தமிழ்,தெலுங்கு, சமஸ்கிருதம் எனப் பல மொழி நடுகற்கள் இங்கு உள்ளன.

கரிகால மரபினர்

பேலூர் வட்டம் கட்டே சோமனஹள்ளியில் உள்ள நடுகல் சமஸ்கிருதத்தில் கூடியது. கிரந்த எழுத்து வடமொழிக்குப் பயன்படுத்தப்பட்டது. தெலுங்குச் சோழர் கல்வெட்டுகள் பொதுவாக ஆந்திரா மற்றும் தொண்டை மண்டலத்தில் காண்கிறோம். கரிகாலச் சோழன் மரபில் வந்தவர்களாகஇவர்கள் கூறிக் கொள்கின்றனர். தமிழிலும் தெலுங்கிலும் சாசனங்கள் உள்ளன தும்கூர் மாவட்டத்தில் தனஞ்செயனுடைய வீரக் கற்கள் கன்னட மொழியில் உள்ளன. பொ.ஆ.600 முதல் எனலாம்.

நடுகற்களை எடுத்த கலைஞர்கள்

பெரும்பாலும் நடுகற்களின் சிற்பிகளை நடுகற்களில் இங்கே காண முடியும். செட்டார் என்ற அறிஞர் 314 சிற்பிகளை நடுகற்களில் அடையாளம் கண்டுள்ளார். உம்பலி எனப்படும் நிலத்தானம் சிற்பிக்குத் தரப்பட்டது. நடுகல் வீரன் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிலம் வரியிலியாக வழங்கப்பட்டது. சில சமயம் வீரன் குடும்பத்திற்கு நன்கொடைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வம்சாவழி இடம்பெறும் கருநாடக வீரக்கற்கள்

இரண்டாம் கிருஷ்ணனுடைய நடுகல் சாசனம் ஒன்று (பொ.ஆ.897) தார்வார் மாவட்டத்தில் சிஞ்சிபிகிராமத்தில் இராட்டிரகூடரின் வம்சாவழியை

குறிப்பிடுகின்றது. இவனுடைய தொடக்க ஆட்சி ஆண்டை வீரக்கல்லே கூறுகின்றது (893).

மன்னனுக்கு நடுகல்

தமிழகத்தில் பல்லவரோ பாண்டியரோ சோழரோ விஜய நகர மன்னரோ போரில் இறந்து நடுகல் எடுத்த விவரம் தமிழில் இல்லை. பள்ளிப்படைக் கோயில்கள் உண்டு.ஆயின் கருநாடகாவில் நொளம்ப மன்னன்ஒருவனும் கங்க மன்னன் இராசமல்லனும் போரில் இறக்க வீரக்கல் நாட்டப்பட்டது . முதாதிகே என்ற ஊரில் இந்த நடு கல் உள்ளது.

கல்நாட்

தமிழகத்தில் நேத்தார்பட்டி ,நீத்தோர்பட்டி, உதிரப்பட்டி, நெய்த்தேர்ப்பட்டி என்றெல்லாம் வழங்கப்படும் வீரன் குடும்பத்திற்கான காசும் நிலங்களுடன் தரப்பட்டது. வீரதுக்ககானம், இறந்த வீரன் குடும்பத்திற்கும் நடுகல் பராமரிப்புக்காகவும் பெறப்பட்ட வரியாக இருந்துள்ளது. கருநாடகாவில் வீரனுக்குரிய நிலம் கல்நாட் என வழங்கப்பட்டுள்ளது. பங்கவாடி வீரக்கல், கல்நாட் என்றுள்ளது.சிக்கஹன சோகே நடுகல் எழுபது கல்நாட் ஆக வழங்கப்பட்டது. வீர நுளம்பனுடைய ஹீரிபிடனுர் நடுகல்லும் கல்நாட்டைக் கூறுகிறது. கங்க மன்னன் ஸ்ரீ புருஷனுக்காக மாண்ட போர் வீரன் பந்தப்பனுக்கு ஒரு வீடும் நிலமும் வழங்கப்பட்டன.(ECZXMI.241) தமிழகம் போன்று கருநாடகாவிலும் ஊர்க்காமுண்டர்கள் இடம்பெறுகின்றனர். சோழர் நடுகற்கள் தமிழில் மட்டுமின்றிக் கன்னடத்திலும் உள்ளன. போசளர் காலத்தில் தமிழ், கிரந்தம் கலந்த நடுகற்கள் எடுக்கப்பட்டன. கொடேசெரே என்ற இடத்தில் நாகரி வடிவில் சமஸ்கிருத நடுகல் உள்ளது. ஆந்திராவிலும் கருநாடகாவிலும் நடுகற்களில் சிற்பங்கள் பல நிலைகளில் உள்ளன. கீழ்ப்பகுதி, நடுப்பகுதி, மேற்பகுதி எனப் பிரித்துச் சிற்பங்களைச் செதுக்கியுள்ளனர்.

கதம்பர் நடுகற்கள்

கோவா மாநிலத்தில் கதம்பர் நடுகற்கள் மிகுதியாகும். இறந்த வீரனை இசைமுழக்கமிட்டு தேவதை அழைத்துச் செல்லும் காட்சி காண்கிறோம். கப்பலில் நடைபெறும் போர் நடுகல்லும் உண்டு. நடுகல் வாசகம் எழுதியவர் பெயர் இருக்கும். கன்னடம், மராத்தி மொழியில் நடுகற்கள் உள்ளன

சிவலிங்கம்

மகாராஷ்டிரா மாநிலத்தில் மிகுதியான எழுத்தில்லா நடுகற்கள் உள்ளன. கல்வெட்டுள்ள நடுகற்களும் கண்டறியப்பட்டுள்ளன. சில ஊர்களில் 60 முதல் 100 வரை நடுகற்கள் உள்ளன. மூன்று நிலை அல்லது ஐந்து நிலைகளில்

நடுகற்கள் அமைந்துள்ளன. நடுகல்லின் மேல்பகுதி சிவலிங்கமாகும். ஹளே கன்னட நடுகற்களும் இங்குள்ளன.

கோடேகலக

கேரளாவில் நடுகற்கள் தொடக்கத்தில் ஓவியத்தில் இருப்பினும் பின் எழுத்துடை நடுகற்களாக மாறின. புலப்பள்ளி,புத்தடி,சசிமாலா,க லியம்பள்ளி,எடக்கல் ஆகிய இடங்களில் நடுகற்கள் உள்ளன. சிவலிங்க வழிபாட்டுடன் நடுகல் சிற்பம் புலப்பள்ளியில் காண்கிறோம்.சதிக்கல்லும் கண்டறியப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்தில் உள்ள நடுகல் பாண்டியனுக்கும் சேரனுக்கும் நடைபெற்ற போரில் இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்டதாகும். காலம் பொ.ஆ.8 ஆம் நூற்றாண்டு.பொ.ஆ.1249 இல் கூடிய நடுகல், கலியன் பிள்ளை என்ற வீரன் கொள்ளையர்களுடன் போராடி பந்திப்பூரில் இறந்துள்ளான் என்று குறிப்பிடுகிறது.எம்.ஆர்.இராகவவாரியார் புத்தனாயக்கிட்டிய என்ற நடுகல் ஒரு பிராமி லிகிதம் என்கிறார். கேசவராஜ் என்பவர் தம் நூலில் அதனை மறுத்துள்ளார். கோட்டையைக் கைப்பற்ற நடந்த போர் கோடேகலக என்றுள்ளது.

நடுகல் வழிபாடு

சங்ககாலத்தில் நடுகல் வழிபாடே பிரதானமான வழிபாடு ஆகும். தென்னிந்தியாவில் எங்கும் நடுகல் வழிபாடு இருந்துள்ளது.

ஒன்னாத்தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவி னல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளு மிலவே

என நடுகல் வழிபாட்டைப்புறநானூறு கூறுகிறது.நடுகல் வழிபாடு உலகெங்கும் உள்ளது. பழங்குடி வழிபாடு என்று அறிஞர் கருதுவர். ஆஸ்திரேலியா பழங்குடியினர் தொல்காப்பியம் கூறும் ஆறு நிலைகளைப் பின்பற்றியதாகத் தர்க்கைம் கூறுகின்றார். (Social life of the Tamils S. Singaravel. p.123). கொழுப்பா வெறிந்து குருதிப்பலி கொடுத்தால் மாட்டு மந்தை பெருகும் என நம்பினர். நடுகல்லுக்குமது வைத்துப் படைத்தனர்.

பெண் வீரி

சதிக்கல் தவிர பெண்களுக்கு நடுகல்லில் பங்கு இல்லை. எனினும் கருநாடகாவில் பெண் வீரர்களுக்கும் வீரக்கற்கள் எடுத்துள்ளனர். சிரவணபெலகொலாவில்மலையின் மீது பாகுபலி கோயிலுக்கருகே பொ.ஆ.10ஆம் நூற்றாண்டு நடுகல் சிற்பம் உள்ளது. இதில் பெண் குதிரை மீதும் எதிரி யானை மீதும் அமர்ந்தபடி போரிடுகின்றனர். இவள் பெயர்

சாவியப்பே ஆகும். முதல் நிலையில் போரிடும் காட்சி. இரண்டாம் நிலையில் நடுகல் பெண் பத்மாசனம் இட்டு வழிபடுகின்றார். மூன்றாம் நிலை தீர்த்தங்கரர் முன் பணிவுடன் நடுகல் பெண் இருக்கிறார். ஷிமோகா மாவட்டம் சிகாரிபுராவில் இருந்த வீரக்கல் தற்போது மாவட்ட அருங்காட்சியகத்தில் உள்ளது. இதில் ஹரியக்கா என்பவள் தன் தந்தையைக் கொன்றவர்களுடன் போரிட்டு அவர்களைக் கொன்றுதானும் இறந்துள்ளாள். இவளுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

போரில் மாண்டவர், தொறுப்பூசலில் மாண்டவர், விலங்குகளைக் கொன்ற பின் மாண்டவர், தலைப்பலி தந்தவர், உடன்கட்டை ஏறியவர், தலைவனுக்காகத் தன் உயிரை தந்தவர், பெண்களைக் காக்கும் பணியில் இறந்தவர், கோயிலைக்காக்க உயிர் விட்டவர் எனப் பல வகையான வீரக்கற்களிலே தொறுப்பூசல் அல்லது ஆநிரைப்பூசலே தொன்மை வாய்ந்ததுஎனலாம்.

தொறு-தொழு

பெரும்பாணாற்றுப்படையில் எழுகாடோங்கிய தொழு (வரி160) என்ற வரி வருகிறது. இந்தத் தொழுவே பல்லவர் காலத்தில் தொறு என மாறுகிறது. மாடுகள் கட்டி வைத்த வயல் தொறுத்த வயல் என்று பதிற்றுப்பத்து கூறுகிறது. தொழுவும் ஆநிரைத் தொகுதியும் தொறு வெனல் என்று பிங்கல நிகண்டு கூறுகிறது.

மாடு- பொன்

கால்நடை வளர்ப்பு சமூகத்தில் ஆநிரைப் பூசல் இயற்கையானது. மாடு என்பது கால் நடையைக் குறித்து, பின் செல்வத்தைக் குறிக்கும் சொல்லானது. வள்ளுவரும் 'மாடல்ல' மற்றையவை என்பார். ஆன்தொறு, தொறுபட்டி என்ற சொற்கள் தோன்றின. படகருடைய மொழியில் தன்ஹட்டி என வழங்கப்பட்டது. கருநாடகாவில் ஆநிரை கவர்தலைக் கோஹன என்பர். சமஸ்கிருதத்தில் கோகிரஹணம். ஆநிரைப் பூசல்களைக் குறிப்பிடும் நடுகற்களில் மாட்டின் உருவமும் சிலவற்றில் காண்கிறோம். பசு மட்டுமின்றி எருமைகளும் ஆடுகளும் களவாடப்பட்டன. எருமைத்தொறு மறித்தொறு நடுகற்களில் காண்கிறோம்.

மன்னர் நடுகல்

தமிழகத்தில் தமிழ் மொழியில் வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டம் குழிதிகை நடுகல் இரண்டாம் நந்திவர்மனுடைய52 ஆவது ஆட்சிஆண்டின் போது பல்லவ பெருமானடிகள் மேல் வல்லவரையர்(இராட்டிரக்கூடர்) படையெடுத்து வந்தார். வெண்குழிக்கோட்டையை அழிக்கின்றார். பல்லவரின் கீழ் நாடாண்ட வாணவரையன் (பாணர்) மாமடியான் கங்க கலியரையரை நோக்கித் திரிக என்று கூற அவரும் திரிந்து (போரிட்டு) போரில் மாண்டார். அவருக்குப் பெருங்கங்கர் நடுகல் எழுப்பி உள்ளார். இந்த நடுகல்லில்

வரும் வல்லவரையர் துருவன் என்று அறிஞர் கூறுவர். (S.I.voll.2எண் 35) கருநாடகாவில் உள்ள சில வீரக்கற்கள் போரில் மாண்ட மன்னர்களைக் கூறுகின்றன. சான்றாகப் பசவங்கோடு வீரக்கல்லைக் குறிப்பிடலாம். மூன்றாம் கிருஷ்ணனாகியகன்னரதேவன் நொளம்பருடன் பொ.ஆ.907 இல் போரிட்ட நொளம்ப மன்னர் இறந்துள்ளார். அவருக்கு வீரக்கல் எடுக்கப்பட்டது.

போர் அல்லது பெரும் போர்

இரண்டு அரசர் படைகள் மோதிக் கொள்ளும்போது இறந்த வீரர்கள் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். எனவே பெரும்போரில் இறப்பவர்கள் எல்லோருக்கும் நடுகற்கள் எடுப்பது சாத்தியமன்று . எனினும் ஒரு சிலருக்கு எடுத்த நடுகற்கள் கருநாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரம், கோவா மாநிலங்களில் காண்கிறோம். கர்நாடகாவில் உள்ள பலதிறத்து நடுகற்களில் போர்களில் இறந்தவர்களுக்கு 20% வீரக்கற்கள் இருப்பதாக அறிஞர் கூறுவர். கங்கர், பாணர், நொளம்பர், போசளர் எனப் பல மன்னர்கள் மாண்டு நடுகற்களாக உள்ளனர். தமிழகத்தில் பல்லவர், சோழர்கள் மேற்கொண்ட பெரும்போர்கள் பலவாகும். எனினும் நடுகற்கள் மிகவும் குறைவேயாகும்.

ஊரழிவு

தொல்காப்பியர் ஊரழிவு குறித்தும் குறிப்பிட்டுள்ளார். சங்கப்பாக்கள் மிகுதியாக இத்தகுப் போர்களைச்சுட்டுகின்றன. பல்லவர் தொடங்கிப் பல சிற்றரசர்,பேரரசர்,வேளிர்,வீரக்கற்களில் ஊரழிவில் மாண்ட வீரர்நடுகற்களைக் காண்கிறோம். கருநாடக மாநில வீரக்கற்களில் ஊரழிவு தொடர்பாக 19.4% கண்டறியப்பட்டுள்ளது. ஊரைக் காத்தான் நடுகல்லில் கோட்டைக் காத்தலும் இடம் பெறும். தா.வேளூர் இவ்வகை நடுகல்லுக்கு உதாரணம் கூறலாம். (நடுகற்கள் ச. கிருஷ்ணமூர்த்தி)

கரைக்கோட்டை

திருவனந்தபுரம் நேப்பியர் அருங்காட்சியகத்தின் முன்புறம் உள்ள கோமாறன் சடையனுடைய 17ஆம் ஆட்சியாண்டு நடுகல் கல்வெட்டு (பொ.ஆ.893) சேர மன்னன் படைகள், கரைக்கோட்டையை அழிக்கச் சென்றதைக் கூறுகின்றது. கோட்டையை அழியாமல் காத்து எதிரிப் படைவீரர்களைப் பாண்டியப்படையினர் கொன்றனர். இறந்த சேரவீரர்களில் ஒருவன் அமர்க்கழி. மற்றொருவன்கரணசீத்தி. பாண்டியர் படையைச் சேர்ந்த பெருமூர்த்தி மேற்படி இருவரைக் கொன்றுள்ளான். பெருமூர்த்திக்கு இரணதுங்கமௌலி என்ற பெயருண்டு. கல்வெட்டில் வரும்வீடுஅந்தபுரமாகும். பராந்தக வீரநாராயணனுடைய 23 ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஆய்குல மன்னன் கருநந்தனுக்கும் பாண்டியன் வீரநாராயணபாண்டியனுக்கும் போர் நடந்ததைக் கூறுகிறது. பாண்டியனுடைய சிற்றரசன் எட்டியாயின மங்கல

ஏனாதியான் உள்வீட்டுக்கோயில் சேவகர் இருவர் போரில் மாண்டுள்ளனர். தொண்டை நாட்டைச் சேர்ந்த பூந்தண்மலி வினையன் தொழுசூரன்ஒருவன். மற்றொருவன் பேரெயில் குடிசாத்தன். அருவியூர்க்கோட்டை கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம் அருவிக்கரை என்று தற்போது அழைக்கப்படுகிறது

பெண் மீட்டல்

பகைவர் நாட்டை அழிக்கும் போது பெண்ணைக் கெடுக்கவும் செய்வர். சில சமயம் பெண்களைக் கடத்தியும் செல்வர். அச்சமயம் பெண்ணின் உறவினரும் நண்பரும் பெண்களின் கற்பைக் காக்க வேண்டி, பகைவர்களுடன் மோதுவர். மோதலில் மாண்டவர்க்கு வீரக்கல் எடுப்பர். பொ.ஆ.9-10 நூற்றாண்டளவில் கருநாடகத்தில் இத்தகு சம்பவங்கள் நிறைய நடந்துள்ளன.பொ.ஆ. 979இல் உள்ள கம்படஹள்ளி,மடலூரு, பரதூரு,முடியனூரு வீரக்கற்களுடன் சாளுக்கிய மன்னன் திரைலோக்கியமல்ல தேவனின் பொ.ஆ.1156ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கொரகோடு நடுகல்லும் இவ்வகை நடுகல்ஆகும். கொரகோடு, ஷிமோகா மாவட்டத்தில் உள்ளது. தமிழகத்தில் தருமபுரி மாவட்டம் நவலையில் பெண்மீட்டான் வீரக்கல் உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம் காயம்பட்டு கிராமத்தில் முதலாம் இராசராசன் 14 ஆவது ஆட்சி ஆண்டு நடுகல் (பொ.ஆ.99) உள்ளது. கவரை மாயிலட்டி கம்பன் என்பவன், பெண்களைக்கவர்ந்து கெடுக்க சிலர்முயல போரிட்டு மாண்டான். முருங்கைச்சேரியில் பெண்ணைக்கவர்ந்து சென்ற போது அவள் மீட்கப்பட்டாள்.

நிசிதிகை

சமண முனிவர் உண்ணாநோன்பிருந்த இடத்தைப் பள்ளி, பாலி என்று தமிழி எழுத்தில் கூடிய கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் சமண முனிவர்கள் எத்தனை நாளிருந்து உயிர் துறந்தார்கள் என்றும் சில நிசிதிகை கற்கள் குறிப்பிடுகின்றன. பெரும்பாலும் சமணக் குடைவரைகளின் பாறைகளில் மேற்படி சாசனங்கள் தற்போதும் உள்ளன. தமிழகத்தில் சமண முனிவர்களுக்கான படுக்கை சாசனங்களை நீத்தார் நினைவுக் கற்களாகக் கருதலாம். (ர.பூங்குன்றன்)

லகுலீசர்

குஜராத் மாநிலத்தில் லகுலீசரால் ஏற்படுத்தப்பட்ட சைவ பாசுபதம். யோகியர் இறந்த பின்னர் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட முறைகளைஅவர் கூறுவார் (ஆ.பத்மாவதிபுலமை தொகுதி 12 ஜூன்1986)குரு ஏற்படுத்தி அந்த லிங்கத்தில் யோகியின் உருவத்தைப் பொறித்து அவர்களைப்பகவத்(இறைவன்) எனக் கொண்டாடினர். குஜராத் மாநிலம் கார்வானில் இரு கோயில்களில் உள்ள லிங்கங்கள் லகுலீசன் உருவத்தைத் தாங்கியுள்ளன. இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சியில் (பொ.ஆ.380)உதிட்டாச்சார்யா என்பவர் தம் குரு உபமிதாவுக்கும்

உபமிதாவின் குருவாகிய கபிலாவுக்கும் இரு லிங்கங்கள் எடுத்து உருவங்களை பொறித்தார் என்று மதுரா தூண்கல்வெட்டு குறிப்பிடுகிறது.(Elxxl art no1) இதுவே குரு ஆயதனம். பொ.ஆ.4ஆம் நூற்றாண்டு முதல் யோகியின் நினைவாக இருந்த லிங்கம் பள்ளிப்படை கோயிலாக மாறியது என்று அ. பத்மாவதி கூறுகிறார்.

திருமந்திரம்

திருமந்திரம் என்ற நூல் திருவடி ஞானம் பெற்ற சிவஞானி இறந்தால் அவரை எரிக்காமல் புதைத்து, சிவலிங்கமோ அரசமரமோவைக்கலாம் என்கிறது. லகுலீச வழிபாட்டில் வரும்சமாதிக் கற்களைத் தமிழகத்தில் உள்ள சைவத் துறவி சமாதிகளுடன் பொருத்தலாமே ஒழிய பள்ளிப்படைகளுடன் பொருத்தக் கூடாது. பாசுபதம், காளாமுகம் போன்ற வீர சைவப் பிரிவுகள் பல்லவர் காலத்தில் நுழைந்தது. சோழர் காலத்தில் பெருகியது. லகுலீசர் உருவங்களைக்கும்பகோணம் சேதுராமன் ஆராய்ந்து காயாரோகனக் கோயில்கள் (உடம் போடு உயிர் சொரக்க மடைதல்)பற்றிக் குறிப்பிடுகிறார். வீரராகவன் ஒரு நூலே எழுதியுள்ளார்.

பள்ளிப்படைக் கோயில்கள்

சங்க காலத்தில் நடுகற்கள் தோன்றின. நினைவுக் கற்கள் தோன்றின. ஆயின் பள்ளிப்படைக் கோயில்கள் ஏற்படுத்தப்படவில்லை. அரசர் முதல் அனைத்துவீரர்களுக்கும் சங்ககாலத்தில் நடுகற்களே இருந்தன. கிண்ணிமங்கலத்தில் காந்திராஜன் கண்டறிந்த "ஏகன் ஆதன் கோட்டம்" நடுகல்பொ.ஆ.முதலாம் நூற்றாண்டு என்றும்அதே இடத்தில் பொ.ஆ.7.ஆம் நூற்றாண்டில் பள்ளிப்படை தொடர்பான வட்டெழுத்து சாசனம் இருப்பதால் நடுகல்லின் வளர்ச்சியே பள்ளிப்படை எனலாம். சோழர்கள் வேலூர் அருகில் கம்பவர்மனுடைய 8ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் கங்க மன்னன் இராசாதித்தன் தன் தந்தை பிருதிவி கங்கரையனுக்குப் பள்ளிப்படை எடுத்துள்ளான். (409/1902)திருப்புறம்புயத்தில் பிருதிவிபதிக்கு பள்ளிப்படை எடுக்கப்பட்டது. தொண்டைமான் ஆற்றூரில் முதலாம் ஆதித்த சோழனுக்கு அவனுடைய மகன் பராந்தக சோழன் பொ.ஆ.907இல் பள்ளிப்படையைக்கட்டினான். முதலாம் இராஜராஜன் தன்பாட்டன் அரிஞ்சிகை சோழனுக்கு மேல்பாடி கிராமத்தில் பள்ளிப்படை எடுப்பித்தான். அரிஞ்சிகை ஈஸ்வரம் எனவழங்கப்பட்ட இக்கோயில் தற்போது சோழீசர் கோயில் என வழங்கப்படுகிறது. வீரபாண்டியன் திருச்சுழியில் சுந்தரபாண்டியர் ஈஸ்வரம் என்ற பள்ளிப்படை கோயிலை உருவாக்கினான்.முதலாம் இராஜேந்திர சோழனின் மனைவி பஞ்சவன்மாதேவிக்குப் பட்டீஸ்வரத்தில் பள்ளிப்படை எடுப்பித்தான். (பொ.ஆ.1019) முதலாம் இராஜாதிராஜன் முதலாம் இராஜேந் திரனுக்கும்அவனுடையபட்டத்தரசிக்கும் செய்யாறு வட்டம் பிரம்மதேசத்தில்

பள்ளிப்படை ஏற்படுத்தினான். தாராசுரத்தில் இரண்டாம் ராஜராஜனுக்கும் அவருடைய 4 தேவியருக்கும் பள்ளிப்படை எடுக்கப்பட்டது. ஒன்றின் பெயர் பள்ளிப்படை ராஜகம்பீர ஈஸ்வர முடையார் என்பதாகும். சிவதீட்சை பெறுவதற்கும் பள்ளிப்படை எடுப்பதற்கும் தொடர்பு ஏற்படுத்தி, வடநாட்டு மரபுடன் என்.சேதுராமனும் அ.பத்மாவதியும் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

நவகண்டம்

நவகண்டம் அல்லது தலைப்பலி கொடுத்தல் வீர வழிபாட்டில் அடங்கும். தன் தலையையோ உடல் உறுப்புகளையோ காணிக்கையாகத் தருவது அன்பின் மிகுதிப் பாடு எனலாம். நவகண்ட வீரர்களுக்கு எடுக்கப்பட்ட சன்னதிகளைச் சம்புடுகல்லுகள் அல்லது சம்புடுகுடிகள் என்றும் வழங்குவர். தலையை அரிந்து வழங்குவதில் பல முறைகள் உள்ளன. தன் உடம்பை ஒன்பது பாகமாகக் கூர்மையான வாளினால் வீரன்தன்னைத்தானே வெட்டிக் கொள்வது நவகண்டம் (நவ-9 மற்றும் புதுமை என்க). காளிஅல்லது வேறு தெய்வத்தின் முன்பாக இது நடைபெறும். நின்றபடியோ அமர்ந்தபடியோ முழங்கால் இட்டபடியோ தலையை வீரன் கொய்வது போல் சிற்பம் இருக்கும்.

ரெட்டி அரசின் வரலாறு என்ற நூலை எழுதிய எம்.சோமசுந்தரசர்மா ஆந்திர பிரதேசத்தில் நவகண்டம் எப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைப் பற்றி எழுதியுள்ளார். இரும்பாலான வட்டமான ஆயுதம், சங்கிலி ஆகியவை நவகண்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டன.நெல்லூர் மாவட்டம், குண்டூர் வட்டம், மல்லம் என்ற ஊரில் ஒரு செவ்வகக்கல்லில் நவகண்ட சிற்பத்துடன் கம்பவர்மன் கல்வெட்டும் உள்ளது. கம்பவர்மனுடைய இருபதாவது ஆட்சியாண்டில் ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் பட்டைபோத்தம் மேதவம் புரிந்ததென்று பிடாரிக்கு நவகண்டம் குடுத்து குன்றகத் தலையறுத்தப் பீடலிகை மேல்வைத் தானுக்கு ஊர்ச்சபை இவன் மகன் பட்டைபோத்தனுக்கு நிலத்தானம் செய்துள்ளது. எமூர்ப்பறை கொட்டிக் கல்மேடு செய்தனர். ஆவிக்குப் போத்தனங்கிழவர்கள் தொறுப்பட்டி நிலம் வழங்கினர். தொறுப்பட்டியே நேத்தார்பட்டி,நீத்தார்பட்டி, நெய்த்தேர்பட்டி என்றெல்லாம் வழங்கியுள்ளனர். வீரன் இடது கையில் தலையைப்பிடித்தபடி வலது கை வாள் மூலம் கழுத்தை அரிவது போல் சிற்பம் உள்ளது. (ARE408/1908) காலம் பொ.ஆ.889. தமிழகத்தில் திருப்பூவணம் வட்டம் மாதபுரத்தில் எட்டாம் நூற்றாண்டு நவகண்டம் வட்டேழுத்து கல்வெட்டுடன் உள்ளது. “தூங்கு தலை குடுத்தான் வல்லபன்” என்ற வாசகம் உள்ளது. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்தில் கூடிய “தூங்கு தலை குடுத்தான் சித்ரசரிதன்” என்ற வாசகத்துடன் மற்றொரு நவகண்டம் உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரத்தி என்ற ஊரில் கன்னர தேவன் ஆட்சியின் போது வெட்டப்பட்ட நவகண்டம் சாசனத்துடன் உள்ளது. மச்சேஸ்வர

தேவன் என்ற இறைவன் பொருட்டு ஒரு வீரன் தலைப்பலி தந்துள்ளான்(ARE 211/1976-77).ஆந்திர பிரதேசம் குண்டூர் மாவட்டம் மச்சேர்லா என்ற ஊரில் பொ.ஆ.1016இல் கூடிய நவகண்டம் உள்ளது.அச்குஞ் கண்டு என்ற வீரன்தன் தலைவன் நலம் வேண்டி, பட்லகாளி என்ற அம்மன் முன் தன் தலையைப்பலி தந்துள்ளான். தலைப்பலி தந்த நிகழ்ச்சியை நினைவுறுத்தும்படி ஸ்ரீசைலம் கோயிலில் வீரசிரோ மண்டபம் உள்ளது. தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்ட இரு சமஸ்கிருத நவகண்ட கல்வெட்டுகள் இங்குள்ளன.

கருநாடக மாநிலம், கூர்க் மாவட்டம், முள்ளூர் என்ற ஊரில் உத்தமசோழ செட்டி என்பவன் தன் சபதம் முடிந்து வெற்றிகிடைத்தால் தன் தலையை அரிவதாக வேண்டி,அதன்படியே நவகண்டம் தந்துள்ளான் உத்தமசோழ செட்டி நவகண்டகல்லானன்(Ecl/82 -1972).

மகாராஷ்டிர மாநிலம்,சந்திரபுரி மாவட்டம்,மாற்கண்டி கோயில் வளாகத்தில் தலைப்பலி தரும் வீரன் சிற்பம் உள்ளது. மத்தியபிரதேசம், தண்டேவடாவில் உள்ளதண்டேஸ்வதி அம்மன் கோயில்நுழைவு வாயிலில்நவகண்டசிற்பம்உள்ளது.(சோந்திமர்1982-2009-18) ஆந்திரப் பிரதேசத்தில் கடப்பை,கர்நூல் மாவட்டங்களில் தலைப்பலிக் கற்கள் பல உள்ளன.வீரபத்ரர், வீரமுஷ்டிகள்,மயிலரா வீரபட்டாச்சன் என்ற சைவப்பிரிவினர் தலைப்பலிக் கற்களில் இடம் பெற்றுள்ளனர்.

சதிக்கல்

“கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்” என்பதால் கணவன் இறந்தவுடன் மனைவியும் இறந்து பட இருவருக்கும் எடுக்கப்படும் நினைவுச் சின்னம் சதிக்கல் எனப்படும். மனைவி விருப்பத்தின் படியோ விருப்பம் இன்றி கட்டாயப்படுத்தியோ தீயில் விழச் செய்வதும் சதிக் கல்லேயாகும். இரண்டு வகையான சதிக் கற்களும் கண்டறியப்பட்டுள்ளன. சதி மரபுக்கு எதிராகவும் குரல் கொடுத்துள்ளனர். வால்மீகி இராமாயணத்தில் இராவணன் தாய் வேதவதி என்பவள் தன் கணவன் குஷத்வகாமாண்ட போது சிதையில் விழுந்து மாண்டுள்ளாள். ஆயின் தசரதன் இறந்தபின் அவனுடைய மூன்று பட்டத்தரசியரில் ஒருவர் கூட சிதையில் விழுந்து சாகவில்லை. வாசுதேவனின் மனைவியர் தேவகி, பத்ரா, ரோகினி, மதிரா நால்வரும் வாசுதேவன் இறந்தபின் தீயில் இடும்போது நால்வரும் தீயில் விழுந்து மாண்டனர். சதிக்கல்லில் வளைபூண்டகை காண்பிக்கப்படும். கணவருடன் சேர்ந்து மனைவி இறந்ததை வளைபூண்டகை உணர்த்தும். மலையாளம் வழங்கும் கேரளத்தில் புலைச்சிக்கல் என்பர். ஆந்திர மாநிலத்தில் மட்டும் சதிக்கற்கள் குறைவாகும். இந்தியா முழுவதும் சதிக்கற்கள் உள்ளன. சதிக்கற்களை இருவகையாக வகைப்படுத்துவர் கணவன் இறந்தபின் உயிர்விடும் பெண்ணுக்கு எடுக்கும் சதிக்கல் ஒருவகை. ஒரு பெண் தன் கற்புக்குப்பங்கம் வரும்போது உயிர் விடுவது

இரண்டாம் வகையாகும். முதல் வகையை சஹக மணம் என்பர். தெலுங்கில் பேரன்தாலு என்பர். மார்க்கோ போலோ தொடங்கி பல வெளிநாட்டு யாத்ரீகர் சதிச் சடங்கினை விரிவாக எழுதியுள்ளனர் . பெண்டிங் பிரபு சட்டத்தின் மூலம் இதை ஒழித்தார். முதலாம் ராஜராஜனின் தந்தை சுந்தர சோழன் மாண்டபோது அவன் மனைவி வானவன் மாதேவியும் உயிர் விட்டுள்ளார். திருக்கோயிலூர் கல்வெட்டு மற்றும் ஆண்டிமலை, சாசனம் இதனைக் கூறுகிறது.

கருநாடக மாநிலத்தில் சதிக்கல்லை மாசதிக்கல் அல்லது மாஸ்திகல் என்பர். தோள்கைக் கோட்ட கம்ப எனவும் கூறுவர். சாளுக்கிய மன்னன் சத்யாசிரியன் மாண்ட போது அவனுடைய மனைவி குண்டம்பேகி உயிர் விட்டு, சதிக்கல் ஆகியுள்ளார்.

ஆளிதேவி

மகாராஷ்டிரா மாநிலம், கொல்லப்பூரமாவட்டம், சங்கசியில் பொ.ஆ 510இல் கூடிய சதிக்கல் பிராமி சாசனத்துடன் உள்ளது. ஆளிதேவி என்ற ராணிதீயில் விழுந்து உயிர் விட்டுள்ளார் . திருவண்ணாமலை மாவட்டம், தாமரைப்பாக்கம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்திய சதிக்கல்லில், “உடன் பள்ளிகொண்டாள்” என்ற சொற்றொடர் உள்ளது. ஆந்திர மாநில மல்லன் கவி தன்னுடைய ருக்மாங்கத சரித்திரத்தில் சதி மேற்கொள்ளும் பெண்கள் உயர்ந்தவர்கள் என்பார். விதவை வாழ்க்கை வாழ்பவர் அடிமை வாழ்வு வாழ்வதகக் கூறுவர். ஸ்ரீநாத கவிஞர் தெலுங்கில் வீரர்களைப் போற்றிப் பாடியுள்ளார். காலம் பொ.ஆ.15ஆம் நூற்றாண்டாகும்.தேவகிரி யாதவர் களுக்கும் ஒய்சாளர்களுக்கும் நடைபெற்ற போரில் பலர் இறந்து நடுகற்கள் ஆயினர். போரில் பங்கு கொண்டு வென்றால் செல்வமும் புகழும் கிடைக்கும் போரில் உயிரிழந்தால் புகழும் வீர சொர்க்கமும் கிடைக்கும்.

“ஜித்தனே லப்யதே லக்ஷ்மிருதினேபி

கரங்களகக்ஷ்ண விதபமிசினி

காயேகா சிந்தாமரனோரானே

(கல்லெழுத்தில் காலச்சுவடுகள் கு.சுவாமிநாதன்)

தேசிங்கு

செஞ்சிப்பகுதியில் 18ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஆட்சி செய்த தேசிங்கு ராஜன் ஆர்க்காட்டு நவாப்பிற்கு கப்பம்கட்ட வேண்டிய கிஸ்தியைக்கட்டாததால் பொ.ஆ.1713-இல் ஆர்க்காட்டு நவாப்பு சதகதுல்லா போர் தொடுத்தான். தேசிங்கின் உயிர் நண்பன் மகமதுகான் திருமணத்தையும் தவிர்த்து விட்டு நண்பனுக்காகப் போரில் பங்கு கொண்டு மாண்டான். அவனுடைய குதிரையும் இறந்தது.கடலி என்ற ஊரில் தேசிங்கு, பகைவரால் கொல்லப்பட்டான். தேசிங்கின் மனைவி கணவருடன் தீப்பாய்ந்தாள்.

அவளுடைய பதிபக்தியை மெச்சி நவாப்பு அவள் பெயரில் ராணிப்பேட்டை ஏற்படுத்தினான். (ஆதி செஞ்சி .ச . கிருஷ்ணமூர்த்தி).

“ராஜாபக்கத்தில் வந்தாளய்யா ராணியம்மாளும்

நானும் கூடவாரேனைய்யா என்பிரான நாதா

அக்கினிக் குழியை வெட்டச் சொன்னாள் ராணியம்மாளும்

அக்னி குழியை சுற்றி வந்தாள் ராணியம்மாளும்

ராஜாவுடனே தீயில் குளித்தாள் ராணியம்மாளும்

(தேசிங்கு ராஜன் கதைப்பாடல்)

சககமண,அநுகுமண,அநுமரண,என்றெல்லாம் வடமொழியில் சதியைக் குறிப்பிடுவர்.

சிற்றரசர் மகள்

இரண்டாம் இராஜேந்திர சோழனின் கன்னடக் கல்வெட்டு ஒன்று மாண்டியா மாவட்ட பெலத்தூருரில் உள்ளது.ரவிகா என்ற சிற்றரசர் மகள் தொகப்பை என்பவள் நவிலி நாட்டை ஆளும் எச்சா என்பவரைத்திருமணம் செய்திருந்தாள். எச்சா ஒரு மல்யுதப் போட்டியில் பிழைபட ஒருவரைக்கொன்று விட்டார். அதனால் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எச்சாவின் மனைவி பெற்றோர் தடுத்தும் கேட்காமல் உயிர்நீத்தாள். இவள் இறப்பதற்கு முன் தனது உடைமைகளைத் தானம் அளித்துள்ளார். இது ஒரு சதிக்கல்

கன்னடமொழிநடுகல்

“சுவத்தி ஶ்ரீ மதிரை கொண்ட கோப்பரகெசரி

வர்ம்மகெ வரிஷம் இருபத்தொன்பத்துள்

பைய்தாகூர் ரவிநாடா மாரயம்மா மம்மா

கணிபராமன்துறவந் இக்கிசி அழிகி சததான்

கல்நாடு பெர்ம்மாடிய சாமந்தப்பந் கொட்டகழநி

ஒக் கண்டுகும் கெறைய கிழகெ”

பைய்தாகூர்என்றகிராமத்தைச்சார்ந்தஇரவிநாடமாரியம்மனின்மருமகன் கணிபராமான் தொறு பூசலில் பட்டான். அவனுக்கு கல் நடப்பட்டுள்ளது. பேரம்மாடிய சாமந்தன் என்பான் ஒரு கண்டுகம் (அளவு)நிலமளித்துள்ளார்.

வர்மகெ-வர்மற்கு

வரிஷம்-வருஷம்

மம்மா-மருமகன்

துறவந்த-தொறு

சத்தான் -செத்தான்

அவங்கெ-அவனுக்கு

கொட்ட-கொடுத்த

கெறைய்-கரை

கிழகெ-கிழக்கு

தமிழின் தாக்கம் இதில் உள்ளது

கன்னட மொழியில் நிசிதிகை.

“பத்ரமஸ்துஜீனபாஸநாய

ஸ்ரீமத்குண்ட குந்தாந்வய... சார்ய

பட்ரர் சிஷ்யர் குணநந்தி கர்மபரகிருதீப

டர முவ்வதிநி திவசம் சந்நியசம்

நொத்து முடித்த நிசிதிகை”

குண்டகுந்தான் பரம்பரையைச் சார்ந்த பட்ர என்பவரின் மாணவன் குணநந்திகர்மபரகிருதிபடாரார் 31 நாட்கள் உண்ணா நோன்பிருந்து மாண்டார். இது திருநாதர் குன்று நிசிதிகை போல் உள்ளது.

தீப்பாய்ந்தாள்

கணவன் இறந்தபின் தீயில் விழுந்து உடன்கட்டை ஏறிய பெண்டிர்க்கு எடுத்தகோயில் தீப்பாய்ந்தாள் கோயிலாகும்.கேரள மாநிலத்தில் சதிக்கற்கள் உயரமாக இருக்கும். பல ஊர்களில் தீப்பாய்ந்தாள் கோவில்கள் உள்ளன.

பொந்திலியர்

செஞ்சி வட்டம், மேலச்சேரி என்ற ஊரில் தேசிங்கு ராஜாவின் சித்தப்பா தாராசிங் இறந்தபின் அவனுடைய இனத்தைச் சேர்ந்தபொந்திலியர்4 மனைவியும் தீயில் விழவில்லை. மாறாக நாயிடு வகுப்பைச் சேர்ந்த தாராசிங்கின் ஆசைநாயகி கருவுற்றிருந்த நிலையிலும் தீயில் விழுந்து இறந்தாள். அவளின் பெயர் மங்காபாயி. ஊர் மக்கள் பட்டத்தரசிகளையும் தீயில் தள்ளி விடுகின்றன(ச.கிருஷ்ணமூர்த்தி-நடுகற்கள்). ஓடாமல் தேர் நின்று விடும்போது வீரமுஷ்டிகள் தங்கள் தலைகளைப் பலியிட்டுத் தேரை ஓட வைப்பர். தமிழகத்தில் மல்லிகுந்தம் செப்பேடு ஓடாத தேர் ஓட வைத்ததைக்கூறுகிறது (ச.கிருஷ்ணமூர்த்தி-நடுகற்கள்)

தலைப்பலி

காகதீய மன்னர் ஆட்சியின்போது உண்டான தலைப்பலி கற்கள் சிவன் கோயில்களில் உள்ளன. பக்தர்வாள் கொண்டு கழுத்தை அரிவது போன்றோ வயிற்றினை வெட்டுவது போன்றோ அச்சம் தரும் நிலையில் தலைப்பலி சிற்பங்கள் உள்ளன. ஸ்ரீசைலத்தில் பொ.ஆ.1377இல் கட்டப்பட்ட வீரமண்டபம்

உள்ளது. இங்கே பல தலைப்பலி கற்கள் உள்ளன. தலைப்பலி கற்கள் பல்வேறு பெயர்களில் கூறப்பட்டுள்ளன. ஒன்பது துண்டுகளாக ஆக்கும் நவகண்டம் போல் எட்டு துண்டுகளாக உடலைக்வெட்டி கொள்ளும் அஷ்டாங்க கண்டம் ஆந்திர பிரதேசத்தில் உள்ளது என்று சந்திர சேகர ரெட்டி குறிப்பிடுகிறார். பகைவரைக் கொல்லும் முன்பாக வீரர் வழிபடுவது வீராபிஷேகம். வென்ற பின் வழிபடுவது விஜயாபிஷேகம் என்பர். துர்க்கை, காளி கோயில் முன் இவை நடைபெறும். வீரவல்லாளனுடைய ஆட்சியின் போது (பொ.ஆ.1320) வல்லாளனுடைய பிரதம மந்திரி தலைப்பலி தந்த வீரனுக்கு எழுப்பிய கோயிலில் தினம் மூன்று முறை அபிஷேகம் செய்ய கொடைதந்துள்ளார்.

தலைவன் இறப்பைத் தாங்காமல் இறந்த வீரன் நடுகல்

தனது வேந்தனை அல்லது படைத்தலைவனைப் பகைவீரர் சூழ்ந்து கொண்டால் அது கண்டு வீரர்கள் பகைவருடன் போரிட்டுப்படையை விலக்குவர். தலைவனைக் காப்பர். திருக்கோவலூர் நாட்டு இராமந்தைவாடி எனும் பகுதியை வாணபெருமானார் ஆண்டு வந்தார். மங்களப் பெருமானார் அவரிடம் போரிட வந்தார். அவருடைய படைவீரர் வாணபெருமானாரைச் சூழ்ந்து கொள்ள அப்படையை விலக்கி தலைவனை மீட்கும் பொருட்டு வேணர்க்கினியான் என்ற வீரன் முயன்று வெற்றி பெற்றான். ஆயின் அந்தோ! அப்போரில் வாணபெருமாணார் காயம்பட்டான்.வேணர்க்கினிய(செங்கம் நடுகற்கள் 168/1971).“பகைவரைத் தாக்கி ஏமம் உறக்காக்கும் தளராததறு மாண்டாகண்மையே கூழைதாங்கிய பெருமை” என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

வேலவலி

கருநாடகா மாநில நடுகற்களுள் வேலவலி (vela vali, vela means time or occasions velimeans clay or obligation)தலைவனுக்கு உண்மையான சேவகனாக இருப்பது.தலைவனுக்கு உடலையும் உயிரையும் காணிக்கை ஆக்கும் வீரனே வேலவலியாகும். மனேமகன்,மனேமுட்ட,பிரியபுத்ர,பிரேமலயசுதன்,போரேடமகன் என்றெல்லாம் கன்னட நடுகற்கள் குறிப்பிடுகின்றன. ஜோலவலி (jola-millet) தலைவனிடமிருந்து பெறும்தானியத்திற்காக உயிர்விடும் வீரர்கற்கள் கருநாடகாவில் மிகுதியாகும். தானியத்திற்காக உயிர்விடும் ஜோலவலியைவிட, ஆண்டையிடம் அடிமையாகி உயிர்விடும் வேலவலி சிறப்பானது என்பர். பசவர். (Slave to subsistence is betterthen a slave to conviction-basavannanvaravasanagalu).பம்பா பொன்னாரன்னா,நாகேந்திரா, கார்னபர்யா, நேமிசந்த்ரா, கமலாபவே,பந்துவர்மா,ஜன்னா மற்றும் மகாபலா ஆகியோரும் ஜோலவலாவைக்குறிப்பிடுவர். பொ.அ.10ஆம் நூற்றாண்டு முதல்13ஆம் நுற்றாண்டுவரை இது இருந்தது. செஞ்சோற்றுக் கடனுக்காக உயிர் விடுதல் எனலாம். வீரசைவ சித்தாந்தத்துடன் தொடர்புடையதாகக்

கூறப்படும் தூலிதலாவும் ஜோலவலி,வேலவலி போன்றதாகும். பந்துவர்மா என்பவர் தூலிதலாவை அரிவம்சபுயதாயா என்ற நூலிலும் மகாபலவர மாகமக்கவி என்ற நூலிலும் குறிப்பிடுவர்.நயசேனா, நாகசந்திரா,அக்காலா ஜன்னா,காசிராஜ,பாகுபலி ஆகியோரும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். தலைவன் உயிரற்ற உடலைக் கண்ட சேவகன் தானும் உயிருடன் அடக்க மாவதாகிய சம்பவத்தில் தன் தலையை வெட்டுவது, நெருப்பில் பாய்வது, உச்சியில் இருந்து விழுவது, தம் தோலை உரிக்க அனுமதிப்பது ஆகியவற்றை கருநாடகா வீரக்கற்கள் கூறுகின்றன. இறந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் தானம் அளிக்கப்பட்டது. விஷ்ணுவின் வாகனமான கருடனுடனும் வேலவலி வீரரை ஒப்பிடுவர்.பொ.ஆ.1077இல் கூடிய முள்ளூர் வீரக்கல்லானது. பதுமளாதேவி என்ற அரசிக்கு எடுக்கப்பட்டது. இதே வீரக்கல்லில் வீரன் ஒருவன் அரசிக்காக மாண்ட விபரம் உள்ளது.

கீல்குண்டே

கீல்குண்டே என வழங்கப்படும் வீரக்கல் சிறப்புடையதாகும். இறந்த தலைவன் உடல் பூமியில் விழும் முன் வீரன் உடலைத் தாங்கி தான் உயிர் விடுவதாகும்.பொ.ஆ.930இல் கங்கர் ஆட்சியின்போது நந்திக்குடியில் அன்னிகே என்ற வீரன் மன்னனுடைய பிணத்திற்கு முன்னே விழுந்து உயிர் விட்டுள்ளான். இதனை கீல்குண்டே என்று சாசனம் குறிப்பிடுகிறது(எம்.எஸ். கிருஷ்ணமூர்த்தி). ஆந்திரப் பிரதேசத்திலும் கீல்குண்டே வீரக்கற்கள் உள்ளன. கடப்பை மாவட்டம், வண்டாடி ஊரில் பொடனேரு மகாராஜாவாகியரேநாடு அரசன் சேனாதிபதி வீர மகாராஜாவான கலியதிரி நேத்ராதி சிங்கதாராவுடன் இறந்தான். போர் வீரன் கீல்குண்டேயில் விழுகிறான். கண்டதிரிநேத்ரி என்ற வைதும்ப சிற்றரசன் நினைவாகக்கல் எழுப்புகிறான். ஹேமாவதியில் உள்ள கீல்குண்டேகல் மயிலம்மா என்ற வீரன் தன் தலைவன் சதாமலகுணபீதி வெற்றி கண்டலின் பொருட்டு உயிர்த்தியாகம் செய்துள்ளான். சித்தூர் மாவட்டம், புங்கனூர் வட்டம், பூதிபட்லா வீரக்கல் ஜெயநாதன் என்ற வீரன் தன்தலைவன் பொருட்டு தீயில் விழுந்து உயிர் விட்டுள்ளான். கன்னட மொழியில் வீரக்கல் உள்ளது. காலம் பொ.ஆ.9-ஆம் நூற்றாண்டு.

சமணத்துறவிகளுக்காக எடுக்கப்பட்ட நிசிதிகை கற்கள் கருநாடகாவில் மிகுதியாகும். தமிழகத்திலும் பல இடங்களில் உள்ளன. ஆந்திரா, கேரளாவில் குறைவாகும்.

வளர்ப்பு பிராணிகள்

வளர்ப்பு பிராணிகள் இறந்துவிட அவைகளுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன. கொடிய விலங்குகளைக் கொன்று உயிர் விட்ட புலிக்குத்திப் பட்டான்கல்,பன்றிக் குத்திப்பட்டான்கல், யானைக்குத்திபட்டான்

கல்,ஜல்லிக்கட்டில் இறந்தவன், குதிரை குத்திப்பட்டான்கல்எனப் பல நடுகற்கள் தென்னிந்தியாவில் மிகுதியாக உள்ளன. எஜமானன் பொருட்டு எதிரிகளைக் கொன்று உயிர் விட்ட நாய்களுக்கு தமிழகம், ஆந்திரா, கருநாடகாவில் வீரக்கற்கள் எடுக்கப்பட்டன. நாய்களுக்குப் பெயர்களும் இருந்தன. வீரர்களுடன் சேர்ந்தும் நாய்கள் காட்டப்பட்டன. தனியாகவும் சாசனத்துடனும் காட்டப்பட்டன. மகேந்திரவர்மனுடைய ஆட்சியின்போது திருவண்ணாமலை மாவட்டம் எடுத்தனூரில் எடுக்கப்பட்ட நடுகல்லில் கோவிவன் என்னும் நாய்க்கும் தனியாக நடுகல் எடுக்கப்பட்டதைக் காண்கிறோம். ஆந்திராவில் அனந்தபூர் மாவட்டம்,மதகசிரா வட்டம்,பல்ராம் கொல்லாரஹட்டை என்ற ஊரில் நொளம்பாதி ராஜா ஆட்சியின்போது புனிதா என்ற வேட்டை நாய் காட்டுப்பன்றியைக் கொன்று அதுவும் இறந்துவிட,நாய்க்கு நடுகல் எடுக்கப்பட்டது. கடப்பை மாவட்டம் லிங்கலா என்ற கிராமத்தில் போரகுக்கா என்ற நாய் எஜமானன் போரில் இறந்து பட நாயும் இறந்து விட அதற்கு நினைவுக்கல் எடுக்கப்பட்டது. காளை மாட்டுக்காக,பசுவுக்காக,எருமைக்காக எனவளர்ப்பு பிராணிகளுக்கான நினைவுக்கற்கள் கருநாடகாவில்மிகுதியாக உள்ளன.

வணிகர்

இந்தியா முழுவதும் எழுத்துகள் அறிமுகம் செய்ததில் வணிகர் பங்கு மிகுதியாகும் என்று ரொமிலாதாபர் கூறுவர். பெருவழிகளில் தொன்மையான நடுகற்கள் தென்னிந்தியாவில் பல மொழிகளில் உள்ளன. வணிகர் தொடர்பான பல செய்திகள் நடுகற்களில் உள்ளன. செட்டிகள் அல்லது வணிகர் பலர் நடுகல் வீரர்களாகச் சாசனங்களில் காண்கிறோம். பல்வேறு பிரிவினர் பல்வேறு சாதியருக்கும் பல வீரக்கற்கள் தென்னிந்தியா மாநிலங்களில் காண்கிறோம் குறிப்பிட்டநடுகற்களைக் குறிப்பிட்ட சாதியாரே வழிபடும் நடுகற்களும் உள்ளன. சங்க இலக்கியங்களில் இடம் பெறும் மழவர், மிளைக்கந்தனார், கள்வர், அருவாளர், வடுகர், வேளிர்,ஒளியர்,பறையர்,இடையர்,பாணர்,மறவர்,நாடர் போன்றோர் தென்னிந்திய நடுகற்களில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளனர்.மேலும் அதியரையர்,முத்தரையர்,இளவரையர்,பாரதாயர்,காட்டிறைகள்,திறையர்,மிறையர்,ஊரரைசர்,மக்கள்,மருமக்கள், வேட்டுவர்,புதுப்பள்ளி,போன்றோர்நடுகற்களில்இடம்பெறுகின்றனர்.நடுகற்களில் வரும் சில சொற்கள் அகராதிப் பொருளுக்கு மாறுபட்டுவருவதைக் முன்பே கண்டோம். மேலும் சில சொற்களைஇங்கே காண்போம்.

காட்டிறைகள்

தருமபுரி மாவட்டம் அனுமந்தபுரம் நடுகல்லில் காட்டிறைகள் என்ற சொல் தலைவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. இறை அரசனையும் குறிக்கும். கள் மரியாதைப் பன்மை. தஞ்சை மராட்டிய மன்னர்களின் ஒருவர் காட்டு ராஜா என வழங்கப்பட்டுள்ளார்.

காடந்தை

காடன்+அந்தை=காடந்தை ஆகும். அந்தை என்பது தலைவன் என்று பொருள். தருமபுரி அகழ்வைப்பக நடுகல் ஒன்றில் இச்சொல் உள்ளது (நடு கற்கள் ச. கிருஷ்ணமூர்த்தி). எந்தை, நுந்தை, தந்தை போல அந்தை என்க.

திறையர்

வெற்றி பெற்ற அரசர் தோற்ற அரசரிடமிருந்து வாங்கும் பொருள் திறை எனப்படும். சங்ககாலம் முதல் இச்சொல் வழக்கத்தில் உள்ளது. தருமபுரிக் கல்வெட்டுகள் நூலில் ஒரு நடுகல்லில் அருட்டிறையர் இடம் பெறுகிறது. அரட்டு+இறை என்று ர.பூங்குன்றன் பிரிக்கிறார். புறம் 387 இல் விருந்திறை என்ற சொல் உள்ளது. நச்சினார்க்கினியர் விருந்து+இறை என்று பிரித்து, புதிய திறை(வருவாய்)என்கிறார். திறையர் வேறு திரையர் வேறு சங்க காலத்தில் தொண்டை நாட்டையாண்ட மன்னர் இளந்திரையர்.

மிறையர்

செங்கம் பகுதியில் உள்ள நடுகற்களில் மிறையர் என்ற பின்னொட்டுடன் கூடிய அருமிறை பருமர், விலக்குமிறையார், ஊனமிறையார் என்ற சொற்கள் உள்ளன. அருமிறையாரே பருமராக (அரசனாக) உயர்ந்தார் எனலாம்

ஏனாதி

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஏனாதி என்ற சொல் அரசரால் சிலருக்கு வழங்கப்படும் பட்டம் ஆகும். நடுகற்களில் ஏனாதியாரு எனக் கூறப்பட்டுள்ளார். வேளிர் படைப் பிரிவில் தளபதியாக இருந்து போரிட்டவர் எனலாம். போர்க்களப் பயிற்சிதருபவராகப் பெரியபுராணம் கூறுகிறது(நடுகற்கள் ச.கிருஷ்ணமூர்த்தி).

ஆள்

ஆள் என்பது ஒருநபர் அல்லது மனிதர் என்ற பொருளைத்தரும். ஆயின் நடுகற்களில் தலைவன் அல்லது ஆள்பவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. மொக்கைபாடி ஆள் தொறு கொள என ஒரு நடுகல்லில் வருகிறது. மொக்கப்பாடி ஆள்பவன் தொறு கொள்ள என்று பொருளாகும். சிறுபாழ் ஆள் வேணாடாள் என்ற சொற்களும் உள்ளன. பாஞ்ச் +ஆளர்=பாஞ்சாளர். ஐந்து அரசர் என்று பொருளாகும்.

வேளிர்

ஆநிரையைக் கவருதலுக்காக நடைபெற்ற பல பூசல்களில் தலைமை தாங்கியவன் வேள் ஆவான். வேள் அரசனுக்கு அடுத்தநிலை எனலாம். வேதகால கால்நடை மேய்ப்பவரிடத்து ஒரு தலைவன் உண்டு. ராஜா என்பவன்

ஆகோள் பூசல் தலைவன். வேளிர் பிற்காலத்தில் வேளாளர் ஆனார் என்று ஒய். சுப்பராயலு கருதுவார். வேளிர்வேளாளர் அல்லர் என்பார் எஸ்.இராமச்சந்திரன். பல்லவர் ஆட்சியின் போது வேளிர் சிறு சிறு பகுதிகளில் ஆட்சி புரிந்தனர். அதனைநாடு என்றே அழைத்தனர். உண்மையில் ஒரு வட்ட அளவே நாடு இருந்தது எனலாம். வேள்கலிநாடு, வேளல் நாடு,வேளூர், கீழ்வேள்நாடு நடுகற்களில் காண்கிறோம்.

அதியரைசரு

அரைசரு, அதியரைசரு, பருமரையரு, பெரும்பாணவரையர், வாணகோவரையர், முத்தரைசர் எனப்பல சொற்கள் காண்கிறோம். அதியரைசர் என்போர் அரசருக்குக் கீழ்இருந்து ஆட்சி புரிந்தவர்போலும்.அரசர்கள் பிற்காலத்தில் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். (வையாபுரிப் பிள்ளை). திருவரங்கம்கோயிலில்வரும்அரையர்வேறுஆவர். சிற்றரசர்பலரும்அறையராக இருந்துபின்அரசர்ஆனார்கள.

பாரதாயர்

செங்கம்,தருமபுரி நடுகற்களில் பாரதாயர் என்ற சொல்வருகிறது. பாரத்துவாசகோத்திரத்தவர் என்று அகராதிகூறுகிறது. பாரம்+தாங்கியர் என்று பிரித்து பாரம் பெரும் குடும்பத்தை குறிக்கும். கரை ஒரப்பகுதியை ஆளும் உரிமை பெற்றவர் என்பார் பூங்குன்றன.

ஊரரைசர்

நாட்டையாளும் அரசர் நாட்டரசர் ஆவது போல் ஊரையாளுபவர் ஊரரைசர் ஆவர்.(செங்கம் நடுகற்கள் 73/1971)

காமிண்டன்

நடுகற்கள் மட்டுமின்றிப் பிறகல்வெட்டுகளிலும் காமிண்டன் என்ற சொல் பெருமளவில் காண்கிறோம். காம்+மிண்டன் என்று பிரிக்கலாம். காம் என்பதே கிராமம் ஆனது. கிராமத்தின் அல்லது ஊரின்தலைவன் என்று பொருள். கா+மிண்டன் என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். காக்கும் தொழிலுடைய தலைவன் என்க.கருநாடகப் பகுதியில் பொ.ஆ.6ஆம் நூற்றாண்டிலிருந்து இச்சொல் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் மொழியில் 10ஆம் நூற்றாண்டு முதல் பரவலாக இச்சொல் நடுகற்களில் காண்கிறோம்.இலக்கியத்தில் மிண்டன் என்பது முரடன் என்று பொருளாகும். ஞானசம்பந்தர் சமணரைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்துகிறார். மிண்டன், முண்டன்,வண்டன் எனவும் சாசனங்களில் உள்ளன. கொங்கு வேளாளரைக் குறிக்கும் சொல்லாகக் காமிண்டனை வி.இராமூர்த்தி கருதுகிறார். சொ.சாந்தலிங்கம் வன்னியரைக் குறிப்பதாகக் கருதுகிறார். நெல்லை நெடுமாறன் நாடாரைக் குறிக்கும் என்று

எழுதுகிறார். பள்ளிகளில் காமிண்டர்,வெள்ளாளர்களில் காமிண்டர் எனவும் வெறுமனே காமிண்டர் எனவும் இச்சொல்லைச் காண்கிறோம். காமிண்டன் என்பதேகாமுண்டான் என்றும் கவுண்டர் என்றும் மாறிற்று .

மக்கள்

மகன் ஒருமையாகவும் மக்கள் பன்மையாகவும் கருதுவர். ஆயின் நடுகற்களில் ஒருமையிலேயே மக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாணரைசரு மக்கள் சாத்தப்பரவனார் (செங்கம் நடுகற்கள் 86/1971) ஒருவர் இடம் பெறுகிறார்.அரசருக்கு அடுத்தநிலையில் மக்கள் அதிகாரம் பெறுகிறார்.

மகன்

மகன் என்ற சொல் நடுகற்களில் தலைவன்,வீரன் என்ற பொருளில் வருகிறது. வள்ளுவரும் உறவுப் பெயராக அன்றி, ஆள் என்ற பொருளில் (மகன் எனல்)பயன் படுத்துகிறார். இளங்கோவடிகளும் கவுந்தியடிகள் கூற்று வாயிலாகத்தலைவன் என்ற பொருளில் கண்ணகியிடம் “நும்மகனார்” என்கிறார்.

மருமக்கள்

மக்கள் போல் மருமக்கள் என்ற சொல்லும் நடுகற்களில் உள்ளன. மருமகன் என்ற பொருளில் ஆளாமல் வேறுபொருளில் ஆளப்பட்டுள்ளது. மரு-பாலை நிலத்தைக் குறிக்கும் என்று கூறி பாலை நிலத்தலைவன் என்று ர.பூங்குன்றன் கருதுகிறார். இக்கட்டுரையாசிரியர் பட்டத்தரசியல்லாத பெண் அல்லது காமக்கிழத்தியின் மகன் என்று கருதுகிறார். பிற்காலப் பாண்டியமரபில் வீரபாண்டியன் சுந்தர பாண்டியன் என்ற இருவரில் ஒருவர் இராணியின் மகன் மற்றொருவர் காமக்கிழத்தியின் மகன் என்பது வரலாறாகும். மக்கள் என்ற சொல் நரசிங்க நல்லூர் நடுகல்லில் மக்கர் எனவந்துள்ளது. கள் என்ற விகுதிக்குப் பதில் “ர்” வந்துள்ளது. இதுவும் மரியாதையை உணர்த்தும் ஒருமையேயாகும். மைந்தைகள் என்ற சொல்லும் நடுகல்லில் வருகிறது . மைந்து-வலிமை வீரமிக்கவன் என்று பொருளாகும்.

இளமகன்

இளமகன் என்ற சொல் இளையர் என்ற சொல் போல் வீரமிக்கவன் என்று பொருளாகும். “இளங்கன்று பயமறியாது” ஒரு பழமொழியாகும்.இளமக்கள் என்றும் இது வந்துள்ளது. கருநாடக நடுகற்களில் இளமகண்டு என வந்துள்ளது.

வடுகர்

அகநானூறு 213ஆம் பாடல் வடுகு நாட்டைக் குறிப்பிடும். பூங்குடிவடுகன், காவிதிவடுகன் என்ற சொற்கள் தருமபுரி நடுகற்களில் வருகின்றன. காவதியார் மகன்படுகன் என்று தாமல் கல்வெட்டில் வருகிறது.

கன்னடமரபு

எண்ணிக்கையில் கூடிய சில ஊர்ப்பெயர்கள் தமிழக நடுகற்களில் வந்துள்ளன. வேண்ணாடைந்நூறு, எயில்நாடு முன்னூறு, கோவூர் நாடைந்நூறு போன்றவை கன்னட மரபை ஒட்டி ஏற்பட்டன எனலாம். கங்கபாடி தொண்ணூற்றாயிரம், இரட்டைபாடி எழுபத்தைய்யாயிரம், வனவாசி பன்னீராயிரம், நுளம்பபாடி முப்பத்திரண்டாயிரம் கருநாடகாவில் உள்ளகல்வெட்டுகளில் காண்கிறோம். வடுகுவழி பன்னீராயிரம், மிலாடு இரண்டாயிரம், தமிழகக்கல் வெட்டுகளில் உள்ளன.

தேசூர்

வெவ்வேறு காரணங்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்கள் ஒரே ஊரில் உள்ளன. தந்தையும் மகனும் இறந்து நடுகற்கள் ஆனமை தேசூர் நடுகற்களில் காண்கிறோம். சில நடுகற்கள் உறவினர்களுக்கிடையே நடந்த போர்களில்இறந்தவர்களைக் குறிப்பிடுகின்றன (நடுகற்கள் ச. கிருஷ்ணமூர்த்தி).

ஒரே ஊரில் பல நடுகற்கள்

நடுகற்கள் சில ஊர்களில் மிகுதியாக உள்ளன. சில ஊர்களில் ஒன்றிண்டு மட்டுமே உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டம், ஹோசூர் அருகேயுள்ள நளகொண்டபாளையம் என்ற ஊரில், பல ஊர்களிலும் இருந்து கொண்டு வந்து 52 நடுகற்களை மக்கள் வைத்துள்ளனர். பெண்ணேஸ்வரமடம் கிரிவலப்பாதையில் இருபதுக்கு மேற்பட்ட நடுகற்கள் காணப்படுகின்றன. தருமபுரி அகழ்வைப்பகத்திலும் பெண்ணேஸ்வர நடுகற்கள் சில உள்ளன. மஹாராஷ்டிர மாநிலத்தில் ஷோலாபூர் மாவட்டம், வேல்பூரில் 60க்கு மேற்பட்ட நடுகற்கள் உள்ளன. சதிரா மாவட்டம், சுகிலியில் 50க்கு மேற்பட்ட நடுகற்கள் உள்ளன.

சித்ரதுர்கா பாடல் நடுகல்

கருநாடக மாநிலம் சித்ரதுர்க்காவிற்கு அருகில் தமட்டுகல் என்ற கிராமத்தில் வீரக்கல்உள்ளது. வில் அம்பு ஏந்திய வீரர் உருவங்கள் சாசனத்துடன் உள்ளன. கல்லின் விளிம்பில் சமஸ்கிருத மொழிசுலோகம்உள்ளது. நடுகல் ஹளேகன்னட எழுத்தில் பொறிக்கப்பட்டது.தமிழிலும்விருத்தபாவடிவில்நடுகல்இருப்பதை அமரர்புலவர்இராசுகுறிப்பிட்டுள்ளர். (நடுகற்கள்கருத்தரங்கு). நடுகல்வீரன் தந்தை மற்றும் பாட்டன் பெயரும் காண்கிறோம். இரண்டாம் சாசனம் கன்னட மொழி கல்வெட்டு. குணமதுரன் மற்றும் அவன் தந்தை, பாட்டன் பெயரும் உள்ளன.கருநாடக மாநிலம் ஹோசக்கோட்டை தாலுக்கா, சித்தன ஹள்ளில் உள்ள நடுகல் பெண்ணுக்கு எடுத்த நடுகல் ஆகும். இலச்சம்மா காவுண்டி என்ற பெண் தொறு கொண்ட நபர்களுடன் போராடி தொறு மீட்டு உயிர் விட்டாள். இவளது வீரச் செயலை பாராட்டி ஒரு நடுகல் எடுத்தனர் (எப்.கர்.மடலம் IX HSK. No.1).

செப்பேடில் நடுகல் வீரன்

சமீபத்தில் கண்டறியப்பட்ட செப்பேடு ஒன்றில் போரிட்டு மாண்ட வீரனுக்கு நிலம் கொடுத்த செய்தி வருகிறது. எனவே செப்பேட்டிலும் நடுகல் குறித்து வருகிறது.

முடிவுரை

இந்தியாவில் நடுகல் வழிபாடுநீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. பழங்குடி மரபினர் மட்டுமின்றி வேறு இனத்தவரும் நடுகற்களை வழிபடுகின்றனர். பலமொழிகளில் கூடிய நடுகற்களில் தமிழி எழுத்தில் கூடிய நடுகற்களே தற்போதைய நிலையில் தொன்மை வாய்ந்ததாகும். நெய்விளக்கேற்றி, பூமாலைச்சார்த்தி, கள்வைத்துப் படைத்து, குருதிப்பலி கொடுக்கும் பழக்கம் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இன்று வரை இம்முறை ஒரு சில ஊர்களில் உள்ளன. தருமபுரி நகரில் தமிழக அரசு தொல்லியல் துறை நடுகற்களுக்கென ஓர் அகழ்வைப்பகத்தை ஏற்படுத்தி அங்கே நடுகற்களைப் பாதுகாத்து வருகிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலன அருங்காட்சியாகங்களில் வீரக்கல் சிற்பங்கள் உள்ளன.

நூற்பட்டியல்

நடுகல் கல்வெட்டுகள் -ர. பூங்குன்றன், Heritage Treasure Publishers, Chennai

நடுகற்கள் - ச.கிருஷ்ணமுர்த்தி,மெய்யப்பன் பதிப்பகம், சென்னை

நடுகல் கல்வெட்டுகளும் சிற்பங்களும் இருதொகுதிகள் - ச. கிருஷ்ணமுர்த்தி 2022

தென்னிந்திய வீரக்கற்கள் - வி. கேசவராஜ்-1985,

தருமபுரி மாவட்டக் கல்வெட்டுகள் - இரா. நாகசாமி, தொல்லியல் துறை.

செங்கம் நடுகற்கள் – இரா. நாகசாமி , தொல்லியல் துறை.

கிருஷ்ணகிரிமாவட்டக் கல்வெட்டுகள் – சு. இராசகோபால், ச. கிருஷ்ணமூர்த்தி, தொல்லியல் துறை,

தொல்லியல் நோக்கில் காஞ்சிபுர மாவட்டம்– ச. கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

தொல்குடிவேளிர் அரசியல் - ர.பூங்குன்றன்

ஆவணம் ஆண்டு இதழ்கள் 1 முதல் 32 வரை–தமிழகத் தொல்லியல்கழகம், தஞ்சை.

தடயம் ஆண்டிதழ்கள் – மணிவாசகப் பதிப்பகம்.

Early tamil epigraphy into sixth centuryA.D. Cre-I Mahadevan, 2003.

South Indian Memorial Stones- K.Rajan, 2003.

Settar and SonthemerG.DMemorial Stones,1982.

Heroes Cults and Memorials Andhra Pradesh 300-600A.D Chandra Sekhara Reddy, 1994

Tamil Heroic Poetry - K.Kailasapathi,1968

South Indian Inscriptions Volumes A.S.I.

Annual Reports on EpigraphyA.S.I.

EpigraphiaIndia- Volumes, A.S.I.

EpigraphiaKarnadakVolumes, A.S.I.

படம்1: ஓவியநடுகல் – குஜராத்

படம்2: மல்லசமுத்திரம், கிருஷ்ணகிரி

படம்3: மரத்தில் கூடிய தூண் நடுகல் ஜகதால்பூர்

1. கோவிசைய விண்ணண பருமற்கு நான்காவ
2. து தகடூரு நாடாளும் கங்கரைசரு
3. மேல்வந்த தண்டத்தோடு எ
4. றிந்து பட்ட வாணபெருமரைசரு
5 ....

படம்4: பாப்பான்பாடி

படம்5: தருமபுரி



படம்6: இந்தளூர்

படம்7: அரசலாபுரம்

படம்10: இராஜராஜன்- செங்கம்

படம்11: சதிக்கல்சனீஷா, குஜராத்

படம்12: தாமல், நடுகல்

படம்13: சித்ரதுர்கா (கருநாடகமாநிலம்)

படம்14: செந்தாரைப்பட்டி



படம்15: பெத்தநாயக்கன்பாளையம்

படம்16: அகரஞ்சேரி (வேலூர்)

படம்17: அனத்தூர், தருமபுரி

படம்8: கழுகுமலை

படம்9: ஒரத்தி



படம்18: மகபூப்நகர்மாவட்டம், ஆந்திர மாநிலம்

படம்19: வயிற்றை வெட்டிக்கொள்ளும் வீரன்,
ஹைதராபாத்

படம்20: தலைப்பலி தரும் பெண் சிற்பம்,
ஹைதராபாத்

நடுகல்/நினைவுக்கல் கல்வெட்டுகள்

பொ.கோ.லோகநாதன்
உதவி இயக்குநர் (தொ.நு.)
தொல்லியல் துறை, விழுப்புரம்

முன்னுரை

ஒல்காப் புகழ் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியம் நடுகல் வழிபாட்டிற்குரிய இலக்கணங்களை வரிசைப்படுத்தி

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்

இவ்வாறு கூறுகிறது.

நடுகல் வழிபாடு பற்றி இலக்கண, இலக்கியக் குறிப்புகள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது தர்க்கைம் கூறும் வளந்தரு வழிபாட்டின் (Positive Cult) கூறுகள் அவற்றில் பயின்று வரக் காணலாம். தொல்காப்பியர் கூறும் நடுகல் வழிபாட்டின் ஆறு துறைகளும் ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடையில் காணப்படுகின்றன என்பர். கற்காண்டல் என்பது தர்க்கைம் கூறும் பழங்குடி வாழ்வில் பொதிந்துள்ளதைப் பார்க்கலாம். கால்கோல் நிகழ்ச்சியும் ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடையில் உள்ளது. நீர்ப்படை மூன்றாவதாகச் செய்யப்படும் சடங்கு. இச்சடங்கும் ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடையே செய்யப்படும் சடங்கு. இச்சடங்கு செய்யப்படுவதால் மழை வளம் தரும் என்று நம்புகின்றனர். நான்காம் நிலையில் மயிற்பீலி சூட்டி, அழகுபடுத்தி கல்லை நடுவர். நடுகல் சிற்பங்களில் வீரர்கள் நிற்கும் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கும் முறை குறிப்பிடத்தக்கது. சில நடுகற்களில் வீரன் நிற்கும் இடத்தில் தோரணங்களும், திரைசீலைகளும் காட்டப்பட்டிருக்கக் காணலாம். இது சங்க இலக்கிய வருணனையை நினைவுபடுத்துகின்றது. மேலும் 'ஆதீத மனிதன்' என்று கருதப்படும் வகையில் ஆஸ்திரேலியப் பழங்குடிகள்; செய்யும் அலங்கரிப்புடன் ஒப்பிடத்தக்கதாக உள்ளது.

நீதி நூலான திருக்குறளும் கல்லாய் நின்ற வீரரைப் பற்றி
என்னை முன்நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர். (குறள்.771)

என்று பேசுகின்றது.

நடுகல்லின் தொன்மையை விளக்கும் இலக்கியச் செய்திகளின் வழியாக நீண்ட நெடுங்காலமாக இவ்வழக்கம் நம் மக்களிடையே இருந்து வருவதை அறிய முடிகின்றது.

சங்க கால நடுகற்கள்

நடுகல் பற்றிய செய்திகள் சங்கப் இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. இருபத்தைந்திற்கும் மேற்பட்ட புலவர்கள் நடுகற்களை வியந்து குறிப்பிடுகின்றனர். எழுத்துடை நடுகல் என்றும் குயில் எழுத்து உடையது என்றும், கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து என்றும் அகப்பாடல்களில் எழுத்துப் பொறித்த நடுகற்கள் சொல்லப்படுகின்றன.

வீரம் செறிந்த போர் செய்து மக்கள் நலனுக்காக மாய்ந்துபட்ட எண்ணற்ற வீரர்களுக்கு நடுகற்கள் நடப்பட்டு இருக்கின்றன. நடப்பட்டுள்ள நடுகற்கள் வழியாக வணிகர்களின் உப்பு வண்டிகள் செல்கின்றன. வழியோரத்து இருக்கின்ற கூர்மையான உளியால் பொறிக்கப்பட்ட நடுகல்லில் உள்ள எழுத்துகள் உப்பு வண்டியின் சக்கரத்தில் உள்ள அச்சாணி உரசி உரசி அந்த எழுத்துகளெல்லாம் ஆங்காங்கே சிதைந்து போன காட்சியை மதுரை மருதன் இளநாகனாரின் அகநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகிறது. அதே அகநானூற்றில் பெயரும் கல்லிலே பொறிக்கப்பட்டு அக்கற்களுக்கு மயிற்பீலி சூட்டி படையலிட்டு வழிபாடு செய்யப்பட்டதையும் எடுத்துக்காட்டுகிறது.

புறநானூற்றில் பனிரெண்டு இடங்களில் நடுகல் பற்றி கூறப்பட்டுள்ளது. சங்கப்புலவர் இளங்கீரனார் நெடுநிலை நடுகல் எனக் குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடுவது போல முதுமக்கள் தாழிகளும், புதை குழிகளும், கல்வட்டமும் உள்ள இடங்களில் நெடுநிலை நடுகல் இருப்பதை கொங்கு நாட்டு குடுமியான் பாளையம், பாசூர் போன்ற இடங்களில் காண முடிகிறது. இதனை மக்கள் வேடன்கல் என்றே குறிப்பிடுகின்றனர்.

சங்க கால நடுகற்கள்

1. புலிமான் கோம்பை (மூன்று நடுகற்கள்)
2. தாதப்பட்டி

சங்கம் மருவியகால நடுகற்கள்

1. பொற்பனைக் கோட்டை
2. ஈரெட்டி மலை
3. தாமரைக்கரை

போன்ற இடங்களில் சங்க கால நடுகற்கள் காணப்படுகின்றன.

1. புலிமான் கோம்பை நடுகற்கள்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டத்தில் உள்ள புலிமான்கோம்பை என்ற சிற்றூரில் இந்நடுகற்கள் அறியப்பட்டன. இவ்வூர் வைகை ஆற்றின் தென் கரையில் வத்தலகுண்டிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்நடுகற்கள் ஏறத்தாழ மூன்றடி அகலமும், ஒன்று முதல் ஒன்றரை அடி உயரமும் உடையவை.

எழுத்தமைதியின் அடிப்படையில் இவை கி.மு.3 ஆம் நூற்றாண்டினவை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். நல்ல தூய தமிழ்ச் சொற்களே இவற்றில் உள்ளன.

கல்வெட்டு – 1 1. கல் 2. பேடு தீயன் அந்தவன் 3. கூடல் ஊர் ஆகோள் ஐராவதம் மகாதேவன் வாசிப்பு 1. கூடல் ஊர் ஆகோள் 2. பெடு தீயன் அந்தவன் 3. கல் கூடல்	ஊரில் நிகழ்ந்த ஆநிரை கொள்ளும் பூசலில் உயிர் நீத்த தீயன் அந்தவன் என்பவனுக்கு எடுக்கப்பட்ட கல் என்பது இதன் பொருளாகும்.
கல்வெட்டு -2 1. . . . அன் ஊர் அதன் 2. . . . ன்அன் கல்	கல்வெட்டு -2 1. . . . அன் ஊர் அதன் 2. . . . ன்அன் கல்
கல்வெட்டு – 3 1. வேள் ஊர் அவ்வன் 2. பதவன்	வேள் ஊர் அவ்வன் பதவன் என்று உள்ளது.

தாதப்பட்டி நடுகல்

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், வைகை ஆற்றின் வலது கரையில் கிழக்குப் புறத்தில் உள்ள விவசாய நிலத்தின் நடுவில் 1.80 மீ உயரம் உள்ள குத்துக் கல்லில் உள்ள எழுத்துப் பொறிப்பு ஆகும்.

கல்வெட்டு 1. . . ன் அடிஓன் பகல் பளிய் கல்	தலைவனின் பெயர் உடைந்துள்ளது. தலைவனின் அடியோன் ஆகிய பாகல் என்பவர் போரில் உயிர் நீத்தமையால் நடப்பட்ட நடுகல் ஆக இருத்தல் வேண்டும்.

பொற்பனைக் கோட்டை நடுகல்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்தில் சங்ககால கோட்டையாக விளங்கும் பொற்பனைக் கோட்டை என்ற ஊரில் பொ.ஆ.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த (சங்கம் மருவிய காலத்திய) நடுகல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முக்கோண வடிவிலான இந்நடுகல்லில் ஐந்து வரியில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்டுள்ளன. இதில் பகையவர் பசுக் கூட்டத்தை கவரும் பொழுது நடைபெற்ற பூசலில் இறந்து அங்கபடைத் தாணையன் கணங் குமாரன் என்ற வீரனுக்கு சுமார் இரண்டடி உயரமுள்ள இந்த நடுகல் எழுப்பப்பட்டுள்ளது என்பதை கீழ்கண்ட கல்வெட்டு வாசகம் உணர்த்துகின்றது.

கல்வெட்டு

1. கோவென்கட்டிற் நெதிர
2. ணாறு பொன்கொங்கர் விண்ணக் கோன்
3. ஆ எறிஇத்து ஏவ அதவ்வனாரு
4. அங்கபடைத் தாணையன் கணங்
5. குமாரன் கல்.

ஈரெட்டிமலை நடுகல்

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் ஈரெட்டிமலையில் மிகச்சிறிய சுமார் ஒரு அடி அளவில் உள்ள செவ்வக வடிவிலான நடுகல்.

துறகை எனும் ஊரைச் சார்ந்த ஒருவன் இறந்துபடி அவருக்காக எடுக்கப்பட்ட நடுகல் என்று பொருள் கொள்ளலாம்.

கல்வெட்டு

1. துறகய்யுள்
2. ளாரு கல்

தாமரைக்கரை நடுகல்

ஈரெட்டிமலையிலிருந்து 3 கி.மீ.தொலைவிலுள்ள தாமரைக்கரை என்ற சிற்றூரில் உ;ள நடுகல் வீரபத்திரசுவாமி கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இக்கல்லின் மேற்பகுதி உடைந்த நிலையில் மூன்று வரிகளில் எழுத்துப் பொறிப்புள்ளன. இதில் தமிழி எழுத்துக்கள் வட்டெழுத்தாக மாறும் காலகட்டமான பொ.ஆ.5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும்.

கல்வெட்டு

1. . . ன் கரும
2. தச்சாத்த
3. ன்கல்

பொ.ஆ.5 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வீரனின் உருவம் பொறிக்கப்பட்டாமல் நடுகல் அமைக்கப்படவில்லை என்றே கூறலாம். இவ்வழக்கு இருளப்பட்டி நடுகல்லில் இருந்து தொடங்கின எனலாம்.

உயிர்ப்பலி

கல் நட்டபின் அதற்கு உயிர்ப்பலியும், கள்ளும் படைப்பர், துருப்பலி நடுகல்லுக்கு அளிக்கப்பட்டது பற்றி சங்க இலக்கியத்தில் கூறப்படுகின்றது. பலியிடப்படும் விலங்கின் இரத்தம் நான்குபுறமும் இறைப்பதன் நோக்கம்

அவ்வுயிரினம் மேலும் பெருக வேண்டும் என்பதாகும். ஆட்டு இரத்தத்தினை ஆகுதியாக இறைத்தால் ஆட்டு வளம் பெருகும் என்று நம்புகின்றனர். அதே போல் கொழுப்பாவெறிந்து குருதிப்பலி கொடுத்தால் மாட்டு மந்தை பெருகும் என்று நம்பினர். வேத வேள்வி (யக்ஞம்) கூட இந்த அடிப்படையில் செய்யப்பட்டதாகும். சங்க இலக்கியத்தில் நடுகல்லுக்குக் கள் வைத்துப் படைப்பதாகக் கருதப்படுகின்றது. இதுவும் கூட இறந்தவன் விரும்பி உண்ணும் உணவு என்று கருதப்படுகின்றது. அவன் விரும்பிய பொருள்கள் அனைத்தும் உடன் வைத்துப் படைக்கப்படும்.

இதே போல் புறப்பொருள் வெண்பா மாலையிலும் நடுகல் இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. நடுகற்களில் பெரும்பாலும் வீரர்கள் இடது கையில் வில்லும், வலது கையில் வாளும் (அ) கேடயமும் வைத்த நிலையிலேயே காணப்படுகின்றனர். புறப்பொருள் வெண்பா மாலையில் வீரர்களின் மனைவியரை எயிற்றியர் எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே எயினர் அதாவது வேடர்கள் மறவர்களாக இருந்ததால் அவர்களுக்கே கல் நடப்பட்டன. அதனால் தான் நடுகற்கள் உள்ள பகுதி இன்றளவும் வேடியப்பன் கோயில் என்று அழைக்கப்படுகிறது. ஆண்களுக்கு மட்டுமின்றி கற்பில் சிறந்த காரிகைகளுக்கும் வீரக்கல் எடுத்து வழிபட்ட வழக்கினை சிலம்பு காட்டுகிறது.

ஆகோள் புசலும், நடுகல்லும் (சங்க காலம்)

சங்க இலக்கியங்களில் நிரைகோடல் பற்றிப் புறநானூற்றிலும், அகநானூற்றிலும் மிகுந்து காணப்பெறுகின்றன. இந்தப் பாடல்களில் மழவர் நிரை கவர்ந்ததைப் பற்றிப் பேசப்படுகிறது. மறவர்கள் நிரைமீட்டலிலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் மழவர்கள் ஒருபோதும் நிரைமீட்டலில் ஈடுபட்டதில்லை. அதனால் மழவர்கள் பழங்குடி வாழ்க்கையில் நிலைபெற்று விட்டனர் எனலாம். நிரைகவர்தல், மீட்டல் பாலைத் திணைப் பாடல்களில் மட்டும் பேசப்பெறுகின்றன. மாட்டுச் செல்வம் நிறைந்த முல்லைத் திணையில் ஒரேயொரு அகப்பாடல் மட்டுமே ஆகோள் பூசல் பற்றிப் பேசப்படுகின்றது. சங்ககால முல்லை வாழ்க்கையில் கால்நடை வளர்ப்பே முதன்மை பெற்ற செல்வம். மாட்டிற்குப் பெற்றம் என்று பெயர் வந்ததும் கூட அது அங்கே பேறு (செல்வம்) என்று கருதப்பெற்றதால் ஆகும்.

நினைவுக் கற்கள்

சங்க இலக்கியங்களில் இடம் பெறும் நினைவுக் கற்கள் அல்லது நடுகற்களின் வளர்ச்சியினை நான்கு கட்டங்களாக வகைப்படுத்திப் பிரித்து ஆய்வு செய்வோம்.

1. பெருங்கற்கால கற்குவை 2. கல்திட்டை 3. கற்குவை 4. கல்பதுக்கை எனப்படும் நான்கு நினைவுச் சின்னங்கள். இறந்துபட்ட மறவர் அல்லது கானவர்களுக்கு எடுக்கப்பட்டவை எனலாம். வில்லிட வீழ்ந்தோர் மிகுதியாகும்.

அகநானூறு என்ற நூலில் கல்பதுக்கைகள் பல இடம் பெற்றுள்ளன

அம்பின் விசையிட வீழ்ந்தோர் எண்ணுவரம்பறியா உவலிடு பதுக்கை அகம் - 109

வில்லிடை வீழ்ந்தோர் பதுக்கை அகம் - 157

புறநானூற்றிலும் கல்பதுக்கைகள் சில பாடல்கள் குறிப்பிடுகின்றன.

அம்பு இடவீழ்ந்தோர் வம்பப் பதுக்கை உயர்பதுக்கை இவர்ந்த அதர்கொடி

புறம் - 3

மேலே கண்ட பதுக்கைகளை நடுகற்களாகக் கூறமுடியா. பெருங்கற்காலச் சவச்சின்னங்களில் ஒருவகை அல்லது நினைவுச் சின்னங்களில் ஒருவகை என்று மட்டுமே கூற முடியும்.

நடுகற்கள் அமைப்பு

நடுகற்களில் வீரனின் உருவம், எழுத்துடன் கூடிய நடுகற்கள் வரலாற்றுக் காலத்தில் குறிப்பாக பல்லவர் காலம் பொ.ஆ.6–ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கின்றது. இதில் வீரன் நின்ற நிலையில் கையில் வாள், குறுவாள், வில் மற்றும் அம்பு உடன் உருவம் பொறித்து தமிழ் மற்றும் வட்டெழுத்தில் வீரச்செயல்கள் பொறிக்கப்பட்டிருக்கும். சோழர் காலத்திய நடுகற்களில் வீரனின் தலைக் குடுமி நேராகவும், வீரன் பூசலிடும் காட்சிகள் காணப்படும். அவன் வீரச் செயல் பொறிக்கப்பட்டிருக்கும். மேலும் பாண்டிய நாட்டு நடுகற்களில் பரவலாக வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். விஜயநகர மற்றும் நாயக்கர் காலத்திய நடுகற்களில் வீரன் போரிடும் காட்சி, தேவலோகம் அழைத்துச் செல்லும் காட்சி மற்றும் சிவலிங்கத்தை வழிபடும் காட்சியும் என பல அடுக்குகளாக காட்டப்பட்டிருக்கும்.

தமிழகத்திலுள்ள நடுகற்களைப் பேராசிரியர் கா.இராஜன் அவர்கள் மூன்று படிநிலைகளாக பிரிக்கின்றார். முதல்நிலைப் பொருங்கற்படைச் சின்னங்கள் அமைப்பது என்றும், இரண்டாம் நிலையில் பெருங்கற்படைச் சின்னமான கற்பதக்கையைச் சுற்றி நெடுங்கற்கள் நடப்பட்டன என்றும், மூன்றாம் நிலையில் பெருங்கற்படைச் சின்னத்தின் முக்கியக் கூறாக விளங்கிய கற்பதுக்கைகளைத் தவிர்த்து அப்பண்பாட்டின் இறுதிக் கூறாக விளங்கிய நெடுங்கல்லை மட்டும் தொறுப்பூசலில் ஈடுபட்டு இறந்த மற்றவர்களுக்கு எழுப்பினர் என்கிறார்.

நடுகற்கள் பல காரணங்களுக்காக உருவாக்கப்படுகின்றன. எதிரிகளிடமிருந்து ஊரைக் காக்க முனைந்த வீரர்கள் இறந்து விடுவதும் உண்டு. அவர்ளின் நினைவாகவும், கள்வர்களுடன் போராடி, கவர்ந்து சென்ற கால்நடை, பொருள்களை மீட்டு மடிந்த வீரர்களின் நினைவாகவும், பெண்களது மானத்தையும், கற்பையும் கொடியவர்களிடமிருந்து காப்பாற்றப் போர் புரியுங்கால் இறந்துவிட்டவர்களின் நினைவாகவும், தனது அரசன், தலைவன்,

மேலாளர், எசமானர்களிடத்தில் தனது பற்றுதலை வெளிப்படுத்துவதற்காக மடிந்த உண்மையான ஊழியர்களை நினைவு கூர்வதற்காகவும், கொடிய விலங்குகளிடமிருந்து ஊரைக் காப்பதற்காக இறந்த வீரர்களின் பொருட்டும் தீவிர சமய உணர்ச்சியின் காரணமாக உயிர்நீத்த சமயப்பெரியார்களின் நினைவாகவும் இக்கற்கள் நடப்படுகின்றன.

கணவன் இறந்த பிறகு வாழ விரும்பாமல் உடன்கட்டை ஏறிய கற்புக்கரசியரின் செயலை நினைவுகூர மகாசக்திக்கல், மாசத்திக்கல், சதிக்கல் போன்றவை எழுப்பி அதில் சிற்பங்களும் செய்திகளும் செதுக்கப்படுவதுண்டு.

அண்மைக்கால நடுகல் / நினைவுக்கல் கண்டுபிடிப்புகள்

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், சாத்தனூர் (மல்லிகாபுரம்) வேடியப்பன் கோயில் அருகில் உள்ள நிலத்தில் இருந்தது தற்போது திருவண்ணாமலை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள தமிழி-வட்டெழுத்து கலந்த நினைவுக் கல் பொ.ஆ.4-5 ஆம் நூற்றாண்டு சேர்ந்தது. இது கருங்காலி நல்லூரைச் சேர்ந்த கண்ணந்தைக்கண் மகன் விண்ணன் என்பவர் ஆநிரைப் பூசலில் இறந்ததின் நினைவாக வைக்கப்பட்ட நடுகல் தமிழி எழுத்திலிருந்து வட்டெழுத்து வளர்ச்சி அடையும் காலம்.

கல்வெட்டு

1. கருங்காலி நல்
2. லூரரான் பூயலு
3. கண்ணந்தைகன் மக
4. ன் விண்ணன் ஆ
5. ன் பூயலுட் பட்டான்.

இக்கல்வெட்டு குறித்து முனைவர்.ர.பூங்குன்றன் அவர்களுடைய கண்ணந்தைகள் தொல்குடி மூத்தோர் குழு என்ற கட்டுரையில் இதன் விளக்கத்தினை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

இக்வெட்டில் பயின்று வரும் பூயல் என்பது பூசல் என்று மாறிவிட்டது. தொல்காப்பியத்தில் வெட்சித்திணையில் பூசல் என்ற சொல்லே பயன்படுத்தப்பெறுகின்றது. ஆனால் பூயல் என்பது காலத்தால் முற்பட்ட சொல் நாட்டார் வழக்காறாக இருந்திருக்க வேண்டும் கன்னட கல்வெட்டுகளில் புய்யல் என்பது மாடுபிடி சண்டையைக் குறிக்கும்.

அண்மையில் கண்டுபிடிக்கப் பெற்ற நடுகல் கல்வெட்டில் பயின்று வரும் கண்ணந்தைகள் என்பவர்கள் தொல்பழங்காலம் முதல் நிலைபெற்றிருந்த சமூக வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் மூத்தோர் குழுவே பழங்குடியை ஆட்சி செய்தது. ஆனால் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சமூக அரசியல் மாற்றம் வேறுவகையாக நிலைபெற்றிருந்தது.

குழு ஆட்சியிலிருந்து தனியொரு தலைவன் ஆட்சி நடைபெற்றது. பொன் என்ற அடைமொழியோடு பத்துக்கும் மேற்பட்ட தலைவர்கள் குறிக்கப் பெறுகின்றனர். பொன்னரம் பனார்க்கும் கந்தவிண்ணனார்க்கும் இடையில் மாடுபிடி சண்டை நடந்தமை பற்றி மூன்று நடுகற்கள் கிடைத்துள்ளன. மூன்று நடுகற்களிலும் கந்த விண்ணனார்க்கு பொன் என்ற அடைமொழியைத் தரப்பெறவில்லை. பெரும்பாணரைசர் மக்கள் பொன்மாதனார் என்று கூறும்போது பெரும்பாணரைசரின் மகன் என்றோ பெரும்பாணரைசரின் தலைவன் என்றோ கொள்ள வாய்ப்புண்டு. இக்கல்வெட்டும் கண்ணந்தைகள் நடுகல் பொரும்பாணரைசர் வருவதற்கு முன்பிருந்த நிலையைச் சுட்டுகின்றது.

முடிவுரை

நடுகற்கள் மற்றும் நினைவு கற்கள் குறித்த செய்திகள் சங்க இலக்கியத்திலிருந்துதற்போதுவரைதொடர்ந்துதமிழ்மக்களின்பண்பாட்டிலும், வழிபாட்டிலும் நீங்கா இடம்பெற்று வந்துள்ளதை காணமுடிகிறது.

மேலும் நடுகற்கள் வீரனுக்கு மட்டுமின்றி பறவைகள், விலங்குகள் போன்றவற்றிற்கும் நடுகல் அமைத்திருப்பது நம் பண்பாட்டின் வெளிச்சத்தைக் காட்டுகிறது.

நூற்பட்டியல்

சோழநாட்டு நடுகற்கள், வே.பார்த்திபன், நியூ செஞ்சுரி புத்தக நிலையம்,

பண்டைண தமிழ்ச் செவ்விலக்கியங்களும் நடுகற்களும், ர.பூங்குன்றன். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,

தமிழ் பிராமி கல்வெட்டுகள், தி.ஸ்ரீ.ஸ்ரீதர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,

நடுகற்கள், ச.கிருஷ்ணமூர்த்தி, மெய்யப்பன் பதிப்பகம்,

சாசனம், இதழ் - 4, சங்ககால நெடுநிலை நடுகற்கள், வி.ப.யதீஸ்குமார்,

கல்லெழுத்தில் காலச் சுவடுகள், முனைவர் சூ.சுவாமிநாதன். சேகர் பதிப்பகம். சென்னை.

தொல் தடம்,இதழ்-1, தமிழகத்தில் பலிச்சடங்குகள், தொன்மையும், தொடர்ச்சியும். முனைவர்.மு.ஏழுமலை மற்றும் முதுவாய்ப் பல்லி புலவர் மரபு காட்டும் குறியீட்டுப் புலப்பாடு. மு.சந்தியா.

செங்கம் நடுகற்கள், டாக்டர்.இரா.நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை, 1972.

திருவண்ணாமலை மாவட்டக் கல்வெட்டுகள், புதிய கண்டறிதல்கள் (தொகுதி-1), ச.பாலமுருகன், திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம். 2025.

தருமபுரி நடுகல் அகழ்வைப்பகம் Final, முனைவர்.தி.சுப்பிரமணியன், தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை, 2010.

Early Tamil Epigraphy, Iravatham Mahadevan, CICT, Chennai, 2014

சமணப்பள்ளிகளும் மூவேந்த எழுச்சியும்

ர.பூங்குன்றன்
உதவி இயக்குநர்
தொல்லியல் துறை

நியதிவாதம்

கணியன் பூங்குன்றன் பாடல் தமிழ் மக்களின் பரந்துபட்ட மனப் பான்மையைக் காட்டுவதாகப் பெருமைப்பட பேசப் பெறும் பாடல். இப்பாடல் முதல் அடி மட்டுமே எடுத்துக் கூறப்பெறுவது. பிறஅடி களைப் பற்றிப் பேசுவது அருமை. பாடல் ஆசீவக சமயக்கோட்பாடான நியதி வாதத்தை வலியுறுத்துவது என்று பல அறிஞர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர். இப்பாடல் பற்றி க.கைலாசபதி கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது (1966: 146).

“வணிக வர்த்தகத்தினர் தமது வியாபரத் தொழிலுக்குப் பரந்த சந்தையை விரும்புவர். உள்நாட்டு வணிகமும் பிறநாட்டு வணிகமும் அக்காலத்திற் சிறந்திருந்தன எனக் கண்டோம். இதன் அடிப்படையி லேயே சிலம்பு தமிழக வேந்தர்கள் மூவர்க்கும் உரியதாய்ப் புகார், மதுரை, வஞ்சி ஆகிய முப்பெரும் நகரங்களைக் காண்டப் பெயர் கொண்டதாய் விளங்குகின்றது. "யாதுமூரே யாவருங்கேளிர்" என்ற தத்துவமும் நடைமுறை விளக்கம் பெற்று விடுகின்றது. மூன்று நாடு களின் செய்திகளும், வாணிபச் சிறப்பு முதலியனவும் அயல்நாட்டுத் தொடர்புகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன”.

அவர் கூற்றுப்படி பூங்குன்றனின் பாட்டு வணிக வளர்ச்சியின் பின்விளைவாக, வணிக வளர்ச்சியை மனதில் கொண்டு எழுதப்பெற்றது என்ற கருத்தின் அடிப்படையில் எழுதப் பெற்றது என்று கொள்ளலாம். சங்ககாலத்தின் இறுதியில் வணிக வளர்ச்சி பெருமளவில் இருந்தது என்பது உண்மையே. ஆனால் சங்க கால சமூகம் பழங்குடி நிலையிலிருந்து மன்னர், வேளிர், வேந்தர் ஆகிய அரசியல் படிநிலை வளர்ச்சிக்கு மாறிக் கொண்டிருக்கும் காலம்.

பூங்குன்றன் பாட்டினைப் பார்ப்போம். இப்பாட்டின் ஆசீவகத் தத்துவக் கருத்துடன் அக்கால சமூக நிலையும் புலப்படும்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர் தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்

இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண் துளி தலைஇ, ஆனாது
கல் பொருது இறங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படுஉம் புணைபோல் ஆர் உயிர்
முறைவழிப் படுஉம் (புறம் 192:1-10)

இப்பாடல் முழுமையும் ஆசீவகக் கோட்டிபாட்டினைக் கொண்டுள்ளது. இரண்டாவது அடியில் 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது. இங்கு பிறர் என்பது தன் இரத்த உறவு இல்லாதவர்களையே ஆகும். பின்வரும் புறநானூற்றுப் பாடல் இதனைத் தெளிவாக்க உதவுகின்றது.

குமரிப் படைத் தழீஇய கூற்றுவினை ஆடவர்
தமர் பிறர் அறியா அமர் மயங்கு அழுவத்து,
இறையும் பெயரும் தோற்றி நுமருள்
நாள்முறை தபுத்தீர் வம்மின் (புறம் 294, 2-6)

இப் பாடலில், 'தமர் பிறர் அறியா அமர்' என்றது தம் சுற்றத்தார் மாற்றார் என்ற பொருளில் ஆளப் பெற்றுள்ளது.

திராவிட மொழிகளில் தமர் என்பதற்கு கேளிர் என்ற பொருளே கூறப்பெற்றுள்ளது; பிறர் என்பதற்கு வெளியார் வம்பர் என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது. பூங்குன்றன் பாட்டில் பயின்று வரும் பிறர் என்பதும் தம்குடி அல்லாத பிறரைக் குறித்தது என்று கொள்ள வேண்டும். தொல்குடிகளைத் தாக்கி அழிக்கும் வம்ப வேந்தர் (பிறர்) செயலால் நோதலும் தணிதலும் வருவதில்லை என்று குறிப்பிட்டார் எனலாம். தீமையும், நன்மையும் பிறர்தர வாரா என்பதைப் போலவே நோதலும் தணிதலும் பிறரால் வருவதன்று ஏற்கெனவே தனிமனிதனுக்கு விதிக்கப்பட்ட நியதி, தீமை பயப்பதும், நன்மை பயப்பதும் துன்பம் வருவதும், மகிழ்ச்சி அடைவதும் முன்பே வகுக்கப்பட்டு விட்டது. அதனால் அதனை மாற்ற எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை என்பதே பூங்குன்றன் பாடலின் உட்பொருள். பழங்குடி அழிவும் வேந்தர் எழுச்சியும் ஏற்கெனவே விதிக்கப் பெற்ற நியதிப் படியே நடைபெறுகின்றது. அதை மாற்றுவது நியதிக்கு மாறாக நடக்க முயற்சி செய்வதைப் போன்றது, வெற்றி தராதது என்பதே இப்பாடலின் உள்ளார்ந்த பொருள்.

தமிழகத்தில் வம்வேந்தர்கள் தொல்குடிகளைத் துடைத்தெறிந்த வரலாற்றைப் போன்றதே கங்கைச் சமவெளியில் மகத வேந்தன் வஜ்ஜியர்களையும், எலிச்செவியர்களையும் துடைத்தெறிய முயன்ற வரலாறு. அங்கு வஜ்ஜியர், எலிச்செவியர், சாக்கியர் ஆகிய குடியினர் மக்களாட்சியின் கீழ் வாழ்ந்தவர்கள். மகள் மறுத்தல், வேந்தர் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாமை ஆகிய செயல்களால் விதுதபா, அஜாதசத்ரு ஆகிய வேந்தர்கள் இப்பழங்குடி மக்களைக் கொன்று குவிக்கத்தனர். குழந்தைகளையும் பெண்களையும் கூட

விட்டு வைக்கவில்லை. அத்தகைய மனிதக் கொலை தம் வாழ்நாளில் நடந்ததை புத்தரும் மக்கலி கோசாலரும் கண்டு வெதும்பினர்.

தான் போற்றிய தொல்குடிவாழ்க்கை தன் கண்ணெதிரிலேயே நொறுங்கி விழுவதைக் கண்டு செயலற்றுப் போன கோசாலர் மனிதக் குலத்தை தூக்கி வீசும் பெரும்புயலாக வேந்தர் போரினை வருணித்தார். அதனால் அவர் போரை. இறுதி ஊழிப்புயல் என்று குறிப்பிட்டார். அவருடைய சீடர்களில் ஒருவன் சுற்றி நடைபெறுவதற்கு விளக்கம் கேட்டபோது யாழை மீட்டு என்று கூறினார். சுற்றுப்புறத்தில் நடைபெறும் உண்மை சூழ்நிலையிலிருந்த தன்னை மறக்கவே அவர் அவ்வாறு செய்யச் சொன்னார்.

புத்தர் வேறு வகையில் சிந்தித்தார். பழங்குடி அமைப்பைப் போன்ற சங்கத்தை உருவாக்கி மாயையைத் தோற்றுவித்தார். எது எப்படி இருந்தபோதிலும் வேந்தர் எழுச்சியும் தொல்குடி அழிவும் இவ்விரு பெரியாரைப் பாதித்தன. அந்த நெருக்கடிக்கு இருவரும் வெவ்வேறு வழிகளைக் கண்டனர்.

சமணப் பள்ளிகள் பழங்குடி வழிபாட்டிடங்கள்

தற்காலத்தில் சமணம் என்ற சொல் ஜெயின மதத்தை குறிக்கின்றது. ஆனால் இந்தச் சொல் அசோகர் காலத்தில் மூன்று சயமங்களைக் குறித்தது. ஒன்று அருகத சமணம், இரண்டு பௌத்த சமணம், மூன்று ஆசீவத சமணம் ஆகிய மூன்று சமயங்களைக் குறிக்கும் போது இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது. சமணம் என்பதற்கு உடலை வருத்தி தவம் செய்வோர் என்று பொருள். ஆசீவக சமணம் என்ற சொல் காஞ்சிபுரம் கல்வெட்டில் கிடைக்கின்றது. இந்தச் சொல் சமணத்தின் ஒரு பிரிவாக ஆசிவகம் இருந்தது என்ற கருத்தை உருவாக்கியது ஆனால் ஆசிவகம் என்பது தனித்து தவம் செய்யும் ஒரு சமயம்.

ஆஸ்திரேலியப் பழங்குடிகள் தங்கள் முன்னோர்கள் இறந்தால் அவர்களின் ஆவிகளை மலைக்குகைகளிலும், மரப்பொந்துகளிலும் தங்கவைப்பர். அவ்வாறு தங்கியிருக்கும் ஆவிகளுக்கு ஆண்டுதோறும் உயிர்ப்பலி கொடுத்து வழிபாடு செய்வர். இந்த வழிபாடு பண்டைய தமிழகப் பழங்குடிப் பண்பாட்டிலும் இருந்தது. இந்த குகைகளில் வாழ்ந்த ஆவிகளை மனதில்கொண்டு அணங்குடை நெடுமுடி என்றனர். அணங்கு என்றால் வருத்தும் தெய்வம் என்று பொருள். இந்தக் குகைகளில் சமணமுனிவர்கள் தங்கித்தவம் செய்து இறுதியில் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டனர். காலகதியில் சமணம் செல்வாக்கு இழந்தபின் பழங்குடி வழிபாடு தொடர்ந்து இன்றும் நடைபெறுகின்றது. இந்தவழிபாடு கருவூர்க்கு அருகில் உள்ள சுக்காலியூர் சமணக்குகைகளில் ஆண்டிற்கொருமுறை ஆட்டுப்பலியிடுகின்றனர். பொள்ளாச்சிக்கருகில் உள்ள ஆணைமலைக் சமணக்குகைகளுக்கருகில் முனிவர் சிலை முன்பு ஆடுபலியிடுகின்றனர்.

சமணப்பள்ளிகளில் தொல்பழங்கால ஓவியங்கள்

சமணப் பள்ளிகளில் தொல்பழங்கால ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன. நெகநூர்பட்டி, மீனாட்சிபுரம் ஆகிய ஊர்களில் உள்ள சமணப் பள்ளிகளில்

தொல்பழங்கால ஓவியங்கள் உள்ளன. இவை தொல்பழங்கால மக்களால் வரைந்து வைக்கப்பெற்றவை. மற்ற குகைகளிலும் வரையப்பட்டிருக்க வேண்டும். அதனால் தொல்பழங்கால ஓவியங்களும், இன்று செய்யப்பெறும் உயிர்ப்பலி வழிபாடும் சமணப்பள்ளிகள் பழங்குடி வழிபாட்டிடங்களாக இருந்தவை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

சங்க இலகியத்தில் சமணப் பள்ளி முனிவர்

நற்றினையில் தவசியரைப் பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது அது பின்வருமாறு

நீடிய சடையோடு ஆடா மேனிக்

குன்று உறை தவசியர் (நற் : 141)

குன்றிலுள்ள குகைகளில் தவம் செய்யும் முனிவர்கள் என்று இதற்குப் பொருள் பெரும்பாலும் இவர்கள் சமணமுனிவர்களாலவே இருக்க வேண்டும் அகப்பாடல் ஒன்றில்

உண்ணாமையின் உயங்கிய மருங்கின்

ஆடாப் படிவத்து ஆன்றோர்

அகப்பாடல்: 123

இந்த அகப் பாடலடிகள் சமண முனிவர்களையே குறித்து வந்தன.

இந்தப்பள்ளிகளில் உள்ள படுக்கை சமணப்படுக்கைகள் உயிர்பிட்ட சமண முனிவர்களின் நினைவுச் சின்னங்களாக அமைக்கப்பெற்றன.

ஐம்பத்தேழன

ஸனம் நோற்ற ஆசிரிகரு

சந்திர நந்திநிஸீதிகை

பறையன்பட்டு என்ற ஊரில் உள்ள கல்படுக்கை ஒருகல்வெட்டு இருக்கின்றது. அதுபின்வருமாறு.

பாணாட்டு

அச்சணந்தி

மாணாக்கர்

நோற்றுமுடித்த

நிசீதிகை

நெகனூர்ம்பட்டி என்ற ஊரிலும் ஒருகல்வெட்டு உள்ளது. அந்தக்கல்வெட்டுபின் வருமாறு.

பெரும்பொகழ்

செக்கந்தி தாயியரு

செக்கந்தண்ணியாரு

செய்வித்தபள்ளி

மேலே காட்டிய மூன்றில் இரண்டு கல்வெட்டுகள் படுக்கைக்கு நிசீதிகை என்ற சொல் பயன்படுத்தப் பெறுகின்றது ஆனால் மேலே காட்டப்பெற்ற கல்வெட்டில் பள்ளி என்ற சொல் பயன்படுத்தப்பெற்றுள்ளது. சில கல்வெட்டுகளில் அதிட்டானம் என்றும் அதிட் ஆனம் என்றும் அழைக்கப் பெறுகின்றன. மூன்று சொற்களும் நினைவுச்சின்னம் என்று பொருள்படும்

பள்ளி என்பது சமணர் தந்த சொல்?

அண்மைக்காலம் வரையில் பள்ளி என்ற சொல் சமணர்கள் தந்த சொல் என்று கருதப்பெற்றது அண்மைக்காலத்தில் கிடைத்த நடுகல் (கி.மு. 3ஆம் நூற்றாண்டு) ஒன்றில் பாளி (பள்ளி) என்ற சொல் பயின்று வரக்காணலாம் பாளி என்பது பாழி என்பதன் வழக்குச் சொல் இச்சொல்லின் இடையில் ளகர மெய்யைச் சேர்க்கும்போது முதலில் உள்ள பாகரம் பகரம் ஆக வாய்ப்புண்டு. அதனால் பாளி என்பது பள்ளி ஆகியிருக்க வேண்டும்.

தாதகாபட்டி (தேனி) என்ற ஊரில் கிடைத்த நடுகல் ஒன்றில்

....ன் அடி ஒன்பாக ல் பாளிகல்

பாளிகல்

இந்த நடுகலில் தமிழி எழுத்துகள் பொறிக்கப் பெற்றுள்ளன. மேலும் இந்த நடுகல் ஈமச்சின்னத்தில் நடப்பெற்றுள்ளது. இந்த நடுகல் தமிழி எழுத்துகள் உள்ளன பானைகளும் தாழியும் கிடைத்துள்ளன. கல் வெட்டில் பயின்றுவரும் பாகல் என்பது பலாமரம் என்று பொருள்படும் மேலும் பதிற்றுப்பத்து ஐம்பதாம் பாட்டில் வன்னி மரத்தின் கீழ் தாழியில் புதைக்கப் பெற்ற மன்னர்கள் பலர் என்ற குறிப்பு உண்டு இறந்தவர்களைப் புதைக்கும் இடத்தில் மரம் நடும் பழக்கம் இருந்ததோ என்று கருதவேண்டியுள்ளது. மேலும் இந்த நடுகல் (ஈமச்சின்ன) மரங்கள் தம் காவல் மரங்களாக நின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. காவல் மரங்கள் சங்க இலக்கியத்தில் கடி மரம் என்றும் அழைப்பார்கள்.

அறமும் அரசியலும்

சங்ககால வேளிரும் வேந்தரும் கொடை அளிப்பதில் முனைந்து நின்றனர். கொடை, பாண் கடன் ஆகிய சொற்கள் பரிசு என்ற பொருளில் ஆளப்பெற்றன. பண்டைய நாளைய தொல்குடி வாழ்க்கையிலும், வேளிர் வாழ்க்கையிலும் வேந்தர் வாழ்க்கையிலும் பரிசு இரண்டறக் கலந்து நின்றது. பரிசு, அதனை அளிப்பவனின் செல்வச் செழிப்பை எடுத்துக் காட்டுகின்றது. பரிசைப் பெறுபவனிடம் பரிசு அளிப்பவன் கைம்மாறு எதையும் எதிர்பார்க்கவில்லை ஆனாலும் பரிசு பெற்றவன் கொடையாளிக்கு கைம்மாறு அளிக்கும் நிலைக்குத்

தள்ளப் பெறுகின்றான். கிழார், வேளிர், வேந்தர் ஆகியோர் வணிக வளத்தி னாலும். பிற வழிகளினாலும் கிடைத்த செல்வத்தைப் பாணர்களுக்கும், புலவர்களுக்கும், குடியிலுள்ளோர்க்கும் அளித்து, அதனால் புகழ் ஈட்டினர். அப்புகழ் அவர்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாகச் செய்தது.

இக்கல்வெட்டின் தொடக்கத்தில் இரண்டு குறியீடுகள் உள்ளன. அவற்றில் ஒன்று ஒரு வட்டத்தினை நான்காகப் பிரிக்கும் கூட்டல் குறியுடன் கூடியதாயும் அதன் செங்குத்துக் கோடு கீழே நீண்டு சிறு கிடைக்கோட்டில் முடிந்தும் காணப்படுகிறது. மேல் மற்றும் கிடைக்கோட்டின் இரு முனைகளிலும் சுடர் அல்லது சூலம் போன்று மூன்று கோடுகள் உள்ளன. இக் குறியீடு ஒரு தாங்கியின்மீது நிற்கும் நான்கு ஆரங்களைக் கொண்ட தர்மசக்கரத்தைக் குறிக்கிறது. அதனை அடுத்து உள்ள குறியீடு மார்பளவு மனிதத் தலையின்மீது கூம்பு இருப்பது போல் உள்ளது. இதனை ஒரு ஸ்தூபத்தின் கட்டட அமைப்புடன் ஒப்பிடலாம். கீழ் செவ்வகப் பகுதி ஒரு பௌத்த ஸ்தூபத்தின் மேடைப் (மேதி) பகுதியாகவும் அதன்மீதுள்ள முக்கால் வட்டப்பகுதி அண்டம் (அண்டா) என்னும் ஸ்தூபத்தின் நடுப்பகுதியாகவும், அதன் மேலுள்ள முக்கோணப் பகுதி ஸ்தூபத்தின் உச்சியில் காணப்படும் குடைப் பகுதியாகவும் (சத்ரா) அறியலாம்.

காஞ்சியிலிருந்து உத்திரமேரூர் செல்லும் சாலையில் 17 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கணிகிலுப்பை என்ற ஊரின் ஏரிக்கரையில் சோழர் காலத்து புத்தர் சிற்பம் உள்ளது. (தற்போது விநாயகர் கோயில் முன் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது). அதற்கு நேர் எதிரே சற்றுத் தொலைவில் 5 அடி உயர தூண் போன்ற கல் உள்ளது. அத்தூணில் மேலே உள்ள ஒரு அமைப்பில் ஒருபத்ம பீடத்தின்மீது வட்டமும் அதன்மீது ஒரு முக்கோணமும் உள்ளன. இதுவும் ஜகதாப் ஸ்தூப குறியீடு போன்றே ஒரு ஸ்தூபத்தின் அலங்காரமான அடையாளம்தான். அதற்கு கீழே நான்கு ஆரங்களுடன் கூடிய தர்ம சக்கரம் இருப்பதையும்காணமுடிகிறது. இதனைதர்மசக்கரம்என்று இளம்போதி என்னும் இணைய தளம் அடையாளம் கண்டுள்ளது. எனினும் ஸ்தூபம் அடையாளம் காணப்படவில்லை. இதே தூணில் "புத்த ஸ்ரீ" என பொறிக்கப்பட்டுள்ளதாக பௌத்த சமய ஆய்வாளர் மகாத்மா செல்வபண்டியன் கூறினார். நேரில் சென்று பார்த்தபோது அவ்வெழுத்துகளைக் காண இயலவில்லை. ஒருவேளை மண்ணில் அப்பகுதி புதையுண்டிருக்கலாம்.

கணிகிலுப்பை, திருவள்ளூர் மாவட்டம் கூவம், காஞ்சிபுரம் வட்டம் ஏனாத்தூர், மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ள தர்மசக்கரங்கள் இளம்போதி இணையப் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. ஏனாத்தூரில் 8 ஆரம் கொண்ட தர்ம சக்கரம் கிடைத்த ஊரிலேயே தீர்த்தங்கரரின் சிற்பமும் கிடைத்துள்ளது. எனவே தனியாக சக்கரம் மட்டும் பொறிக்கப்பட்டிருப்பின் அது வைணவம், சமணம் மற்றும் பௌத்தம் என எச்சமயத்தைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். இவ்விணைய பக்கத்தில் மாங்காட்டுக்கு அருகில் உள்ள பட்டு என்ற ஊரிலிருந்து தற்போது சோழிங்கநல்லூரில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையின் பின்பக்கத்தின் புகைப் படம் பதிவிடப்பட்டுள்ளது. இதில் மிக லேசாக தெரிவது ஒரு ஸ்தூபத்தின் சின்னமாகும். கீழுள்ள சதுரப்பகுதி தூண்போல நீண்டும் அதன்மீது வட்டமும் அதன்மீது கூம்பாய் முடியும் சில

அடுக்கு வளையங்களும் புலப்படுகின்றன. எனவே ஜகதாப் கல்வெட்டில் காணப்படும் இரு குறியீடுகளும் கணிகிலுப்பையில் ஒரு புத்தர் சிலைக்கு எதிரில் நடப்பட்டுள்ள கல்லில் குறித்துள்ள இரு குறியீடுகளும் இவை ஸ்தூபம் மற்றும் தர்ம சக்கர சின்னங்கள் என்பதை உறுதிப் படுத்துகின்றன. பட்டு புத்தர் சிலையின் முதுகிலேயே ஸ்தூப சின்னம் இருப்பது ஐயத்துக்கு இடமின்றி இக்கருத்தினை வலுப்படுத்துகிறது. கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளி கல்வெட்டில் பூர்ணகும்பம், குத்துவிளக்குகள், கத்தி, வில், உடுக்கை வடிவில் பசும்பை, கலப்பை ஆகியவற்றோடு தர்மசக்கரமும் காணப்படுகிறது. (கி. ஸ்ரீதரன், கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளி கல்வெட்டு, கல்வெட்டு காலாண்டிதழ்-57,ஜூலை-2002) எனினும் இதில் ஸ்தூப சின்னம் இல்லை.

திரிசூலம் சைவ தேவதானங்களிலும், சக்கரம், சங்கு மற்றும் வாமனர் உருவங்கள் வைணவ திருவிடையாட்ட தானங்களிலும், முக்குடை சமண தானங்களிலும் குறிப்பிடப்படுவது போல பௌத்த தானங்களில் இந்த தர்ம சக்கரம் மற்றும் ஸ்தூப சின்னங்கள் பொறிக்கும் வழக்கம் உள்ளதையும் இந்த ஜகதாப் கல்வெட்டு ஆய்வின்மூலம் தமிழகத்தில் முதன் முறையாகக் கண்டறிந்துள்ளோம்.

சிறு குன்றின் பாறையில் காணப்படும் தர்ம சக்கர ஸ்தூப சின்னங்கள்

ஜகதாப் கல்வெட்டு உள்ள மாந்தோப்பினை ஒட்டி அமைந்துள்ள சிறு குன்றின் உச்சியில் உள்ள ஒரு பாறையின் நெற்றிப்பகுதியிலும் கல்வெட்டின் அருகே காணப்படும் இரு சின்னங்களைப் போலவே காட்டப்பட்டுள்ளன. இங்கு முதலாவதாக ஸ்தூபமும் அடுத்து தர்மசக்கரமும் காட்டப்பட்டுள்ளது. இங்கு ஸ்தூபம் தெளிவாய் புரியும்படி கீழிருந்து மேலாக சதுரம், வட்டம் மற்றும் முக்கோண அமைப்புகள் உள்ளன.

இச்சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்த பாறையை ஒட்டி 50 அடி தொலைவில் சிறிய இயற்கைக் குகைத் தளம் காணப்படுகிறது. அதன் கூரையில் வெண்சாந்து எழுத்து அடையாளங்கள் மிகவும் அழிந்த நிலையில் உள்ளன. எனினும் அவை கிருஷ்ணகிரி மலையில் காணப்படும் 8ம் நூற்றாண்டை சேர்ந்த கங்க மன்னன் ஸ்ரீபுருசனின் பழங்கன்னடக் கல்வெட்டினருகே உள்ள பாறையின் தாழ்வான பகுதியில் கூத்தன், வாணியன், ஐநூ(ற்றுவன்) என சுமார் 11ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதப்பட்டிருப்பதை நினைவுப் படுத்துவதாய் உள்ளது.

(கிருஷ்ணகிரி மலையில் உள்ள ஐநூ(ற்றுவன்) என்ற பெயரை சங்கரன் என ராஜவேலு படித்துள்ளார். ஆனால் ஐ என்பது தெளிவாய் உள்ளது. மேலும் ஸ்ரீ புருஷனின் கன்னடக் கல்வெட்டு ஸ்ரீ புருஷ எரயப்போர் என்பவர் வீர சங்க கணத்தை சேர்ந்த வீரதேவாச்சாரியருக்கு பேரேரி, நெய்தலேரி, மருதேரி, புத்தேரி மற்றும் வீரோலேரி ஆகிய ஏரிகளை ஒட்டி நிலம் மற்றும் இரண்டு தோட்டம், ஒரு வீடு ஆகியவற்றை தானமளித்ததைக் குறிக்கிறது. இவர் சமண

துறவியாய் இருக்கலாம் என இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை- 1992-93 பி.302 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வீர சங்க கணம் என்பது பௌத்த சங்கத்தைக் குறிக்கலாம். ஏனெனில் சங்கம் என்ற சொல் பௌத்தத்திலேயே அதிகம் கையாளப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டு குறிப்பிடும் புத்தேரி புத்தரை நினைவுபடுத்துகிறது. வெண்சாந்து எழுத்துக்கள் உள்ள பாறைக்கருகே 30 க்கும் மேற்பட்ட சிறு வட்டக் குழிகள் தேய்த்து உருவாக்கப்பட்டுள்ளன. இங்கும் வெண்சாந்து வணிகப் பெயர்கள் எழுதப்பட்டுள்ள பாறை, 8ம் நூற்றாண்டு ஸ்ரீ புருஷனின் கன்னடக் கல்வெட்டு உள்ள பாறை ஆகியவற்றை அடுத்து ஒரு பெரிய இயற்கை குகை உள்ளது. பௌத்த துறவியர் மற்றும் வணிகர்களுக்கும் இவ்விரண்டு இடங்களுக்கும் தொடர்பிருக்கலாம்.

கடைக்கோட்டூர்

தருமபுரி அருங்காட்சியகத்தில் உள்ள இரண்டு புத்தர் சிலைகள் கடைக்கோட்டூரான தேசி உய்யகொண்ட சோழப் பட்டணம் என கல்வெட்டுகள் குறிப்பிடும் கடகத்தூரில் இருந்து கொண்டுவரப்பட்டவைகளாகும். அவை இரண்டும் கடகத்தூர் தொடக்கப்பள்ளி கட்டிடம் கட்ட வாணம் தோண்டும்போது கிடைத்தவைகளாகும். அவற்றில் ஒன்று நின்ற நிலையிலும் மற்றது அமர்ந்த நிலையில் தலை நீக்கப்பட்டும் உள்ளது. மேலும் கடகத்தூர் சிவன் கோயில் மண்டப மேற்கு சுவரில் உள்ள விஜயநகரர் கால கல்வெட்டில் இக்கோயிலுக்கு வழங்கிய தானத்தை குறிப்பிடும்போது கிரந்த எழுத்தில் புத்தர் தம்மம் ...உட்பட்டனவும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (கிருஷ்ணகிரி மாவட்ட கல்வெட்டுகள் ப.175). எனவே ஜகதாப் கல்வெட்டுக் குறிப்பிடும் கடைக்கோட்டூர் நாற்பத்தெண்ணாட்டு நானா தேசிச் சித்திரமேழிப்பெரும்பள்ளி இருந்த இடம் இன்றைய கடகத்தூரே ஆகும். கடகத்தூர் கல்வெட்டுகளில் (பொ.ஆ. 1430 மற்றும் 1441) கடைக்கோட்டூரான தேசி உய்யகொண்ட சோழப் பட்டணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(கடகத்தூரில் சாலை ஓரம் நடப்பட்டுள்ள ராமநாதனின் (பொ.ஆ.1286) கல்வெட்டில் பாடியான பொய்யாமொழி சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. இடையில் பொய்யாமொழி சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டு மீண்டும் பழைய பெயர் தொடர்ந்திருக்கலாம் அல்லது பாடியான பொய்யாமொழி சதுர்வேதி மங்கலம் என்பது வேறு ஊரையும் குறிக்கலாம்). மேலும் தருமபுரி சந்தைத் தெருவில் உள்ள ஹரிஹரநாதர் கோயில் மூன்றாம் ராஜராஜன் காலத்து (பொ.ஆ.1224) கல்வெட்டானது அக்கோயிலை விடுகாதழகியநல்லூர் ராஜராஜ ஈஸ்வரமுடையநாயனார் எனக் குறிப்பிடுகிறது. பொய்யாமொழி, விளங்காமொழி ஆகிய பெயர்கள் விடுகாதழகிய பெருமாளுக்கு இருந்துள்ளது. எனவே பொய்யாமொழி சதுர்வேதி மங்கலமும் விடுகாதழகிய நல்லூரும் ஒரே ஊரினைக் குறிக்கலாம்.

இதே தருமபுரி சந்தைத்தெரு ஹரிஹரநாதர் கோயிலில் உள்ள போசள மன்னன் சோமேஸ்வரனின் 20ம் ஆண்டு (பொ.ஆ.1253) கல்வெட்டு

அக்கோயிலை ஸ்ரீ கடைக்கோட்டூரான நானாதேசிப் பட்டணத்து உடையார் ராஜராஜ ஈஸ்வரமுடைய நாயனார் எனக் குறிப்பிடுகிறது.

ஸ்ரீ வீரதேவ மஹாராயர் காலத்து (பொ.ஆ.1421) கல்வெட்டும் நிகரிலி சோழமண்டலத்து கங்கைநாட்டு தகடை நாட்டுக் கடைக்காட்டூர்...ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடைய நாயனாற்கு எனக் குறிப்பிடுகிறது.

கடகத்தூருக்கும் தருமபுரி அரியநாதர் கோயிலுக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 6.கி,மீ ஆகும். எனவே கடைக்கோட்டூர் என்பது அக்காலத்தில் இருபட்டணங்களைஉள்ளடக்கியஒருபெரியவணிகத்தளமாய்இருந்துஇவ்விரு பகுதிகளில் ஒன்று கடைக்கோட்டூரான தேசி உய்யகொண்ட சோழப் பட்டணம் என்றும் இன்னொரு பகுதி கடைக்கோட்டூரான நானாதேசிப் பட்டணம் என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதில் ஜகதாப் கல்வெட்டு குறிப்பிடும் "நாற்பத்தெண்ணாட்டு நானா தேசிச் சித்திரமேழிப் பெரும்பள்ளி" என்னும் பௌத்தப் பள்ளி புத்தர் சிலைகள் கிடைத்த பகுதியான தேசி உய்யகொண்ட சோழப் பட்டணமான இன்றைய கடகத்தூரில் இருந்திருக்கவேண்டும். மேலும் அப்பகுதியில்தான் புத்த தம்ம நிலமும் இருந்ததாக கடகத்தூர் முடிகொண்ட சோழீச்சுரமுடைய நாயனார் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

மங்கலமுடையான்

இக்கல்வெட்டில் தானம் வழங்கியவர் தன்னை மங்கலமுடையான் தில்லையேன் எனக் குறிப்பிட்டுக்கொள்கிறார். இக்கல்வெட்டின் காலமான சுமார் 13ம் நூற்றாண்டளவில் இப்பகுதியை நுளம்பர்கள் ஆண்டனர் எனத்தெரிகிறது. பையூர், பெண்ணேஸ்வரமடம், நெடுங்கல் ஆகிய இடங்களில் அவர்களதுகல்வெட்டுகள்கிடைக்கின்றன.மேலும்ஜகதாப்கல்வெட்டின்அருகே காணப்படும் தர்ம சக்கர, ஸ்தூப சின்னங்களுக்கு சற்று இடப்புறமாக உடுக்கை அல்லது பசும்பை என்ற குறியீடும் ஒரு வாளும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் பொதுவாக வணிகக் குழு கல்வெட்டுகளில் காணப்படும் குறியீடுகள் ஆகும். இக்குறியீடுகளைக்கொண்டு தானம் அளித்த மங்கலமுடையான் ஒரு வணிகனாகவோ அல்லது வணிகர்களை பாதுகாக்கும் படைத் தலைவனாகவோ இருக்கலாம் என்று அறியலாம். கீழ்க்குறிச்சி பௌத்தப்பள்ளி கல்வெட்டிலும் இவ்வணிகச் சின்னங்க ள் உள்ளதையும் அக்கல்வெட்டில் வீரதாவளம் குறிப்பிடப்படுவதையும் நினைவுகூறலாம்.

சித்திரமேழிப் பெரும்பள்ளி

வேளாண்மையையும் வணிகத்தையும் ஒருங்கே மேற்கொண்ட சித்திரமேழிப் பெரியநாட்டார் அனைத்து சமயங்களையும் சமமாகக் கருதினர் என்பதற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிடைத்த சில சான்றுகளை கோடிட்டுக் காட்டலாம். பாரந்தூர், இருதுக்கோட்டை ஆகிய ஊர்களில் கிடைத்த கல்வெட்டுகள், சித்திரமேழி விண்ணகரத்தைக் குறிக்கின்றன. கிருஷ்ணகிரி

பழையபேட்டை சோமீஸ்வரர் கோயில் கல்வெட்டு அங்கிருந்த குணமதீஸ்வரர் கோயிலுக்கு நெற்குந்தியை சேர்ந்த சித்திரமேழிப் பெரியநாட்டார் நொந்தா விளக்கு தானமளித்ததைக் குறிப்பிடுகிறது. ஆம்பள்ளி சமணப் பள்ளிக் கல்வெட்டை ஒட்டிய பாறையில் சித்திரமேழியின் உருவம் வரையப்பட்டுள்ளது. ஒசூர் வெங்கட்டரமணப் பெருமாள் கோயில் விஷ்ணுவர்தனன் கால பாரீஸ்வர ஜினாலயக் கல்வெட்டு அவ்வாலயத்தின் ஆஹார தானத்துக்காக மச்சகாமுண்டன் பள்ளியை சித்திரமேழி நல்லூர் என்னும் பெயரில் தானம் அளித்த செய்தியை விவரிக்கிறது. தற்போது கடகத்தூரில் உள்ள சித்திரமேழி பௌத்தப் பெரும்பள்ளிக்கு அளித்த தானத்தை ஜகதாப் கல்வெட்டுக் கூறுவதைக் கண்டோம். இவற்றின் வாயிலாக சித்திரமேழிப் பெரிய நாட்டார் சைவம், வைணவம், சமணம் மற்றும் பௌத்தம் என அனைத்து சமயங்களையும் சமமாக எண்ணி போற்றி வளர்த்ததைக் காண்கிறோம்.

ஜகதாப் கல்வெட்டு கடைக்கோட்டூர் நாற்பத்தெண்ணாட்டு நானாதேசிச் சித்திரமேழிப் பெரும்பள்ளி எனக் குறிக்கிறது. இது நாற்பத்தெண்ணாட்டு நானாதேசி மற்றும் சித்திரமேழிப் பெரியநாட்டார் என்ற இரு குழுக்களை குறிக்கிறது.

எனவே இதுகாறும் விளக்கியவாறு

1. ஜகதாப் கல்வெட்டில் பெரும்பள்ளி என்ற சொல்லினை அடுத்து புத்த தம்மமாக. என்ற பெயர் வருவதாலும்
2. கல்வெட்டின் முன்பகுதியில் காட்டப்பட்டுள்ள இரு சின்னங்களும் பௌத்தத்தின் தர்ம சக்கரம் மற்றும் ஸ்தூபத்தைக் குறிப்பதாலும்
3. இதே சின்னங்கள் கணிகிலுப்பை புத்தர் சிலைக்கு எதிரே நடப்பட்டுள்ள தூணிலும் காணப்படுவது மற்றும் பட்டு புத்தர் சிலைக்கு பின்புறம் ஸ்தூப சின்னம் காணப்படுவதாலும்
4. கல்வெட்டுக் குறிப்பிடும் கடைக்கோட்டூரில் இரண்டு புத்தர் சிற்பங்கள் கிடைத்திருப்பதாலும்
5. இறுதியாக கடகத்தூர் சிவன் கோயிலுக்கு வழங்கப் பட்ட தானக் கல்வெட்டில் புத்த தம்மம் உட்பட என வருவதாலும்

ஜகதாப் கல்வெட்டுக் குறிப்பிடும் கடைக்கோட்டூர் நாற்பத்தெண் ணாட்டு நானாதேசிச் சித்திரமேழிப் பெரும்பள்ளி என்பது பௌத்த பள்ளியே என்பதும் இது தருமபுரி மாவட்டம் கடகத்தூரில் இருந்துள்ளது என்பதும் பௌத்தம் தொடர்பான தானத்தைக் குறிக்க ஸ்தூப குறியீட்டு வடிவம் பயன்படுத்தப்பட்டிருப்பதும் தமிழக பௌத்த சமயத்தின் வரலாற்றுக்கு புதிய வரவாக அமைகின்றன.

ஜெகதாப் கல்வெட்டு

கடைக்கோட்டூர் புத்தர் அமர்ந்த நிலை

கடைக்கோட்டூர் புத்தர் நின்ற நிலை

செம்மஞ்சேரி கல்வெட்டு

கணிகிலுப்பை கல்வெட்டு

கணிகிலுப்பை தர்ம சக்கரம் மற்றும் ஸ்தூபி குறியீடுகள்

Religious tolerance and harmony in the Tamil country as gleaned through epigraphs with special reference to Islam – An overview

J. Raja Mohamad
Assistant Director (Retd.),
Department of Museums, Government Museum, Chennai,
Director, Centre for Islamic Tamil Cultural Research,
Jamal Mohamed College, Tiruchirappalli.

Abstract

The epigraphs pertaining to Islam and its followers - Muslims - in the Tamil country have least attracted the attention of the scholars. The distorted versions about them in the published historical works seems to have overridden the idea to delve deep in to this subject. But the epigraphs found here have different picture.

Islam was not brought in to the Tamil country by the invaders but by the maritime traders right from 7-8th centuries. These traders moved close to the masses particularly the underprivileged in the society and took up the tenets of Islam and it was attractive to them in the then social milieu and many embraced Islam voluntarily. Thus Islam spread slowly in and as such the Muslims in Tamilnadu belong to the Dravidian stock and Tamil race.

The rulers of the Tamil country such as Pallavas, Pandyas, Cholas, the Nayaks, Sethupathis, Marathas and a host of local chieftains extended patronage and there was no hurdle for the preaching and spread of Islam. These rulers have also endowed liberally to the Islamic institutions like mosques and darghas. Inscriptions dating from 8-9th century, in places like Kayalpattanam, Kilakarai, Tiruchirappalli, Thanjavur etc., and copper plates of the Nayaks, Sethupathis and Marathas speak much on the subject but remains understudied. These epigraphic documents will go to show the generous tolerance of the above rulers and the harmony among the people of Tamil Country. Needless to say it continues to this day.

Islam, the new faith born in the middle of the 7th century C.E., stepped in the shores of South India, as a continuation of the ancient trade contact with Arab lands as attested by Sangam Classics. After the birth of Islam, the Arab maritime traders came here as Arab Muslims embracing the faith of Islam. They came as traders and not as conquerors.

The east coast - the Coromandel Coast - became a welcome place to these Arab Muslim traders as the local rulers extended their protection and patronage because of the profitable coastal and overseas trade. A few among such traders, settled here and married local women. The children born out of such marriage. belonged to mother's stock and a distinct Muslim Community was inaugurated in the Tamil Country[1].

In the long run these Arab merchants, as missionaries, along with the Sufi Saints and Mystics, who followed them, moved close to the masses and peacefully took up to them the tenets of Islam. The rigid caste system in the then larger society that had created inequality among a section of people with no opportunity to social mobility. To them the Islamic brotherhood symbolised emancipation and equality and a large number of such people voluntarily embraced the faith of Islam and the process of voluntary conversion continued with the efforts of these merchant missionaries. Thus the early Islamic community was planted in the coastal belt and hinterland slowly by about 8th century C.E. itself, and the process was easier[2]. As the vast majority of converted native population to Islam, the Muslims of Tamil Country belong to Dravidian stock and Tamil race.

Thus the context of spread of Islam in Tamil country is totally different from that of northern India. The history of Islam and Muslims in India, including the geographical area of the Tamil country, is always clubbed with the 800 years of Muslim rule in Delhi. The traditional stories march over the truth. Distortions have crept in such writings leading to misunderstanding and the consequences are the disturbing factor to the unity and communal harmony.

It is a fact that the evidences and sources for writing the history of the Muslims of Tamil country, are scanty. Fortunately, a large number of epigraphs from the 8-9th century C.E. are available, in the length and breadth of Tamilnadu, but less known among the scholars and understudied. The paper is a discussion about how the Islamic Institutions were patronised by the Hindu rulers of the Tamil Country for centuries based on the primary - epigraphic sources.

Islam was spreading its wings in Tamil country when there was bitter fighting between Jainism, Buddhism and Saivism, Vaishnavism, from the 8th century. The Pandyas, Cholas and Pallavas and other local chieftains. who were the followers of Saiva and Vaishnava faiths being not against the spread of Islam at any point of time. Further they extended their support for the settlements to their Muslim subjects and as well as in their economic activities. They also endowed liberally to their religious institutions and so to say that the Muslims were safe like other subjects under the Hindu rulers.

1 *Mohamad, Raja.J. 2020, Thamilagathil Islam, Jamal Mohamed College, Tiruchirappalli, 1-5*
2 *Gopal, Ram. 1988. A Political History of Indian Muslims, New Delhi. p 2.*

The early Muslims of Tamil country had constructed their religious edifices in the prevailing Dravidian architectural style. Most of such structures had been lost over the period and a few stand to this day. one such early mosque in Dravidian style is found at Uraiyur- Tiruchirappalli, the former Chola - capital. An archaic Arabic inscription here reads that "This mosque was built by Mohamed Bin Hamid Bin Abdillah, in the year (Hijira) 116". (734 C.E.). It is to be observed that during this time Tiruchirappalli region was under the rule of the Pallava Nandhivarman II (710-775 C.E.). This mosque might have been built by the Muslim traders and as well as the natives for their prayers, evidently with the support of the State. This is the only such early mosque with inscriptional evidence in Tamilnadu and first of its kind. This is a good example for the religious tolerance and harmony that prevailed in the Tamil Land[3].

We find a number of old mosque in Dravidian style at Kayalpattanam, one of the early Muslim settlements on the Coromandel Coast. Some of them bear dated inscription from the 10th century C.E., relating to the Pandya endowments. There are a number of epitaphs with inscriptions dating from 8th century which attest the customs and practices of the early Muslim society here.

Karuppudaiyar palli (mosque) near the sea shore here, lost, renovated now, contain an inscription of the period of one Sri Vira Pandya, tells us about the gift of landed properties - for the maintenance of that Sonavapalli - (Sonavan, Sonakan - early name of the Muslims of Tamil country). On palaeographical grounds this inscription is said to belong to 10th century C.E. The mosque might have in existence prior to this period. There are also inscription of one Maravarman Kulasekara Pandya (1314-1362 C.E) and Maravarman Veera Pandya (1334-1367) about the gift of lands[4].

Another mosque - Kadarkarai Palli contain and inscription of Jatavarman Kulasekara Pandya (1190-1218 C.E.) about his liberal grants[5].

An inscription of Arikesari Parakrama Pandya (1442-163 C.E.) is found in Kodimarathu Siru Nainar Palli also called Thurukkanainarpalli[6].

We know that temples are named after the ruler who built it (eg. Raja Rajaswaram). But a Hindu ruler has named a mosque after him, and as well the Khazi (priest) of the mosque. Udhaya Marthandavarman, the ruler of Nanjil Nadu, in the year

3 *Mohamad, Raja.J.,. (2004), Maritime History of Muslims of Coromandel - A Socio economic study of Tamil Muslims 1740-1900, Chennai, 64-65; Mohamad, Raja.J, 2004. Islamic Architechture in Tamilnadu, Chennai, 30-31*

4 *Mohamad, Raja. J. Islamic Architecture, op.cit. p-32.*

5 *Rasu, S. and Jamal Mohamed, K. (ed) 2007-Thamilaka Islamia Varalarru Aavanangal, Erode, 110.*

6 *Ibid. 112*

Kollam 568/1387 C.E. renovated the old Juma Mosque at Sonadukondanpattanam - Kayalpattanam and named it as **Udhayamarthanda Perum Palli**, and the Khazi as Udhaya Mardhanda Kadiriar - kazi and also endowed a portion of the taxes collected at that port town[7].

When the Chola power was at its peak, the Muslim subjects were employed in high position in the State. An inscription in Thanjavur Brahadiswara temple of Raja Raja the great(985-1014 C.E) mention a high, level officer Sonakan Savur Paramjothi. (It is said that Savur may be the corruption of Jaffar). This Sonakan Savur has given a gift of 96 goat to the Brahadiswara temple for lighting lamp[8]. He was also an officer under Rajendra Chola (1012-1044) – as Thirumandhira Olai Naygam and the king had conferred the title 'Rajendra Cola Gandharuva Peraraiyan' on him[9]. The Esalam copper plate also refer this officer as olai nayagam under Rajendra Chola and called as 'Sonakan Savur Paramjothi aana Rajendra Chola Gandharuva Perarayan'[10].

The Anaimangalam Copper Plates of Raja Raja-I (985-1014) mention an office- 'Sannamangalathu Karanathan Mathyastan Thurukkan Ahamadhu'[11]. (Thurukkan – Muslim).

It is interesting to note that the Muslims in Tamil country were called as Sonakan and Thulukkar from the early times. It could be said that there might had been a considerable Muslim population during 10-12th century C.E. under the patronage of the rulers, particularly the Chola kings.

The Nayak rulers of Thanjavur had given a number of endowments to the Muslim institutions. The first Nayak ruler Sevappa Nayak in the year 1531 has given the entire village of Adirampattinam as sarva maniyam to the dargah of Haja Alaudin Chisthia Waliyullah at Adirampattinam. By this the maintenance of the dargha and annual kanduri festival were ensured[12].

The Sethupathis of Ramanathapuram were protectors of their Muslim subjects. In the hostile political situation created by the European trading companies the Sethupathis extended all concessions to their economic ventures particularly the maritime activities. Muslim community leaders were appointed in important administrative positions, rental farmers etc. Prominent ship owners were partners in maritime trade. Muslims were preferred for pearl and chunk fishing. The European Company records speak much on the subject. A large number of mosques and darghas had received endowments and gifts. A few are given here.

---

7 *ARE. 311 of 1964*

8 *S.I.I. Vol.II No.95*

9 *E.C. Vol.X No.3*

10 *Thamilnattu Seppedukal, Part I. 341,342*

11 *Anaimangalam Copper Plates (Leiden Plates), I- 12.2.235*

12 *Krishnamuthi,S., Taminattuseppedugal, II.57*

The Sethupathi, Kumaramuthu Vijaya Ragunatha S ethupathi Katha Thevar in the year1742, gifted a village Mayakulam - tax free - for the maintenance of the famous dargha at Ervadi[13]. (Copper plate). For feeding the religious scholars coming to the Esa mosque at Ramanathapuram a village, Kilavanery was given with all lands wet and dry as maniam[14]. (Coppper plate). For the maintenance of the Abil – Kabil dargha, Rameswaram an entire village –Pudukkulam was was gifted[15]. Further the mosques and darghas at Poolangal, Abiramam, Naranamangalam, Ponthappuli, Thondi, Kattubava chatram, Thiruchlial, Pullukudi, Karendal, Kuchaneri, Nadakuiam are a few, to mention, were under the patronage of the Setupathi rulers[16]. There are many more.

The Marathas ruled from Thanjavur (1676-1855). Their rule was one of communal harmony and religious tolerance can be said as a good example. Their trusted commanders were Muslims from the inception of their rule. Many were appointed in very high positions in the administration. The Islamic Sufi saints were revered and patronised. In official correspondence Islamic Hijiri era was followed. Urdu and Persian were used in correspondence Urdu, Persian and Arabic were taught in public schools. Islamic scholars and Sufi saints were treated with honour. Moharam festival was celebrated with pomp and show. From this period the Moharam festival came to be called as 'Alla Sami Pandigai'. There was cordial relationship between Muslim subjects and the rulers. Many mosques, darghas and other Islamic institutions received liberal grants and gifts. The saint Shahul Wali and his dargah at Nagore was always in the attention of the rulers. They visited the dargah vey often. They sent presnts during the annual kanduri[17]. Maratha ruler Thukkoji –Thlaja (1729-1735) endowed a large extent of land in front of the Nagore dargah, in which his so Prathab Singh, built a Manora (Tower)[18].

Prathab Singh (1739-1763) constructed the eleven storied imposing Manora – Toower in front of the dargah, in the year 1752, a beautiful structure of its kind. He also gifted fifteen villages for the maintenance of the dargah[19].

The mosque which was outside the fort had been damaged during French invation.Pratab Singh recontrcted it and endowed liberally with 12648 kuli wet land

---

13 *Kamal,S.M., 1992, Sethupathi Mannar Seppudukal 472-476*

14 *Ibid. 445-451*

15 *Ibid. 480-486*

16 *Rasu,S., Varalrru Avanangal, 131-132*

17 *Venkataramaiah,K.M. 1987 , Thanjaja Marattia Mannar Varalaru (Mackenzie mauscripts 3180),Thanjavur., Vekataramaiah,K.M.,1984, Thanjai Marattia Mannar Kala Arasiyalum Samuthaya Vazkkaiyum (Modi manuscripts- Tamil translation), Thanjavur.; Balasubramani an,P.,(ed). 1989,Thanjai Marattia Mannar Modi Avana Thamilakkamum Kurippuraiyum,I. Thanjavur.*

18 *Rasu,S.1987, Thanjai Marattiaar Kaivettukal, Thanjavur, 184.*

19 *A.R.E.293 of 1963-64.*

to the masque at Saliamangalam village, founded a colony there and named it as 'Mohamedpuram'[20]. A large number of Mosques and darghas were patronised by the Maratha rulers.

There are many sources in original about donations to the Islamic institutions by the rulers of other dynasties, local chieftains, commanders, individuals and so on, which requires an intensive study.

On the other side, the donations and gifts given by the Muslim rulers, chieftains and individuals to the temples and Hindu religious institutions are innumerable according to epigraphs, copper plates, palm leaves etc., are awaiting the attention of the scholars. A study of all these materials together will go to show the communal harmony, tolerance fostered by oy all our rulers and the cordial relationship among the population for peaceful living for centuries and it is the need of the day!!

---

20 *Venkatramaiah, K.M., Modi manuscript leaf- 14-41.*

கல்வெட்டுக்கள் - வரலாற்று ஆதாரங்கள்

கி. ஸ்ரீதரன்
தொல்லியல் துறை (ஓய்வு)
சென்னை

தமிழ்நாட்டு வரலாற்றுக்கு முக்கியமான அடிப்படை ஆதாரமாக விளங்குபவை கல்வெட்டுகளே ஆகும். நமது நாட்டில் தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் கல்வெட்டுகள் காணப்படுவது நமக்கு பெருமை அளிக்கக் கூடியதாகும். தமிழ் மக்களின் பண்பாடு மற்றும் வரலாற்றுச் சிறப்பை கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகளின் வழியே அறிந்து கொள்கிறோம். மன்னர்கள் ஆட்சி முறை, நாட்டுப்பிரிவு, நிர்வாக அமைப்பு, வரி விதிப்பு முறை, நீதி வழங்குதல், நீர்ப்பாசன முறை, நீர் ஆதாரங்களை பராமரித்தல், விளைநில மேம்பாடு, வணிகம், திருக்கோயில் வரலாறு மற்றும் நிர்வாகம், கோவிலுக்கு அளிக்கப்படும் கொடைகள், சமுதாய வாழ்க்கை பற்றி அறிந்து கொள்ள கல்வெட்டுகள் தரும் செய்திகள் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன.

கல்வெட்டுகள் திருக்கோவில்களில் மட்டும்தான் இருக்கிறது என எண்ண வேண்டாம்! நடுகற்கள் மற்றும் ஏரிகளில் காணப்படும் குமிழி, தூம்பு, மடை போன்றவற்றிலும், கோவில்களில் இசைக் கருவிகளிலும், பூசை பாத்திரங்களிலும் மற்றும் செப்புத் திருமேனிகளிலும், கற்சிற்பங்களிலும் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன.

தமிழக நீர்ப்பாசன அமைப்பு முறையைப் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகள் திண்டிவனம், விழுப்புரம் ஆகிய இடங்களில் காட்சியகம் போலவே அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது போன்றே மத்திய, மாநில அரசு தொல்லியல் துறைகளும், அரசு அருங்காட்சியகத் துறையும் மாவட்டங்களில் உள்ள அருங்காட்சியகங்களில் அவ்வப்பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகள், நடுகல், சிற்பங்கள் போன்றவற்றை சேகரித்து காட்சிக்கு வைத்துள்ளன.

பல கல்லூரிகளும், பள்ளிகளும் வரலாற்றுத் துறை சார்பாக இவற்றை சேகரித்து, மாணவர்களுக்கு தமிழக வரலாற்றில் ஆர்வம் ஏற்படுத்தி ஊக்கம் அளித்து வருகின்றன. வரலாற்று ஆர்வலர்களும், புதிய புதிய கல்வெட்டுகளை கண்டுபிடித்து தமிழ்நாட்டு வரலாற்றுக்கு தரவுகளை சேகரித்து வருகின்றனர்.

கல்லில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளைத் தவிர மண்பானை ஓடுகளில் காணப்படும் எழுத்துக்கள், காசுகளில் காணப்படும் எழுத்துக்கள், செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் போன்றவையும் தமிழ்நாட்டு வரலாற்றுக்கு ஆதாரமாக விளங்குகின்றன.

கல்வெட்டு என்றால் "கல்லின் மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள்" என்பது பொருள். கல்லில் பொறிக்கப்பட்டால் அவை நிரந்தரமாக இருக்கும். எளிதில் அழிக்க முடியாது எனக் கருதினர். எனவே தான், இளமையில் கல்வி கற்க வேண்டும் என்பதை 'கல்மேல் எழுத்துப் போல் காணுமே' என்றும் 'இளமையில் கல்வி-சிலையில் எழுத்து' என்றும் கூறிச் சென்றனர்.

தமிழி

தமிழ்நாட்டு கல்வெட்டுகளில் தொன்மையான எழுத்தில் அதாவது "தமிழ்" பிராமி – "தமிழி" எழுத்தால் எழுதப்பட்ட கல்வெட்டுகள், சமண சமய முனிவர்கள் வாழ்ந்த இடங்களில் பெரும்பாலும் காணப்படுகின்றன.[1,2,3.] மதுரை நகருக்கு அருகில் மலைக் குன்றுகளில் இத்தகைய கல்வெட்டுகள் பெருமளவில் காணப்படுகின்றன. சங்க கால மன்னர்கள் பற்றிக் கூறும் மதுரை அருகே மாங்குளம் என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு பாண்டிய மன்னர் பற்றியும், திருக்கோயிலூர் அருகே ஜம்பை என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டு 'அதியமான் நெடுமான் அஞ்சி' பற்றியும், கரூர் அருகே புகளூர் மலையில் காணப்படும் கல்வெட்டு பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் சேர மன்னர்கள் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. [4]

சங்ககால மன்னர்கள்

மாங்குளம் கல்வெட்டில் பாண்டியன் நெடுஞ்செழியன் பற்றி குறிப்பிடப்படுகிறது. ஜம்பை கல்வெட்டில் "ஸதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பளி" என்று குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்கள் குறிக்கும் குறுநில மன்னர்களில் ஒருவனான 'அதியமான்' மரபினன் பெயரைத் தாங்கியிருப்பது சிறப்பாகும். அம்மன்னனை பெயருக்கு முன்னே உள்ள 'சதியபுதோ' என்ற சொல் பேரரசன் அசோகனின் பாறைக் கல்வெட்டில் இடம் பெறுகிறது. 'சதியபுத' என்ற பிராகிருதச் சொல்லின் மூலவடிவம் தமிழில் உள்ள 'அதியமான்' என்பதே ஆகும். ஜம்பை கல்வெட்டில் அதியன் - சதியபுதோ என்ற இரு சொற்களும் இடம் பெற்றிருப்பதின் மூலமாக மௌரியர் கல்வெட்டு குறிக்கும் 'சதியபுதோ' அதியமான்களே என்பது உறுதியாகிறது. இதன் காலம் கி.மு.2-ம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். [5,6,9,10]

சேரர் கல்வெட்டு - கருவூர்

கருவூர் அருகே புகளூர் மலையில் காணப்படும் கல்வெட்டில் சங்க கால சேர மன்னர்கள் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு காணப்படுகிறது. பதிற்றுப்பத்து [7,8,9]

ஆகியவற்றின் பாட்டுடைத் தலைவர்களான சேர மன்னர்கள் இவர்கள் ஆவர். சேர மன்னர்களின் மூன்று தலைமுறையினர் சொல்லப்படுகின்றனர். கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோ அவன் மகன் இளங்கடுங்கோ ஆகிய அரசர்களைப் பற்றியும், கருவூரின் தொன்மைச் சிறப்பினை அறிந்து கொள்ளவும் இக்கல்வெட்டு உதவுகிறது. [7,8]

கல்வெட்டுகள் பாதுகாப்பு

மதுரை மாவட்டம் முதலைக்குளம், அரிட்டாப்பட்டி தமிழி கல்வெட்டுகள், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பூலாங்குறிச்சி என்ற ஊரில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் காணப்படும் நெகனூர்பட்டி, தொண்டூர் தமிழிக் கல்வெட்டுகள் ஆகியவற்றை பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது வரலாற்று ஆர்வலர்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

இவற்றில் ஒருசில இடங்களில் மலைகளை கற்களுக்காக வெடி வைத்து உடைக்கின்றனர் இதன் காரணமாக கல்வெட்டுகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்வெட்டுகள் காணப்படும் இடங்களுக்கு அருகாமையில் கல் உடைப்பதை தடுக்க தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இக்கல்வெட்டுகளைக் காணச் செல்பவர்கள் கல்வெட்டுகளின் அருகிலேயே தங்களது பெயரை இரும்பு – ஆணி கொண்டு பொறித்து விடுகின்றனர். இத்தகைய அறியாமை விலக்கப்பட வேண்டியதாகும்.

கல்தச்சர்

இந்தக் கல்வெட்டுகள், ‘சாசனம்", ‘சிலாலேகை", எனவும் அழைக்கப்படுகின்றன. இவற்றை கோயில்களில் பொறிக்க ‘கல்-தச்சர்களும்’ இருந்திருக்கின்றனர். அவர்களின் பெயர்களும் கல்வெட்டின் இறுதியில் குறிப்பிடப்படுவதைக் காணலாம். நாகப்பட்டினத்தில் உள்ள காயாரோகணமுடையார் கோயிலுக்கு முதலாம் ராஜேந்திரசோழன் காலத்தில், மாணிக்கம் - பச்சை முதலிய கற்கள் பொதித்த ‘வீர பட்டம்’ என்ற ஆபரணம் இறைவனுக்கு அளிக்கப்பட்டது. அதன் எடை மற்றும் இதர குறிப்புகள் கல்வெட்டில் காணப்படுகின்றன. இறுதியில் “தேவகன்மிகள் சொல்ல கல்வெட்டினேன் நாகப்பட்டினத்து ஏறன் சடையனான தேவர்கண்டாசாரியனேன்’ என தச்சர் பெயர் குறிப்பிடப்படுவது சிறப்பானது. (ARE - 164/56-57)[11]

முதலாம் பராந்தகசோழனின் கல்வெட்டு திருத்தணி வட்டத்தில் உள்ள நெமிலி வைகுண்ட பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. இக்கல்வெட்டில்

சிலாசாசனத்தின்படி சிலாலேகை செய்தபடி இக்கோயிலில் திருமேற்றளி தேவர்க்கு அமுது, சந்தி விளக்குகள் ஏற்ற தானம் அளித்த செய்தி காணப்படும். இதே கல்வெட்டின் இறுதியிலும் முதலாம் பராந்தகசோழனது கல்வெட்டு தொடர்ந்து பொறிக்கப்பட்டுள்ளது. (ARE - 152/1942-43)[12]

மயிலாடுதுறை அருகில் உள்ள திருவேள்விக்குடி மணவாளேசுவரர் கோயிலில் காணும் இரண்டாம் இராஜேந்திர சோழன் கல்வெட்டில் இறைவனுக்கு அமுது படைக்க தானம் அளிக்கப்பட்டது. இச்செய்தியை மாகேசுவரர்கள் சொல்ல இக்கல்வெட்டுகள் எழுதினேன் மாடலன் திருவேள்விக்குடி விக்கிரம சோழனேன் இவை என்னெழுத்து என்று கல்வெட்டு பொறித்தவரின் பெயர் குறிப்பிடப்படுகிறது. (ARE - 108/1926)[13]

தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு

தஞ்சாவூர் பெரிய கோயிலில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் அனைத்தும் திருக்கோயில் பற்றிய மிகச்சிறப்பான செய்திகளை வழங்குகின்றன. இக்கோயிலில் காணும் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்துக்கள் மிகவும் அழகாக, ஒரே மாதிரியாக பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு சிறப்பாக பொறித்தது யார் என்பது அறிய ஆவலாக உள்ளதல்லவா?

“பெரிய கோயிலில் திருச்சுற்று மாளிகையில் 36 பரிவார ஆலயங்களில் ஒன்று உமாபரமேசுவரியாருக்காக எடுக்கப்பெற்றதாகும். அவ்வாலயத்தில் காணப்படும் கல்வெட்டில்,

“உடையார் கோயில் கல்லில் எழுத்து வெட்டுவிக்கின்ற அருமொழிதேவ வளநாட்டு வண்டாழை வேளூர் கூற்றத்து சாத்தன்குடி வெள்ளாளன் இரவி பாளூருடையார்”

என்று குறிக்கின்றது. எனவே தஞ்சை கோயிலில் உள்ள கல்வெட்டுக்களை “இரவி பாளூருடையான்” என்பவரால் சிறப்பாகப் பொறிக்கப்பட்டது என்பதை அறிகிறோம்.

தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் மேலும் ஒரு சிறப்பு காணப்படுகிறது. இத்திருக்கோயிலுக்கு மெய்க்காப்பாளர்கள் நியமிக்கப்பட்ட செய்தியை கூறும்பொழுது, கல்வெட்டு வெட்ட இடம் போதவில்லை. எனவே 'இராஜராஜன் திருவாசலுக்கு வடக்கே ஈசானமூர்த்தி ஆலயம்வரை கல்லில் வெட்டி அங்கு இடம் போதாதால் இங்கே வெட்டப்பட்டுள்ளது", என கல்வெட்டு துவங்குகிறது. கல்வெட்டு கூறும் செய்தி அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் மேலும் செய்திகள் ஆவணப்படுத்த வேண்டும் என்ற இராஜராஜ சோழனின் நல்ல எண்ணத்தினை உணர முடிகிறது. (S.I.I. Vol.II No.57) [14]

திருவாய்மூர் கோயிலில் விளக்கு எரிக்க திருவாய்மூர் மாணிக்கம் என்ற நடனப்பெண் மூன்றாம் குலோத்துங்கச்சோழன் காலத்தில் தானம் (கி.பி.1178-1218) அளித்தாள். அப்பொழுது அதனை கல்வெட்டாக பொறிக்கவில்லை. பின்னர் மூன்றாம் இராஜராஜசோழன் காலத்தில் இது (கி.பி. 1236-ல் - 18 ஆண்டுகள் கழித்து) கல்வெட்டாக பொறிக்கப்படுகிறது என்ற குறிப்பு சிறப்பானது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிபந்தத்தை எப்படியும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று எடுக்கப்பட்ட நடவடிக்கையினை இக்கல்வெட்டு கூறுகிறது. (ARE - 300/1960-61) [15]

கல்வெட்டின்படி

முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1258) காலத்தில் நந்தவனப் பராமரிப்புப்பணிக்காகவும் திருநாள் நடத்தவும் நிலம் அளிக்கப்பட்டது. அந்த வருவாயிலிருந்து முன்னாளில் மன்னன் பிறந்தநாள் சிறப்பு வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. இதனைக் கல்வெட்டு 'முற்காலத்தில் கல்வெட்டினபடி' என்று கல்வெட்டினைச் சான்றாகக் கொண்டு விழா நடத்தப்பட்டதாக பெரம்பலூர் மதன கோபாலசுவாமி கோயில் கல்வெட்டால் அறிகிறோம். (ARE - 9/1913) [16]

காஞ்சிபுரம் வட்டத்தில் உள்ள பெருநகர் பிரமீசுவரம் உடைய நாயனார் கோயிலில் காணும் கல்வெட்டு செய்தி. விஜயகண்ட கோபாலதேவர் தனது 21-வது ஆட்சி ஆண்டில் இக்கோயில் இறைவனுக்கு வைகாசி விசாகத் திருவிழா நடத்த 47 கழஞ்சு பொன் அளித்து அதன் வட்டியைக் கொண்டு நடத்த வழிவகை செய்திருந்தார். அத்திருவிழா வெகுநாட்களாக நடக்காமல் இருந்தது. விருப்பெருமாள் மகன் ஆளப்பிறந்தான் என்னும் இராசராச சம்புவராயன் என்பவன் இருதூண்களில் இருந்த கல்வெட்டு ஆவணங்களை சரிபார்த்த பின்னர் மீண்டும் திருவிழாவினை நடத்த 47 கழஞ்சு தானம் அளித்த செய்தியினால் கல்வெட்டுகள் ஆதராமாக விளங்கியதற்கு சான்றாக அமைகிறது.(353/1923)[17]

கல்வெட்டு-அழித்தால் தண்டனை

விஜயநகர மன்னன் இரண்டாம் தேவராயன் காலத்தில் (கி.பி.1428) அரசுக்கு செலுத்த வேண்டிய பயிர் வழி வரிகளும் மக்கள் செலுத்த வேண்டிய வரிகளும் நிர்ணயம் செய்யப்பட்டு கல்வெட்டில் பொறிக்கப்பட்டது. இக்கல்வெட்டுப்படி செய்யாமல் இருந்தவர்களுக்கும், கல்வெட்டினை அழிக்க முயல்பவர்களுக்கும் அளிக்ககப்படக்கூடிய தண்டனைப் பற்றியும் பெரம்பலூர் அருகே உள்ள அசூர் சொக்கநாதசுவாமி கோயில் கல்வெட்டு கூறுகிறது. (257/2005)[18]

கல்வெட்டு-சிதைத்தல்

விழுப்புரம் மாவட்டம் திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலில் காணப்படும் சதாசிவ மகாராயரின் கல்வெட்டு ஓர் அரிய செய்தியினை

குறிப்பிடுகிறது. சூரப்ப நாயக்கர் ஆளுமை காலத்தில் கைக்கோளர் பிரிவினருக்கு சலுகைகள் மற்றும் உரிமைகள் வழங்கப்பட்டிருந்த கல்வெட்டினை சிலர் சிதைத்துவிட்டனர். கைக்கோளர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஒப்புக்கொண்டு மீண்டும் கல்வெட்டினை வெட்டி வைத்துள்ளனர். (ARE 41/1922)[19]

மற்ற கோயில்களிலும் பொறிப்பு

பண்டைக் காலத்தில் எடுத்த ஒரு சில நடவடிக்கைகள் ஒரு கோயில் தவிர மற்ற கோயில்களில் உள்ளவர்களும் பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில் கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டு வந்துள்ளதையும் அறிய முடிகிறது. நன்னிலம் வட்டத்தில் ஸ்ரீவாஞ்சியம் கோயில் அருகாமையில் அச்சுதமங்கலம் சோமனாத சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் திருப்பணிக்காக மூன்றாம் ராஜராஜசோழன் காலத்தில் விஜயாலய முத்தரையன் என்பவன் நிலம் அளித்தான். இச்செய்தியை, திருச்சி அருகே உள்ள திருநெடுங்களம் கோயிலிலும் வெட்ட வேண்டுகோள் விடுத்ததை – “இப்பிரமாணப்படியே உடையார் நெடுங்களமுடையர் கோயிலிலே கல்வெட்டவும் கடவ” எனக் கல்வெட்டு குறிப்பிடப்படுகிறது. விஜயாலய முத்தரையன் பற்றிய செய்திகள் திருநெடுங்களம் கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுவது சிறப்பானது. (410/1928) [20]

கொங்கு நாட்டைச் சேர்ந்த கம்மாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சில தடைகள் நீக்கப்பட்டதை ஈரோடு மாவட்டம் அந்தியூர் செல்வீசுவரர் கோயிலில் காணப்படும் வீர பாண்டியன் (கி.பி.1275) கல்வெட்டில் கூறப்படுகிறது. இதே கல்வெட்டின் தகவல்கள் பேரூர், கரூர், குடிமங்கலம், கடத்தூர், மொடக்கூர், பாரியூர், அவிநாசி ஆகிய கோயில்களிலும் காணப்படுகிறது. அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு பல கோயில்களில் வெட்டப்பட்டிருக்க வேண்டும்.(227/1928) [21]

செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூர் முத்தீசுவரர் கோயிலில் காணப்படும் கல்வெட்டு காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலிலும் வெட்டிக்கொள்ள அவனியாளப் பிறந்தான் காடவன் கோப்பெருஞ்சிங்கன் உத்தரவு பிறப்பித்துள்ளதை கூறுகிறது. (ARE 285/1921) [22]

எழுத்து மாற்றம்

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம் சீவலப்பேரிக்கு கருமாணிக்க ஆழ்வார் கோயிலில் காணப்படும் முதலாம் இராஜராஜ சோழனது கல்வெட்டு முதலில் தமிழில் தொடங்கி இறுதியில் வட்டெழுத்தாக முடிகிறது. (90/2005). விளக்கு தானம் அளித்த செய்தி கூறப்படுகிறது. [23]

கல்வெட்டுகளைப் பாதுகாத்தல்

கல்வெட்டுகள் கோயில்களின் சுவர்களிலும் பொறிக்கப்பட்டன. ஸ்ரீரங்கம், திருவானைக்கா, திருவாரூர், சிதம்பரம் போன்ற பெரிய கோயில்களின் மதில் சுவர்களிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை, வெயில் - மழையில் தொடர்ந்து இருப்பதால் கற்களின் மேற்பகுதியில் சிதைவுகள் ஏற்பட்டு கல்வெட்டுகள் அழிவதற்கு வாய்ப்பு உண்டு. இதனைக் காப்பாற்ற ரசாயனப்பூச்சு பூசி பாதுகாக்கலாம்.

பழங்கல்வெட்டுப்படி

பண்டை நாளில் கோயில்களின் திருப்பணி செய்யும்பொழுது முக்கியமான கல்வெட்டுகளை படியெடுத்து மீண்டும் பொறித்தனர் என பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

திருமழபாடி திருக்கோயில் ராஜராஜசோழனின் 28-ஆம் ஆட்சியாண்டில் கோயில் விமானம் புதுப்பிக்கப்பட்டது. அப்பொழுது கருவறை சுவர்களிலிருந்த கல்வெட்டுகளையெல்லாம் ஏட்டில் எழுதிக் கொண்டார்கள். இதனை-

“திருமழுவாடி உடையார் ஸ்ரீ விமானம் வாங்கித் திருக்கற்றளி யெடுக்க வென்று உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் அருளிச்செய, திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி இஸ்ரீவிமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சொர்பிக்கவென்று அதிகாரிகள் இருமுடி சோழ மூவேந்த வேளார் நியோகமும், மும்முடிசோழ பிரமாதிராயர் நியோகமும்" என்று கல்வெட்டு குறிக்கிறது.

விமானம் புதுப்பிக்கப்பட்டுக் கற்றளியாக எழுப்பப்பட்டபின் மீண்டும் அவை பொறிக்கப்பட்டன. இதனை ராஜேந்திரனின் 14-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு குறிக்கிறது.

திருமழுவாடி உடையார் விமானம் முன் வாங்கிச் செய்கிறபோது இஸ்ரீவிமானத்துள்ள கற்படி மாற்று சொர்த்த பொத்தகப்படி மீளக் கல்வெட்டுவிக்க வென்று தண்டநாயக்கன் உய்யக்கொண்டான் வளநாட்டு வெண்ணாட்டு பிரம்மதேயம் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்து நராக்கன் இராமன் அருமொழியான உத்தம சோழ பிரம்மராயன் ஓலை தமக்காக... கணக்கினாலும் கல்வெட்டு விதிதபடி முன்பு கல்வெட்டு சொர்த்த பொத்தகப்படி... என்று கல்வெட்டு கூறிச் செல்கிறது. பண்டை நாளில் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளுக்கு அளித்த முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. (S.I.I. Vol.5 - 651, 652)[24]

இச்செயலை அக்கல்வெட்டு, ‘பழங்கல்வெட்டுப்படி’ ‘மீளக்கல்வெட்டுவிக்க’ எனக் குறிப்பிடுகிறது. கும்பகோணம் அருகில் உள்ள திருக்கோடிக்காவல் கோயிலில் பெரும்பாலான கல்வெட்டுக்ள் மீண்டும்

கோயில் திருப்பணி முடிந்தபின் பொறிக்கப்பட்டதை ‘இதுவும் ஒரு பழங்கற்படி’ எனக் குறிப்பிடுவதால் உணரமுடிகிறது. (S.I.I. Vol.XIII - 127) [25]

"விமானமிழிச்சு எடுக்கிறபோது படியெடுத்த படிப்படி இற்றை நாளில்" என கல்வெட்டு படியெடுக்கப்பட்டதை திருவெண்ணைநல்லூர் வைகுந்த பெருமாள் கோயிலில் காணப்படுகிறது. (ARE 1921/486) [26]

ஈரோடு மாவட்ட்டத்தில் அறச்சலூரில் அறச்சாலையம்மன் கோயிலில் படிக்கட்டில் காணப்பட்ட கல்வெட்டு தற்பொழுது ஈரோடு கலைமகள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளது. போசள மன்னன் வீரவல்லாளன்-இ (14-ஆம் நூ.ஆ.) காலத்திய கல்வெட்டினை கீழிருந்து மேலாக வாசிக்க வேண்டும். 'பல்லவராயன் கண்ட தன்மம் நன்மங்கலஞ் சிறக்க வீர வல்லாளதேவர் " என்பது கல்வெட்டு வாசகம். [27]

விழுப்புரம் மாவட்டம் பிரம்மதேசம் என்ற ஊரில் உள்ள பிரம்மீசுவரர் கோயிலில் காணப்படும் முதலாம் இராசேந்திரன், வீரராசேந்திரன் காலக் கல்வெட்டுகளில் நமச்சிவாயம் - ஸ்வஸ்திஸ்ரீ எனக் கல்வெட்டு துவங்குவது சிறப்பானதாக விளங்குகிறது. [28]

தமிழ்நாட்டு வரலாற்றுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்கும் கல்வெட்டுகளை அதன் முக்கியத்துவத்தை உணராமல் தற்போது சில கோயில்களில் கல்வெட்டுகளின் மீது சுண்ணாம்பு, வர்ணம், சிமெண்ட் போன்றவற்றை பூசி விடுகின்றனர். இதனால் கல்வெட்டுகளுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, திருப்பணிகள் மேற்கொள்ளும் பொழுது கவனத்தில் கொண்டு கல்வெட்டுகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இதற்கும் கல்வெட்டுகளே நமக்கு வழிகாட்டுகின்றன.

முடிவுக்குறிப்புகள்

1. கல்வெட்டியல் (தொல்லெழுத்திலும் - கல்வெட்டிலும்) நால்வர் - 1972 - தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு)
2. காசிநாதன். நடன. 1989 - கல்லெழுத்துக்கலை - மணிவாசகர் பதிப்பகம் - சென்னை.
3. இராசேந்திரன். பொ, சாந்தலிங்கம். சொ. 2013 - கல்வெட்டுக்கலை - பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வுமையம்.
4. ஸ்ரீதர். தி.ஸ்ரீ., 2006 - தமிழ்நாடு கல்வெட்டுகள் - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.
5. Mahadevan, Iravatham 2003 - Early Tamil Epigraphy : From the Earliest Times to the Sixth Century A.D.,
6. Rajan K. 2015 - Early Writing System - Journey from Graffitti to Brahmi.
7. Nagaswamy R. 1995 - Roman Karur

8. ஸ்ரீதரன். கி., அர்ச்சுனன் கோ., 1992 - கருவூரும் அகழ்வைப்பகமும், தொல்லியல் துறை.

9. Sitharam Gurumurthy Dr. 2008 - Excavation at Mankulam, State Dept. of Archaeology.

10. ஸ்ரீதர். தி.ஸ்ரீ. 2005 - ஜம்பை ஊர் ஆய்வு - தொல்லியல் துறை.

11. சீதாராம் குருமூர்த்தி - பதிப்பாசிரியர்கள் நா. மார்க்சியகாந்தி - சு இராசகோபால் - 2007 - நாகப்பட்டின மாவட்டக் கல்வெட்டுகள் - தொல்லியல்துறை.

12. கிருஷ்ணமூர்த்தி ச. - 2021 - தமிழ்நாட்டுக்கு கல்வெட்டுகள் தொகுதி XVII - திருவள்ளூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1.

13. ஸ்ரீதர் தி. ஸ்ரீ. - 2004 - கி.ஸ்ரீதரன் - ஆ. பத்மாவதி - அர. வசந்தகல்யாணி தமிழ்நாட்டு கல்வெட்டுகள்

14. தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி-2 எண் :57

15. சீதாராம் குருமூர்த்தி ப.ஆ. 2007 - நாகப்பட்டின மாவட்டக் கல்வெட்டுகள்

16. ஸ்ரீதர் தி. ஸ்ரீ. - ஸ்ரீதர் தி. ஸ்ரீ. - 2010 - ஆசிரியர்கள் சொ. சாந்தலிங்கம், நாக. கணேசன், இரா. ஜெயராமன் - தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி - III.

17. ஜகந்நாதன் .தி. (ப.ஆ.) - 2010 - தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் - தொகுதி - 5.

18. ஸ்ரீதர் தி.ஸ்ரீ. (ப.ஆ.) - 2010 - தமிழ்நாட்டுக்கு கல்வெட்டுகள் தொகுதி - III.

19. சிவானந்தன் .இரா. 2021 - விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 3, 41/1922.

20. ஆ. பத்மாவதி - 1980 - நன்னிலம் கல்வெட்டுகள் - இரண்டாம் தொகுதி - அச்சுதமங்கலம் 410 / 1978.

21. சீதாராம் குருமூர்த்தி - 2007 - பதிப்பாசிரியர் முனைவர் செ.இராசு ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1, 227/1928.

22. ஜகந்நாதன் .தி. (ப.ஆ.) - 2009 - பதிப்பாசிரியர் சிவானந்தம் .இரா. 2017 - காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 5, 285/1921.

23. ஸ்ரீதர் தி.ஸ்ரீ. (ப.ஆ.) - 2009 - பதிப்பாசிரியர்கள் - செந்தில் செல்வக்குமரன் சொ. சாந்தலிங்கம், சொ. சந்திரவாணன் - திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1. - 90/2005

24. ராமச்சந்திரன் எஸ் - திருமழபாடி - S.I.I. - Vol-V, - 651 - 652. பக்கம் - 89.

25. காசிநாதன் . நடன - 1992. திருக்கோடிகா கல்வெட்டுகள் 23/1931.

26. மார்க்சிய காந்தி .நா. 2021 - தமிழ்க்கல்வெட்டுகள் தொகுதி - XIV - விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1.

27. சீதாராம் குருமூர்த்தி - 2007 - பதிப்பாசிரியர் - ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1. பக்கம் - 5.

28. சிவானந்தம் .இரா. 2021 - விழுப்புரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 3..

கொங்கு நாட்டில் வீரகேரளர்களின் கல்வெட்டுகள்

இரா.ஜெகதீசன்
இயக்குநர்,
நா மகாலிங்கம் தமிழாய்வு மையம்
சின்னவேடன்பட்டி,
கோயம்புத்தூர் – 641045
Jagadeesan2kongu@gmail.com

சுருக்கம்

இந்தியாவில் ஒவ்வொருவட்டாரமும் தனக்கெனத் தனிச்சிறப்பைப் பெற்ற வரலாற்றுப் போக்கினைக் கொண்டு விளங்குகின்றது. இந்தியவரலாறு பற்றிய கோட்பாடுகளைச் சோதித்துப் பார்ப்பதற்கு வட்டார வரலாறு ஒரு கருவியாக அமையும். இன்றைய ஆத்தூர் வட்டம் நீங்கலான சேலம்மாவட்டம், நாமக்கல் மாவட்டம் ஈரோடுமாவட்டம், திருப்பூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை வட்டங்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் பழனி வட்டம் மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டத்தில் ஒரு சில பகுதிகள் ஆகியவை பண்டைய காலம் முதலே கொங்கு நாடு என்று பெயர் பெற்றிருந்தது. இக்கொங்கு நாட்டுப் பகுதி வட்டார வரலாற்றிற்கான தனிக் கூறுகளைப் பெற்றுத் திகழும் தன்மையைக் கொண்டது. இப்பகுதி பிறபகுதிகளில் காணப்படாத தனித்துவமான அரசியல், சமூக, பொருளாதா ர,கலாச்சாரப்பின்னணியைப்பெற்றுள்ளது.

கொங்கு நாடு பற்றிய ஆய்வுகள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தொடக்கப்பெற்றன. அந்தாளைய ஆய்வாளர்களில் சிலர், இந்திய வரலாற்றாய்வாளர்கள் பலரையும் போலவே முன்னோர்களின் மாட்சிமைகளை முதன்மைப்படுத்திப் பேசினார்கள். வேறு சிலர் தமிழக வரலாற்றில், கொங்கு நாட்டு வரலாறு தெளிவான இடத்தினைப் பெறவில்லை என்ற மனக்குறையுடன் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். முந்தைய ஆய்வுகளின் தொடர்ச்சியாக கொங்கு நாட்டின் ஒரு பகுதியான தென்கொங்குப் பகுதியின் அரசியல், சமூகம், பொருளாதாரம்பற்றி ”கொங்கு நாட்டில் வீரகேரளர்களின் கல்வெட்டுகள்”

என்ற தலைப்பில் இடைக்காலக் கொங்கு நாட்டின் வரலாற்றை அதன் வட்டாரத் தனித்தன்மையினைத் தெளிவாக்கும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இருபதாம் நூற்றண்டின் இடைப்பகுதியில் கொங்கு நாட்டு வரலாறு பற்றிய நூல்கள், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. கோவைக்கிழார் தமிழிலும், எம்.ஆரோக்கியசாமி (The Kongu Country) வி.இராமமூர்த்தி (History of Kongu) ஆகியோர் ஆங்கிலத்திலும், எம்.மாணிக்கம் ஆங்கிலம் மற்றும் தமிழிலும் கொங்கு நாட்டு வாலாற்றை எழுதியுள்ளனர். கேஎஸ்.வைத்தியநாதன் பண்டைய கொங்குநாட்டுப் பூகோளம் (The Ancient Geography of the Kongu Country) என்ற நூலை ஆங்கிலத்திலும், செ.இராக ‘கொங்கு வேளாளர் குல

வரலாறு' என்ற நூலைத் தமிழிலும் எழுதி வெளியிட்டுள்ளனர். இவை தவிர, பல்கலைக்கழகப் பட்டங்களுக்காகவும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளும் ஆய்விதழ்களில் வெளிவந்துள்ளன.

சங்ககாலத்தில் இங்கு நிலைபெற்றிந்த இனக்குழுச்சமூகம், படிப்படியாக வளர்ச்சிபெற்று வேளிர் நிலைக்கு உயர்ந்திருந்தது. இங்கு கிடைத்த காடு விளைபொருட்களும், கனிம வளங்களும், இங்கு சென்ற பெருவழிகளும், வேந்தர் ஆட்சிக்கு வழிவகுத்து, இப்பகுதியை போட்டித்தளமாகச் திகழச்செய்தன. இதில் சோழர்கள் வென்று, இடைக்காலத்தில் கொங்குநாட்டை விரிந்த ஆட்சிப்பரப்பாக விரிவடையச் செய்தனர். ஆனால் ஒரே ஆட்சி நிர்வாகத்திற்குள் நில்லாமல் மூன்று பகுதியாக கொங்கான வீரசோழ மண்டலம், வடகொங்கு, தென்கொங்கு எனப் பிரிந்து மூன்று ஆட்சி நிர்வாகத்திற்குள் இருந்துள்ளது. இதில் தென்கொங்குப் பகுதி கி.பி. 9 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை வீரகேரளர் என்ற மரபினர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களை கே.வி.சுப்ரமணியஅய்யர் சேரர்மரபினர் என்றும், நடன.காசிநாதன் களப்பிரர் மரபினர் என்றும், வீ.மாணிக்கம், கோக்கண்டன் மரபினர் என்றும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. நான் எனது முனைவர் பட்ட ஆய்வில் இவர்களை பாண்டியர் மரபினர் என்று குறிப்பிட்டுள்ளேன். தற்போது கிடைக்கும் சான்றுகளும், ஆய்வுப் போக்கும் மாறுபட்ட கருத்தை உடையதாகவுள்ளது.

கொங்குநாட்டுப் பகுதியில் இவர்களுடைய வட்டெழுத்து மற்றும் தமிழ்எழுத்துகள் கல்வெட்டுகள் மொத்தம் சுமார் 60 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இதில் வரகுண பராந்தகன், கண்டன், ரவி, கோதை, கண்டன் வீரநாராயணன், மாந்தரன், வீரகேரளன், அமரபுயங்கன், வீரகேரள வீரநாராயணன், வீரநாராயணன் வீரகேரளன், அதிசயசோழன், அதிசயசோழன் வீரநாராயணன், அதிராஜராஜன், ராஜராஜன், கரிகாலன், வீரநாராயணன் என 16க்கும் மேற்பட்ட மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன. இவை தவிர, இப்பகுதியில் இவர்கள் கட்டிய கோயில்கள், கற்சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் காணப்படுகின்றன.

இதுவரை இவர்களின் குடிவழி பற்றியும், ஆட்சி ஆண்டுகள் குறித்தும் சரியான ஆய்வு முடிவுகள் வெளிவரவில்லை. இவர்கள், இப்பகுதியில் நீர்பாசான வசதிகளை ஏற்படுத்தி வேளாண்மையை விரிவாக்கம் செய்துள்ளது பற்றியும், நலிந்த பல ஊர்களை நல்லூர்களாக மாற்றியமை பற்றியும், புதிய புத்தூர்கள் மற்றும் சதுர்வேதிமங்கலங்கள் உருவாக்கியமை பற்றியும், இவர்கள் அளித்த கொடைகள் பற்றியும், இவர்கள் காலத்து சமூக அமைப்புப்பற்றியும் இவர்களது கல்வெட்டுகள் விளக்குகின்றன. இவர்கள் கலைகளுக்கு ஆற்றிய பங்கு பற்றி இப்பகுதிகளில் உள்ள கோயில்கள், கற்சிலைகள், செப்புத் திருமேனிகள் எடுத்துகாட்டுகின்றன.

இடைக்கால வரலாற்றுக்கு முக்கிய சான்றாதாரமாக விளங்குபவை கல்வெட்டுக்களே. இவற்றை அடிப்படை ஆதாரங்களாகக் கொண்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த வீரகேரள மரபினர் பற்றி, இதுவரை செய்த ஆய்வுகளுள் அரசியல் வரலாற்றின் ஒருபகுதியான ஆட்சியாளர்களின் குடிவழி பற்றிய ஆய்வில் ஒவ்வொருவரும் முரண்பட்ட கருத்துகளைக் கூறியுள்ளார்கள், இம்முரண்பாடுகளை நீக்க முயற்சிப்பதும், இவர்களது ஆட்சிப் பகுதியில் விடுபட்ட செய்திகளோடு புதிய செய்திகளையும் ஒன்றிணைத்து, இதன் அடிப்படையில் இப்பகுதியின் சமூக வரலாற்றை வெளிக் கொணர்வதைமுக்கியநோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

சங்ககாலத்தில் இங்கு நிலைபெற்றிந்த இனக்குழுச்சமூகம், படிப்படியாக வளர்ச்சி பெற்று வேளிர் நிலைக்கு உயர்ந்திருந்தது. இங்கு கிடைத்த காடு விளைபொருட்களும், கனிம வளங்களும், இங்கு சென்ற பெருவழிகளும், வேந்தர் ஆட்சிக்கு வழிவகுத்து, இப்பகுதியை போட்டித்தளமாகச் திகழச்செய்தன. இதில் சோழர்கள் வென்று, இடைக்காலத்தில் கொங்குநாட்டை விரிந்த ஆட்சிப்பரப்பாக விரிவடையச் செய்தனர். ஆனால் ஒரே ஆட்சி நிர்வாகத்திற்குள் நில்லாமல் மூன்று பகுதியாக கொங்கான வீரசோழ மண்டலம், வடகொங்கு, தென்கொங்கு எனப் பிரிந்து மூன்று ஆட்சி நிர்வாகத்திற்குள் இருந்துள்ளது. இதில் தென்கொங்குப் பகுதி கி.பி. 9 முதல் 12ஆம் நூற்றாண்டு வரை வீரகேரளர் என்ற மரபினர் ஆட்சி செய்துள்ளனர்.

இடைக்காலத்தில் இந்த தென்கொங்குப் பகுதி வைகாவி நாடு, நல்லூர்க்கா நாடு, கரைவழி நாடு, பேரூர் நாடு, வாயரைக்கா நாடு, காவடிக்கா நாடு, வீரகேரளவள நாடு என்ற நாட்டுப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இது, இன்றைய பழனி, உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, பேரூர், வட்டங்கள் முழுமையும், ஒட்டன்சத்திரம், சூலூர், பல்லடம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம் முதலிய வட்டங்களின் சில பகுதிகளையும் கொண்ட பகுதியாகும். இவர்களை கே.வி.சுப்ரமணியஅய்யர் சேரர் மரபினர் என்றும், நடன. காசிநாதன் களப்பிரர் மரபினர் என்றும், வீ.மாணிக்கம், கோக்கண்டன் மரபினர் என்றும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்த ஆய்வில் வீரகேரள மரபினரின் சுமார் 60 கல்வெட்டுகளை அடிப்படை ஆதாரமாகக் கொண்டு ஆய்வாளர்களின் கருத்தை மறுத்து, வீரகேரள மரபினர் பாண்டிய மரபினர் என்றும், அவர்களது குடி வழியை சான்றாதரங்களைக் கொண்டு ஒப்பீட்டு ஆய்வு செய்தும், இவர்கள் காலத்தில் தென்கொங்குப் பகுதியின் நிலை, இப்பகுதியின் வளர்ச்சிக்கு இவர்கள் ஆற்றிய பங்குப் பணிகள் குறித்தும், இந்த ஆய்வில் ஆராயப்பட்டுள்ளன.

சேரர்கள்

வடகொங்கு மற்றும் தென்கொங்குப் பகுதிகளில், கண்டன் ரவி, கண்டன் வீரநாராயணன், ரவி கண்டன், ரவி கோதை, கண்டன் மாந்தரன் முதலியோர்களின் இடைக்காலக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளில் பொன்னிவாடியில் கிடைக்கும் கோக்கண்டன் ரவியின் கல்வெட்டு ஒன்றில் காணப்படும் “கலிநிருப கள்வனாகின கோக்கண்டன் ரவி” என்ற பெயரைக் கொண்டு இவன் களப்பிரர் மரபைச் சேர்ந்தவனாகக் ஒரு ஆய்வாளர் கருதுகிறார். 43 மற்றொரு ஆய்வாளர் இவர்களைச் சேர மரபினர் என்கின்றார். 44 வீ.மாணிக்கம், இவர்கள், சேரர் மரபினரின் கிளை மரபினர் என்கிறார். நாமக்கல்லில் கிடைத்த வீரசோழனின் செப்பேடு ஒன்று இவர்களின் குடிவழியைக் குறிப்பிடுகிறது. முதலில் இச்செப்பேடு தஞ்சை சோழருக்குரியதாகக் கருதப்பட்டது. (IA,Vol–IX,p48) தற்போது இது சேர மரபினருக்குரியது எனக்கண்டறியப்பட்டுள்ளது.45 கேரளப் பகுதியில்

கோதைரவியின் கல்வெட்டுகள் பலவும், ரவிகோதையின் கல்வெட்டுகள் சிலவும் கிடைத்துள்ளன (ARE,Nos – 360 -362 / 1927,219/1895 and Perumals of Kerala Nos-A 52,53) என்பது நோக்கத்தக்கதாகும். இவர்களில் வரகுண பராந்தகன் பிரம்மியம் கல்வெட்டிலும் (ARE,No.208/1920), கொக்கண்டன் வீரநாராயணன் வெள்ளளூர் கல்வெட்டிலும் (ARE,No.147/1910), கோக்கண்டன் ரவி பொன்னிவாடி கல்வெட்டிலும் (ARE,No.269/1961-62). தங்களைச் சந்திராதித்ய குலத்தினர் எனக்கூறிக்கொள்கின்றனர். சேரர்கள் சந்திராதித்ய குலத்தினர் என்பது குறிப்படத்தக்கதாகும். இவர்களது கல்வெட்டுகள் வடகொங்கு மற்றும் தென்கொங்கு பகுதிகள் முழுவதும் கிடைத்துள்ளன. அனைத்தும் வட்டெழுத்தில் கி.பி.9 அல்லது 10 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளன. எனவே இவர்கள் வடகொங்கு மற்றும் தென்கொங்குப் பகுதிகளில் கி.பி. 9 மற்றும் 10ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த சேரர்கள் எனக் கருதலாம்.

வீரகேரள மரபினர்

கொங்கு நாட்டின் வடகொங்குப் பகுதியில் கொங்குச் சோழர்கள் (கோநாட்டார்) சுயாட்சி பெற்று சோழர்களுக்குக் கீழ்ப்படிந்தவர்களாக ஆண்டஇக்காலக் கட்டத்தில். தென்கொங்குப் பகுதியை வீரகேரளர் மரபினர் ஆட்சி செய்தனர், இவர்கள் கி.பி 10 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை சுமார் 250 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளார்கள். இந்த வீரகேரளர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. கே.வி. சுப்ரமணிய அய்யர் வீரகேரளர்களைப் பற்றிக் கூறும்போது இடைக்காலச் சேரர்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த கேரள மரபினர் என்றும், மற்றும் சிலர் இவர்களை களப்பிர மரபினர் என்றும், கோக்கண்டன் மரபில் வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர்.76 இவர்களின் கருத்திற்கு போதிய அடிப்படை ஆதாரங்கள் இல்லை. இந்த வீரகேரள மரபினைச் சேர்ந்த அமரபுயங்கனை பாண்டியன் என்று சோழர்களின் செப்பேடுகளில் ஒன்றான திருவலங்காட்டுச் செப்பேடும், கொங்குநாட்டு வரலாற்றைக் கூறும் கொங்குதேச ராஜாக்கள் என்ற ஆவணமும் குறிப்பிடுகின்றன. எனவே வீரகேரள மரபினர் பாண்டிய மரபில் தோன்றியவர்கள் எனக்கருதலாம்.

முற்காலப் பாண்டியர்களில் மாறவர்மன் இராஜசிம்மன் (911 - 931) பராந்தகசோழனால் தோற்கடிக்கப்பட்டு, நாட்டைவிட்டு இலங்கைக்கும், பின்னர் கேரளம் சென்று மறைந்து விட்டான். இவனுக்குப் பின், தக்கோலத்தில் நடைபெற்ற போரில் பராந்தகனுக்கு ஏற்பட்ட தோல்வியைப் பயன்படுத்திக் கொண்டு இராஜசிம்மனின் மகன் வீரபாண்டியன், இழந்த பாண்டிய அரசை கைப்பற்றிக் கொண்டான். இவன், பராந்தகனின் மகன் உத்தமசீலியைக் கொன்று "சோழன் தலைகொண்டவீரபாண்டியன்" என்ற விருதுப் பெயரையும் சூடிக்கொண்டான்.

ஆனையூர் கல்வெட்டின்படி இவனுக்கு வீரகேரளன் என்ற பெயரும் இருந்துள்ளது. சோழவந்தானில் இச்சிறப்புப் பெயரால் "வீரகேரள விண்ணகரம்" என்ற பெருமாள் கோயிலை எடுப்பித்துள்ளான். இக்காலக்கட்டத்தில், ஆதித்தகரிகாலன், பாண்டியநாட்டு மீது படையெடுத்து,வீரபாண்டியனின் தலையை அரிந்து கொன்றதாக குறிப்பிடப்படுகின்றன். வீரபாண்டியனுக்குப் பின் இராஜராஜன் பாண்டிய நாடு முழுமையும் கைப்பற்றி சோழராட்சிக்கு உட்படுத்தினான். இந்த வீரபாண்டியனின் குடிவழியினரே தென்கொங்குப்பகுதி வீரகேரள மரபினராக இருக்கலாம். இதற்கான உறுதியான சான்றுகள் கிடைக்கும் போது இந்தக் கருத்தாக்கம் உறுதிப்படுப்படும்.

வீரகேரளர் மரபினரின் குடிவழி பற்றியும், அவர்களின் ஆட்சி ஆண்டுகள் பற்றியும் ஆய்வாளர் ஏற்கனவே ஆய்வு செய்துள்ளார். அந்த முன்னைய ஆய்வில் சோழன் முதலாம் குலோத்துங்கனும், வீரகேரளன் அதிராஜராஜனும் சமகாலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கானக் கல்வெட்டுச் சான்றை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை, மேலும் முதலாம் ராஜாதிராஜனால் வீரகேரளன் கொல்லப்பட்டதும் கணக்கிடப்படவில்லை. எனவே இவற்றை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு மறுஆய்வு செய்யப்பட்டுள்ளது.

வீரகேரளர் மரபினாகக் கருதப்படும் அமரபுயங்கன், வீரநாராயணன், வீரகேரளன், அதிசயசோழன் முதலியோர்களின் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் உள்ளன. எனவே இவர்கள் இம்மரபில் முதலில் ஆட்சி செய்துள்ளனர் எனக்கருதலாம். இவர்களின் கல்வெட்டுகளில் பழனி பெரியாவுடையார் கோயிலில் உள்ள வீரகேரளன் வீரநாராயணன் மற்றும் வீரகேரளன் அமரபுயங்கனின் கல்வெட்டுகள் அக்கோயில் இறைவனைத் திருவராலூர் மகாதேவர் என்று குறிப்பிடுகின்றன. தமிழ் நாட்டு இறைவன் பெயர்களை ஆய்வு செய்த சு. இராஜகோபால் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை இறைவன் பெயர்கள் மகாதேவர் என்ற பின்னொட்டுப் பெயர்களைப் பெற்றுள்ளதாகக் கருதுகின்றார்.79 இதன்படி வீரகேரளன் அமரபுயங்கனும், வீரகேரளன் வீரநாராயணனும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்துள்ளனர் என்றும், இவர்களே முதலில் ஆட்சி செய்துள்ளனர் என்று கருதலாம்.

இங்குள்ள வீரநாராயணன் அதிசயசோழனின் கல்வெட்டு ஒன்று பகுதி வட்டெழுத்திலும், பகுதி தமிழ் எழுத்திலும் உள்ளது. எனவே இவர்களில் இவ்வீர நாராயணன் அதிசயசோழனே இறுதியானவன் எனலாம். இதன்படி முதலில் உள்ள வீரகேரளர்களின் குடிவழியை வீரகேரளன் அமரபுயங்கன், வீரகேரளன் வீரநாராயணன், வீரநாராயணன் வீரகேரளன், வீரநாராயணன் அதிசயசோழன் என வரிசைப்படுத்தலாம். இவ்வீரகேரள மன்னர்களின் ஆட்சிக் காலத்தைக் கணக்கிட இவர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே ஏற்பட்ட

சில நிகழ்ச்சிகளும், தொடர்புகளும் துணை நிற்கின்றன. சோழப் பேரரசன் முதலாம் இராஜராஜனின் கி.பி. 989 இல் நடைபெற்ற மலைநாட்டுப் படையெடுப்பில் அமரபுயங்கன் தோல்வியடைந்தை திருவாலங்காட்டுச் செப்பேடும், கொங்குதேச ராஜாக்கள் என்ற ஆவணமும் குறிப்பிடுவதாக முன்னரே கூறப்பட்டுள்ளது. எனவே முதலாம் இராஜராஜனும், அமரபுயங்கனும் சமகாலத்தவர் எனக்கருதலாம்.

வீரகேரளனை சோழன் முதலாம் இராஜாதிராஜன் கி.பி.1044 ஆம் ஆண்டு கொன்றதாக அவனுடைய கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. (SII,Vol-IV,No.8670. இதேபோன்று இம்மரபினைச் சேர்ந்த அதிராஜராஜன் கி.பி.1104 மற்றும் 1106 ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறான். (ARE,No..519,521/1922). எனவே இவர்கள் இருவரும் சமகாலத்தவர்கள் எனக்கருதலாம்.

அதிராஜராஜனின் 23ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் மகாமகத் திருவிழா நடந்தது பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.(ARE,No.711/1905). மகாமகம் என்பது குரு சிம்மராசிக்கு வரும்போது கொண்டாடப்படுகின்ற ஒரு விழாவாகும். இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும். இதன்படி கடந்த 2004ஆம் ஆண்டு சமீபத்தில் ஒரு மகாமகத் திருவிழா நடைபெற்றுள்ளது. இதைக்கொண்டு கணக்கிட்டால் கி.பி. 1092இல் ஒரு மகாமகத் திருவிழா நடைபெற்றிருக்க வேண்டும். மேலும் ஸ்ரீராஜராஜனின் 3ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் குரு துலாம் ராசியில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ARE,No - 151/1910). இதன்படி மகாமகம் நடைபெற்ற ஆண்டில் சிம்ம ராசியிலிருந்து குரு (ஆண்டுக்கு ஒரு ராசி வீதம் மாறக்கூடியது) சிம்மராசிக்கு மூன்றாம் ராசியான துலாம் ராசிக்கு வந்துள்ளது. எனவே ஸ்ரீராஜராஜன் மகாமகம் நடைபெற்ற ஆண்டான கி.பி.1092இல் ஆட்சிக்கு வந்துள்ளான் என்றும், இவனுடைய தந்தை வீரகேரளன் அதிராஜராஜனின் ஆட்சி இவ்வாண்டில் முடிவுற்றது என்றும் கருதலாம்.

இந்த நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் ஒப்பிட்டு நோக்கியும், ஒவ்வொரு மன்னனின் முன்னொட்டுப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டும், ஒவ்வொரு மன்னர்களின் கல்வெட்டுகளில் உள்ள ஆட்சியாண்டுகளைக் கொண்டும், ஒவ்வொரு மன்னர்களின் கல்வெட்டு பிற குறிப்புகளைக் கொண்டும், இவ்வீரகேரள மரபினர்களின் குடிவழி மற்றும் ஆட்சிக்கு வந்த ஆண்டுகளும் முடிவுற்ற ஆண்டுகளும் கணக்கீடு செய்யப் பட்டுள்ளன.

வீரகேரளன் அமரபுயங்கன்: (கி.பி.986-1009)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் வீரகேரளன் என்பவனின் மகன் என்று கருதலாம். இவனை பட்டயங்களும்,

ஆவணங்களும் பாண்டியன் என்பதால் முற்காலப் பாண்டியர்களின் மரபைச் சேர்ந்தவனாக இவனைக் கருதலாம். முன்பே வீரகேரள மரபினர், முற்காலப் பாண்டியர்களின்வழிவந்தவர்கள் என அறியப்பட்டுள்ளது. அமரபுயங்கனின் தந்தை வீரகேரளனைப் பற்றி இதுவரை சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. அதுவரை முற்காலப் பாண்டியர்களில் ஒருவனான ஏதோ வீரகேரளனின் மகன் அமரபுயங்கன் என்று கருதுவதில் தவறேதுமில்லை.

வீரகேரளன் முதலாம் இராஜாதிராஜனால் கி.பி.1044 ஆம் ஆண்டு கொல்லப்பட்டான். இதன்படி வீரகேரளனின் ஆட்சி கி.பி.1044 இல் முடிவுற்றுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டும், கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மன்னனின் ஆட்சி ஆண்டுகளைக் கொண்டும் கணக்கிட்டால் இவன் கி.பி.986 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்துள்ளன் எனக்கருதலாம்.

இவன் சோழப் பேரரசன் முதலாம் இராஜராஜனின் மலை நாட்டுப் படை யெடுப்பைத் தடுத்துப் போர் செய்துள்ளான். இப்போரில் இவன் தோல்வியடைந்து பின்னர் இராஜராஜனிடம் சரணடைந்ததன் மூலம் தனது ஆட்சிப் பகுதியைப் பெற்றுள்ளான். இதைப் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடும், கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலும் குறிப்பிடுகின்றன. இராஜ ராஜனின் மலைநாட்டுப் படையெடுப்பு கி.பி. 989இல் நடைபெற்றுள்ளது என்பது இங்கு நோக்கத்தக்கதாகும். இவனது கல்வெட்டுகள் இவனது 23ஆம் ஆட்சியாண்டு வரை கிடைப்பதால்,(ARE,No.713/1905). இவன் கி.பி.1009ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்துள்ளான் என்று கருதலாம். வடகொங்குப் பகுதியில் உள்ள நல்லூர் (திருப்பூருக்கு அருகில் உள்ளது) என்ற ஊர் இடைக்காலத்தில் அமரபுயங்கசதுர்வேதிமங்கலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வீரகேரள மரபினரில் இவன் மட்டுமே வடகொங்குப் பகுதியில் ஆட்சி செய்துள்ளான் எனக் கருதலாம்.

வீரகேரளன் வீரநாராயணன் - (கி.பி.1009 - 1015)

வீரகேரளன் அமரபுயங்கனின் ஆட்சிக்குப் பின் இவன் தம்பி வீரகேரளன் வீரநாராயணன் கி.பி.1009 இல் ஆட்சிக்கு வந்துள்ளான். இவனுடைய கல்வெட்டுகள் இவனது 6ஆம் ஆட்சியாண்டு வரைக் கிடைப்பதால், (ARE,No-715/1905). இவனது ஆட்சி கி.பி. 1015 வரை நடைபெற்றுள்ளது எனக்கருதலாம்.

வீரநாராயணன் வீரகேரளன் - (கி.பி. 1015 -1044)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் வீரநாராயணனின் மகன் எனலாம். இவனுக்கு முன் இம்மரபினரில் வீரகேரளன் ஒருவன் ஆட்சி செய்துள்ளதால் இவனை இரண்டாம் வீரகேரளன் என்று குறிப்பிடலாம். இவன் முதலாம் இராஜாதிராஜனால் (கி.பி.1018-1054) கொல்லப்பட்டதாக

அவனது 26 ஆவது ஆட்சி யாண்டு (கி.பி.1044) திருப்பைஞ்ஞீலிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. (SII,Vol-IV,No.537). வரலாற்று ஆய்வாளர்கள் இவனைத் திருவாங்கூர் பகுதியில் ஆட்சி செய்தவனாக இருக்கலாம் எனச்சந்தேகிக் கின்றனர். 81 இந்த திருவாங்கூர் பகுதியைச் சேர்ந்த வீரகேரளனின் ஆட்சி 13ஆம் நூற்றாண்டில் தம்ழ்நாட்டுப்பகுதி முழுவதும் ஆட்சி செய்துள்ளான். இவனுடையகாசுசெங்கல்பட்டுக்குஅருகில்கிடைத்துள்ளது. இக்காலக்கட்டத்தில் இந்த வீரநாராயணன் வீரகேரளனே தென்கொங்குப் பகுதியில் மட்டும் ஆட்சியாளனாக இருந்துள்ளான். இவனது கல்வெட்டுகள் இவனது 29 ஆம் ஆட்சி யாண்டு வரையே கிடைத்துள்ளன.(ARE,No.714/1905). எனவே இவனது ஆட்சி கி.பி. 1044 இல் முடிவடைந்துள்ளது என்று தெரிகின்றது.

வீரநாராயணன் அதிசய சோழன் - (கி.பி.1044-1076)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் வீரநாராயணனின் இரண்டாவது மகன் என்றும், தனது அண்ணன் கொலைக்குப் பின் கி.பி.1044 இல் ஆட்சிக்கு வந்துள்ளான் என்றும் தெரிகின்றது. இவனுடைய கல்வெட்டுகள் இவனது 31ஆம் ஆட்சியாண்டு வரை கிடைப்பதால், (ARE,No.708/1905) இவனது ஆட்சி கி.பி.1076 ஆம் ஆண்டு வரை நடைபெற்றுள்ளது என்று கருதலாம். பழனியில் உள்ள இவனுடைய இறுதி யாண்டு கல்வெட்டு ஒன்றில் பாதி வட்டெழுத்திலும் பாதி தமிழ் எழுத்திலும் உள்ளது. (ARE,No. 708/1905) எனவே இதுவரை வீரகேரள மரபினரால் கல்வெட்டுகளில் பயன்படுத்தி வந்த வட்டெழுத்து இவனது ஆட்சியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

அதிசயசோழன் வீரநாராயணன் (கி.பி. 1076 - 1093)

இவனது முன்னொட்டுப் பெயரைக் (SII,Vol-V,No.246) கொண்டு இவன் அதிசய சோழனின் மகன் என்றும் தந்தைக்குப் பின் கி.பி. 1076 இல் ஆட்சிக்கு வந்துள்ளான் என்றும் கருதலாம். இவ்வீரகேரள மரபினரில் இதற்கு முன் ஒரு வீரநாராயணன் ஆட்சி செய்துள்ளதால் இவனை இரண்டாம் வீரநாராயணன் என்று குறிப்பிடலாம். இவனுக்குப் பின் கொலை செய்யப்பட்ட இவனுடைய சித்தப்பா வீரகேரளனின் மகன் வீரகேரளன் அதிராஜராஜன் கி.பி. 1093 இல் ஆட்சிக்கு வந்துள்ளான். எனவே இவனது ஆட்சி கி.பி. 1093 வரை நடைபெற்றுள்ளது எனலாம்.

வீரகேரளன் அதிராஜராஜன் - (கி.பி. 1093 - 1116)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் வீரநாராயணன் வீரகேரளனின் மகன் எனலாம். தந்தையின் கொலைக்குப் பின் இவன் ஆட்சிக்கு வராமல் இவனது சித்தப்பா அதிசயசோழனும், அதன்பின் அவனது மகன் வீரநாராயணனும் ஆட்சிக்கு வந்துள்ளனர். இதற்கு காரணம்

இவன் சிறுவனாக இருந்திருக்கலாம். இதேபோன்ற நிலை கொங்கு சோழர் ஆட்சியிலும் நடைபெற்றுள்ளது.82 பின்னால் உள்ள கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சி ஆண்டுகளின் கணக்குப்படி இவன் கி.பி. 1093 இல் ஆட்சிக்கு வந்துள்ளான். இவனது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவைக் கொண்டும், இவனது மகன் ஸ்ரீராஜராஜனின் போளுவாம்பட்டி கல்வெட்டில் உள்ள வானிலைக் குறிப்பைக் கொண்டும், இவனது கல்வெட்டுகள் இவனது 23ஆம் ஆட்சியாண்டு வரை கிடைப்பதாலும், இவனது ஆட்சி கி.பி. 1116 வரை நடைபெற்றுள்ளது தெரிகின்றது. (ARE,No.711/1905). இவன் சோழன் முதலாம் குலோத்துங்கசோழனின் (கி.பி.1070-1122) சமகாலத்தவன். குலோத்துங்க சோழனின் கி.பி.1104 மற்றும் 1106 ஆம் ஆண்டைச் சேர்ந்த திருக்கண்ணபுரம் கல்வெட்டுகளில் இவன் கொடை கொடுத்தது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. (ARE,Nos.519,521/1922). இவனும் கொங்குச் சோழன் உத்தம சோழனும் (கி.பி.1100-1117) சமகாலத்தவர்கள் என இருகூர் செப்பேட்டால் கருதமுடிகின்றது.83

அதிராஜராஜன் ஸ்ரீ ராஜராஜன் (கி.பி. 1116 -1153)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் வீரகேரளன் அதிராஜராஜனின் மகன் என்று கருதலாம். இவனது போளுவாம்பட்டி கல்வெட்டின் (ARE,No.151/1910) வானிலைக் குறிப்பைக் கொண்டு இவன் கி.பி. 1153 இல் ஆட்சிக்கு வந்துள்ளான் எனலாம். இக்கல்வெட்டை வீ.இராமமூர்த்தி கரிகாலனுடைய கல்வெட்டு என்று கருதி வீரகேரள மரபினரின் ஆட்சியைக் காலக் கணக்கீடு செய்துள்ளார். 84 இவன் கொங்குச் சோழன் உத்தம சோழனுக்குப் (கி.பி. 1100 - 1117) பின் ஆட்சிக்கு வந்துள்ளதை இருகூர் செப்பேடு எடுத்துக்காட்டுகிறது. இவனது கல்வெட்டுகள் இவனது 37ஆம் ஆட்சியாண்டு வரை கிடைப்பதால்,(ARE,No.558/1893) இவன் கி.பி. 1153 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்துள்ளான் எனலாம்.

ராஜராஜன் கரிகாலன் - (கி.பி. 1153 - 1165)

இவனது முன்னொட்டுப் பெயரைக் கொண்டு இவன் அதிராஜராஜன் ஸ்ரீராஜராஜனின் மகன் என்றும், இவனது தந்தை ஸ்ரீராஜராஜனின் ஆட்சி கி.பி. 1153 இல் முடிவுற்றதால், இவன் கி.பி.1153 இல் ஆட்சிக்கு வந்துள்ளான் எனலாம். இவனது கல்வெட்டுகள் இவனது 12ஆம் ஆட்சியாண்டு வரை கிடைப்பதால், (ARE,No.563/1893) இவன் கி.பி. 1165 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்துள்ளான் எனக்கருதலாம்.

வீரநாராயணன் (கி.பி.1165- -)

கரிகாலனின் ஆட்சி கி.பி.1165 இல் முடிவுற்றதால், வீரநாராயணன் இதே ஆண்டு ஆட்சிக்கு வந்துள்ளான் என்று கருதலாம். இவனது கல்வெட்டுகள் அனைத்தும் முன்னோட்டுப் பெயர் குறிப்பிடவில்லை. (த.நா.அ.தொ.து.எண்.

88/2004). இவன் காலம் முதல் தந்தையின் பெயரை முன்னொட்டுப் பெயராக குறிப்பிடும் மரபு இல்லாமல் போனது. இவனது ஆட்சியில் வடகொங்குப் பகுதியில் மட்டும் ஆட்சி செய்து வந்த கொங்குச் சோழன் மூன்றாம் வீரசோழன் (கி.பி. 1168 - 96) தென் கொங்கையும் கைப்பற்றிக் கொண்டதால் வீரகேரள மரபினரின் ஆட்சி கி.பி.12 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வீழ்ச்சியைத் தழுவியது.

தென் கொங்கில் வீரகேரளர்களும், வடகொங்கில் கொங்குச் சோழர்களும் ஆண்டுகொண்டிருந்தபோது உத்தம சோழன் காலம் முதல் இரு திறத்தார்க்குமிடையில் முரண்பாடுகள் தோன்றிப் பூசலில் ஈடுபட்டனர். அதனால் வீரகேரளர்களில் ராஜராஜன் என்பவன் காலத்தில் ஒரு கோட்டை கட்டப்பெற்றது. அக்கோட்டை உத்தமசோழன் ஏற்கெனவே கோடிக்காரைத் தொழுவில் கட்டிய கோட்டைக்கு எதிராகக்கட்டப் பெற்றது. வீரகேரளர்கள் கொங்குச் சோழர் கட்டிய கோட்டைக்கு “வஞ்சகர் வஞ்சகன் கோட்டை“ என்று குறிப்பிட்டுள்ளனர்.85 உத்தமசோழன் காலத்தில் தொடங்கிய பூசல் மூன்றாம் வீரசோழன் (1168 -96) காலத்தில் கொங்குச் சோழர் வெற்றி பெறும் நிலை எய்திவிட்டது. இம்மன்னன் ‘இரு கொங்கும் ஒன்றாக ஆண்ட’ என்று கூறுவதால், (SII,Vol-XXVI,No.152) இவன் காலம் முதல் தென்கொங்கும் கொங்குச் சோழர் ஆளுகைக்குப்பட்டது என்று கூறலாம். கி.பி.1187 முதல் தென்கொங்கு கொங்குச்சோழர் வசமாயிற்று. வீரசோழன் கல்வெட்டுகளில் வீரகேரள மன்னன் வீரநாராயணனை மாமடி என்று கூறுவதிலிருந்து(SII,Vol-XXVI,Nos.166&167) காலப்போக்கில் இவ்விரு குடும்பக்களுக்கிடையில் மண உறவு ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது.

மன்னறை

காடழித்து வேளாண் நிலமாக மாற்றப்பட்டதை சோழநாடு மற்றும் தொண்டை நாட்டு கல்வெட்டுக்கள் வசக்கல் (SII,Vol-XIV,No.56), மயக்கல் (SII,Vol-V,No.642), மசக்கல்(SII,Vol-V,No.523) என்று குறிப்பிடுகின்றன. தென்கொங்குப்பகுதியில் உள்ள பொன்னிவாடி கல்வெட்டு ஒன்று மட்டும் வேளாண் நிலமாக மாற்றியதை “வயக்கின” என்று குறிப்பிடுகின்றது. (271/61-62) ஆனால் பிற கல்வெட்டுக்கள் திருத்தப்பட்ட இந்நிலங்களை “மன்னறை” என்று குறிப்பிடுகின்றன.3 இவற்றுடன் புதுக்கோட்டைக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் “குடிகாடு” என்ற சொல் ஒப்பிடப்படுகின்றது.4 மன்னறை என்ற சொல்லுடன் அரசன், அரசி அல்லது அரசு உயர் அதிகாரிகளின் பெயர்கள் சேர்த்துக் குறிப்பிடப்படுகின்றன. எனவே இப்பணியை ஆட்சியாளர்களே செய்துள்ளனர் எனக் கருதலாம். வீரகேரள மரபினரின் கல்வெட்டுகளில் சுமார் 20 கல்வெட்டுகள் மன்னறை பற்றிக் குறிப்பிடுகின்றன. இவற்றில் 12 கல்வெட்டுகள் அமராவதி நதிக்கரை ஊர்களிலும், 5 கல்வெட்டுகள் நொய்யல் ஆற்றங்கரை ஊர்களிலும் ஒன்று மட்டும் ஆழியாற்றின்

கரைப்பகுதியிலும் இருந்துள்ளன. இம்மரபினரில் அதிசயசோழன் பெயரில் 6 (அமராவதி – 4, நொய்யல் -1, ஆழியாறு – 1). வீரநாராயணன் பெயரில் 5 அமராவதி -4, நொய்யல் -1). இராஜராஜன் பெயரில் 3 (அமராவதி – 1, நொய்யல் -2). வீரகேரளன் பெயரில் உள்ள இரண்டும் அமராவதி நதிக்கரைப் பகுதியே. அமரபுயங்கன் பெயரில் 2. (அமராவதி -1, நொய்யல் -1) இருந்துள்ளன. இதன்படி அமராவதிப் பகுதியை அதிகளவில் வேளாண்மைப்பகுதியாக மாற்றியுள்ளனர்.

கால்வாய்கள்

வீரகேரளர்களின் ஆட்சிப் பகுதியான தென்கொங்கில் காஞ்சிமாநதி மற்றும் அதன் கிளை ஆறுகளும், ஆன்பொருனை என்ற அமராவதிஆறும், இதன் கிளை ஆறுகளும் ஓடுகின்றன. இந்த ஆறுகளிலும் மழைகாலங்களில் மட்டும் நீர் ஓடக்கூடிய ஆறுகளாகும். வீரகேரளர்கள், இந்த ஆறுகளிலிருந்து புதிதாக கால்வாய்களை வெட்டி, இதன் மூலம் நீர்பாசன வசதியைப் பெருக்கி வேளாண்மையை விரிவுபடுத்துவதில் மிகக்கவனம் செலுத்தியுள்ளனர். (இவர்களின் கல்வெட்டுகளில் பழனியில் கோதைமங்கலத்து பெருங்குளம் மற்றும் முட்டத்தில் (இன்றைய போளுவாம்பட்டி) ஸ்ரீஅதிசயசோழப்பேரேரி, சோழமாதேவி வடக்கில்குளம்(பழங்காசு -12,ப.13)என மூன்று குளங்கள் பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன). இவ்வாறு இவர்கள் விரிவுபடுத்தப்பட்ட 32 கால்வாய்கள் அவர்களின் பெயர்களிலேயே கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை, வீரநாராயணன் வாய்க்கால் 7 (அமராவதி – 4, நொய்யல் – 2, ஆழியாறு – 1), அதிராஜராஜன் வாய்க்கால் 6 (அமராவதி -1, நொய்யல் – 5), வீரகேரளன் வாய்க்கால் 4 (அமராவதி – 2, நொய்யல் – 2, சண்முகநதி – 1), அமரபுயங்கன் வாய்க்கால் 1 (நொய்யல்), அதிசயசோழன் வாய்க்கால் 1(சண்முகநதி) என்பன. மேலும்,கேரளகேசரி வாய்க்கால் (SII,Vol-XXVI,No.127), உமாமஹேஸ்வரர் வாய்க்கால் (SII,Vol-XXVI,No.152) எனஆட்சியாளர், மற்றும் கடவுள் பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில்சில வாய்க்கால்கள் வதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. (SII,Vol-XXVI,Nos.122,127).

நீர் நிர்வாகம்

வேளாண்மை விரிவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிப்பது நீரின் தேவையே. நீர் பற்றாக்குறைப் பகுதிகளில் நீர் மேலாண்மையின் மூலம் நீர்த் தேவையை பூர்த்தி செய்து, வேளாண்மையை விரிபடுத்தியுள்ளனர். தொடக்கத்தில் ஆற்றுநீரைக் கொண்ட மருதநிலப் பகுதிகள் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி வேளாண்மையின் மூலம் செல்வவளம் பெற்ற பகுதியாக உருவெடுத்தன. இதனைத் தொடர்ந்து பிறநிலப்பகுதிகளிலும்நீர்ப்பாசனவசதிகளைப் பெருக்கும் அறிவியல் (Hydrology) வளர்ச்சியடைந்தது. உலகிலேயே இவ்வறிவியல் வளர்ச்சியில் முன்னோடியாக இலங்கையினரைக்

குறிப்பிடுவர்.3 இவர்களிடமிருந்து இந்த அறிவியல் உத்திகளைப் பெற்ற பாண்டியர்கள் பெரும்பகுதி முல்லை நிலைப்பகுதியைக் கொண்ட தங்களது நாட்டுப்பகுதியை வளமையானதாக மாற்றினர் என்பர். பாண்டியர்களான வீரகேரளர்கள் தென்கொங்குப் பகுதியிலும் அந்த உத்தியை பயன்படுத்தியுள்ளனர்.

வேளாண்மை விளைநிலங்களின் பரப்புக்கு ஏற்ப நீர்த் தேவையை அறிந்து, ஆறுகளிருந்து, பெருவாய்க்கால், கால்வாய், வாய்க்கால், வதி என நீர் வழிப்பாதைகளை அமைந்துள்னர். நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், நீரின் சிக்கனம் கருதி பல துளைகளைக் கொண்ட மடைகளை அமைத்தனர். அவற்றில் உள்ள துளைகளின் எண்ணிக்கையைக் கொண்டு இரண்டாம் கண்ணாறு, மூன்றாம் கண்ணாறு எனப் பெயர் குறிப்பிட்டுள்ளனர் (ஆவணம் – 25,ப.53). நிலங்களில் நீர் பாய்ச்சும்போது எப்போதும் பொதுவான நடைமுறையை எல்லோறும் கடைபிடிக்க வேண்டும். நடைமுறையை பின்பற்றாமல் "நீர் கலப்புச் செய்தால்" தண்டணை அளிக்கப்பட்டுள்ளது (ARE,No-711/1905). நீர் சிக்கனம் கருதி மடைகளில் பெருந்தூம்புகள் பதிக்கப் பட்டு இருந்தாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன (ARE,No-719/1905). பழனிக்கு அருகில் போடுவார் பட்டியில் வீரகேரளர்களின் ஆட்சி காலத்தைச் சேர்ந்த (10ஆம் நூற்றாண்டு) சுடுமண் தூம்பு ஒன்று பூமிக்கடியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இடைக்காலத்தில்தென்கொங்குப் பகுதியில் கால்வாய்களின் மூலம் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டு வேளாண்மை விரிவுபடுத்தப்பட்டுள்ளன. வீரகேரள மரபினரால் கால்வாய்ப் பாசனமுறை விரிவு படுத்தப்பட்டதால் இப்பகுதியில் வேளாண்மை விரிவு பெற்றதோடு, பின்னர் ஆட்சி செய்த பாண்டியர்களு குளத்துப்பாசான முறையை விரிவுபடுத்துவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. வேளாண்மை விரிவு பெற்றதால், ஊர் பெருக்கம் ஏற்பட்டு, அமராவதி நதிக்கரைப் பகுதி கரைவழி நாட்டுப்பிரிவு உருவாவதற்கும் (11ஆம் நூற்றாண்டு), பின்னர் இந்நாட்டுப் பிரிவிலிருந்து இராஜராஜன் பெயரில் இராஜராஜ வளநாடு என்ற புதிய நாட்டுப்பிரிவு ஏற்படுவதற்கும் (13ஆம் நூற்றாண்டு), ஆழியாற்றுப் பகுதியில் வீரகேரளவளநாடு உருவாவதற்கும் (11ஆம் நூற்றாண்டு - பின்னர் வெண்டையூர்கால் வீரகேரள வளநாடு என மாற்றம் அடைகிறது) காரணமாக அமைந்தது.

வாணிகம்

சங்ககால வாணிகத்தில் சிறப்புபெற்று திகழ்ந்த கொங்குநாடு, ரோமப்பேரரசு வீழ்ச்சிக்குப்பின் யவணர்களுடன் நடைபெற்ற வாணிகத்தில் வீழ்ச்சியைச் சந்தித்தது. அதனால் பண்டைய நகரங்கள் அழிந்தன. அதன்பின் இடைக்காலத்தில் இங்கு ஏற்பட்ட வேளாண்மை வளர்ச்சியால், மீண்டும் இடைக்காலத்தில்

தென்கொங்குப் பகுதி வாணிகத்தில் வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது. கென்னத்ஹால் இடைக்காலத்தில் வாணிக வளர்ச்சிக்கு வேளாண்மைப் பொருளே காரணம் என்பதன் கருத்திற்கு ஏற்ப இங்கு இருந்த வீரகேரள அரசு வேளாண்மையை ஊக்குவித்தது. அதன் காரணமாக வேளாண்மை வளர்ச்சி பெற்று, உற்பத்தி பெருக்கத்தால் வாணிகம் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. அமரபுயங்கன், தனது பெயரில் அமரபுயங்கரபுரம் என்னும் வணிக மையத்தை ஏற்படுத்தியுள்ளான்.

வியாபாரிகள்

இடைக்காலத்தில் வேளாண்மை பெருக்கத்தால் தங்களுக்கு மிஞ்சியவேளாண்மை உற்பத்திப் பொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கு கொண்டு சென்று விற்ற, வேளாளர்களில் ஒருபிரிவினர், இதையே முதன்மைத் தொழிலாகக் கொண்டனர். இவர்களே நாட்டுச் செட்டி எனக்குறிப்பிடப்படுகின்றனர். இந்த வியாபாரிகள் ஊர்வாரியாகவும், நாட்டுப்பிரிவு வாரியாகவும் இருந்துள்ளனர். அவர்களே இங்கு கண்ணாடிப்புத்தூர் வியாபாரி (224/XXVI), நாட்டுச்செட்டி (ARE,No-711/1905) என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். ஆனைமலை கல்வெட்டு ”வெண்டையூர்க்கால் வீரகேரள வளநாட்டு சோழபுரத்து மடிகை” என்று குறிப்பிடுகின்றது. மடிகை என்பதற்கு வணிகப்பொருள்களை சேமித்து வைக்கும் அமைப்பு எனப் பொருள் கூறுகிறார் வீ.மாணிக்கம். வாணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்பவை மடிகையாகும். பல பகுதியிலிருந்து கொண்டுவரும் வாணிகப் பொருட்களை ஒரு இடத்தில் சேகரித்து வைத்து இடம், பின்னர் அவை பல இடங்களுக்கு பிரித்து அனுப்பப்படும். இந்த இடங்கள் நாளடைவில் நகரங்களாக வளர்ச்சி பெற்றன.

வீரநாராயணன் அதிசயசோழனின் பழனி பெரியாவுடையார் கல்வெட்டு ஒன்று “கோறஞ்சோழனான கவறை மாணிக்கச் செட்டி“ கொடுத்த கொடையைப் பற்றிக் குறிப்பிடுகிறது (ARE,No-706/1905). “கவறை“ என்பது,தமிழகத்திற்கு வடக்கில் இருந்து வந்த வாணிக சமூகம், இன்று பலிஜா என்ற சமூகத்தின் ஒரு பிரிவாகக் கருதப்படுகிறனர்.

சிலைச்செட்டி

வீரகேரளர்களின் கல்வெட்டுகளில் அதிகமாகக் குறிப்பிடப்படும் வியாபாரப் பிரிவினர் “சிலைச்செட்டி“ என்பவர் ஆவார். வீரகேரளச் சிலைச்செட்டி, அதிராசராசசிலைச்செட்டி, வியாழவிடச் சிலைச் செட்டி, நியமத்து வியாபாரி தேவன் பிள்ளனான அதிராசராச சிலைச்செட்டி முதலிய வியாபாரிகள் ஆவார்.இதில் “சிலைச்செட்டி“ என்பது சிறப்பு மிக்க வணிகர் என்ற பொருளில் குறிப்பிடப்படுவதாக கென்னத் ஹால் கருதுகிறார். வீ.மாணிக்கம், பெருந்தொழுவு

கல்வெட்டில் உள்ள "வீரபாண்டியச் சக்கரவர்த்தியான வீரபாண்டிய வேளார் சிலைச்செட்டி" என்பதை அடிப்படையாகக் கொண்டு வியாபாரம் செய்யும் வேட்கோவர்களைக் குறிப்பிடுவதாகக் கருதுகிறார். மேலே குறிப்படப்பட்டுள்ள சிலைச்செட்டிகளுடன், சேவூர், கடையநல்லூர், புதுக்கோட்டைப் பகுதிகளிலும் இந்த வியாபாரிகள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. இதில் உள்ள அனைத்து வியாபாரிகளும் கோயில் கட்டடம் தொடர்புடனேயே குறிப்பிடப்பட்டுள்ளனர். கோயில் கல்வெட்டுகளில் மன்னனின் ஆணையை கல்வெட்டில் பொறிக்கும்போது, இறுதியில் " செம்பிலும், சிலையிலும் வெட்டிக் கொள்வராக" என முடிப்பார்கள். இதில் செம்பு என்பது, செப்பேட்டையும், சிலை என்பது கோயில் கற்சுவரையும் குறிப்பிடுகின்றன. பிங்கல நிகண்டு, சிலை என்பதற்கு கல் என்றும், புறப்பொருள் வெண்பா மாலை என்றும் பொருள் குறிப்பிடுகின்றன. எனவே இங்கு சிலைச்செட்டி என்பவர்கள் கருங்கல் வியாபாரிகளை குறிப்பதாகக் கொள்ளலாம். .இக்காலக் கட்டத்தில் இப்பகுதியில், வணிகக் குழுக்கள் (கவறை தவிர)பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. எனவே இவர்களின் ஆட்சி காலத்தில் தென்கொங்குப் பகுதி வாணிகத்தில் பின்தங்கியேஇருந்துள்ளது எனலாம்.

பணம் & அளவுகள்

வீரகேரளர்களின் கல்வெட்டுகள் அதிகம் நிலக்கொடைகள் பற்றியே பேசுகின்றன. பணக்கொடைகள் பற்றி குறைவாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் பொன், செம்பொன், அச்சு என்ற வகை காசுகள் புழக்கத்தில் இருந்துள்ளன. இந்த அச்சு வகை காசு ஆனை அச்சு, பழஞ்சலாகை அச்சு, இடைச்சலாகை அச்சு, புதுச்சலாகை அச்சு என்றும், பழஞ்சலாகை ஆனை அச்சு, இடைச்சலாகை ஆனை அச்சு, புதுச்சலாகை ஆனை அச்சு என்றும், பிற்காலத்தில் விரிவடைந்து மாற்றம் பெற்றுள்ளதை கொங்குநாட்டுக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இக்காலக்கட்டத்தில் நிலக் கொடைகளை அளிக்கும்போது தொடக்கத்தில் எல்லைகளைக் குறிப்பிட்டு நிலங்கள் கொடை கொடுக்கப்பட்டும், பின்னர், விதைப்பாட்டை அளவாகக் கொண்டும் கொடுக்கப்பட்டுள்ளன, அதன்பின்னர் காணி, மா என்ற நில அளவு பயன்படுத்தப்பட்டுள்ளன. கல்வெட்டுகளில் முகத்தல் மற்றும் நிறுத்தல் அளவைகளாக பரகேசரிக்கல், பொன்னாடுகால், சூலக்கால், நாழி முதலியவைகளும், கழஞ்சு, கலம், தூணி, குறுணி, பதக்கு, தடி, படி முதலிய அலகுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

வரிகள்

பண்டைக்கால முதல் வரி வசூல் செய்யப்பட்டதை இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அரசின் முக்கிய வருவாயாக வரி இருந்து வருகிறது. இதன்

மூலமே பொதுப்பணிகளும், அரசு நிர்வாகமும் செயல்பட்டு வந்துள்ளன. பொதுமக்களிடம் வரி வசூல் எவ்வாறு செய்யவேண்டும் என்பதை திருவள்ளுவர் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளர். (குறள் – 552). வீரகேரள மரபினர் 13 வகை வரிகளை வசூல் செய்யதமைப் பற்றி கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவை, இறை, புரவு, சித்தாயம், உகவை, எலவை, கடமை, மஞ்சாடி, சாமந்தப்பேறு, அந்தராயப்பேறு, மன்றுபாடு, தென்டக்குற்றம், கீழ்புரவுமயிற்கானம் முதலியவை. இவற்றில் வணிகத் தொடர்பான வரிகள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தேவதானம்

கோயில் வழிபாட்டிற்காகக் கோயில் மற்றும் அவை சார்ந்த அமைப்புகளுக்குக் கொடுக்கப்படும் கொடைகள் தேவதானங்கள் எனப்படும். இவற்றில் சிவன் கோயில்களுக்குக் கொடுக்கப்படும் கொடை திருநாமத்துக்காணி என்றும், திருமால் கோயில்களுக்குக் கொடுக்கப்படும் கொடை திருவிடையாட்டம் என்றும், சமண மற்றும் பௌத்த சமயப்பள்ளிகளுக்குக் கொடுக்கப்படும் கொடை பள்ளிச்சந்தம் என்றும் குறிப்பிடப்படும். கொங்கு நாட்டில் சங்ககாலம் முதல் கோயில்களுக்குக் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளதை பதிற்றுப்பத்து ஏழாம்பத்து பதிகம் விளக்குகின்றது.

தொடக்கத்தில் தேவதானக் கொடைகளை ஆட்சியாளர்களும், உயர் அதிகாரிகளும் வழங்கியுள்ளனர். நல்லூர் என்ற அடைமொழியைக் கொண்ட ஊர்கள் தேவதான ஊர்கள் என்பதால், வீரகேரளர் மரபினரின் பெயரை முன்னொட்டுப் பெயராகக் கொண்ட பல ஊர்கள் (வீரகேரளநல்லூர், அமரபுயங்க நல்லூர், வீரநாராயணநல்லூர், அதிசயசோழநல்லூர், அதிராஜராஜநல்லூர், இராஜராஜநல்லூர் த.நா.அ.தொ.து. எண்கள். 86,110,124, 95, 33/2004 மற்றும் 232/V) இம்மன்னர்களால் வழங்கப்பட்ட தேவதான ஊர்களாகக் கருதலாம். பின்னர்ஊர், நாடு, சபை முதலிய நிர்வாக அமைப்புக்கள் நிலஉரிமை பெற்ற பின் வழங்கியுள்ளன (166 – 168 / XXVI and த.நா.அ.தொ.து.எண்.190/2004 மற்றும் 17/2004). இவை தவிர கோயிலுக்கு நிமந்தப்புறம் (240/V), அமுது படிப்புறம் (கொங்குநாட்டுக் கல்வெட்டுகள், எண்கள் – 280, 281), திருநந்தவனப்புறம் (130/XXVI) முதலிய நிலக்கொடைகளும். கோயிலுடன் இணைந்திருந்த மடங்களுக்கு மடப்புறம் (127/XXVI) என்ற நிலக்கொடைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. புதிய வேளாண்மை நிலங்களை உருவாக்கியும், வேளாண்மை நிலங்களுக்கு நீர்பாசன வசதிகளை உருவாக்கியும் தேவதானமாக கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலக்கொடைகள் கொடுப்பதன் மூலம் வேளாண்மை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றே கருதவேண்டும்.

பிரமதேயம்

பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்ட கொடை தான் பிரமதேய ம்எனக்குறிப்பிடப்படுகின்றன. இக்கொடைகள் தனி நிலங்களாகவோ, முழுக்கிராமங்களாகவோ இருந்தன. அக்கிரகாரம், அகரம், சதுர்வேதி மங்கலம்

என்றும் அவை குறிப்பிடப்பட்டன. பிரமதேயமாகக் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு அனைத்து வரிகளிலிருந்து விலக்கும், அரசனின் ஆணைகளுக்குக் கட்டுப்படாத முழுச்சுதந்திரமும் இருந்தது. இதில் வாழ்பவர்களைத் தண்டிக்கும் உரிமை கூடமன்னருக்கு இல்லை. பிரமதேயஊர்கள் தங்கள் நிர்வாகத்தைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ள 'சபை' என்ற ஒரு நிர்வாக சபையை அமைத்துக் கொண்டனர். இச்சபையே பிரம்மதேயங்களின் முழுநிர்வாகத்தையும் கவனித்துவந்துள்ளது.

கல்வெட்டுகளில் முதன்முதலாக கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சி கல்வெட்டில் கொங்குநாட்டுப் பிரமதேயம் என்ற குறிப்புள்ளது. சங்கப்பாடலான பதிற்றுப்பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர் கண்ணனாருக்கு உம்பற்காட்டில் (இன்றைய ஆனைமலை) 500 ஊர்களை கொடையாகக் கொடுத்ததாகக் குறிப்பிடுகிறது (3ஆம் பத்து பதிகம்).எனவே கொங்குநாட்டுப் பிரமதேயம் பற்றிப் பண்டைய இலக்கியங்கள், கல்வெட்டுகள் குறிப்பிடுவதால், தமிழத்தில் முதன்முதலில் கொங்குநாட்டில் தான் பிரமதேயங்கள் உருவாயின என்று கருதுவதில் தவறேதுமில்லை.

கேரளத்தில் பிரமதேயங்கள் 'கிராமங்கள்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. தென்கொங்குப் பகுதி கேரளத்தை ஒட்டிய பகுதியானதால் இப்போக்கைக் காணமுடிகின்றது. ருத்திராபாளையம் (த.நா.அ.தொ.து.எண்.83/2004), பழனி (ARE,No.269/ முதலிய ஊர்க் கல்வெட்டுகளில் இப்போக்கைக் காணலாம்.

தென்கொங்குப் பகுதியில் பல சதுர்வேதிமங்கலங்கள், அக்கிரஹாரங்கள் புதிதாக அமைக்கப்பட்டதை அறிகிறோம். ஏற்கனவே, அமைந்திருந்த வேளாண் ஊர்களிலும் கூட இப்பிராமணர்களுக்கென்று தனியாகக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு வேறு பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.

கோவன்புத்தூர் -வீரகேரளநல்லூர் என்றும், உமாபரமேஸ்வரி மங்கலம் என்றும், முட்டம் -அமரபுயங்க நல்லூர் என்றும், ரவிவர்ம சதுர்வேதி மங்கலம் என்றும், பேரூர் -பேரூர் என்றும் சிவபாதசேகரச் சதுர்வேதிமங்கலம் என்றும், ஆனைமலை -நன்னனூர்என்றும்சோழகுலமாணிக்கச்சதுர்வேதிமங்கலம்என் றும், திருவாலந்துறை -விக்ரமசோழ சதுர்வேதிமங்கலம் என்றும், கேரளகேசரி நல்லூர் என்றும் இரு வேறுபகுதிகள் இடம்பெற்றிருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

விரகேரள மரபினர்களின் கல்வெட்டுகளில் ஸ்ரீஅம்மடிச் சதுர்வேதி மங்கலம், வீரநாராயணச்சதுர்வேதிமங்கலம், இரவிவர்மச் சதுர்வேதி மங்கலம், சோழகுலமாணிக்கச் சருப்பேதிமங்கலம், ஸ்ரீகுமரலிங்கச்சதுர்வேதிமங்கலம், அமரபுயங்கச்சதுர்வேதிமங்கலம், கலயபுத்தூரான வீரகேரளச் சதுர்வேதிமங்கலம், வீரகேரள எல்லசோழச் சதுர்வேதிமங்கலம், குமரங்கபீமச் சதுர்வேதிமங்கலம்,

கோளூரான அருமொழிதேவ சதுர்வேதிமங்கலம், உமாபரமேஸ்வரிச் சதுர்வேதிமங்கலம், கோதை மங்கலமான எல்லா சோழச் சதுர்வேதிமங்கலம், வீரநாராயணச் சதுர்வேதிமங்கலம், வீரக்கழல் அழகிய சோழச்சதுர்வேதி மங்கலம், வையாவி நாட்டு பிரமதேயம் சத்ருகலா நல்லூர் முதலிய பிரம்மதேய ஊர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பர்ட்டன்ஸ்டீனின் கருத்துப்படி பிரமதேயங்கள் நீர்வளமிக்க பகுதியிலேயே உருவாக்கப்பட்டுள்ளன* என்பதை உறுதிப்படுத்தும் விதமாக தென்கொங்கு பகுதியில் நொய்யல், அமராவதி ஆற்றங்கரை ஓரங்களிலேயே அதிகம் அவை உருவாக்கப்பட்டுள்ளன. இதேபோன்று பிரமதேயங்கள் இனக்குழு அமைப்பு காணப்பட்ட இடங்களிலேயே உள்ளன என்ற கோசாம்பியின் கருத்துப்படியே இங்கு இனக்குழுக்கள் வாழ்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையோரப் பகுதிகளிலேயே அதிகம் உருவாகியுள்ளன. பிரமதேயக் கொடைகள் வேளாண்மை வளர்ச்சிக்கும், பழங்குடியினரைச் சமூக நீரோட்டத்தில் கலக்கச் செய்வதற்கும் காரணமாக அமைந்ததாகக் கோசாம்பி கருதுகிறார். ருத்ராபாளையத்தில் இவ்வூர் பிராமணர்களை இடங்கைப் பிரிவினர் பாதுகாத்து வந்துள்ளதை இவ்வூர்க் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இடங்கைப் பிரிவினர் என்பவர்கள் பழங்குடியினராக இருந்து சமூக நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட சமூகத்தினர். கொங்கு நாட்டு வரலாற்றைக் குறிப்பிடும் சோழன் பூர்வபட்டயம் ஒவ்வொரு ஊரிலும் காடுகளை அழிக்கும் போது அக்காட்டில் உள்ள பழங்குடியினரின் பெண் தெய்வத்திற்குப் பலிகொடுத்து விட்டுக்காட்டை அழித்துச் சைவக்கோயில் கட்டப்பட்டதாகக் குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.எனவே காடுகளை அழிப்பதைப் பழங்குடியினர் எதிர்த்தனர் என்பதையே இவை உணர்த்துகின்றன. வீரகேரள மரபினர் அமரபுயங்கீஸ்வரமுடையார், வீரநாராயண ஈஸ்வரமுடையார், அதிசய சோழஸ்வரமுடையார், அதிராதிராச ஈஸ்வரமுடையர், இராசராச ஈஸ்வரமுடையார் முதலிய பெயர்களில் கோயில்களை எடுத்துள்ளதை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவை பர்ட்டன் ஸ்டீனின் கருத்துப்படி கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்குப்பின் பிரமதேயங்கள் செல்வாக்கிழந்தன என்ற கருத்துக்கு ஏற்றார் போல் அமைந்திருந்தாலும், தென்கொங்குப் பகுதியில் பிரமதேயங்கள் கொடுக்கும் மரபு கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விஜயநகரர் ஆட்சிவரை தொடர்ந்து இருந்துள்ளது. இது ஸ்டீனின் கருத்துக்கு மாறாகவே தென்கொங்கு நாட்டில் இருந்துள்ளது. இதற்கு இங்கிருந்த பற்றாக்குறை பொருளியலே காரணம் என்ற மாணிக்கத்தின் கருத்தே ஏற்புடையதாகக் கொள்ளலாம். குடியிருப்பின் நிர்வாகத்தில் அவ்வூர் சபையாருக்கும், ஊராருக்கும் மன்னன் ஆணையிட்டதும், நிர்வாகம் தொடர்பான செயல்பாடுகளில் சபையாரும், ஊராரும் சேர்ந்து கையொப்பம் இட்டுள்ளதும், வீரகேரளர் ஆட்சிப் பகுதியில் சோழமண்டலத்தைப் போன்றே நிர்வாகத்தில் இரு அவைகளும் சேர்ந்து பங்காற்றின என்பதையே காட்டுகிறது.

வீரகேரளர்களின் வரலாற்றை இதுவரை முழுமையாக ஆராயப்படாமல் இருந்தது. கொங்குநாட்டு வரலாற்றை ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள், வடகொங்குப் பகுதிக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். இவர்களின் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இந்த ஆய்வுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ளன. இவர்களின் அரசின் தோற்றம் பற்றி சரியான சான்றுகள் கிடைக்கவில்லை, பிற பகுதி சான்றுகளைக் கொண்டு தொடக்க வரலாற்றை ஒரு கருத்தாக்கமாகவே கொண்டுள்ளேன். வீரகேரளர்களின் பெயர்களைக் கொண்டும், இவர்களின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வானிலைக் குறிப்புகளைக் கொண்டும், பிற பகுதி அரசுகளுடன் இவர்கள் தொடர்புகளைக் கொண்டும், இவர்களின் குடிவழியை ஆய்வு முடிவாகக் கொடுத்துள்ளேன்.

இடைக்காலம் வரை தென்கொங்கு பகுதியில் அரசியல் வரலாறு பல தனித்தன்மைகளைப் பெற்றுவிளங்கியது. கி.பி.10ஆம் நூற்றாண்டுக்கு முன்புவரை இங்கு மக்கள் ஒரு நிலையான ஆட்சிக்குக்கீழ் இருந்ததில்லை. வீரகேரளர்கள் தென்கொங்குப் கைப்பற்றிய பின் தென்கொங்கு பகுதி மக்களை ஓரளவுதம் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். வடகொங்குப் ஆட்சி செய்த கொங்குச் சோழர்கள், பேரரசர்களானசேரர்கள், தஞ்சைச்சோழர்கள், போசளர்கள் முதலியோர் நிலையான ஆட்சியை நிறுவ முயன்ற போதும், இவர்களது ஆட்சி அடிக்கடி அலைக்கழிக்கப்பட்டு, ஒருநிலையான ஆட்சியாகத் திகழவில்லை.

இடைக்காலத்தில் (கி.பி. 10 - 12ஆம் நூற்றாண்டு) தென்கொங்கு பகுதியை ஆட்சிசெய்த வீரகேரளர்கள் இங்கு நீர்ப்பாசன வசதியை விரிவுபடுத்தி வேளாண்மையை பெருக்கினர். அதனால் இக்காலக்கட்டத்தில் இங்கு வேளாண்மையே முக்கியத் தொழிலாகத் திகழ்ந்துள்ளது. ஆட்சியாளர்கள் தரிசு நிலங்களை மன்னறைகளாக மாற்றி, வேளாண்மைக்குக் கொடுத்தனர். வேளாண்மை வளர்ச்சியடைந்ததால் வேளாண்மை நிலங்கள் தேவதானங்களாகவும், பிரமதேயங்களாகவும் கொடுக்கப்பட்டன. வேளாண்மை விரிவாக்கத்தால் மக்களின் குடியேற்றம் அதிகமாகி பல புதிய ஊர்கள் உருவாகி, ஊர்ப்பெருக்கம் அதிகரித்து நிர்வாகத்திற்காக பலநாட்டுப் பிரிவுகள்உருவாக்கப்பட்டன.

இங்கு ஏற்பட்ட வேளாண்மை வளர்ச்சியால் உற்பத்திப் பெருக்கம் அதிகமாகி அவற்றை விற்பனை செய்யும் சமூகமாக ஊர் வியாபாரிகளும், நாட்டுச் செட்டி வணிகப்பிரிவினரும், தங்களது உற்பத்தி பெருக்கத்தால் வணிக சமூககங்களாகமாறி இங்கு சிறப்பிடம் பெற்றனர். கவறா போன்ற பிற பகுதிய வாணிக சமூகமும் இங்கு குடிப்பெயர்ச்சி அடைந்துள்ளனர். இதனால் பிற பகுதி நாகரிகமும், பண்பாடும் கலந்தன.

தென்கொங்குப் பகுதி பழங்குடிகள் நிறைந்தபகுதி, இடைக்காலம் வரை இம்மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவில்லை. இடைக்காலத்தில் இங்கு ஏற்பட்ட வீரகேரளர் சிற்றரசு அவர்களின் வாழ்க்கை முறையைமாற்றிப் புதிய ஊர்களை உருவாக்கி, அவர்களை நிலையாக ஒரே

இடத்தில் தங்கச்செய்து சமூக நீரோட்டத்தில் இணைத்து, அரசு நிர்வாகத்திற்கு உட்படச் செய்தனர். அதனால் இப்பகுதியில் உருவாவதின் முக்கியக் காரணியாக கோயில்கள் செயல்பட்டுள்ளன. வீரகேரளர் அரசு சிற்றரசாக செயல்பட்டதால, கூறாக்கநிலை அரசின் கூறுகளும், சமயஞ்சார்ந்த அரசுகளின் அல்லது கோயில்சார்ந்த அரசுகளின் கூறுகளும் காணப்படுகின்றன எனக்கருதலாம்.

நூற்பட்டியல்

Annual Reports on Indian Epigraphy, Archaeological Survey of India, 1893, 1900, 1905, 1906, 1907, 1908, 1909, 1910, 1912-1917, 1920, 1922, 1927 – 1930,1936-1937, 1950-1951, 1955-1956, 1960-1969, 1976-1977.

South Indian Inscriptions, Archaeological Survey of India, Vols- IV. V, VII,VIII, XIII, XIV, XVIII, XIX, XXII, Part-1, XXVI

South Indian Temple Inscriptions, Vols- I, II, III, Part-I

M.G.S. NARAYANAN, PERUMALS OF KERALA, Coamo Books,

T V Mahalingam - A Topographical list of Inscriptions, Volume- 4, Indian Council of Historical Research S.Chand & Company LTD, New Delhi . 1989.

Arokiaswamy,M., The Kongu Country, University of Madras,1956.

Hall, Kennath., Trade and State Craft in the Age of Colas, Abhinav Publications, New Delhi.1980.

Ramamurthy,V., History of Kongu, International Society for the investigation of Ancient Civilization, Chennai. 1986.

Stein,Burton, Peasant State and Society in Medieval South India, Oxford University Press, New Delhi. 1980.

Subrahmaniya Aiyar, K.V., Historical Sketches of Ancient Dekhan, Vol – II, Coimbatore. 1967.

Thapar, Romila., From Lineage to State, Oxford University Press, New Delhi. 1984.

Vaidyanathan,K.S, The Ancient Geography of The Kongu Country, Kalaimagal Kalvi Nilayam, Erodu. 1983

Nagasamy, R.,Studies in South Indian History and Culture, V.R.Ramachandan Dikshitar Century Committee, India, 1997.

இராமச்சந்திரஞ் செட்டியார், சி.எம்கொங்கு நாட்டு வரலாறு, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, பேரூர். 1972

இராமச்சந்திரன் செட்டியார், சி.எம். (பதி) சோழன் பூர்வபட்டயம் கீழ்த்திசைச் சுவடிகள், நூலகம், சென்னை. 1950.

காசிநாதன், நடனகளப்பிரர், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 28. 1981

குஞ்சன்பிள்ளை, பண்டைய கேரளம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5. 1970.சேதுராமன், என்.பாண்டியர் வரலாறு, ராமன் அண்டு ராமன் கம்பெனி, கும்பகோணம். 1989

ஸ்ரீதர், தி.ஸ்ரீ, (பதி) கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -1, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 2005.

சீதாராம் குருமூர்த்தி, (பதி) கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி -2, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 2007.

சீதாராம் குருமூர்த்தி, (பதி) திருப்பூர் மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, 2012.

கணேசன், மா. &ஜெகதீசன், இரா. (பதி) கொங்கு நாட்டுக் கல்வெட்டுக்கள்: கோயம்புத்தூர் மாவட்டம், மகாகவி பாரதி நூலகம், கோயம்புத்தூர்-46. 2003

மாணிக்கம், வீ. கொங்குநாடு, தொகுதி – 1 &2, மக்கள் வெளியீடு, சென்னை. 2001

இராசு, செ. பழனி வரலாற்று ஆவணங்கள், கொங்கு ஆய்வு மையம், ஈரோடு,2015. ஆவணம் - இதழ்கள், 2,3,15,18,19,20,21,22, 25,28,

அளவைகள் - கல்வெட்டின் வழிப்புலானாகும் தரவுகள்

ரெ. அகிலா
இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
அறிஞர்அண்ணாஅரசுகலைக்கல்லூரி,
முசிறி- 621 211.

சிராப்பள்ளியில் களஆய்வு மேற்கொண்ட போது பல புதிய கல்வெட்டுகளின் வழி அளவைகள் பற்றிய தரவுகள் பெறப்பெற்றன. தவத்துறைக் கல்வெட்டுப் பலவகை அளவைகள் குறித்துப் பேசுகின்றன. நிலங்களை அளக்க ஆறுவகையான நீட்டல் அளவைகளும் இருந்தன. இராஜவிபாடன் கோல் பன்னீரடிக்கோல் எண் பிடிக்கோல் சிவன் கோல் எனும் பழங்கோல் இராஜசண்டன் மாளிகைக்கோல் அம்மன் கோயில் வளாகத்தில் புதிதாகக்கண்டறிந்த 3.47 மீ. நீள அளவில் கண்டறிந்த கோல் - இவையாவும் நிலமளக்கப் பயன்பட்டன. பன்னீரடிக்கோல் என்பது மனைக் கோலாகும்.

4 கோல் நீளம் 4 கோல் அகலம் ஒரு கோல் ஆழம் கொண்டது ஒரு குழி நிலம். இருநூறு குழிகள் சேர்ந்தது ஒருமா என முற்சோழர் காலத்தில் கணக்கில் கொள்ளப்பட்டது. திருவுலகளந்தபடி நூறு குழி – ஒருமா பத்துமா என்பது அரைவேலியாகும். நிருபதுங்கவர்மரின் கல்வெட்டொன்று நிலத்துண்டுகளைத் 'தடி' எனச்சுட்டுகிறது. 'தடி ஆறினால் நிலம் வேலி' என்பதாகும்.

பிறசொற்களான காணி முந்திரிகை செய் எனும் நிலஅளவு சுட்டும் பிறசொற்களும் வழக்கில் இருந்தன. ஆழாக்கு, உழக்கு, நாழி, உரி, பதக்கு, தூணி, குறுணி, கலம் ஆகிய முகத்தலளவைகளுள் முதல் மூன்றும் நெய் எண்ணெய் அளக்கப் பயன்பட்டாற் போலவே தானியங்களையும் அளக்க உதவின. நூராயநாழி என்பது எண்ணெய் நெய் - இவற்றினை அளக்கக் கோயிலார் பயன்படுத்திய அளவு நிர்ணயம் செய்யப்பட்ட முகத்தலளவையாகும். புராந்தக புரத்தில் இருந்த மரக்கால் 'எண்ணாழி விட்டக்கால்' எனச் சுட்டப்பெறல்.

நிறுத்தலளவைகள்

பலம், கழஞ்சு, மஞ்சாடி, குன்றி போன்றவை நிறுத்தளலவையாகும். உலோகப் பாத்திரம் அளவு – பலம். பொன் - குன்றி மஞ்சாடி கழஞ்சு என்பதாகும். முதலாம் குலோத்துங்கர் காலத்தில் வெட்டப்பட்டுள் ளதவத்துறைக் கல்வெட்டு நிறுத்தலளவையினை நியமக்கோல் எனச்சுட்டுகிறது. தவத்துறையில் ஊராடுகல் எனும் ஊர் சார்ந்த நிறுத்தல் அளவையும் குடிஞைக் கல்லும் பயன்பாட்டில் இருந்தன. கலம், மரக்கால், குறுணி, நாழி முதலியன தானியங்களை அளக்கவும் உழக்கு ஆழாக்கு - இவை எண்ணெய் அளக்கவும்

பயன்பட்டன. முந்தரிகை, மாகாணி, வேலி முதலியன நில அளவைகளாக அமைந்து பொன்னளக்கக் குடிஞைக்கல் பண்டாரக்கல் பாச்சில்கல்[1] ஆகியன வழக்கில் இருந்தன. பொன்னின் அளவைக் குறிக்கக் கழஞ்சு மஞ்சாடி முதலிய சொற்கள் பயன்பட்டன.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பரவலாக இடம்பெறும் முகத்தளலவைகள் நிறுத்தளலவைகள் திருஎறும்பியூர்க் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மாளிகைக்கோல் பன்னீரடிக்கோல் என 2 நீட்டளலவைகளும் பொன்னின் நிறை அறிய ஊராடு கல்லும் வழக்கிலிருந்தது. புடமிடப்பட்ட பொன் கழஞ்சு மஞ்சாடி என அழைக்கப்பெற்று விற்பனைக்கான விலைப் பொருளாகத் தரப்பட்டது.

அன்றாடு நற்காசு

அன்றாடு நற்காசில் ஒரு காசுக்கு ஆண்டு வட்டி கால் காசாகும்.

கரணநாழி

சிராப்பள்ளி துறையூர்ச் சாலையில் உள்ள சிங்களாந்தபுரம் சோழர் காலத்தில் வணிக நகரமாக விளங்கிய ஊராகும். இங்கு முதலாம் குலோத்துங்கரின் 45 ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு நாகன் சுந்தரன் எனும் வணிகர் அளித்த கொடை சுட்டுகிறது. இதில் கரணநாழி[2] எனும் பெயரில் முகத்தலளவை பயன்பாட்டில் இருந்தமை புலனாகிறது.

கற்குடி

தமிழ்நாட்டின் பிறபகுதிகளில் உள்ளது போல கற்குடியில் உழக்கு ஆழாக்கு செவிடு உரி தூணி பதக்கு கலம் எனும் முகத்தளலவைகள் கழஞ்சு மஞ்சாடி குன்றி பலம் எனும் நிறுத்தலளவைகள் மட்டுமின்றி சூலஉழக்கு சூலநாழி விடேல்விடுகுக் கல்பண்டாரக் குடிஞைக்கல் என்பன சிறப்பு அளவைகளாம். நூலமளக்கப் பயன்பட்ட கோல் - இராஜவிபாடன் கோல். களஆய்வின் போது இரண்டு நீட்டளலவைகள்[4] இப்பகுதியில் நிலமளக்கப் பயன்பட்டவையாக உள்ளது. புதிதாகக் கண்டறியப்பட்ட இரண்டாம் கோபுரவாயிலில் உள்ள அளவுகோல் ஒரு குறியீட்டை இழந்தும் மூன்றாம் கோபுரவாயிலில் காணப்படும் அளவுகோல் 1.65மீ. நீளம் கொண்டதாக அமைந்துள்ளது.

பல்லவர் பாண்டியர் காலத்தில் பழங்காசு சோழர் காலத்தில் அன்றாடு நற்காசு வழக்கத்திலிருந்தன. காசு என்றறியப்பட்ட நாணயங்களும் இருந்தன. பிற்பாண்டியர் காலக்கல்வெட்டுகள் பணம் எனுஞ்சொல்லைப் பயன்பாட்டில் கொள்ள 19 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு வராகன் எனும் பணத்தினைக் குறித்தது.

முடிவுரை

கல்வெட்டுகளில் இடம்பெறும் அளவைகள் வரலாற்று ஆய்வில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. களஆய்வின் வழிக்கண்டறிந்த கல்வெட்டுகளின்

அடிப்படையில் அக்கால சமூகஅறிவு நிர்வாகத்திறன் நுணுக்கம் சார்ந்த பல்வேறு தரவுகளைத் தருவதோடு கல்வெட்டுகள் வழிக்காசு நல்காசு அன்றாடு நற்காசு புழக்கத்தில் இருந்தமையும் தெரிவதுடன் ஒரு காசிற்கு ஆண்டு வட்டி நெல் தூணிப் பதக்காகும்.

கழஞ்சுப் பொன்னிற்கு ஆண்டு வட்டி ஒரு கலம் நெல்.

ஒரு கலம் நெல்லிற்கு ஆண்டு பலிசை முக்குறுணி நெல்.

மற்றொரு கல்வெட்டு குறுணி நான்கு நாழி எனச்சுட்டுகிறது.

முடிவுக்குறிப்புகள்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 17:19-639-340.
2. களஆய்வு மேற்கொண்டது The Hindu 12.09.2017.
3. ARE. 1961-62:432: Varalaru7: P.26.
4. மூன்று கூட்டல் குறியீடுகளுக்கு இடைப்பட்டதாக அமைந்துள்ள அளவுகோலைக் கண்டறிந்தவர் ரெ. அகிலா. முதல் இரு குறியீடுகளுக்கு இடைப்பட்ட அளவு 1.10மீ. இரண்டாம் மூன்றாம் குறியீடுகளுக்கு இடைப்பட்ட அளவு 55 ஆகும்.